# மகிமையான சபை

WATCHMAN NEE

# மகிமையான சபை

வாட்ச்மன் நீ

விற்பனைக்கு அல்ல
இலவச விநியோகத்திற்காக மட்டும்

*Living Stream Ministry*
Anaheim, California • wwwlsm.org

© 2010 Living Stream Ministry

All rights reserved. No part of this work may be reproduced or transmitted in any form or by any means—graphic, electronic, or mechanical, including photocopying, recording, or information storage and retrieval systems—without written permission from the publisher.

Original Title:
**THE GLORIOUS CHURCH**
© 1968 Living Stream Ministry

**Magimaiyana Sabai**
(Tamil)

By
WATCHMAN NEE

First Edition, 2010

ISBN: **978-0-7363-4481-4**

Translated in India by
*Amana Literature [Pvt] Ltd.*
Gurgaon, Haryana, India
Email: office@amanaliterature.in
www.amanaliterature.in

See back page for local distribution information.

Published by
*Living Stream Ministry*
2431 W. La palma Ave., Anaheim, CA 92801 U.S.A.
P. O. Box 2121,Anaheim, CA 92814 U.S.A.

# பொருளடக்கம்

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | 4 |
| முன்னுரை | 5 |
| 1 தேவனுடைய திட்டமும், தேவனுடைய இளைப்பாறுதலும் | 7 |
| 2 ஏவாளின் அடையாளம் | 33 |
| 3 கிறிஸ்துவின் சரீரமும், கிறிஸ்துவின் மணவாட்டியும் | 57 |
| 4 "ஓர் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்" | 88 |
| 5 பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேம் | 129 |
| பிற்சேர்க்கை: ஜெயங்கொள்பவர்களும், தேவனுடைய காலகட்ட அசைவுகளும் | 199 |

# அணிந்துரை

இந்தப் பதிப்பில் *மகிமையான சபையின்* பொருளடக்கம் 1968-ல் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட பதிப்பிலிருந்து பல்வேறு அம்சங்களில் வேறுபடுகிறது. *The Collected Works of Watchman Nee*-ல் சேர்ப்பதற்காக *மகிமையான சபையை* மறுபரிசீலனை செய்துகொண்டிருக்கையில், முதல் பிரதியின் ஆதாரமாக இருந்த செய்திகளின் கையெழுத்துக் குறிப்புகளின் தொகுதியை திருமதி பெத் ராடிமாச்சர் Living Stream Ministry-க்கு வழங்கினார். இந்தக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்ட பிற்சேர்க்கையாகிய "ஜெயங்கொள்பவர்களும், தேவனுடைய காலகட்ட அசைவுகளும்" இந்த மாநாட்டின்போது வாட்ச்மேன் நீயால் கொடுக்கப்பட்ட செய்தியின் முக்கியமான, இதுவரை வெளியிடப்படாத பகுதியாகும். K.H.Weigh-ன்படி, மாநாட்டுச் செய்திகளின் மூல தலைப்புகள் பின்வருமாறு:

1. முன்னுரை
2. முன்னுரை (தொடர்ச்சி)
3. தேவனுடைய திட்டத்திற்கும், சபைக்குமிடையேயுள்ள உறவு
4. தேவனுடைய திட்டத்தில் சபையின் முன்னடை யாளங்கள்
5. கிறிஸ்துவின் சரீரமும், கிறிஸ்துவின் மணவாட்டியும்
6. சபையும், தேவனுடைய இராஜ்ஜியமும்
7. ஜெயங்கொள்பவர்களுக்கும், சபைக்குமிடையேயுள்ள உறவு
8. ஜெயங்கொள்பவர்களுக்கும், இராஜ்ஜியத்திற்கு மிடையேயுள்ள உறவு
9. ஜெயங்கொள்பவர்களும், தேவனுடைய காலகட்ட அசைவுகளும்
10. ஜெயங்கொள்பவர்களின் அடிப்படைத் தகுதிகளும், மனப்பாங்கும்
11. ஆட்டுக்குட்டியானவரின் மனைவி
12. இராஜ்ஜியமும், நித்தியமும் கொண்டுவரப்படுதல்
13. கிறிஸ்துவினுடைய மணவாட்டியின் குணாதிசயங்கள்
14. கிறிஸ்துவினுடைய மணவாட்டியின் குணாதிசயங்கள் (தொடர்ச்சி)

வேதவாக்கியங்களின் குறிப்புகள் Living Stream Ministry-யால் வெளியிடப்பட்டுள்ள Recovery Version-ன் பொருளடக்கங்களைப் பிரதிபலிக்கக் காலத்துக்கு ஒத்த புத்தம்புது நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து வரும் முன்னுரை ஆரம்பத்தில் *மகிமையான சபையின்* முதல் பதிப்புக்காக அணிந்துரையாக எழுதப்பட்டது.

# முன்னுரை

பின்வரும் அதிகாரங்கள் 1932 இலையுதிர் காலத்திலிருந்து 1942 இலையுதிர் காலம்வரை ஷங்காய் சபைக்கும், நீண்ட காலமாகத் தன் பயிற்சியின்கீழ் இருந்த உடன் வேலையாட்களுக்கும் சகோதரர் வாட்ச்மேன் நீயால் சீன மொழியில் பேசப்பட்ட செய்தித் தொகுப்புகளின் மொழிபெயர்ப்பாகும். அது "தேவனுடைய ஆழமான காரியங்களைப்"பற்றிய ஆவிக் குரிய வெளிப்பாடுகள் மற்றும் பரலோகத் தரிசனங்களின் நேரமாகும். வெற்றியுள்ள சபையும், கிறிஸ்துவின் மகிமையான சரீரமும், எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்பு கிறவருடைய முழு வெளியாக்கமுமே பிரதானமாக வலியுறுத் தப்பட்டன. இந்தச் செய்திகளில், வேதவாக்கியங்களிலுள்ள குறிப்பிடத்தக்க நான்கு பெண்களைப்பற்றிய ஆச்சரியமான வெளிச்சம் வீசிற்று: ஆதியாகமம் 2-ல் ஏவாள், எபேசியர் 5-ல் மனைவி, திருவெளிப்பாடு 12-ல் பெண், திருவெளிப்பாடு 21, 22-ல் மணவாட்டி. அவர்களைப்பற்றிய குறிப்புகள் தேவனுடைய திட்டத்தில் மகிமையான சபையைப்பற்றிய, அவருடைய ஆசையை நிறைவேற்றுகிற சபையைப்பற்றிய, முழு நோக்கத்தைத் தருகின்றன. அவர்கள் வழங்கும் சித்திரத்தின் கால வரையறையளவு எவ்வளவு பரந்தது என்றால் அது கடந்த நித்தியத்திலிருந்து எதிர்கால நித்தியம் வரை அளாவிக்கிடக்கிறது. செய்திகளின் பொருளடக்கங்கள் மிகவும் வெளிப்படுத்துகிறவைகளாகவும், பிரகாசிக்கிற வைகளாகவும் இருக்கின்றன, ஆழமாகவும் ஆழமிக்க வைகளாகவும் இருக்கின்றன; எனவே, அவைகளை ஆவியில் உணர்ந்தறிந்து ஜீரணித்து ஜெபத்தோடு வாசிக்கவேண்டும். கர்த்தர் ஆசிரியருக்குக் காண்பித்திருக்கும் சபையின் நிஜத்தைப்பற்றிய தரிசனங்களை நாம் உணர்ந்தறியுமாறு சரீரத்தின் மகிமையான தலையாகிய கர்த்தர்தாமே நமக்கு ஞானத்தின் ஆவியையும், வெளிப்பாட்டின் ஆவியையும் தந்தருள்வாராக. "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்ச்...செய்ய வல்லவராகிய" கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் "நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே" இந்தச் செய்திகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவைகளை நடப்பிப்பார் என்று நம்பி, நம் ஜெபம் இந்தப் புத்தகத்தோடு சேர்ந்துசெல்கிறது. "சபையில் கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்."

விட்னெஸ் லீ. லாஸ் ஏஞ்செலஸ்,
கலிபோர்னியா, அமெரிக்கா. ஜூன் 8, 1968

## அத்தியாயம் ஒன்று

# தேவனுடைய திட்டமும், தேவனுடைய இளைப்பாறுதலும்

*வேத வாசிப்பு: ஆதி. 1:26—2:3; 2:18-24; எபே. 5:22-32; வெளி. 12; 21:1—22:5*

வேதாகமத்தின் இந்த நான்கு பத்திகளில் நான்கு பெண்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஆதியாகமம் 2-ல் குறிப்பிடப்பட்டிருக்கும் பெண் ஏவாள்; எபேசியர் 5-ல் அவள் சபை; திருவெளிப்பாடு 12-ல் அவள் தரிசனத்தில் காணப்படுகிற பெண். திருவெளிப்பாடு 21-ல் அவள் ஆட்டுக் குட்டியானவரின் மனைவி.

இந்த நான்கு பெண்களுக்கும் ஒருவரோடொருவருக்கும், தேவனுடைய நித்திய திட்டத்தோடும் என்ன உறவு என்பதைப் பார்க்க தேவன் தாமே நமக்கு வெளிச்சம் அருள்வாராக. அப்போது இந்தத் திட்டத்தில் சபை வகிக்கிற இடத்தையும், சபை சுமக்கிற பொறுப்பையும், தேவனுடைய ஜெயங்கொள்பவர்கள் அவருடைய நித்திய திட்டத்தை எப்படி நிறைவேற்றுவார்கள் என்பதையும் நாம் பார்க்கமுடியும்.

## மனிதனைப் படைத்ததில் தேவனுடைய குறிக்கோள்

தேவன் மனிதனை ஏன் படைத்தார்? மனிதனைப் படைத்ததில் அவருடைய குறிக்கோள் என்ன?

இந்தக் கேள்விகளுக்கான பதிலை தேவன் ஆதியாகமம் 1:26, 27-ல் நமக்குத் தந்திருக்கிறார். இந்த இரண்டு வசனங்கள் மிகவும் உட்கருத்துவாய்ந்தவை. தேவன் மனிதனைப் படைத்தது மெய்யாகவே மிகவும் விசேஷமான ஒன்று என்று அவைகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் மனிதனைப் படைப்பதற்கு முன், "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக் கடவர்கள்," என்று கூறினார். இதுவே தேவன் மனிதனைப் படைத்ததின் குறிக்கோள். "பின்பு தேவன், நாம்...என்றார்." இது தேவன் எப்பேர்ப்பட்ட மனிதனை விரும்பினார் என்பதைப்பற்றிப் பேசுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தேவன் தாம் படைக்கவிருந்த மனிதனுக்காக ஒரு "மாதிரியை" வடிவமைத்துக் கொண்டிருந்தார். 27-ஆம் வசனம் தேவன் மனிதனைப் படைத்ததை

வெளிப்படுத்து கிறது: "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித் தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." "பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்," என்று 28-ஆம் வசனம் கூறுகிறது.

இந்த வசனங்களிலிருந்து நாம் தேவன் விரும்பின மனிதனைப் பார்க்கிறோம். ஆண்டுகொள்கிற ஒரு மனிதனை தேவன் விரும்பினார். பூமியின்மேல் ஆளுகைசெய்யப்போகிற ஒரு மனிதன்; அப்போது அவர் திருப்தியடைவார்.

தேவன் மனிதனை எப்படிப் படைத்தார்? தேவன் மனிதனைத் தம் சாயலில் படைத்தார். தேவன் தம்மைப் போன்ற ஒரு மனிதனை விரும்பினார். தேவனுடைய படைப்பில் மனிதனுடைய அந்தஸ்து முற்றிலும் ஒப்பற்றது என்பது மிகவும் வெளிப்படை; ஏனென்றால், தேவனுடைய எல்லாப் படைப்புகளிடையே மனிதன் மட்டுமே தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டான். தேவனுடைய இருதயம் எந்த மனிதனின்மேல் இருந்ததோ, அந்த மனிதன் படைக்கப்பட்ட மற்ற எல்லா ஜந்துக்களிலிருந்தும் முற்றிலும் வித்தியாசமானவன்; அவன் தேவனுடைய சாயலில் இருந்தவன்.

இங்கு நாம் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றைப் பார்க்கிறோம். "*நமது* சாயலாகவும் *நமது* ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக..." என்று 26-ஆம் வசனம் கூறுகிறது. ஆனால் 27-ஆம் வசனமோ, "தேவன் *தம்முடைய* சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்," என்று கூறுகிறது. 26-ஆம் வசனத்தில் "நமது" என்ற பிரதிப்பெயர்ச்சொல் பன்மையில் இருக்கிறது. ஆனால் 27-ஆம் வசனத்தில் "தம்முடைய" என்பது ஒருமை. தேவத்துவத்துக் கிடையே நடந்த மாநாட்டின்போது, "*நமது* சாயலாக...மனுஷனை உண்டாக்குவோமாக," என்று 26-ஆம் வசனம் கூறுகிறது; ஆகையால், இலக்கணத்தின்படி, "எனவே தேவன் மனுஷனை *அவர்களுடைய* சாயலில் சிருஷ்டித்தார்" என்றுதான் 27-ஆம் கூறவேண்டும். ஆனால், விநோதமாக, "தேவன் *தம்முடைய* சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்," என்று 27-ஆம் வசனம் கூறுகிறது. இதை நாம் எப்படி விளக்கமுடியும்? இது ஏனென்றால், தேவத்துவத்தில் மூவர் இருக்கிறார்கள்—பிதா, குமாரன், ஆவியானவர்; இருப்பினும், தேவத்துவத்தில் ஒரேவொருவருக்கு மட்டுமே சாயல் இருக்கிறது—குமாரன். தேவத்துவம் மனிதனைப்

படைப்பதை வடிவமைத்துக்கொண்டிருந்தபோது, மனிதன் "நமது" சாயலில் படைக்கப்படுவான் என்று வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது (அவர்கள் ஒன்றாக இருப்பதால், "நமது சாயல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது). ஆனால், தேவத்துவம் மனிதனைப் படைக்கும் உண்மையான வழிமுறையில் இருந்தபோது, மனிதன் "தம்முடைய" சாயலில் உண்டாக்கப்பட்டான் என்று வேதாகமம் கூறுகிறது. "தம்முடைய" என்பது குமாரனைக் குறிக்கிறது. ஆதாம் கர்த்தராகிய இயேசுவின் சாயலில் உண்டாக்கப்பட்டான் என்று இதிலிருந்து நாம் உறுதியாய் அறிகிறோம். ஆதாம் கர்த்தராகிய இயேசுவுக்குமுன் வரவில்லை; கர்த்தராகிய இயேசுவே அவனுக்குமுன் வந்தார். தேவன் ஆதாமைப் படைத்தபோது, அவர் அவனைக் கர்த்தராகிய இயேசுவின் சாயலில் படைத்தார். இந்தக் காரணத்தினால்தான் "அவர்களுடைய சாயலில்" என்பதற்குப் பதிலாக "நமது சாயலில்" என்று கூறுகிறது.

தம் குமாரனைப்போன்ற ஒரு கூட்டம் மக்களை ஆதாயப் படுத்த வேண்டும் என்பதே தேவனுடைய குறிக்கோள். நாம் ரோமர் *8:29*-ஐ வாசிக்கும்போது தேவனுடைய குறிக்கோளைக் கண்டுபிடிக்கிறோம்: "*தம்முடைய குமாரன் அநேக சகோதர ருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தம்முடைய குமார னுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக் கிறார்.*" தேவன் அநேகக் குமாரர்களைப் பெறவேண்டும் என்று விரும்புகிறார். இந்தக் குமாரர்களெல்லாரும் தம்முடைய ஒரே குமாரனைப்போல் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அப்போது அவருடைய குமாரன் இனிமேல் ஒரேபேறான குமாரனாக இராமல் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறான குமாரனாக இருப்பார். இப்பேர்ப்பட்ட ஒரு கூட்டம் மக்களை ஆதாயம்பண்ண வேண்டும் என்பதே தேவனுடைய ஆசை. நாம் இதைப் பார்த்தால், நாம் மனிதனுடைய விலையேறப் பெற்ற தன்மையை உணர்வோம்; மனிதன் என்று குறிப்பிடப்படும் போதெல்லாம் நாம் களிகூருவோம். தேவன் மனிதனை எவ்வளவாய் மதிக்கிறார்! தேவன் தாமேகூட ஒரு மனிதனாக மாறினார். மனிதனை ஆதாயம் பண்ணவேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். மனிதன் தேவனால் ஆதாயம்பண்ணப் படும்போது, தேவனுடைய திட்டம் நிறைவேறிவிடுகிறது.

மனிதனால்தான் தேவனுடைய திட்டம் நிறைவேற்றப் படுகிறது. மனிதன்மூலமாகத்தான் அவருடைய தேவை சந்திக்கப்படுகிறது. அப்படியானால் தேவன் தாம் படைத்த மனிதனிடமிருந்து என்ன கோருகிறார்? மனிதன் ஆள வேண்டும் என்று தேவன் கோருகிறார். தேவன் மனிதனைப் படைத்தபோது மனிதன் விழவேண்டும்

என்பதற்காகத் தேவன் அவனை முன்குறிக்கவில்லை. மனிதனுடைய வீழ்ச்சி ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் இல்லை, மாறாக மூன்றாம் அதிகாரத்தில் இருக்கிறது. மனிதனைப் படைக்கவேண்டும் என்ற தேவனுடைய திட்டத்தில் மனிதன் பாவம்செய்வதற் காகத் தேவன் அவனை முன்குறிக்கவில்லை; அவர் மீட்பையும்கூட முன்நியமிக்கவில்லை. நாம் மீட்பின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடவில்லை. மீட்பு தேவனால் முன்குறிக்கப்பட வில்லை என்று மட்டுமே கூறுகிறோம். அப்படியிருந்திருந்தால் மனிதன் பாவம் செய்யவேண்டியிருந்திருக்கும். ஆனால், தேவன் இதை முன்குறிக்கவில்லை. மனிதனைப் படைத்த தேவனுடைய திட்டத்தில் ஆளுகைசெய்ய வேண்டும் என்பதற் காக மனிதன் முன்குறிக்கப்பட்டான். ஆதியாகமம் 1:26-ல் இது நமக்கு வெளிப் படுத்தப்படுகிறது. இங்கு தேவன் தம் ஆசையைத் திரைநீக்கிக் காண்பித்து, தம் திட்டத்தின் இரகசியத்தை நமக்குக் கூறுகிறார். "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள்." இதுவே தேவன் மனிதனைப் படைத்ததின் குறிக்கோள்.

தேவனிடம் ஏன் இப்பேர்ப்பட்ட குறிக்கோள் இருக்கிறது என்று ஒருவேளை சிலர் கேட்கக்கூடும். ஏனென்றால், மனிதன் படைக்கப்படுவதற்குமுன்பே ஓர் ஒளியின் தூதன் தேவனுக்கு விரோதமாகக் கலகம்செய்து, பிசாசாக மாறினான்; விடிவெள்ளி தேவனுடைய எதிரியாக மாறினான் (ஏசா. 14:12-15). ஆகையால், தேவன் தம் அதிகாரத்தை எதிரியிடமிருந்து திரும்பப்பெற்றுக் கொண்டு, பதிலாக அதை மனிதனுடைய கையில் வைத்தார். சாத்தானுக்குப் பதிலாக மனிதன் ஆளுகை செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காகவே தேவன் மனிதனைப் படைத்தார். தேவன் மனிதனைப் படைத்ததில் எவ்வளவு பெருகுகிற கிருபையை நாம் பார்க்கிறோம்!

மனிதன் ஆளுகைசெய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பது மட்டும் இல்லை; அவன் ஆளுகை செய்வதற்காக அவர் ஒரு குறிப்பிட்ட பகுதியையும் அவனுக் கென்று ஏற்படுத்தியிருக்கிறார். இதை நாம் ஆதியாகமம் 1:26-ல் பார்க்கிறோம்: "அவர்கள் சமுத்திரத்தின் மச்சங் களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன் களையும், பூமியனைத்தையும் ஆளக்கடவர்கள்." "பூமி யனைத்தும்" மனிதன் ஆளுகைசெய்வதற்கான ஆட்சிப்பரப்பு. சமுத்திரத்தின் மச்சங்கள் மேலும், ஆகாயத்துப் பறவைகள் மேலும், மிருக ஜீவன்கள்மேலும்

மட்டும் தேவன் மனிதனுக்கு ஆண்டுகொள்ளும் அதிகாரத்தைக் கொடுக்கவில்லை; "பூமி யனைத்தையும்" அவன் ஆளுகைசெய்ய வேண்டும் என்று தேவன் இன்னும் அதிகமாக விரும்பினார். பூமியே மனிதன் ஆளுகைசெய்யவேண்டும் என்று தேவன் விரும்பின பரப்பாகும். மனிதன் குறிப்பாகப் பூமியோடு தொடர்பு டையவன். மனிதனைப் படைக்கவேண்டும் என்ற தேவனுடைய திட்டத்தில் மட்டும் அவருடைய கவனம் பூமியின்மேல் குவிக்கப் பட்டிருக்கவில்லை; தேவன் மனிதனைப் படைத்த பிறகும் அவன் பூமியின்மேல் ஆளுகைசெய்யவேண்டும் என்று அவர் அவனிடம் தெளிவாகக் கூறினார். "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். "பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப் படுத்தி...என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார்," என்று 27, 28-ஆம் வசனங்கள் கூறுகின்றன. மனிதன் "பூமியை நிரப்பவேண்டும்" "அதைக் கீழ்ப்படுத்தவேண்டும்" என்பதையே தேவன் இங்கு வலியுறுத்தினார். அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளவேண்டும் என்பது இரண்டாம் பட்சம். மற்ற இந்தக் காரியங்கள்மேல் மனிதன் ஆளுகைசெய்வது ஒரு துணைக்காரியம்; பூமியே பிரதான மான ஆதாரப்பொருள்.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித் தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது," என்று ஆதியாகமம் 1:1-2 கூறுகிறது. எபிரேய மொழியின்படி, முதல் வசனம், "ஆதியிலே தேவன் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தார்." இங்கு வானங்கள் பன்மையில் இருக்கின்றன; அவை எல்லா நட்சத்திரங் களின் வானங்களைக் குறிக்கின்றன. (பூமிக்கு அதின் வானம் இருக்கிறது; அதுபோல எல்லா நட்சத்திரங்களுக்கும் அதினதின் வானங்கள் இருக்கின்றன.) இரண்டாம் வசனத்தின் நேரடி மொழியாக்கம்: "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் மாறியது (இருந்தது இல்லை). ஆழத்தின்மேல் இருள் இருந்தது." எபிரேய மொழியில் "பூமி"க்குமுன் "பின்பு" என்ற இணையிடைச்சொல் இருக்கிறது. "ஆதியிலே தேவன் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தார்." அங்கு எந்தக் கஷ்டங்களோ, எந்தப் பிரச்சினைகளோ இருக்கவில்லை. ஆனால் ஏதோவொன்று நடந்தது: "பின்பு பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் மாறியது." ஆதியாகமம் 1:2-இலுள்ள "இருந்தது" ("பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது) என்ற வார்த்தையும், ஆதியாகமம் 19:26-இலுள்ள "ஆனாள்" (லோத்தின்

மனைவி உப்புத்தூண் ஆனாள்) என்ற வார்த்தையும் ஒன்றே. லோத்தின் மனைவி உப்புத்தூணாகப் பிறக்கவில்லை; அவள் உப்புத்தூணாய் ஆனாள். படைக்கப்பட்டபோது பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருக்கவில்லை. அது பின்னர் ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் ஆனது. தேவன் வானங்களையும் பூமியையும் படைத்தார்; ஆனால் "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் ஆனது." பிரச்சினை வானங்களோடு இல்லை, மாறாகப் பூமியோடு இருக்கிறது என்று இது வெளிப்படுத்துகிறது.

பூமியே எல்லாப் பிரச்சினைகளின் மையம் என்று நாம் பார்க்கிறோம். தேவன் பூமிக்காகப் போராடுகிறார். "உம் முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப் படுவதுபோல *பூமியிலேயும்* செய்யப்படுவதாக..." (மத். 6:9-10) என்று ஜெபிக்கக் கர்த்தராகிய இயேசு நமக்குக் கற்பித்தார். மூல மொழியின் பொருளின்படி, "பரமண்டலத்திலே செய்யப் படுவதுபோல *பூமியிலேயும்* செய்யப்படுவதாக" என்ற சொற்றொடர் கடைசித் துணை வாக்கியத்துக்கு மட்டும் இல்லை, மூன்று துணை வாக்கியங்களுக்கும் பொதுவானது: "பரமண்டலத்திலே பரிசுத்தப்படுவதுபோல பூமியிலேயும் உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. பரமண்டலத்திலே வருவதுபோல பூமியிலேயும் உம்முடைய ராஜ்யம் வருவதாக. பரமண்லத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக..." "பரலோகத்தோடு" எந்தப் பிரச்சினையும் இல்லை என்று இந்த ஜெபம் வெளிப் படுத்துகிறது. பிரச்சினை "பூமியோடு"தான் இருக்கிறது. மனிதனின் வீழ்ச்சிக்குப்பிறகு, தேவன் சர்ப்பத்தைப் பார்த்து, "...நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்," (ஆதி. 3:14) என்று கூறினார். பூமி சர்ப்பத்தின் மண்டலமாக இருக்கும், அவன் ஊர்ந்து செல்லும் இடமாக இருக்கும் என்பதே இதன் பொருள். வானம் இல்லை, பூமியே சாத்தானுடைய வேலையின் மண்டலம். தேவனுடைய இராஜ்ஜியம் வரவேண்டுமானால், சாத்தானை வெளியே விரட்டவேண்டும். தேவனுடைய சித்தம் செய்யப்படவேண்டுமானால், அது பூமியில் செய்யப்பட வேண்டும். தேவனுடைய நாமம் பரிசுத்தப்படவேண்டுமானால், அது பூமியில் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். எல்லாப் பிரச்சினைகளும் பூமியில்தான் இருக்கின்றன.

ஆதியாகமத்தில் இரண்டு வார்த்தைகள் மிகவும் பொருள் வாய்ந்தவை. ஒன்று ஆதியாகமம் 1:28-ல் உள்ள "கீழ்ப் படுத்தி" என்ற வார்த்தை; இதை "மேற்கொண்டு" என்றும் மொழி

பெயர்க்கலாம். மற்றொன்று ஆதியாகமம் *2:15*-ல் உள்ள "காக்கவும்" என்ற வார்த்தை; இதை "காவல்செய்யவும்" என்றும் மொழிபெயர்க்கலாம். பூமியை மேற்கொள்ளவும், காவல்செய்ய வுமே தேவன் மனிதனை முன்குறித்தார் என்று இந்த வசனங்களி லிருந்து நாம் பார்க்கிறோம். மனிதன் வாசம் பண்ணுவதற்காக அவனுக்குப் பூமியைக் கொடுக்கவேண்டும் என்பதே தேவனுடைய ஆதி நோக்கம். பூமி வெறுமையாக வேண்டும் என்பது தேவனுடைய நோக்கம் இல்லை (ஏசா. *45:18*). பூமியின்மேல் பலவந்தமாகத் தலையிட சாத்தானை மனிதன்மூலம் அனுமதிக்கக்கூடாது என்று தேவன் ஆசைப்பட்டார். ஆனால், பிரச்சினை என்னவென்றால் சாத்தான் பூமியின்மேல் இருந்தான்; அதின்மேல் அழிவை உண்டாக்க வேண்டும் என்று அவன் உத்தேசித்தான். ஆகையால், சாத்தானின் கையிலிருந்து மனிதன் பூமியைத் தன் கையாட்சிக்குக் கொண்டுவர வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

இன்னொரு காரியத்தையும் நாம் கவனிக்கவேண்டும்; கண்டிப்பாகப் பேசுவதானால், மனிதன் பூமியை மட்டுமின்றி, பூமியோடு தொடர்புடைய வானத்தையும் திரும்ப எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தேவன் விரும்பினார். வேதவாக்கி யங்களில் "வானங்களுக்கும்" "வானத்துக்கும்" இடையே ஒரு வித்தியாசம் உண்டு. "வானங்கள்" தேவன் தம் அதிகாரத்தைப் பயன்படுத்துகிற தேவனுடைய சிங்காசனம் காணப்படுகிற இடம். வேதவாக்கியங்களில் "வானம்" சில சமயங்களில் பூமியோடு தொடர்புடைய வானத்தைக் குறிக்கிறது. இந்த வானத்தையும் தேவன் மீட்டுத்திருப்ப விரும்புகிறார் (வெளி. *12:7-19*யைப் பார்க்கவும்).

தேவன் சாத்தானை ஏன் பாதாளக்குழிக்குள் அல்லது அக்கினிக்கடலுக்குள் போடுவதில்லை என்று சிலர் கேட்கக் கூடும்? நம் பதில் என்னவென்றால் தேவனால் முடியும்; ஆனால், அவர் தாமாகவே அதைச்செய்ய விரும்பவில்லை. அவர் தாமாகவே ஏன் அதைச் செய்யமாட்டார் என்று நமக்குத் தெரியாது. ஆனால், அவர் அதை எப்படிச் செய்யப்போகிறார் என்று நமக்குத் தெரியும். தம் எதிரியோடு இடைப்பட தேவன் மனிதனைப் பயன்படுத்த விரும்பிகிறார். அவர் மனிதனை இந்தக் குறிக்கோளுக்காகப் படைத்தார். சிருஷ்டி சிருஷ்டியோடு இடைப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். பூமியை மீண்டும் தேவனிடம் கொண்டுவர அவர் தம் சிருஷ்டியாகிய மனிதன், விழுந்துபோன தம் சிருஷ்டியாகிய சாத்தானோடு இடைப்பட வேண்டும் என்று விரும்புகிறார். அவர் படைத்த மனிதன் இந்தக் குறிக்கோளுக்காக அவரால் பயன்படுத்தப்படுகிறான்.

ஆதியாகமம் *1:26*-யை நாம் மீண்டும் வாசிப்போம்: "நமது

சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்கு வோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தை யும்...ஆளக்கடவர்கள்." இங்கு வாக்கியம் முற்றுப் பெற்றதுபோல் தோன்றுகிறது. ஆனால், இன்னொரு சொற்றொடர்கூடச் சேர்க்கப்பட்டிருக்கிறது: "...பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள்." இங்கு ஊரும் பிராணிகள் மிகப் பெரிய இடத்தை வகிக்கின்றன. ஏனென் றால் "பூமியனைத் தையும்" குறிப்பிட்டபிறகு தேவன் ஊரும் பிராணிகளைப்பற்றிப் பேசினார். மனிதன் பூமியனைத்தையும் ஆளவேண்டுமானால், ஊரும் பிராணிகளைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடக்கூடாது என்பது மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது. ஏனென்றால், தேவனுடைய எதிரி ஊரும் பிராணிகளில் ஊனுருக்கொண்டுள் ளான். ஆதியாகமம் 3-ல் சர்ப்பமும், லூக்கா 10-ல் தேள்களும் ஊரும் பிராணிகள். சாத்தானின் பிரதிநிதியாகிய சர்ப்பம் மட்டும் இல்லை, பாவமான அசுத்தமான பொல்லாத ஆவிகளின் பிரதிநிதியாகிய தேள்களும் அங்கு இருக்கின்றன. இந்தப் பூமியே சர்ப்பம், தேள்கள் ஆகியவைகளின் ஆட்சிப்பரப்பாகும். பிரச்சினை பூமியில் இருக்கிறது.

ஆகையால், ஆத்துமாக்களை இரட்சிக்கும் வேலைக்கும், தேவனுடைய வேலைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நாம் பார்க்கவேண்டும். அநேக நேரங்களில், ஆத்துமாக்களை இரட் சிக்கும் வேலை அவசியம் தேவனுடைய வேலையாக இருப்ப தில்லை. ஆத்துமாக்களை இரட்சித்தல் மனிதனுடைய பிரச்சினை யைத் தீர்க்கிறது. ஆனால், தேவனால் படைக்கப்பட்ட எல்லாவற் றின்மேலும் ஆளுகைசெய்ய மனிதன் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவனுடைய வேலை கோருகிறது. தேவனுக்குத் தம் படைப்பில் ஓர் அதிகாரம் தேவைப்படுகிறது. அந்த அதிகாரமாக இருக்கத் தேவன் மனிதனைத் தெரிந்தெடுத்திருக்கிறார். வெறும் மனிதர்கள் என்றமுறையில் நாம் வெறுமனே நமக்காக மட்டுமே இருந்தால், கர்த்தரை இன்னும் அதிகமாக நேசிக்கவேண்டும், இன்னும் அதிக பரிசுத்தமாக இருக்கவேண்டும், இன்னும் அதிக வைராக்கியமாக இருக்கவேண்டும், இன்னும் அதிக ஆத்துமாக் களை இரட்சிக்கவேண்டும் என்பதே நம் தேடுதலாகவும், வேட்கை யாகவும் இருக்கும்; இந்தத் தேடுதல்களெல்லாம் மெய்யாகவே நல்லவைகளே. ஆனால், அவை அதிகமாக மனிதனை மையமாகக் கொண்டவை. இவைகளெல்லாம் வெறுமனே மனிதனின் நலன்களைப்பற்றியவை; தேவனுடைய வேலையும், தேவனுடைய தேவையும் முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்றன. தேவனுடைய தேவை சந்திக்கப்படவேண்டும் என்பதை நாம் பார்க்கவேண்டும்.

வெறுமனே மனிதனுடைய தேவைக்காக இல்லை, இன்னும் சொல்லப்போனால் தேவனுடைய தேவைக்காகவே நாம் இந்தப் பூமியில் இருக்கிறோம். தேவன் நம்மிடம் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை ஒப்படைத்திருக்கிறார் என்பதற்காக அவருக்கு நன்றி கூறுங்கள். ஆனால், நாம் முழு உலகத்திலுள்ள எல்லா ஆத்துமாக்களையும் இரட்சித்துவிட்டாலுங்கூட, நாம் இன்னும் தேவனுடைய வேலையைச் செய்துமுடித்துவிடவில்லை அல்லது தேவனுடைய கோரிக்கையைத் திருப்திப்படுத்திவிடவில்லை. தேவனுடைய வேலை, தேவனுடைய தேவை, என்றழைக்கப்படுகிற ஒன்று இங்கு இருக்கிறது. தேவன் மனிதனைப் படைத்தபோது, அவர் தம் தேவையைப் பற்றிப் பேசினார். மனிதன் தேவன் படைத்த எல்லாவற்றின் மேலும் ஆண்டுகொண்டு, ஆளுகைசெய்து அவருடைய வெற்றியைப் பறைசாற்ற வேண்டும் என்ற தம் தேவையைத் தேவன் வெளிப்படுத்தினார். தேவனுக்காக ஆளுகை செய்தல் ஒரு சிறிய காரியம் இல்லை; இது பெரிய காரியம். தாம் நம்பக்கூடிய, தம்மை ஏமாற்றாத மனிதர்கள் தேவனுக்குத் தேவை. இது தேவனுடைய வேலை; இதையே தேவன் அடைய விரும்புகிறார்.

சுவிசேஷம் பிரசங்கிக்கும் வேலையை நாம் இலேசாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், நம் வேலையெல்லாம் வெறுமனே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும், ஆத்துமாக்களை இரட்சிப்பதும் தான் என்றால், நாம் சாத்தானுக்குப் படுபயங்கரமான இழப்பை ஏற்படுத்தவில்லை. சாத்தானின் கையிலிருந்து மனிதன் பூமியை அதின் ஆதிநிலைக்குத் திருப்பிக்கொண்டு வராவிட்டால், தேவன் தன்னைப் படைத்ததின் குறிக்கோளை மனிதன் இன்னும் அடைய வில்லை. ஆத்துமாக்களை இரட்சித்தல் பெரும்பாலும் மனிதனின் நலனுக்காகவே. ஆனால், சாத்தானோடு இடைப்படுதல் தேவனு டைய நலனுக்காக. ஆத்துமாக்களை இரட்சித்தல் மனிதனுடைய தேவையைச் சந்திக்கிறது; ஆனால், சாத்தானோடு இடைப்படுதல் தேவனுடைய தேவையைத் திருப்திப்படுத்துகிறது.

சகோதர சகோதரிகளே, இதற்கு நாம் விலைக்கிரயம் செலுத்தியாக வேண்டும். பிசாசுகளால் எப்படிப் பேசமுடியும் என்று நமக்குத் தெரியும். ஒருமுறை ஒரு பிசாசு, "...இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்?" (அப். 19:15) என்று கூறியது. ஒரு பிசாசு நம்மைச் சந்திக்கும்போது, அவன் நம்மைவிட்டு ஓடுவானா, ஓடமாட்டானா? சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு நாம் ஒரு விலைக்கிரயம் செலுத்த வேண்டும்; ஆனால், சாத்தானோடு இடைப்பட அதைவிட அதிகமான விலைக் கிரயம் செலுத்தப்படவேண்டும்.

இது ஒரு செய்தியையோ அல்லது ஒரு போதனையையோ

பற்றிய காரியம் இல்லை. இதை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்; செலுத்தவேண்டிய விலை மிகவும் அதிகம். சாத்தானுடைய எல்லா வேலையையும், அதிகாரத்தையும் தலைகீழாக்க நாம் தேவன் பயன்படுத்தும் மனிதர்களாக இருக்கவேண்டுமானால், நாம் தேவனுக்கு முற்றிலுமாகவும் முழுமையாகவும் கீழ்ப்படியவேண்டும். மற்ற வேலையைச் செய்வதில் நாம் நம்மைக் கொஞ்சம் பாதுகாப்பாக வைத்துக் கொண்டால், அதனால் அவ்வளவு நஷ்டம் இல்லை; ஆனால், சாத்தானோடு இடைப்படும் போது நாம் நமக்காக ஒரு சிறு துண்டு தளத்தைக்கூட விட்டுவைக்கக்கூடாது. வேதவாக்கியங்களைப் படிக்கையில், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில், சபைக்கு அல்லது சகோதரர்களுக்கு உதவுகையில் நாம் நமக்குரிய ஏதோ கொஞ்சத்தைப்பற்றிப் பிடித்துவைத்துக் கொள்ளலாம். ஆனால், சாத்தானோடு இடைப்படும்போது சுயத்தை முழுமையாகக் கைவிட்டுவிடவேண்டும். சுயத்தைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டால், நம்மால் சாத்தானை ஒருபோதும் அசைக்கமுடியாது. நாம் முற்றிலுமாகவும், முழுமையாகவும் தேவனுக்காக இருக்கவேண்டும் என்று அவருடைய குறிக்கோள் கோருகிறது என்பதைக்காண தேவன்தாமே நம் கண்களைத் திறப்பாராக. இருமனமுள்ள நபரால் ஒருபோதும் சாத்தானோடு இடைப்படமுடியாது. தேவன் தாமே இந்த வார்த்தையை நம் இருதயங்களுக்குப் பேசுவாராக.

## தேவனுடைய மாறாத குறிக்கோள்

இந்தப் பூமியில் மனிதன் தமக்காக ஆளுகைசெய்ய வேண்டும் என்று தேவன் விரும்பினார். ஆனால், மனிதன் தேவனுடைய குறிக்கோளை நிறைவேற்றவில்லை. ஆதி யாகமம் 3-ல் வீழ்ச்சி நடந்தது, பாவம் நுழைந்தது; மனிதன் சாத்தானுடைய வல்லமையின்கீழ் வந்தான், எல்லாம் ஒரு முடிவுக்கு வந்ததுபோல் தோன்றியது. சாத்தான் வெற்றி பெற்றதுபோலவும், தேவன் தோற்றுப்போனதுபோலவும் தோன்றியது. ஆதியாகமம் 1-ல் உள்ள பத்தியோடுகூட, இந்தப் பிரச்சினையோடு தொடர்புடைய இன்னும் இரண்டு பத்திகள் வேதவாக்கியங்களில் உள்ளன. அவை சங்கீதம் 8ம், எபிரேயர் 2ம் ஆகும்.

### சங்கீதம் 8

தேவனுடைய குறிக்கோளும், திட்டமும் ஒருபோதும் மாறியதேயில்லை என்று சங்கீதம் 8 காண்பிக்கிறது. வீழ்ச்சிக்குப்பிறகு, மனிதனுக்கான தேவனுடைய சித்தமும், கோரிக்கையும் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே இருந்தன. மனிதன் பாவம்செய்து, வீழ்ந்துவிட்டபிறகும்கூட, தேவன் மனிதனைப்

படைத்தபோது ஆதியாகமம் 1-ல் இருந்த அவருடைய சித்தம் இன்னும் அப்படியே இருக்கிறது. சங்கீதம் 8 மனிதனுடைய வீழ்ச்சிக்குப்பிறகு எழுதப்பட்ட பிறகுங்கூட, சங்கீதக்காரனால் துதிக்க முடிந்தது; அவருடைய கண்கள் இன்னும் ஆதியாகமம் 1-இலேயே இருந்தன. பரிசுத்த ஆவி ஆதியாகமம் 1-ஐ மறக்கவில்லை, குமாரன் ஆதியாகமம் 1-ஐ மறக்கவில்லை, தேவனும்கூட ஆதியாகமம் 1-ஐ மறக்கவில்லை.

இந்தச் சங்கீதத்தின் உள்ளடக்கத்தை நாம் இப்போது பார்ப்போம்: "எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!" என்று 1-ஆம் வசனம் கூறுகிறது. பரிசுத்த ஆவியால் ஏவப்பட்ட எல்லாரும் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளைக் கூறுவார்கள்: "உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!" சில மக்கள் கர்த்தருடைய நாமத்தைத் தூஷித்துத் தள்ளினாலுங்கூட, "எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!" என்று சங்கீதக்காரன் சத்தமாய்ப் பறைசாற்றுகிறான். "உம்முடைய நாமம் மிகவும் மேன்மையுள்ளதாயிருக்கிறது" என்று அவன் கூறவில்லை. "மிகவும் மேன்மையுள்ளதாயிருக்கிறது" என்பதற்கு "எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது" என்ற அதே பொருள் இல்லை. சங்கீதக்காரனாகிய என்னால் மேன்மையை விவரிக்கமுடியும் என்பதே "மிகவும் மேன்மையுள்ளதாயிருக்கிறது" என்பதின் பொருள்; ஆனால், என்னால் சங்கீதங்கள் எழுதமுடிந்தாலுங்கூட கர்த்தருடைய நாமத்தை விவரிக்க என்னிடம் வார்த் தைகள் இல்லை அல்லது கர்த்தருடைய நாமம் எவ்வளவு மேன்மையுள்ளது என்று எனக்குத் தெரியாது என்பதே "எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது" என்பதின் பொருள். எனவே, "எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!" என்று மட்டுமே என்னால் கூறமுடியும். அவருடைய நாமம் மேன்மையுள்ளது மட்டும் இல்லை. அவருடைய நாமம் "பூமியெங்கும்" மேன்மையுள்ளது. "பூமியெங்கும்" என்ற பதம் ஆதியாகமம் 1:26-இலுள்ள அதே பதமாகும். நாம் திட்டத்தை அறிந்திருந்தால் "மனிதன்" என்ற வார்த்தையை அல்லது "பூமி" என்ற வார்த்தையை வாசிக்கும் ஒவ்வொரு முறையும் நம் இருதயங்கள் நமக்குள் துள்ளும்.

"பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்," என்று 2-ஆம் வசனம் தொடர்ந்து கூறுகிறது. குழந்தைகளும், பாலகர்களும் மனிதனைக்

குறிக்கின்றன. எதிரியோடு இடைப்பட தேவன் மனிதனைப் பயன் படுத்துகிறார் என்பதே இந்த வசனத்தில் வலியுறுத்தப்படுகிறது. மத்தேயு 21:16-ல் கர்த்தராகிய இயேசு இந்த வசனத்தை மேற்கோள்காட்டினார்: "குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்." எதிரி தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்யக்கூடும்; ஆனால், தேவன்தாமே அவனோடு இடைப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று இந்த வசனங்கள் கூறுகின்றன. அவனோடு இடைப்பட தேவன் குழந்தைகளையும், பாலகர்களையும் பயன்படுத்துவார். குழந்தைகளாலும், பாலகர்களாலும் என்ன செய்யமுடியும்? "குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்." துதிக்கமுடிந்த மனிதர்களைப் பெறவேண்டும் என்பதே தேவனுடைய ஆசை; துதிக்கமுடிந்தவர்களால் மட்டுமே எதிரியோடு இடைப்படமுடியும்.

"உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங் களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்," என்று 3-8 வசனங் களில் சங்கீதக்காரன் கூறுகிறார். நாம் இந்தச் சங்கீதத்தை எழுதியிருந்தால், இந்தக் கட்டத்தில் ஒருவேளை ஓர் அடைப்புக்குறிக்குள், "மனிதன் வீழ்ந்து, பாவஞ்செய்து, ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே விரட்டப்பட்டது என்னே பரிதாபம்! மனிதனால் இனி இந்த நிலையை எட்டமுடியாது," என்று சேர்த்திருப்போம். ஆனால், சங்கீதக்காரனின் இருதயத்தில் இப்பேர்ப்பட்ட எண்ணம் இருக்கவில்லை என்பதற்காகத் தேவனுக்கு நன்றி கூறுங்கள். தேவனுடைய பார்வையில் பூமியைத் திரும்பவும் அதின் ஆதி நிலைக்குக் கொண்டுவரமுடியும், தேவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட அந்தஸ்து இன்னும் இருக்கிறது, பிசாசின் வேலையை அழிக்குமாறு தேவன் மனித னிடம் ஒப்படைத்தது இன்னும் அப்படியே இருக்கிறது. ஆகை யால், சங்கீதக்காரன் ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தை முற்றிலு மாகக் காணாததுபோல் விட்டுவிட்டு, அதே பழைய கதையை மீண்டும் கூறுகிறான். இதுவே 8-ஆம் சங்கீதத்தின் முதன்மையான

*தனிச்சிறப்பாகும். மனிதன் ஆளவேண்டும் என்பதே தேவனுடைய குறிக்கோள். மனிதன் இதற்குத் தகுதியானவனா? நிச்சயமாக இல்லை! ஆனால், மனிதன் ஆளவேண்டும் என்பது தேவனுடைய குறிக்கோளாக இருப்பதால், மனிதன் நிச்சயமாக ஆளுகைசெய்வான்.*

*"எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!" என்று 9-ஆம் வசனத்தில் சங்கீதக்காரன் மீண்டும் கூறுகிறான். மனிதனுடைய வீழ்ச்சியைப்பற்றி ஒன்றும் தெரியாதவன்போல், அவன் தொடர்ந்து துதிக்கிறான். ஆதாம் பாவம்செய்தபோதும், ஏவாளும் பாவம்செய்தபோதுங்கூட, அவர்களால் தேவனுடைய திட்டத்தை எதிர்த்துநிற்க முடியவில்லை. மனிதன் விழக்கூடும்; மனிதன் பாவம்செய்யக்கூடும்; ஆனால், மனிதனால் தேவனுடைய சித்தத்தைத் தலைகீழாக்க முடியாது. மனிதன் வீழ்ந்தபிறகும்கூட, மனிதனுக்கான தேவனுடைய சித்தம் அப்படியேதான் இருந்தது. சாத்தானுடைய வல்லமையை மனிதன் தலைகீழாக்க வேண்டும் என்று தேவன் இன்னும் கோருகிறார். ஆ, என்னே மாறாத தேவன் அவர்! அவருடைய வழி வழுவாதது, முற்றிலும் நேரானது. தேவனை ஒருபோதும் கவிழ்க்க முடியாது என்பதை நாம் உணரவேண்டும். கடினமான அநேக அடிகளை வாங்குகிறவர்கள் இந்த உலகத்தில் சிலர் இருக்கிறார்கள்; ஆனால், தேவனைப்போல தினமும் யாரும் தாக்கப்படுவதும் இல்லை, தொடர்ந்து வெடிவைத்துத் தகர்க்கப்படுவதுபோல் தகர்க்கப்படுவதும் இல்லை. இருந்த போதும், அவருடைய சித்தம் ஒருபோதும் கவிழ்க்கப்பட்டதில்லை. மனிதனுடைய வீழ்ச்சிக்குமுன் தேவன் என்னவாக இருந்தாரோ, அப்படியே அவர் மனிதனுடைய வீழ்ச்சிக்குப் பிறகும், பாவம் உலகத்துக்குள் நுழைந்தபிறகும் இருக்கிறார். முன்நாட்களில் அவர் உறுதிசெய்த தீர்மானம் இன்னும் இன்றைக்கும் அவருடைய தீர்மானமாகும். அவர் ஒருபோதும் மாறியதில்லை.*

## எபிரேயர் 2

*ஆதியாகமம், படைப்பின்போது தேவனுடைய சித்தத்தைப் பற்றிப் பேசுகிறது; சங்கீதம் 8 மனிதனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு தேவனுடைய சித்தத்தைப்பற்றிப் பேசுகிறது; எபிரேயர், மீட்பில் தேவனுடைய சித்தத்தைப்பற்றிப் பேசுகிறது. மனிதன் அதிகாரத்தைப் பெற்று, சாத்தானோடு இடைப்படவேண்டும் என்று மீட்பின் வெற்றியில் தேவன் இன்னும் விரும்புகிறார் என்று நாம் பார்ப்போம்.*

“இனிவரும் உலகத்தைக்குறித்துப் பேசுகிறோமே, அதை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை. ஒரு இடத்திலே ஒருவன் சாட்சியாக: மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங் களுக்குக் கீழ்ப்படுத்தினீர் (8-ஆம் சங்கீதத்தின் மேற்கோள்) என்று சொன்னான். சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்ற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை,” என்று 5-8 வசனங்களில் ஆசிரியர் கூறுகிறார். சகலமும் மனிதனுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்; ஆதியிலிருந்து இதுவே தேவனுடைய குறிக்கோள்.

ஆனால், இது இன்னும் இப்படி நடக்கவில்லை. ஆசிரியர் தொடர்ந்து, “அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்படிருக்கக்காணோம். என்றாலும்...தேவதூத ரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டத்தைக் காண்கிறோம்,” (வசனம் 8-9) என்று கூறுகிறார். தேவன் மனிதனைத் தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கினார் என்று சங்கீதம் 8 கூறியது. ஆனால், அப்போஸ்தலர் “மனிதன்” இயேசுவைக் குறிக்கிறது என்று அவர் விளக்கமளித்தார். தேவதூதரிலும் சற்றுச் சிறியவரானவர் இயேசு. அவரால்தாம் மனிதனுடைய மீட்பு. மனிதன் தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக இருக்கவேண்டும் என்பதும், மனிதன் முடிசூட்டப்பட்டு தேவனுடைய சகல படைப்பின்மேலும் ஆளுகைசெய்யவேண்டும் என்பதுமே ஆதியில் தேவனுடைய குறிக்கோளாகும், பூமியிலிருந்தும், பூமியோடு தொடர்புடைய வானத்திலிருந்தும் தேவனுடைய எதிரியை விரட்டியடிக்க மனிதன் அவருக்குப்பதிலாக அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும் என்று அவர் உத்தேசித் திருந்தார். மனிதன் சாத்தானுடைய எல்லா வல்லமையையும் அழிக்கவேண்டும் என்று தேவன் விரும்பினார். ஆனால், மனிதன் விழுந்தான்; ஆளுகைசெய்ய அவன் தன் இடத்தை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையால், கர்த்தராகிய இயேசு வந்து, மாம்சமும் இரத்தமும் உடைய ஒரு சரீரத்தைத் தன்மேல் எடுத்துக்கொண்டார். அவர் “கடைசி ஆதாம்” ஆனார் (1 கொரி. 15:45).

“என்றாலும் தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக் காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படி,” என்று 9-ஆம் வசனத்தின் முதல் பகுதி கூறுகிறது. கர்த்தராகிய இயேசுவின் மீட்பின் வேலை

மனிதனுக்காக மட்டும் இல்லை, படைக்கப்பட்ட எல்லாவற்றுக் குமாகும் என்று கர்த்தராகிய இயேசுவின் பிறப்பும், கர்த்தராகிய இயேசுவின் மனித வாழ்க்கையும், கர்த்தராகிய இயேசுவின் மீட்பும் நமக்குக் காண்பிக்கின்றன. (தேவதூதர்களைத் தவிர) எல்லா படைப்பும் அடங்கியுள்ளன. கர்த்தராகிய இயேசு இரண்டு அந்தஸ்துகளில் நின்றார்: தேவ னுக்கு, அவரே ஆதியிலிருந்த மனிதன், முதன்முதலிலிருந்து தேவன் நியமித்திருந்த மனிதன்; மனிதனுக்கு அவர் இரட்சகர். மனிதன் ஆளுகைசெய்து, சாத்தானைக் கவிழ்க்கவேண்டும் என்பதே தேவன் ஆதியில் அவனுக்குக் குறித்த திட்டமாகும். கர்த்தராகிய இயேசுவே அந்த மனிதன். அந்த மனிதன் இப்போது சிங்காசனத்தில் அமர்த்தப் பட்டிருக்கிறார். அல்லேலூயா! இப்பேர்ப்பட்ட மனிதன் சாத்தானின் வல்லமையைக் கவிழ்த்துவிட்டார். அவரே தேவன் விரும்புகிற, அடைய ஆசிக்கிற மனிதன். அவருடைய மற்ற அம்சத்தில், அவர் நம்மோடு தொடர்புடைய ஒரு மனிதன்; அவர் நம் இரட்சகர், நமக்குப்பதிலாக பாவம் என்ற பிரச்சினையோடு இடைப்பட்டவர். நாம் பாவம்செய்து, வீழ்ந்தோம்; தேவன் அவரை நமக்காகக் கிருபாதார பலியாக ஆக்கினார். மேலும், அவர் நமக்காகக் கிருபாதார பலியாக ஆக்கப்பட்டதோடு மட்டும் இல்லை, அவர் எல்லா சிருஷ்டிகளுக்காகவும் நியாயந் தீர்க்கவும் பட்டார். பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த திரை கிழிக்கப்பட்டது இதை நிரூபிக்கிறது. பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த திரை கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் குறித்தது என்று எபிரேயர் 10 கூறுகிறது. திரையின்மேல் சித்திரவேலைப்பாடாலான கேருபீன்கள் இருந்தன; அவை படைக்கப்பட்டவைகளுக்குப் பிரதிநிதி. கர்த்தராகிய இயேசு மரித்தபோது, திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது; அதன் விளைவாக, அதன்மேல் சித்திரவேலைப்பாடாலான கேருபீன்களும் அதேநேரத்தில் கிழிக்கப்பட்டன. கர்த்தராகிய இயேசுவின் மரணத்தில் சகல படைப்புகளுக்கான நியாயத்தீர்ப்பும் அடங்கியிருந்தன என்று இது வெளிப்படுத்துகிறது. அவர் ஒவ்வொருவருக்காகவும் மட்டும் இல்லை, "ஒவ்வொன்றுக் காகவும்கூட" மரணத்தை ருசிபார்த்தார்.

"ஏனென்றால், தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது," என்று 10-ஆம் வசனம் தொடர்ந்து கூறுகிறது. சகலமும் அவருக்காகவும், அவர்மூலமாகவும் இருக் கின்றன; சகலமும் அவருக்கும், அவராலும் இருக்கின்றன. அவருக்காக இருக்கின்றன என்றால் அவருக்கு இருக்கின்றன என்று

பொருள்; அவர்மூலம் இருக்கின்றன என்றால் அவரால் இருக்கின்றன என்று பொருள். தேவன் படைப்பின்போது தமக்கிருந்த குறிக்கோளை மாற்றவில்லை என்பதற்காக அவரைத் துதியுங்கள்! படைப்பின்போது தேவன் நியமித்திருந் ததையே, மனிதனுடைய வீழ்ச்சிக்குப்பிறகும் அவர் நியமித்திருந்தார். மீட்பில் அவருடைய குறிக்கோள் அப்படியே இருக்கிறது. மனிதனுடைய வீழ்ச்சியின் காரணமாக தேவன் தம் குறிக்கோளை மாற்றவில்லை. தேவனைத் துதியுங்கள், அவர் அநேகக் குமாரர்களை மகிமைக்குள் கொண்டுவருகிறார்! அவர் அநேகக் குமாரர்களை மகிமைக்குள் கொண்டுவந்து கொண்டிருக்கிறார். தம் குமாரனின் ரூபத்தையும், சாயலையும் உடைய ஒரு கூட்டம் புதிய மனிதர்களை ஆதாயம்பண்ண வேண்டும் என்பதே தேவனுடைய குறிக்கோள். கர்த்தராகிய இயேசுவே பிரதிநிதியாகிய மனிதனாக இருப்பதால், மற்ற எல்லாரும் அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே இருப்பார்கள்; அவர்கள் அவரோடு மகிமைக்குள் நுழைவார்கள்.

இதை எப்படி செய்துமுடிக்க முடியும்? "எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்," என்று 11-ஆம் வசனம் கூறுகிறது. பரிசுத்தஞ்செய்கிறவர் யார்? அவர் கர்த்தராகிய இயேசு. பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்கள் யார்? நாமே பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்கள். இந்த வசனத்தை, "பரிசுத்தஞ் செய்கிறவராகிய இயேசுவும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர் களாகிய நாமும் ஒருவராலே உண்டாயிருக்கிறோம்," என்று நாம் வாசிக்கலாம். கர்த்தராகிய இயேசுவும், நாமெல்லாரும் ஒரே பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம்; நாமெல்லாரும் ஒரே ஊற்றிலிருந்து வந்திருக்கிறோம்; நம்மெல்லாரிடமும் ஒரே ஜீவன் இருக்கிறது. நம்மெல்லாரிடமும் அதே உள்ளுறையும் ஆவியானவரும், நம் கர்த்தரும் நம் பிதாவுமாகிய அதே தேவனும் இருக்கிறார். "இதினிமித்தம் அவர்களைச் சகோதரர்களென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை," "அவர்" என்ற வார்த்தை நம் கர்த்தராகிய இயேசுவையும், "அவர்களை" என்ற வார்த்தை நம்மையும் குறிக்கின்றன. "அவர்களைச் சகோதரர்களென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை." ஏனென்றால், அவர் பிதாவினால் உண்டாயிருக்கிறார், நாமும் பிதாவினால் உண்டாயிருக்கிறோம்.

நாம் தேவனுடைய அநேகக் குமாரர்கள்; இறுதியாக இதன் விளைவாகத் தேவன் நம்மை மகிமைக்குள் கொண்டுவருவார். மீட்பு தேவனுடைய குறிக்கோளை மாற்றவில்லை; மாறாக, படைப்பின்போது செய்துமுடிக்கப்படாத குறிக்கோளை அது நிறைவேற்றியது. மனிதன் ஆளுகைசெய்ய வேண்டும், குறிப்பாக

பூமியின்மேல், என்பதே தேவனுடைய ஆதி நோக்கம். ஆனால், வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் மனிதன் தோற்றுப் போனான். இருந்தபோதும், முதல் மனிதனின் வீழ்ச்சியினால் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்துவிடவில்லை. முதல் மனிதனாகிய ஆதாமிடமிருந்து பெற முடியாததை தேவன் இரண்டாவது மனிதனாகிய கிறிஸ்துவிடமிருந்து பெறுவார். பெத்லெகேமில் ஒரு முக்கியமான பிறப்பு ஏற்பட்டது; ஏனென்றால், மனிதன் பூமியை ஆளுகைசெய்து, அதை அதின் ஆதி நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று தேவன் நியமித்திருந்தார்; ஏனென்றால், சிருஷ்டியாகிய மனிதன் சிருஷ்டியாகிய சாத்தானை அழிக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்தார். இதனால்தான் கர்த்தராகிய இயேசு ஒரு மனிதனாக ஆனார். அவர் இதை ஒரு குறிக்கோளோடு தான் செய்தார். அவர் ஓர் உண்மையான மனிதனாக மாறி னார். முதல் மனிதன் தேவனுடைய குறிக் கோளைச் செய்துமுடிக்க வில்லை; மாறாக, அவன் பாவஞ்செய்து விழுந்தான். அவன் பூமியை அதின் ஆதிநிலைக்குக் கொண்டுவரத் தவறியதோடு மட்டும் இல்லை; அவன் சாத்தானால் சிறைப்படுத்தவும்பட்டான். அவன் ஆளுகைசெய்யத் தவறியதோடு மட்டும் இல்லை; அவன் சாத்தானின் வல்லமையின்கீழ் கொண்டுவரவும்பட்டான். மனிதன் மண்ணினால் உண்டாக்கப்பட்டான் என்று ஆதியாகமம் 2 கூறுகிறது. மண் சாத்தானின் உணவு என்று ஆதியாகமம் 3 சுட்டிக்காட்டுகிறது. விழுந்து போன மனிதன் சாத்தானின் உணவாக மாறினான் என்பதே இதன் பொருள். மனிதனால் அதற்குமேல் சாத்தானோடு இடைப்பட முடியவில்லை, அவன் கதை முடிந்தது. என்ன செய்யமுடியும்? தேவனால் தம் நித்தியக் குறிக்கோளை ஒருபோதும் சாதிக்க முடியாது என்பதா இதன் பொருள்? அவர் எதைத் தேடிக் கொண்டிருந்தாரோ அதை இனிமேல் அடையமுடியாது என்பதா இதன் பொருள்? தேவனால் இனி ஒருபோதும் பூமியை அதின் ஆதி நிலைக்குக் கொண்டுவர முடியாது என்பதா இதன் பொருள்? இல்லை! அவர் ஒரு மனிதனாக மாறத் தம் குமாரனை அனுப்பினார். கர்த்தராகிய இயேசு மெய்யாகவே தேவன்; ஆனால், அவர் மெய்யாகவே மனிதனுமாவார்.

இந்த முழு உலகத்திலும் தேவனைத் தெரிந்தெடுக்கிற, "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை," (யோவான் 14:30) என்று சொல்லக்கூடிய ஒரு நபராவது, குறைந்தது ஒரு மனிதனாவது, இருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கர்த்தராகிய இயேசுவில் இந்த உலகத்தின் அதிபதிக்குரிய ஒரு சுவடுகூட இல்லை. தேவனாக இருப்பதற்கு அல்ல; மாறாக, மனிதனாக இருக்கக் கர்த்தராகிய

இயேசு இந்த உலகத்துக்கு வந்தார் என்பதை நாம் கவனமாகப் பார்க்கவேண்டும். தேவனுக்கு ஒரு மனிதன் தேவைப்பட்டான். தேவன்தாமே சாத்தானோடு இடைப்பட்டிருந்தால், அது மிகவும் எளிதாக இருந்திருக்கும்; சாத்தான் ஒரு கணப்பொழுதில் விழுந்திருப்பான். ஆனால், தேவன்தாமே அதைச்செய்யமாட்டார். மனிதன் சாத்தானோடு இடைப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார்; சிருஷ்டி சிருஷ்டியோடு இடைப்பட வேண்டும் என்று அவர் உத்தேசித் தார். கர்த்தராகிய இயேசு ஒரு மனிதனாக மாறியபோது, அவர் ஒரு மனிதனைப்போல் சோதனையைச் சகித்தார், மனிதனின் எல்லா அனுபவங்களினூடாய்க் கடந்து சென்றார். இந்த மனிதன் மேற்கொண்டார்; இந்த மனிதன் வெற்றி பெற்றார். அவர் பரலோகத்துக்கு ஏறிச்சென்று, பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்தார். இயேசு "மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டிருக்கிறார்" (எபி. 2:9). அவர் மகிமைப்படுத்தப் பட்டிருக்கிறார்.

அவர் தேவனாக மகிமையைப் பெற வராமல், மனிதனாக மகிமையை அடைய வந்தார். அவரிடம் தேவனுடைய மகிமை இருக்கவில்லை என்று நாம் கூறவில்லை. ஆனால், எபிரேயர் 2 தேவன் என்ற முறையில் அவரிடம் இருந்த மகிமையைக் குறிக்கவில்லை. அது மரணத்தைச் சகித்ததினால், தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்ட இயேசுவைக் குறிக்கிறது; இயேசு மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார். நம் கர்த்தர் ஒரு மனிதனாகப் பரமேறினார். இன்று அவர் மனிதனாகப் பரலோகங்களில் இருக்கிறார். ஒரு மனிதன் தேவனுடைய வலது பக்கத்தில் இருக்கிறார். எதிர்காலத்தில் அநேக மனிதர்கள் அங்கு இருப் பார்கள். இன்று ஒரு மனிதன் சிங்காசனத்தில் அமர்ந்திருக் கிறார். ஒருநாள் அநேக மனிதர்கள் அங்கு சிங்காசனத்தில் அமர்ந்திருப்பார்கள். இது நிச்சயம்.

கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்தபோது, அவர் தம் ஜீவனை நமக்குள் பகிர்ந்தளித்தார். நாம் அவரில் விசுவாசம் வைக்கும் போது, நாம் அவருடைய ஜீவனைப் பெறுகிறோம். நாமெல்லாரும் தேவனுடைய குமாரர்களாக மாறுகிறோம்; இந்த வகையில் நாமெல்லாரும் தேவனுக்குச் சொந்தம். நமக்குள் இந்த ஜீவன் இருப்பதால், அவருடைய குறிக்கோளை நிறைவேற்ற மனிதர்கள் என்ற முறையில் தேவன் நம்மை நம்பலாம். ஆகையால், அவர் அநேகக் குமாரர்களை மகிமைக்குள் கொண்டுவருவார் என்று அது கூறுகிறது. ஆளுகைசெய்வ தென்றால் மகிமைப்படுத்தப் படுவதாகும், மகிமைப்படுத்தப் படுவதென்றால் ஆளுகைசெய்வ தாகும். அநேகக் குமாரர்கள் அதிகாரத்தை அடைந்து, பூமியை அதின் ஆதி நிலைக்குக் கொண்டுவந்தபிறகு, அவர்கள்

வெற்றிகரமாக மகிமைக்குள் கொண்டுவரப்படுவார்கள்.

நாம் பரலோகத்தின் ஆசீர்வாதங்களை அனுபவித்து மகிழுமாறு, நம்மை வெறுமனே நரகத்திலிருந்து இரட்சிப்பதே தேவனுடைய குறிக்கோள் என்று நாம் ஒருபோதும் ஊகிக்கக் கூடாது. பூமியில் தேவனுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த மனிதன் தேவனுடைய குமாரனைப் பின்பற்ற வேண்டும் என்று தேவன் உத்தேசித் திருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தேவன் ஏதோவொன்றைச் சாதிக்க விரும்புகிறார்; ஆனால், அவர்தாமே அதைச் செய்யமாட்டார். நாம் அதைச்செய்யவேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் அதைச்செய்துமுடித்தபிறகு, தேவன் தம் குறிக்கோளை அடைந்திருப்பார். மனிதனின்மூலம் தேவன் பூமியில் ஆளுகை செய்யுமாறு, இங்கு இந்தப் பூமியில் தம் சித்தத்தைச் செய்யும் ஒரு கூட்டம் மக்களை அடையவேண்டும் என்று தேவன் ஆசைப்படுகிறார்.

## மீட்புக்கும், படைப்புக்குமிடையேயுள்ள உறவு

மீட்புக்கும், படைப்புக்குமிடையேயுள்ள உறவை நாம் கவனிக்க வேண்டும். வேதாகமம் மீட்பைத்தவிர வேறொன்றைப் பற்றியும் பேசவில்லை என்று நாம் ஒருபோதும் நினைக்கக் கூடாது. மீட்போடுகூட படைப்பும் இருப்பதற்காகத் தேவ னுக்கு நன்றிகூறுங்கள். தேவனுடைய இலக்கு, தேவனுடைய திட்டம், தேவனுடைய முன்குறித்த சித்தம் ஆகியவைக ளெல்லாம் அவருடைய படைப்பில் தெரியப்படுத்தப்படுகின்றன. படைப்பு தேவனுடைய நித்தியக் குறிக்கோளை வெளியாக்குகிறது; தேவன் உண்மையாகவே எதைத் தேடிக்கொண்டிருக்கிறார் என்று அது காண்பிக்கிறது.

மீட்பின் இடம் படைப்பின் இடத்தைவிட உயர்வாக இருக்கமுடியாது. மீட்பு என்றால் என்ன? தேவன் படைப்பின் மூலம் அடையாததை மீட்பு மீட்டுத்திருப்புகிறது. மீட்பு எதையும் நமக்குப் புதிதாகக் கொண்டுவரவில்லை; அது ஏற்கெனவே நம்முடையதாக இருந்ததை மீட்டு நமக்கு வழங்குகிறது; அவ்வளவுதான். படைப்பின்போது இருந்த தம் குறிக்கோளை தேவன் மீட்பின்மூலம் சாதிக்கிறார். மீட்பு என்றால் மீட்டுவழங்குதல் என்றும், மீட்டுத்திருப்புதல் என்றும் பொருள்; படைப்பு என்றால் வரையறுத்தல் என்றும், தொடங்கும் நிலை என்றும் பொருள். மீட்பு பின்னர் நடக்கும் ஒரு காரியம்; எனவே படைப்பின்போது இருந்த தேவனுடைய குறிக்கோளை நிறைவேற்றமுடியும். ஆ, மீட்புதான் எல்லாம் என்று நினைத்து, கர்த்தருடைய பிள்ளைகள் படைப்பை அற்பமாக எண்ணக்கூடாது. மீட்பு நம்மோடு தொடர் புடையது. அது நம்மை இரட்சித்து, நமக்கு நித்திய ஜீவனைக்

கொண்டுவந்து நமக்கு நலம்பயக்கிறது. ஆனால், படைப்பு தேவனோடும், தேவனுடைய வேலையோடும் தொடர்புடையது. மீட்புடன் நமக்கிருக்கும் உறவு மனிதனின் பயனுக்காக; ஆனால், படைப்புடன் நமக்கிருக்கும் உறவு தேவனுடைய பொருளாட்சிக் காக. தேவன்தாமே இந்தப் பூமியில் ஒரு புதிய காரியத்தைச் செய்வாராக; அப்போது மனிதன் சுவிசேஷத்தை மட்டும் வலியுறுத் தாமல், அதைத் தாண்டிச்சென்று தேவ னுடைய வேலையையும், தேவனுடைய விவகாரங்களையும், தேவனுடைய திட்டத்தையும் குறித்து அக்கறைப்படுவான். உண்மையில், பூமியை மீண்டும் தேவனிடம் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். நாம் சாத்தானுடைய இராஜ்ஜியத்துக்கு மேலாகக் கிறிஸ்துவின் வெற்றியைக் காண்பிக்க வேண்டும். நாம் கிறிஸ்தவர்கள் இல்லையென்றால் அது வேறு விஷயம். ஆனால், நாம் ஒருமுறை கிறிஸ்தவர்களாகிவிட்டால், நாம் மீட்பின் அனுகூலத்தை மட்டும் பெற்றுக்கொள்ளாமல் படைப்பின்போது தேவனுக்கு இருந்த குறிக்கோளையும் நாம் சாதிக்கவேண்டும். மீட்பு இல்லாமல் நமக்குத் தேவனோடு ஒருபோதும் எந்த உறவும் இருக்கமுடியாது. ஆனால், நாம் இரட்சிக்கப்பட்டவுடன் தேவன் முதலாவது மனிதனை எதற்காகப் படைத்தாரோ அந்த இலக்கை அடைய நாம் நம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். நாம் சுவிசேஷத்துக்கு மட்டும் கவனம்செலுத்தினால், அது காரியத்தின் பாதி மட்டுமேயாகும்; மனிதன் பூமியின்மேல் தேவனுக்காக ஆளுகைசெய்ய வேண்டும், அவன் சாத்தானை இனிமேல் இங்கு இருக்க அனுமதிக்கக்கூடாது என்ற மற்ற பாதியும் தேவனுக்குத் தேவைப்படுகிறது. இந்தப் பாதி சபையிடமும் எதிர்பார்க்கப்படுகிறது. மீட்பு, மனிதன் இரட்சிக்கப்படுமாறு பாவங்களின் மன்னிப்புக்காக மட்டும் இல்லை, மனிதனைப் படைப்பின் குறிக்கோளுக்கு மீண்டும் கொண்டுவரவேண்டும் என்பதுமாகும் என்று எபிரேயர் 2 காண்பிக்கிறது.

மீட்பை இரண்டு சிகரங்களுக்கிடையேயுள்ள ஒரு பள்ளத் தாக்குக்கு ஒப்பிடலாம். ஒருவன் ஒரு சிகரத்திலிருந்து கீழே இறங்கி வந்து, மற்ற சிகரத்தின்மேல் ஏறத்தொடங்கும்போது, அவன் பள்ளத்தாக்கின் கடைசிப் பகுதியில் மீட்பைச் சந்திக் கிறான். மீட்பு என்றால் மனிதனை இதற்கு மேலும் கீழே விழுவதிலிருந்து தடுத்து, அவனைத் தூக்கிவிடுதல் என்று பொருள். ஒரு பக்கம், தேவனுடைய சித்தம் எந்த இறக்கமும் இல்லாமல் நித்தியமானது, நேரானது; எனவே படைப்பின் குறிக்கோளைச் சாதிக்கமுடியும். மறுபக்கம், ஏதோவொன்று நிகழ்ந்தது. மனிதன் விழுந்துவிட்டான்; மனிதன் தேவனை விட்டு விலகிச்சென்றுவிட்டான். அவனுக்கும்,

தேவனுடைய குறிக்கோளுக்கும் இடையேயுள்ள தூரம் மேலும்மேலும் அதிகமாகிவிட்டது. நித்தியத்திலிருந்து நித்தியம்வரை தேவனுடைய சித்தம் ஒரு நேர்கோடு; ஆனால், மனிதன் வீழ்ந்ததி லிருந்து அவனால் அதை இன்னும் அடையமுடியவில்லை. மீட்பு என்ற பரிகாரம் இருப்பதற்காகத் தேவனைத் துதியுங்கள். மீட்பு வந்தபோது, மனிதன் அதற்குமேல் கீழே போகத் தேவையில்லை. மீட்புக்குப்பிறகு மனிதன் மாறிவிட்டான்; அவன் மேலே ஏறத்தொடங்குகிறான். மனிதன் எழத் தொடங்கு கையில், அவன் அந்த ஒரே நேர்கோட்டைத் தொடும் நாள் வரும். அந்தக் கோட்டை எட்டும் நாளில் இராஜ்ஜியம் வரும்.

நமக்கு மீட்பு இருப்பதால் நாம் தேவனுக்கு நன்றி கூறுகிறோம். அது இல்லாதிருந்தால் நாம் இன்னும் கீழே கீழே போயிருப்போம். எழுவதற்கு எந்த வழியும் இல்லாத வரை, நாம் சாத்தானால் மேலும்மேலும் நசுக்கப்பட்டிருப் போம். மீட்பு நம்மைத் தேவனுடைய நித்திய குறிக்கோளுக்குத் திரும்பிவரச் செய்திருப்பதால் தேவனைத் துதியுங்கள். தேவன் படைப்பில் அடையாததும், மனிதன் வீழ்ச்சியில் இழந்ததும் மீட்பில் முழுமை யாகப் பெறப்படுகின்றன.

நம் வாழ்க்கையிலும், வேலையிலும் ஒரு மெய்யான மாற்றம் ஏற்படுமாறு தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதைக் காண நம் கண்களைத் திறக்க நாம் தேவனைக் கேட்கவேண்டும். நம் வேலையெல்லாம் வெறுமனே ஆத்துமாக்களை இரட்சிப்பதுதான் என்றால், நாம் இன்னும் ஒரு தோல்வியே; நம்மால் தேவனுடைய இருதயத்தைத் திருப்திப்படுத்தமுடியாது. மீட்பு, படைப்பு ஆகிய இரண்டும் மகிமையை அடைவதற்காகவும், பிசாசின் வல்லமையெல்லாம் கவிழ்ப்பதற்காகவுமே. நாம் மனிதனின் பாவத்தையும், வீழ்ச்சியையும் பார்க்கையில், நாம் தேவனுடைய அன்பையும், தேவனுடைய அதிகாரத்தையும் பறைசாற்றுவோமாக. ஆனால், அதே நேரத்தில், நாம் பிசாசின் வல்லமையைக் கவிழ்க்க ஆவிக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும். சபையின் கட்டளை இருமடங்கு: கிறிஸ்துவின் இரட்சிப்புக்கு சாட்சிபகர் வதும், கிறிஸ்துவின் வெற்றிக்கு சாட்சிபகர்வதும். ஒரு பக்கம், சபை மனிதனுக்கு அனுகூலத்தைக் கொண்டுவர வேண்டும்; மறுபக்கம், அது சாத்தானுக்கு இழப்பை உண்டாக்கவேண்டும்.

## தேவனுடைய இளைப்பாறுதல்

தேவனுடைய படைப்பின் வேலையின் ஆறு நாட்களில், அவர் மனிதனை வித்தியாசமாகப் படைத்தார். ஆறு நாட்களில் அவர் செய்த வேலையெல்லாம் இதற்காகவே. மனிதனைப் படைக்க

வேண்டும் என்பதே அவருடைய மெய்யான குறியாக இருந்தது. இதைச் செய்வதற்கு தேவன், முதலாவது, பாழாய்ப்போன பூமியையும், வானத்தையும் பழுதுபார்க்கவேண்டி யிருந்தது. ("தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கிய நாளிலே, வானமும் பூமியும் படைக்கப்பட்ட வரலாறு இவைகளே," என்று ஆதியாகமம் 2:4 கூறுகிறது. "வானங்களும், பூமியும்" ஆதியில் இருந்த படைப்பைக் குறிக்கிறது; ஏனென்றால், அந்த நேரத்தில் வானங்கள் முதலாவது உண்டாக்கப்பட்டன, பின்பு பூமி உண்டாக்கப்பட்டது. "தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கிய நாளிலே" என்பது அவர் பழுதுபார்ப்பதையும், ஆதிநிலைக்குக் கொண்டுவரும் வேலையையும் குறிக்கிறது; ஏனென்றால், இந்த வேலையில் முதலாவது பூமி பழுதுபார்க்கப்பட்டது, பின்பு வானம்). பாழாய்ப்போன பூமியையும், வானத்தையும் தேவன் அவைகளின் ஆதி நிலைக்குக் கொண்டுவந்தபிறகு, அவர் தாம் வடிவமைத்த மனிதனைப் படைத்தார். ஆறாவது நாளுக்குப்பின் ஏழாவது நாள் வந்தது; இந்த நாளில் அவர் தம் எல்லா வேலையிலிருந்தும் ஓய்ந்திருந்தார்.

ஓய்வு வேலைக்குப்பின் வருகிறது; முதலாவது வேலை இருக்கவேண்டும், பின்பு ஓய்வு வரலாம். மேலும், ஓய்வு இருக்க வேண்டுமானால், வேலையை முழுத் திருப்திகரமாக முடிக்க வேண்டும். வேலை முழுமையாகவும், திருப்திகரமாகவும் செய்யப்படவில்லையென்றால், மனதுக்கு அல்லது இருதயத்துக்கு எந்த ஓய்வும் ஒருபோதும் இருக்கமுடியாது. ஆகையால், ஆறு நாட்கள் படைப்புக்குப்பின் தேவன் ஓய்ந்திருந்தார் என்ற உண்மையை நாம் இலேசாகக் கருதக்கூடாது. தேவன் ஓய்ந்திருத்தல் ஒரு பெரிய காரியம். அவர் இளைப் பாறுவதற்குமுன், அவர் ஒரு குறிப்பிட்ட குறியிலக்கை அடைய வேண்டியது அவசியமாயிருந்தது. இப்பேர்ப்பட்ட படைப்பாள ராகிய தேவனை இளைப்பாறச்செய்த வல்லமை எவ்வளவு பெரியதாக இருக்கவேண்டும்! இவ்வளவு அதிகமாகத் திட்டமிடு கிறவரும், ஜீவன் நிறைந்தவருமாகிய இப்பேர்ப்பட்ட தேவனை இளைப்பாறச்செய்ய மிகப் பெரிய பலம் தேவைப்படுகிறது.

தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று ஆதி யாகமம் 2 காண்பிக்கிறது. தேவனால் எப்படி இறைப்பாற முடிந்தது? "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது," (வசனம் 31) என்று ஆதியாகமம் 1-ன் கடைசிப் பகுதி கூறுவதால் அவரால் ஓய்ந்திருக்கமுடிந்தது.

தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். ஏழாவது நாளுக்கு முன், அவர் செய்வதற்கு வேலை இருந்தது. அவருடைய வேலைக்குமுன் அவரிடம் ஒரு குறிக்கோள் இருந்தது. ரோமர் 11 கர்த்தருடைய மனதையும், அவருடைய நியாயத் தீர்ப்புகளையும், வழிகளையும்பற்றிப்பேசுகிறது. எபேசியர் 1 அவருடைய சித்தத்தின் பரம இரகசியத்தையும், அவருடைய நல்பிரியத்தையும், அவருடைய முன்குறிக்கப்பட்ட குறிக் கோளையும்பற்றிப் பேசுகிறது. எபேசியர் 3கூட அவருடைய முன்குறிக்கப்பட்ட குறிக்கோளைப்பற்றிப் பேசுகிறது. தேவன் வேலைசெய்கிற தேவன் மட்டும் இல்லை, அவர் தீர்மானிக்கிற, திட்டமிடுகிற தேவனுமாவார் என்றும் இந்த வேதவாக்கியங் களிலிருந்து நாம் அறிகிறோம். வேலைசெய்ய அவருக்குப் பிரியமாயிருந்தபோது, அவர் வேலைசெய்தார்; அவர் வேலை செய்தார்; ஏனென்றால், அவர் வேலைசெய்ய விரும்பினார். அவர் தம் வேலையில் திருப்தியடைந்தபோது, இளைப்பாறினார். நாம் தேவனுடைய சித்தத்தையும், அவருடைய திட்டத்தையும், அவருடைய நல்பிரியத்தையும், அவருடைய குறிக்கோளையும் அறிய விரும்பினால் அவரை ஓய்ந்திருக்கச்செய்த அந்தக் காரியத்தை மட்டுமே நாம் பார்க்கவேண்டும். தேவன் ஒரு குறிப்பிட்ட காரியத்தில் ஓய்ந்திருக்கிறார் என்பதை நாம் பார்த்தால், அதுதான் தேவன் ஆதியில் விரும்பின காரியம் என்பதை நாம் அறியக்கூடும். தன்னைத் திருப்திப்படுத்தாததில் மனிதனாலும் இளைப்பாறமுடியாது; அவன்தான் விரும்புவதை அடையவேண்டும்; அப்போது அவனுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். இந்த ஓய்வை நாம் இலேசாக எடுத்துக்கொள்ளக் கூடாது; ஏனென்றால், அதின் பொருள் மிகவும் பெரியது. முதல் ஆறு நாட்களில் தேவன் ஓய்ந்திருக்கவில்லை. மாறாக, அவர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். தேவன் தம் இருதய வாஞ்சையைச் செய்துமுடித்தார் என்று அவருடைய ஓய்வு வெளிப்படுத்துகிறது. தம்மைக் களிகூரச்செய்த ஏதோவொன்றை அவர் செய்தார். ஆகையால், அவரால் ஓய்ந்திருக்கமுடிந்தது.

ஆதியாகமம் 1:31-லுள்ள "பார்த்தார்" என்ற வார்த்தையை நாம் கவனிக்கவேண்டும். அதன் பொருள் என்ன? நாம் ஒரு குறிப்பிட்ட பொருளை வாங்கியபிறகு நாம் அதில் மிகவும் திருப்தியடைந்துவிட்டால், அதை நாம் இன்பமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டேயிருப்போம். இதுதான் 'இதோ' என்பதின் பொருளுமாகும். தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் வெறுமனே மேலோட்டமாக "நோட்டம் விட்டு" அது நன்றாயிருந்தது என்று காணவில்லை. மாறாக, அவர் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் "பார்த்து" அது நன்றாயிருந்தது

என்று கண்டார். படைப்பின்போது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் “உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்” என்பதை நாம் கவனிக்கவேண்டும். தாம் செய்ததில் தேவன் திருப்தி யடைந்தார், தேவன் பிரியப்பட்டார் என்பதை “ஓய்ந்திருந்தார்” என்பது பறைசாற்றுகிறது. தேவ னுடைய குறிக்கோள் நிறை வேறிற்று, அவருடைய நல்லின்பம் முழு அளவுக்கு செய்துமுடிக் கப்பட்டது என்று அது பிரகடனம்செய்கிறது. அவருடைய வேலை எந்த அளவுக்குப் பூரணமாகச் செய்துமுடிக்கப்பட்டதென்றால், அதை அதைவிடச் சிறப்பாகச் செய்திருக்க முடியாது.

இந்தக் காரணத்தினால், தங்கள் தலைமுறைகள்தோறும் இஸ்ரவேலர்கள் ஓய்வுநாளைக் கடைபிடிக்கவேண்டும் என்று தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார். தேவன் ஏதோ வொன்றைத் தேடிக்கொண்டிருந்தார்; அவர் தம்மைத் திருப்திப் படுத்த ஏதோவொன்றைத் தேடிக்கொண்டிருந்தார்; அவர் அதை அடைந்தார்; ஆகையால், அவர் ஓய்ந்திருந்தார். இதுவே ஓய்வு நாளின் பொருளாகும். மனிதன் குறைவான பொருட்களை வாங்கவேண்டும் அல்லது குறைவான மைல்கள் நடக்கவேண்டும் என்பதல்ல இதன் பொருள். தேவனுக்கு ஓர் இருதய விருப்பம் இருந்தது என்றும், தம்மைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஒரு தேவை இருந்தது என்றும், அவருடைய இருதய விருப் பத்தையும், கோரிக்கையையும் நிறைவேற்ற ஒரு வேலை செய்யப் படவேண்டும் என்றும் ஓய்வுநாள் கூறு கிறது. தேவன் தாம் தேடிக்கொண்டிருந்ததை அடைந்துவிட்டதால், ஓய்ந் திருக்கிறார். இது ஒரு குறிப்பிட்ட நாளைப்பற்றிய காரியம் இல்லை. தேவன் தம் திட்டத்தை நிறைவேற்றிவிட்டார், தம் இலக்கை அடைந்துவிட்டார், தம் இருதயத்தைத் திருப்திப் படுத்தி விட்டார் என்று ஓய்வுநாள் கூறுகிறது. தேவன் திருப்தியைக் கோருகிற தேவன்; அவர் திருப்திப்படுத்தப்படக்கூடிய தேவனுமாவார். தேவன் தாம் வாஞ்சித்ததைப் பெற்றபிறகு ஓய்ந்திருக்கிறார்.

அப்படியானால் எது தேவனுக்கு ஓய்வைக் கொண்டு வந்தது? எது அவருக்கு இப்பேர்ப்பட்ட திருப்தியைக் கொடுத்தது? ஆறு நாட்கள் படைப்பின்போது அங்கு வெளிச்சம், காற்று, புல், பூண்டுகள், மரங்கள் ஆகியவைகள் இருந்தன; அங்கு சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய வைகள் இருந்தன; அங்கு மீன்கள், பறவைகள், கால்நடைகள், ஊரும்பிராணிகள், காட்டு மிருகங்கள் ஆகியவைகள் இருந்தன. ஆனால், இவையெல்லாவற்றிலும் தேவன் ஓய்வைக் காண வில்லை. கடைசியாக அங்கு மனிதன் இருந்தான். தேவன் தம் எல்லா வேலையிலிருந்தும் ஓய்ந்திருந்தார். மனிதனுக்கு முந்தைய படைப்புகளெல்லாம் ஆயத்தமானவை. தேவனுடைய எதிர்பார்ப்புகளெல்லாம் மனிதனின்மேல் குவிக்கப்பட்டிருந்தன.

தேவன் ஒரு மனிதனை ஆதாயம்பண்ணியபோது, அவர் திருப்தியடைந்து ஓய்ந்திருந்தார்.

ஆதியாகமம் 1:27-28ஐ நாம் மீண்டும் வாசிப்போம்: "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும், ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்." இப்போது ஆதியாகமம் 1:31-ஐ ஆதியாகமம் 2:3-உடன் சேர்த்து வாசியுங்கள். "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது... தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்த படியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்." தேவனுக்கு ஒரு குறிக்கோள் இருந்தது. ஒரு மனிதனை—பூமியின்மேல் ஆளுகை செய்ய அதிகார முடைய மனிதனை—ஆதாயம்பண்ணவேண்டும் என்பதே இந்தக் குறிக்கோள். இந்தக் குறிக்கோள் மெய்யாகும்போது மட்டுமே அவருடைய இருதயத்தைத் திருப்திப்படுத்தமுடியும். இதை அடைய முடிந்தால், எல்லாம் நன்றாக இருக்கும். ஆறாவது நாளில் தேவனுடைய குறிக்கோள் நிறைவேறிற்று. "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது...தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு ஏழாம் நாளில் ஓய்ந் திருந்தார்." தேவனுடைய குறிக்கோளும், எதிர்பார்ப்பும் நிறைவேறின; அவர் நின்று, ஓய்ந்திருக்கமுடிந்தது. தேவனுடைய ஓய்வுக்கு ஆளக்கூடிய மனிதனே ஆதாரம்.

## அத்தியாயம் இரண்டு

# ஏவாளின் அடையாளம்

படைப்பில் இரண்டு நபர்கள் படைக்கப்பட்டார்கள்; ஒன்று ஆதாம், மற்றொன்று ஏவாள். இருவரும் படைக்கப்பட்ட மனிதப்பிறவிகள். ஆனால், இருவரும் வித்தியாசமானவை களுக்கு அடையாளமாயிருக்கிறார்கள். ஆதாம் கர்த்தராகிய இயேசுவுக்கு ஓர் அடையாளம் என்று *1 கொரிந்தியர் 15* கூறுகிறது. ஆதாம் வரவிருந்த மனிதனுக்கு ஓர் அடையாளம் என்று *ரோமர் 5* கூறுகிறது. ஆதாம் கிறிஸ்துவுக்கு முன்நிழல்; அவன் அடையாளத் தின்படி கிறிஸ்துவைச் சித்திரித்தான். வேறுவார்த்தைகளில் சொல்வதானால், தேவன் ஆதாமில் உத்தேசித்திருந்தவையெல்லாம் கிறிஸ்துவில் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

ஆனால், படைப்பில் ஆதாமோடுகூட ஏவாள் என்ற பெண்ணும் இருந்தாள். இந்தப் பெண்ணைப்பற்றிய படைப்பைத் தேவன் *ஆதியாகமம் 2-ல்* மிகவும் கவனமாகப் பதிவுசெய்தார். நாம் *எபேசியர் 5-க்கு* வரும்போது, ஏவாள் சபைக்கு அடையாளம் என்று தெளிவாகக் கூறப்படுகிறது. ஆகையால், தேவனுடைய நித்திய நோக்கம் ஒரு பகுதி கிறிஸ்துவின்மூலமாகவும், ஒரு பகுதி சபையின்மூலமாகவும் நிறைவேற்றப்படுகிறது என்று நாம் பார்க்கமுடியும். சபை பூமியில் தேவனுடைய சித்தத்தை எப்படிச் சாதிக்கமுடியும் என்பதை நாம் புரிந்துகொள்ள ஏவாளிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். ஆதாம் என்ற அடையாளத்தைப்பற்றி விவாதம் செய்வதல்ல இந்தப் புத்தகத்தின் குறிக்கோள். ஆகையால், இந்தக் காரியத்தை நாம் இங்கு பரிசீலனை செய்ய மாட்டோம். அதற்குப்பதிலாக, ஏவாளை வலியுறுத்திப் பேசுகிறோம். கிறிஸ்துவின் வேலையின்மேல் நாம் நம் எண்ணங்களைக் குவிக்காமல், அந்த வேலையோடு உள்ள உறவில் சபை வகிக்கும் அந்தஸ்தின்மேல் குவிக்கிறோம்.

*ஆதியாகமம் 2:18-24*-யையும், *எபேசியர் 5:22-32*-யையும் நாம் வாசிக்கும்போது, இரண்டு பகுதிகளிலும் ஒரு பெண் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆதியாகமம் 2-ல் ஒரு பெண் இருக்கிறாள், எபேசியர் 5-லும் ஒரு பெண் இருக்கிறாள். முதல் பெண் சபையைத் திருஷ்டாந்தப் படுத்துகிற ஓர் அடையாளம். இரண்டாவது பெண் முதல் பெண். முதல் பெண் உலகத்தோற்றத்திற்குமுன்பே திட்டமிடப்பட்டு, வீழ்ச்சிக்குமுன்பே தோன்றினாள். இரண் டாவது பெண்ணும்

உலகத்தோற்றத்திற்குமுன்பே திட்டமிடப்பட்டாள்; ஆனால், அவள் வீழ்ச்சிக்குப்பின் வெளிப்படுத்தப்பட்டாள். ஒருத்தி வீழ்ச்சிக்கு முன்னும், மற்றொருத்தி வீழ்ச்சிக்குப்பின்னும் தோன்றினாலுங்கூட, தேவனுடைய பார்வையில் எந்த வித்தியாசமும் இல்லை; ஆதியாகமம் 2-ன் ஏவாளே சபை. கிறிஸ்துவை அடையாளப்படுத்த தேவன் ஆதாமைப் படைத்தார்; சபையை அடையாளப்படுத்த தேவன் ஏவாளையும் படைத்தார். தேவனுடைய குறிக்கோள் கிறிஸ்து வால் மட்டும் செய்துமுடிக்கப்படாமல், சபையாலுங்கூட செய்துமுடிக்கப்படுகிறது. "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்," என்று ஆதியாகமம் 2:18-ல் தேவனாகிய கர்த்தர் கூறினார். சபை கிறிஸ்துவுக்கு ஏற்ற துணையாக இருக்கவேண்டும் என்பதே தேவன் அதைப் படைத்ததின் குறிக்கோளாகும். கிறிஸ்து தனியாக இருக்கும்போது அவர் ஒரு பாதி மட்டுமே; இன்னொரு பாதி இருக்கவேண்டும். அது சபை. "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல," என்று தேவன் கூறினார். தேவனுடைய பார்வையில் கிறிஸ்து தனிமையாயிருப்பது நல்லதல்ல என்பதே இதன் பொருள். ஆதியாகமம் 2:18-24 ஆறாவது நாளில் படைக்கப்பட்ட நிகழ்ச்சிகளைத் திரும்பக்கூறுகின்றன. ஆறாவது நாளில் தேவன் ஆதாமைப் படைத்தார்; அதன்பிறகு கொஞ்சம் பரிசீலனைசெய்து, "இல்லை, மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல," என்று கூறியதுபோல் தெரிகிறது. ஆகையால், அவர் ஆதாமுக்காக ஏவாளைப் படைத்தார். அந்த நேரத்தில் எல்லாமே முடிந்துவிட்டது. "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது," (வசனம் 31) என்ற குறிப்போடு ஆதியாகமம் 1 முடிவடைகிறது என்று நாம் காண்கிறோம். ஆதாம் தனிமையாயிருப்பது அல்லது நாம் இப்படிக் கூறலாம், கிறிஸ்து தனிமையாயிருப்பது தேவனுடைய இருதயத்தைத் திருப்திப்படுத்தப் போதாது என்று இதிலிருந்து நாம் உணர்கிறோம். தேவனைப் பொறுத்தவரை ஏவாளும் இருக்கவேண்டும், அதாவது சபையும் இருக்க வேண்டும். அப்போது, அவருடைய இருதயம் திருப்தியடையும்.

"மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல," என்று தேவனாகிய கர்த்தர் கூறினார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஆதாம் ஏவாள் இருவரும் வேண்டும் என்று தேவன் ஆசைப்பட்டார். வெற்றியுள்ள ஒரு கிறிஸ்து கூட்டல் வெற்றியுள்ள ஒரு சபை, பிசாசின் வேலையை ஜெயங்கொண்ட ஒரு கிறிஸ்து கூட்டல் பிசாசின் வேலையைக் கவிழ்த்துப்போட்ட ஒரு சபை, வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோள். ஆளுகை செய்கிற கிறிஸ்துவும், ஆளுகைசெய்கிற சபையும் வேண்டும்

என்பதே அவருடைய குறிக்கோள். இதையே தேவன் தம் இன்பத்திற்காகத் திட்டமிட்டார். இதைத் தம் திருப்திக்காகச் செய்திருக்கிறார். இதைச்செய்தாயிற்று; ஏனென்றால், இதைச் செய்ய தேவன் ஆசைப்பட்டார். தேவன் கிறிஸ்துவைக் கொண்டிருக்க ஆசைப்பட்டார்; துல்லியமாகக் கிறிஸ்துவைப் போலவே இருக்கும் ஒரு சபையைக் கொண்டிருக்கவும் தேவன் ஆசைப்பட்டார். கிறிஸ்து மட்டும் ஆளவேண்டும் என்று இல்லை, சபையும் ஆள வேண்டும் என்று தேவன் ஆசைப்பட்டார். தேவன் பிசாசை இந்தப் பூமியில் அனுமதிக்கிறார்; ஏனென்றால், "அவர்கள்" அதாவது கிறிஸ்துவும் சபையும், "ஆளக் கடவர்கள்" என்று அவர் கூறினார். கிறிஸ்துவின் நேர்பாதியாகிய சபை சாத்தானோடு இடைப்படுவதில் பங்குகொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய குறிக்கோள். சபை கிறிஸ்துவுக்குப் பொருத்தமாக இல்லை யென்றால், தேவனு டைய குறிக்கோள் நிறைவேறாது. யுத்தத்தில் கிறிஸ்துவுக்கு ஏற்ற ஒரு துணை தேவைப்படுகிறது. மகிமையிலுங்கூட அவருக்கு ஏற்ற ஒரு துணை தேவைப்படுகிறது. எல்லா அம்சங்களிலும் சபை கிறிஸ்துவைப்போலவே இருக்கவேண்டும் என்று தேவன் கோருகிறார். கிறிஸ்துவுக்கு ஏற்ற ஒரு துணை இருக்கவேண்டும் என்பது தேவனுடைய வாஞ்சை.

## ஏவாள் ஆதாமிலிருந்து வெளிவந்தாள்

ஆதாமுக்கு ஓர் ஏற்ற துணை தேவைப்பட்டது. இந்தத் தேவையைச் சந்திக்க தேவன் என்னசெய்தார்? "தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் கிடைக்கவில்லை," என்று ஆதியாகமம் *2:19-20* கூறுகிறது. எல்லாவிதமான ஜீவஜந்துக்களையும் தேவன் ஆதாமுக்குமுன்பாகக் கொண்டுவந்தார். மண்ணினால் உருவாக் கப்பட்ட ஜீவஜந்துக்களில் எதுவும் ஆதாமுக்கு ஏற்ற துணையாக இருக்கமுடியவில்லை.

ஆகையால், "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரை யடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி,

அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்" (வசனம் 21-23). இவள் ஆதாமுக்கு ஏற்ற துணை, எபேசியர் 5-ல் கூறப்பட்டுள்ள சபையின் அடையாளம். மண்ணினால் உருவாக்கப்பட்ட எதுவும், ஆதாமின் சரீரத்திலிருந்து எடுக்கப்படாத எதுவும் அவனுக்கு ஏற்ற துணையாக இருக்கமுடிய வில்லை என்று வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. வெளியின் சகல மிருகங்களும், கால்நடைகளும், ஆகாயத்துப் பறவைகளும் மண்ணினால் உண்டாக்கப்பட்டன. அவை ஆதாமிலிருந்து எடுக்கப்படவில்லை; ஆகையால், அவை ஆதாமுக்கு ஏற்ற துணையாக இருக்கமுடியவில்லை. ஏவாள் ஆதாமிலிருந்து எடுத்த விலா எலும்பிலிருந்து உருவாக்கப் பட்டாள் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும்; ஆகையால், ஏவாள் ஆதாமின் ஆக்கக்கூறாக இருந்தாள். சபை கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிறது என்பதே இதன் பொருள். கிறிஸ்துவிலிருந்து வெளிவருவது மட்டுமே சபையாக இருக்கமுடியும். கிறிஸ்துவிலிருந்து வராத எதுவும் சபை இல்லை.

ஆதியாகமம் 1:26, 27-ல் நாம் மேலும் சில வார்த்தை களைக் கவனிக்கவேண்டும். "பின்பு தேவன்: நமது சாய லாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்கு வோமாக; அவர்கள்..." என்று 26-ஆம் வசனம் கூறுகிறது. எபிரேய மொழியில் "மனிதன்" என்ற வார்த்தை ஒருமை; ஆனால், அதைத் தொடர்ந்து உடனே "அவர்கள்" என்ற பன்மைப் பிரதிப்பெயர்ச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதே மாதிரிதான், "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித் தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்," என்று 27-ஆம் வசனத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "மனிதன்" என்ற பெயர்ச்சொல் ஒருமை; அதைத் தொடர்ந்துவரும் "அவர்கள்" என்ற பிரதிப்பெயர்ச்சொல் பன்மை. தேவன் ஒரு மனிதனைப் படைத்தார்; ஆனால், அவர் இரண்டுபேரைப் படைத்தார் என்றும் நாம் சொல்லலாம். ஒன்று இரண்டாகும். இருந்தபோதும் இரண்டும் ஒன்றாகும்; ஏனென்றால் ஏவாள் ஆதாமில் இருந்தாள்.

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணு மாக அவர்களைச் சிருஷ்டித்தார்," என்று 27-ஆம் வசனம் கூறுவதை மேலும் கவனியுங்கள். தேவன் "மனிதனைப்" படைத்த அதே முறையில்தான் "அவர்களையும்" படைத்தார். ஆதாம் மட்டும் படைக்கப்படவில்லை; ஏவாளும் அவனுக்குள் அடங்கியிருந்தாள். "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்." இந்த

"மனிதன்" ஒருமை; இவன் கிறிஸ்து வுக்கு அடையாளம். "தேவசாயலாகவே அவர்களைச் சிருஷ்டித் தார்." "அவர்கள்" பன்மை; இது கிறிஸ்துவுக்கும், சபைக்கும் அடையாளம். ஒரேபேறான குமாரன் மட்டும் வேண்டும் என்று தேவன் விரும்ப வில்லை; அவர் அநேகக் குமாரர்கள் வேண்டும் என்று விரும்பு கிறார். அநேகக் குமாரர்கள் ஒரே குமாரனைப்போல் இருக்க வேண்டும். சபை கிறிஸ்துவுக்கு ஒத்திருக்கிற நிலையில் இல்லை யென்றால், தேவன் இளைப் பாறமாட்டார், அவருடைய வேலை முற்றுப்பெறாது. ஆதாம் மட்டும் தேவனுடைய சாயலில் இல்லை; ஏவாளும் தேவனுடைய சாயலில் இருக்கிறாள். கிறிஸ்துவிடம் மட்டும் தேவனுடைய ஜீவன் இல்லை; சபையிடமும் தேவனுடைய ஜீவன் இருக்கிறது.

## சபை கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிறது

அப்படியானால், "சபை என்றால் என்ன?" என்று நாம் கேட்கவேண்டும். கிறிஸ்துவிலிருந்து எடுக்கப்பட்ட அந்தப் பகுதியே சபை. நாம் ஆதாமின் இரண்டு அம்சங்களைப் பார்க்க வேண்டும். அப்போது புரிந்துகொள்வது நமக்கு எளிதாக இருக்கும். ஒரு பக்கம், ஆதாம், வெறுமனே தானாகவே நிற்கிறான்; மறுபக் கம், அவன் ஒரு முன்னடை யாளம். ஆதாமைப் பொறுத்தவரை, அவன் களிமண்ணினால் உண்டாக்கப்பட்டான். இயற்கையான எல்லா மனிதர்களும் களிமண்ணினால் உண்டாக்கப்பட்டிருக்கி றார்கள். ஆனால், ஆதாம் கிறிஸ்துவுக்கு அடையாளமாகவும் இருந் தான். ஏவாள் ஆதாமிலிருந்து உண்டாக்கப்பட்டாள் என்ற உண் மை, சபை கிறிஸ்துவிலிருந்து உண்டாக்கப்படுகிறது என்பதைக் குறிக்கிறது. ஏவாள் ஆதாமின் விலா எலும்பைக்கொண்டு உண்டாக்கப்பட்டாள். ஏவாள் ஆதாமிலிருந்து வெளிவந்த தால், அவள் இன்னும் ஆதாம்தான். அப்படியானால் எது சபை? ஏவாள் ஆதாமின் இன்னொரு வடிவமாக இருந்தது போல, சபை கிறிஸ்துவின் இன்னொரு வடிவமாகும்.

சபை கிறிஸ்துவே. கர்த்தரை விசுவாசிக்கிற, இரட்சிக்கப் பட்ட "மக்கள்" கூடிவருவதே சபை என்று அநேக மக்கள் நினைக்கிறார்கள். இல்லை, இது உண்மை இல்லை. அப்படி யானால் யார் சபையைக் கட்டியமைக்கிறார்கள்? கிறிஸ்துவி லிருந்து வெளியே எடுக்கப்பட்ட அந்தப் பங்கு மட்டுமே சபை. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கிறிஸ்துவைக் கட்டுமானப்பொருளாகப் பயன்படுத்தி, தேவன் உண்டாக்கிய மனிதனே சபை. அது களிமண்ணினால் உண்டாக்கப்பட்ட மனிதன் இல்லை. கிறிஸ்துவே சபையின் கட்டுமானப்பொருள். கிறிஸ்து இல்லையென்றால், சபைக்கு எந்த நிலையும் இல்லை,

எந்த ஜீவனும் இல்லை, எந்த வாழ்க்கையும் இல்லை, எந்த இருத்தலும் இல்லை. சபை கிறிஸ்துவிலிருந்து வெளி வருகிறது.

"அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்," என்று 1 கொரிந்தியர் 10:17 கூறுகிறது. நாம் அநேகராயிருந்தாலும், நாம் பிட்கிற அப்பம் ஒன்றே என்பதே இந்த வசனத்தின் பொருள். ஆகையால், சரீரமும் ஒன்றே. ஒரே அப்பம் கிறிஸ்துவின் சரீரத்திற்கு, அதாவது முழு சபைக்கும், பிரதிநிதியாக இருக்கிறது என்று அப்போஸ்தலராகிய பவுல் தெளிவாகக் குறிப்பிட்டார். நாம் அநேகராயிருந்தாலும், சரீரம் ஒன்றே. நாம் கர்த்தரை நினைவுகூரும் போது, அந்த அப்பத்திலிருந்து நான் ஒரு சிறு துண்டை எடுக்கிறேன், அந்த அப்பத்திலிருந்து நீ ஒரு சிறு துண்டை எடுக்கிறாய், மற்றவர்களும் அப்படியே செய்கிறார்கள். உலகம் முழுவதிலும் அநேக நூற்றாண்டுகளாக, எல்லாக் கிறிஸ்தவர்களும் இந்த அப்பத்தில் ஒரு சிறு பங்கை எடுத்து, அதைப் புசித்திருக்கிறார்கள். அவர்கள் புசித்த எல்லாத் துண்டுகளையும் நீங்கள் எடுத்து, அவைகளை உங்களால் ஒன்றாகச் சேர்க்கமுடிந்தால், அவை முழுச் சபையாக மாறிவிடும். சபை என்பது ஒரு தனிப்பட்ட "நான்" கூட்டல் ஒரு தனிப்பட்ட "நீ" இல்லை. சபை என்பது திரு. ஸ்மித் கூட்டல் திரு. ஜோன்ஸ் இல்லை; அல்லது அகில உலகத்திலும் உள்ள எல்லாக் கிறிஸ்தவர்களையும் ஒன்றாகச் சேர்த்து வைப்பதும் இல்லை. சபை என்பது உன்னில் இருக்கும் கிறிஸ்துவும், அவனில் இருக்கும் கிறிஸ்துவும், எல்லா நூற்றாண்டுகளிலும் முழு உலகத்திலும் வாழ்ந்த எல்லாக் கிறிஸ்தவர்களிலும் இருந்த கிறிஸ்துவும் ஒன்றாகச் சேர்க்கப்படுவதாகும். நம் இயற்கையான மனிதனுக்கும், சபைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நாம் புசித்திருக்கும் அப்பத் துண்டு என்ற நம்மில் இருக்கும் ஒரேவொரு பகுதிக்கு மட்டுமே சபையோடு தொடர்புண்டு. இது, குறிப்பாக, யோவான் சுவிசேஷத்தில் காண்பிக்கப்படுகிறது. கர்த்தரை விசுவாசிக்கும் எல்லாருக்குள்ளும் கிறிஸ்து வாசம்பண்ணு கிறார் என்றும், ஆகையால் அவர்கள் ஆவியானவரில் ஒன்றாக இருக்கிறார்கள் என்றும் அங்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவிலிருந்து வெளிவருவதைக்கொண்டு சபை தொகுக்கப்படுகிறது. மனிதனுடைய தாலந்து, திறமை, எண்ணம், பலம், அவனிடம் இருப்பவை ஆகியவைக ளெல்லாம் சபைக்கு வெளியே இருக்கின்றன. ஜென்ம சுபாவமான ஜீவனிலிருந்து வரும் எல்லாம் சபைக்கு வெளியே இருக்கின்றன. ஜென்மசுபாவமான ஜீவனுக்குரிய ஏதாவது சபைக்குள் கொண்டுவரப்படும்போது, அதன் விளைவாக இடித்தல்தான் நடைபெறுமே தவிர, கட்டுதல் நடைபெறாது. கிறிஸ்துவிலிருந்து

வெளிவருவது மட்டுமே சபையில் இருக்கிறது. ஏவாள் களிமண்ணி னால் உண்டாக்கப்பட வில்லை; மாறாக அவள் கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருந்த ஆதாமிலிருந்து உண்டாக்கப்பட்டாள். தேவன் ஆதாமி லிருந்து ஒரு விலா எலும்பை எடுத்து, ஏவாளை உண்டாக்கினார் என்பது விலையேறப்பெற்றது. களிமண்ணி லிருந்து இல்லை, மாறாக ஆதாமிலிருந்து வந்தது மட்டுமே "ஏவாள்" என்று அழைக்கப்படமுடியும். கிறிஸ்துவிலிருந்து வருவது மட்டுமே சபை என்று அழைக்கப்படமுடியும். கிறிஸ்துவி லிருந்து வராத எதற்கும் சபையோடு எந்தச் சம்பந்தமும் இல்லை.

சிலர் கர்த்தரை விசுவாசிப்பதற்குமுன் மிகவும் வெளிப் படையாக இருந்தார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டபிறகு தேவனை சேவிக்க அவர்கள் தங்கள் வெளிப்படையான தன்மையைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் தங்கள் வெளிப்படையான தன்மையை மிகவும் பயனுள்ளதாகக் கருதினார்கள்; அதைக் குறித்து அவர்கள் பெருமைப்பட்டார்கள். ஆனால், எந்த ஊற்றிலி ருந்து இந்த வெளிப்படையானதன்மை வருகிறது? இது கிறிஸ்துவி லிருந்தா வருகிறது? இது சிலுவையால் கையாளப்பட்டிருக்கிறதா? இது கிறிஸ்துவிலிருந்து வெளிவராததென்றால், இது சிலுவையினால் ஒருபோதும் கையாளப் பட்டிருக்கவில்லை யென்றால், இதனால் சபைக்கு எந்தப் பயனும் இல்லை. ஏவாள் ஆதாமிலிருந்து வெளிவந்ததைக் கொண்டு மட்டுமே கட்டி யமைக்கப்பட்டிருந்தாள். அதுபோல, சபையும் கிறிஸ்துவிலிருந்து வெளிவருவதைக்கொண்டு மட்டுமே கட்டியமைக்கப்படுகிறது. மனிதனுக்குரிய எதுவும் சபை இல்லை.

சிலர் விசுவாசிப்பதற்குமுன் மிகவும் பேச்சுத்திறமை யுடையவர்களாக இருந்தார்கள். மற்றவர்களிடம் காரியங்களை எடுத்துரைப்பதும், விவரிப்பதும் அவர்களுக்கு மிகவும் எளிதாக இருந்தது. அவர்கள் இரட்சிக்கப்பட்டபிறகு, வெறுமனே பேசக்கூடிய தலைப்பை மாற்றி, பிரசங்கிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால், இப்பேர்ப்பட்ட மக்களால் பிரசங்கிக்க இது போதும் என்று நாம் கருதக்கூடாது. அதற்குப் பதிலாக, "எந்த ஊற்றிலிருந்து அவர்களுடைய பேச்சுத்திறமை வருகிறது? அது சிலுவையால் கையாளப்பட்டிருக்கிறதா?" என்று நாம் கேட்கவேண்டும். அவர்களுடைய பேச்சுத்திறமை அவர்களிடம் ஆரம்பத்திலேயே இருந்த பேச்சுத்திறமையென்றால், அது ஒருபோதும் சிலுவையினால் கையாளப்பட்டிருக்கவில்லை யென்றால், அது முற்றிலும் அவர்களுடைய சொந்த சுபாவத்திலிருந்து வந்ததாகும். அவர்கள் சபைக்குள் கொண்டுவரும் பேச்சுத்திறமை பூமிக்குரிய ஆதாமுக்குரிய ஏதோவொன்றாகவே இருக்கும். உண்மையில், சபை இப்பேர்ப்பட்ட மக்களால்

இடிக்கப்படும். கிறிஸ்துவிலிருந்து வெளி வருவது மட்டுமே சபை; மனித சுபாவத்திலிருந்து வெளி வருகிற எதுவும் சபை இல்லை.

புத்திசாலியான சிலரையும்கூட நாம் சந்திக்கக்கூடும். அவர்களுடைய மனங்கள் அசாதாரணமான கூர்மையாக இருக்கின்றன. அவர்கள் இரட்சிக்கப்படுவதற்குமுன் தத்துவம், அறிவியல், இலக்கியம் போன்றவைகளைப் படிப்பதற்கு தங்கள் மனதைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் இரட்சிக்கப் பட்டபிறகு, தங்கள் மனதைப் பயன்படுத்தி தேவனுடைய வார்த்தையைப் படிக்கிறார்கள். ஆனால், "இந்தக் கூர்மையான மனம் எங்கிருந்து வருகிறது? இது சிலுவையால் கையாளப் பட்டிருக்கிறதா? இது பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? அல்லது இது அவர்களிடம் ஆரம்பத்திலே இருந்த மனமா?" என்று நாம் கேட்கவேண்டும். அப்படி யானால் இது வெறுமனே பூமிக்குரிய ஆதாமுக்குரிய, மனிதனிலிருந்து வெளிவருகிற, மனித சுபாவத்திலிருந்து வருகிற, ஏதோவொன்றாகும்; இது மாம்சத்துக்குரிய ஏதோ வொன்று. இந்த மக்கள் தலைப்பை மாற்றியிருந்தாலும்கூட, அவர்களுடைய மனம் இன்னும் அதே பழைய மனம்தான். வேதாகமத்தைப் படிக்க அவர்கள் இந்த மனதைப் பயன் படுத்தும்போது, சபைக்கு உதவுவதற்குப் பதிலாக, அவர்கள் சபைக்கு இழப்பை உண்டாக்குவார்கள். கிறிஸ்துவிலிருந்து வெளிவருவது மட்டுமே சபையாக இருக்கமுடியும். மனிதனுக்குரிய எதுவும் சபை இல்லை.

நம் மனித சுபாவத்திலிருந்து வரும் எல்லாம் கட்டுப் பாட்டின்கீழ் கொண்டுவரப்படும்வரை தேவன் நம்மோடு இடைப்படவேண்டும். நம் இயற்கையான பலம் சிலுவையி னால் கையாளப்பட்டு, பரிசுத்த ஆவியின் ஆளுகைக்குக் கீழ்ப்படுத் தப்படவேண்டும். அப்போது மட்டுமே நாம் சபைக்கு இழப்பை ஏற்படுத்தமாட்டோம். நமக்குள் இருக்கும் இயற்கையான, ஆதாமுக்குரிய ஜீவனிலிருந்து வெளிவருகிற எல்லாம் பூமியால் உண்டாக்கப்பட்டவை; தேவன் அவைகளை விரும்பவில்லை. ஆதாமின் விலா எலும்பிலிருந்து உண்டாக்கப்பட்டது மட்டுமே ஏவாளாக இருந்தது. (எலும்பு உயிர்த்தெழுந்த ஜீவனைக் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு சிலுவையில் தொங்கியபோது, அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படவில்லை.) கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஜீவனிலிருந்து உருவாக்கப்படுவது மட்டுமே சபை.

ஏவாள் ஆதாமின் எலும்பினால் உண்டாக்கப்பட வேண்டும். ஆதாமிலிருந்து எலும்பு எடுக்கப்படாமல் இருந் திருந்தால், அங்கு ஏவாள் இருந்திருக்கமாட்டாள். ஆதாமின் எலும்பே ஏவாளுடைய ஜீவனின் ஊற்றாக இருந்ததால், ஆதாமுக்கு ஏற்ற துணை ஆதாமின்

சரீரமுமாகும். ஆதாமே அவளுடைய இருத்தலுக்கு ஆதாரம். ஆதாமின் ஒரு பகுதி அவளில் இருந்ததால் மட்டுமே அவளால் இருக்கமுடிந்தது. சபையின் காரியத்திலும் இதுவே உண்மை. "எங்களிடம் இருக்கிற எல்லாவற்றிற்கும் நீரே காரணம். நீர் இல்லையென்றால் எங்களுக்கு எந்த ஜீவனும் இல்லை, எந்த இருத்தலும் இல்லை, ஒன்றும் இல்லை. நாங்கள் உம்மிலிருந்து வெளிவருகிறோம்," என்று நாம் தொடர்ந்து கர்த்தரிடம் பறைசாற்ற வேண்டும்.

இதுவே நம் புதிய பிறப்பின் உயிர்நாடிபோன்ற காரியம்: மனந்திரும்புதல் நம்மை சபையின் ஒரு பகுதியாக மாற்றாது; பாவங்களை அறிக்கைசெய்வதோ அல்லது நம் விசுவாசமோ கூட இதைச் செய்யாது. கிறிஸ்து நமக்குள் பகிர்ந்தளிக்கும் ஜீவன் மட்டுமே நம்மை சபையின் ஒரு பகுதியாக மாற்றுகிறது. நம் புதிய பிறப்பே நாம் சபையின் ஒரு பகுதியாக இருப்பதற்கான ஆதாரம்; ஏனென்றால், அப்போதுதான் கிறிஸ்து தம்மை நமக்குள் பகிர்ந்தளிக்கிறார். ஆகையால், இந்த ஜீவனின்படி அதாவது கிறிஸ்துவின் ஜீவனின்படி, நாம் வாழவும், நடக்கவும், செயல் படவும் வேண்டிய தேவை இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் ஜீவனில் பங்கடையுமாறு தேவன் தம் குமாரனை நமக்குள் பகிர்ந்தளிப் பதைவிட அதிகமாக அவர் நமக்குச் செய்யமுடியாது. நாம் வெறும் மண்பாண்டங்களாக இருந்தபோதும், நமக்குள் ஒரு பெரிய பொக்கிஷம் இருக்கிறது. அப்படியானால் எது நம்மை அசைக்கமுடியும்? ஆயினும், நாம் நமக்கு ஏற்றபடி நடந்தால், நாம் சபைக்கு வெளியே இருக்கிறோம். நம்மில் இருக்கும் கிறிஸ்துவின் பங்கைத்தவிர வேறு எதுவும் சபை இல்லை. அது வெறுமனே நம் சுயங்கள். நாம் நமக்கேற்றபடி வேலைசெய்தால், நாம் கர்த்தருடைய வேலையைச் செய்யவில்லை. எந்த ஆதாரத்தின் மேல், எந்த ஊற்றிலிருந்து நாம் தேவனை சேவிக்கிறோம், அவரு டைய வேலையைச்செய்கிறோம், ஆவிக்குரிய காரியங்களை ஆசையாய்ப் பின்தொடர்கிறோம், ஆவிக்குரிய நடை நடக்கிறோம் என்று நம்மை நாமே கேட்டுப்பார்க்கவேண்டும். நாம் செய்கிற எல்லாம் கிறிஸ்துவை ஆதாரமாகக் கொண்டிருக்கிறதா அல்லது நம்மை ஆதாரமாகக் கொண்டிருக்கிறதா? எல்லாவற்றையும் நாம் கிறிஸ்துவால் செய்தால், நம்மால் தேவனுடைய குறிக்கோளை நிறைவேற்றமுடியும். ஆனால், எதையாவது நாமாகவே செய் தால்—ஏதோவொன்றைச் சாதித்தாலுங்கூட—அது பூமிக்குரிய சுபாவத்துக்குரியதாக மட்டுமே இருக்கமுடியும். அதனால் தேவனுடைய நித்திய சித்தத்தை நிறைவேற்றமுடியாது.

ஒரு மனிதனை ஆதாயம்பண்ணவேண்டும் என்பதே தேவனுடைய நித்தியக் குறிக்கோள். இந்த மனிதன் கிறிஸ்துவி

லிருந்து வெளிவருகிற ஒரு கூட்டு மனிதன். இதுவே சபை. சபை என்பது பலவிதமான கிறிஸ்தவர்களைப் பலவிதமான வேறு கிறிஸ்தவர்களுடன் ஒன்றாகச் சேர்த்து வைக்கும் காரியம் இல்லை. இது அநேக "மனிதர்கள்" இல்லை; இது ஒரு ஜீவன். ஒரே ஜீவனில், ஒரே கிறிஸ்துவில், பங்குபெறுகிற அநேக மக்கள் அங்கு இருப்பதால் மட்டுமே சபை சபையாக இருக்கிறது. உன்னிடம் கிறிஸ்துவின் ஒரு பங்கு இருக்கிறது; அவனிடம் கிறிஸ்துவின் ஒரு பங்கு இருக்கிறது. நம் ஒவ்வொருவரிடமும் கிறிஸ்துவின் ஒரு பங்கு இருக்கிறது. கிறிஸ்துவின் இந்தப் பங்குகளெல்லாம் ஒன்றாக வைக்கப்படும்போது, அங்கு சபை இருக்கிறது.

தேவனுடைய தேவை தனிப்பட்ட நபர்கள் இல்லை என்பதில் நாம் தெளிவாக இருக்கவேண்டும். தேவன் மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். ஆண் ஒருமை, பெண்ணும் ஒருமையே. தேவனுடைய பார்வையில் ஒரேவொரு கிறிஸ்து மட்டுமே இருக்கிறார், ஒரேவொரு சபை மட்டுமே இருக்கிறது. பாதாளத்தில் ஒரேவொரு மனிதன் மட்டுமே இருக்கிறான் என்றும், பரலோகங்களில் ஒரேவொரு மனிதன் மட்டுமே இருக்கிறார் என்றும் நாம் எதிர்காலத்தில் பார்ப்போம்; அங்கு மூன்றாவது மனிதன் யாரும் இல்லை. தேவனுடைய கண்களில், முழு உலகத்திலும் அவர் இரண்டு மனிதர்களை மட்டுமே பார்க்கிறார். ஆதாம் முதல் மனிதன் என்றும், கிறிஸ்து கடைசி மனிதன் என்றும் 1 கொரிந்தியர் 15 வெளிப்படுத்துகிறது. அங்கு வேறு யாரும் இல்லை. ஏவாளைப்போல், கிறிஸ்துவின் சரீரம் ஒன்றே— அநேகம் இல்லை.

ஆகையால், நமக்குள் தேவனுடைய ஜீவன் இருந்தாலுங் கூட, நம் தனித்துவத்தை உடைக்க தேவன் நம்மேல் இன்னும் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. நான் மட்டும் போதும் என்ற எண்ணத்தைத் தேவன் இடித்துத்தள்ள வேண்டும். தேவனுடைய மற்ற எல்லாப் பிள்ளைகளோடும் நாம் ஒன்றாக இருக்கவேண்டும். ஒரேவோர் ஏவாள் மட்டுமே இருக்கிறாள்; அதுபோல் ஒரேவொரு கிறிஸ்துவின் சரீரம் மட்டுமே இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும், கிறிஸ்துவின் ஜீவனில் பங்குபெறுகிற எல்லாரும், தனிப்பட்ட அநேக மனிதர்களும், மனுஷிகளும் இல்லை; அவர்களெல்லாரும் ஒரே மனிதன். தேவன் நம் தனித்துவத்தை உடைக்கவேண்டும். நாம் சரீரத்தின் ஜீவனை அறியும்வரை, அவர் நம்மை நொறுக்கவேண்டும்.

தாங்களாகவே கிறிஸ்தவர்களாக இருக்கமுடியும் என்று நினைக்கிற அநேகர் இருக்கிறார்கள். ஆனால், தேவன் இதை அனுமதிக்கமாட்டார். பெரும்பாலும், அவர்களுடைய தனிப்பட்ட

ஜெபங்களுக்குப் பதில் கிடைப்பதில்லை, வேத வாக்கியங்களைத் தனிப்பட்ட முறையில் படிக்கும்போது அது அவர்களைப் பிரகாசிப்பதில்லை, அவர்களுடைய தனிப்பட்ட தேடுதல் அவர்களைத் தேவனுடைய சித்தத்திற்கு நடத்துவ தில்லை. இப்பேர்ப்பட்ட நபர் இன்னொரு சகோதரனிடம் அல்லது சகோதரியிடம், "இந்த விஷயத்தில் என்னால் வெற்றிபெற முடியவில்லை. எனக்கு உதவிசெய்வீர்களா?" என்று கூறி, அவர்கள் சேர்ந்து ஜெபித்தால், கடைசியாக அவன் தெளிவாகிவிடுவான். அவன் தானாகவே புரிந்து கொள்ளமுடியாத எல்லாவற்றையும், தன் சகோதரனோடு சேர்ந்து ஒரு பதிலைத் தேடியபோது, தெளிவாகப் பார்ப்பான். இப்பேர்ப்பட்ட நபர், பெரும்பாலான நேரம் தன்னால் சாதிக்கமுடியும் என்றும், ஒரு சில நேரங்களில் மட்டும்தான் தன்னால் சாதிக்கமுடியாது என்றும் எண்ணி, இன்னும் பெருமைக்காரனாகவே இருக்கிறான். இது தனித்துவம். சபையில் தனித்துவம் உடைக்கப்படவேண்டும். நம்மில் இருக்கும் கிறிஸ்துவையும், மற்ற சகோதர சகோதரிகள் எல்லாரிலும் இருக்கும் கிறிஸ்துவையும் ஒரே சரீரத்தில் ஒன்றாகச் சேர்த்துப் பின்னப்பட நாம் அனுமதிக்கவேண்டும்.

கிறிஸ்துவில் நமக்கிருக்கும் ஜீவன் அநேகக் கிறிஸ்தவர்க ளுக்குத் தெரியும். ஆனால், கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் ஜீவன் அவர்களுக்குத் தெரியாது என்பதை நாம் வருத்தத்துடன் சொல்லித்தான் ஆகவேண்டும். கிறிஸ்துவின் ஜீவன் எப்படி ஒரு நிஜமோ, அப்படியே கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஜீவனும் ஒரு நிஜமே. கிறிஸ்தவர்கள் தனிப்பட்டவர்கள் இல்லை; அவர்கள் ஒன்று. நாம் அநேகராயிருந்தும் நாம் இன்னும் ஒரே அப்பமாகவும், ஒரே சரீரமாகவும் இருக்கிறோம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார். நாம் கிறிஸ்துவின்படி வாழ்ந்தால், நாம் மற்ற எல்லாக் கிறிஸ்தவர்களோடும் ஒன்றாக இருக்கிறோம். மாறாக, நாம் நமக்கேற்றபடி வாழ்ந்தால், நாம் நம்மைத் தேவனுடைய மற்ற பிள்ளைக ளிடமிருந்து பிரித்துவிடுகிறோம்.

ஆகையால், சபை நிஜமான சபையாக மாறவேண்டு மானால், இரண்டு படிகள் தேவைப்படுகின்றன: கிறிஸ்துவின் பரவுதல் அல்லது பெருக்கம் மற்றும் நம் சுயம் பட்சிக்கப்படுதல். நாம் மறுபடிஜெநிப்பிக்கப்பட்டபோது, கிறிஸ்துவின் பரவுதல் ஆரம்பித்தது. நாம் இரட்சிக்கப்பட்டதிலிருந்து நம் சுயத்தைப் பட்சிக்க தேவன் தினம்தினம் நம்மேல் வேலை செய்துகொண் டிருக்கிறார். தேவனுக்குமுன்பாக நாம் ஒருநாள், "என்னால் சுயமாக செய்யக்கூடிய ஒரு காரியம்கூட இல்லை; நான் செய்கிற எல்லாம் அவயவங்களுக்கிடையிலான பரஸ்பர உதவி என்ற கோட்பாட்டின் படி செய்யப்படுகிறது. நான் செய்கிற எல்லாமே சரீரத்தின்

கோட்பாடாகிய ஐக்கியம் என்ற கோட்பாட்டின்படி இருக்கின்றன," என்று சொல்லும்வரை கர்த்தர் நம்மில் தொடர்ந்து வேலைசெய்வார். சபையே கிறிஸ்துவின் சரீரம். கிறிஸ்துவுக்குரியது மட்டுமே சபை; மனிதனிடமிருந்து வருபவையெல்லாம் சபை இல்லை.

காரியங்கள் நல்லவையா பொல்லாதவையா என்பதல்ல, அவைகளின் ஊற்றையே தேவன் கணக்கில் எடுத்துக் கொள்கிறார் என்பதை நாம் உணரவேண்டும். "இது நல்லதா அல்லது கெட்டதா?" என்று மனிதர்கள் எப்போதும் கேட்கிறார்கள். ஆனால், "இது எங்கிருந்து வருகிறது?" என்று தேவன் கேட்கிறார். ஆதாமிலிருந்து வந்தது ஏவாள் என்று அழைக்கப்பட்டது; அதுபோல, கிறிஸ்துவிலிருந்து வருவது சபை என்று அழைக்கப் படுகிறது. கிறிஸ்துவிலிருந்து வராத எதுவும் சபை இல்லை. "உன்னிடம் அன்பு இருக்கிறதா?" என்று மனிதர்கள் கேட்கிறார்கள். ஆனால், "உன் அன்பு எங்கிருந்து வருகிறது?" என்று தேவன் கேட்கிறார். "நீ வைராக்கியமாக இருக்கிறாயா?" என்று மனிதர்கள் கேட்கிறார்கள். ஆனால், "உங்கள் வைராக்கியத்தின் ஊற்று என்ன?" என்று தேவன் கேட்கிறார். நல்லதா அல்லது கெட்டதா என்ற விஷயத்தை இல்லை, மாறாக பிறப்பிடம் என்ற விஷயத்தை நாம் தீர்த்தாக வேண்டும். நன்மை தீமையைப்பற்றிய கேள்வி ஆதியாகமம் 3-க்குப்பிறகுதான் வந்தது. ஒருவேளை ஒருவன், "என்னிடம் கொஞ்சம் திறமை இல்லையா? நான் வைராக்கிய மானவன் இல்லையா?" என்று கேட்கக்கூடும். ஆனால், உன் திறமையும் வைராக்கியமும் எங்கிருந்து வருகின்றன என்பது தான் பிரச்சினை.

நம்மால்தாமே எளிதாக மற்றவர்களை நேசிக்கமுடியும் என்றும், மற்றவர்களுக்கு உதவமுடியும் என்றும் நாம் பெரும்பாலும் நினைக்கிறோம். மற்றவர்களை நேசிப்பதும், அவர்களுக்கு உதவுவதும், நிச்சயமாக, நல்லவை. ஆனால், "என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிரா விட்டால்," கிறிஸ்துவின் அன்பு எனக்கிரா விட்டால், "எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" (1 கொரி. 13:3). மற்றவர்களுக்கு உதவிசெய்ய நம்மைக் கையளிப்பது தவறா? அது எங்கிருந்து வருகிறது என்பதுதான் இன்னும் கேள்வி. கிறிஸ்துவிலிருந்து வருவது மட்டுமே சபை. கிறிஸ்துவிலிருந்து வராத எதற்கும் சபையோடு எந்தச் சம்பந்தமும் இல்லை.

காரியங்களின் ஊற்றைப் பகுத்துணர்வதே நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய முதல் பாடமும், கடைசிப் பாடமுமாகும். நம்மிலிருந்து வரும் எதையும் புறக்கணிப்பதே முதல் பாடம்; நம்மிலிருந்து வரும் எதையும் இன்னும் புறக்கணிப்பதே கடைசிப் பாடம். நாம் பிரயாசப்

படக்கூடாது அல்லது வைராக்கியமாக இருக்கக்கூடாது என்பதல்ல இதன் பொருள். மாறாக, நம் பிரயாசமும், வைராக்கியமும் கர்த்தரிடமிருந்து வரவேண்டும் என்பதே இதன் பொருள். நாம் வேலைசெய்யக்கூடாது என்று நாம் கூறவில்லை; மாறாக, நாம் தேவனால் ஆரம்பிக்கப்பட்ட வேலையை விரும்புகிறோம். நாம் வல்லமையைத் தேடக்கூடாது என்று நாம் கூறவில்லை. மாறாக, கர்த்தரிடமிருந்து வரும் வல்லமையைத் தேடவேண்டும் என்று கூறுகிறோம். இதுதான் முழுக்காரியம்: அது எங்கிருந்து தொடங்குகிறது?

யோவான் சுவிசேஷத்தில், கர்த்தராகிய இயேசு ஒருமுறை, "பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்," என்று கூறினார் (யோவான் 5:19). குமாரனால் தாமாகவே எதையும் செய்யமுடியாது என்பதே இதன் பொருள். கர்த்தருடைய காரியத்திலேயே இதுதான் நிலைமை என்றால், நம்முடைய காரியத்தில் அது இன்னும் எவ்வளவு அதிகமாக இருக்கவேண்டும். நாமாகவே எப்போதாவது எதையாவது எப்படிச் செய்யமுடியும்? நாமாகவே எதையும் செய்யமுடியாது என்பதை நாம் தேவனுக்குமுன்பாகப் பார்க்கவேண்டும். நாமாகவே உண்மையாக எதையும் செய்யமுடியாது என்று நாம் உணரும் இடத்திற்குத் தேவன் நம்மைக் கொண்டுவர வேண்டும்—எல்லாம் அவராலும், அவரிடமிருந்தும்.

நாம் கர்த்தரை சேவிக்கும்போது, வைராக்கியமாக இருந்தால் மட்டும் போதாது. இல்லை, கர்த்தர் நமக்குக் கொடுக்கிற வேலையை நாம் செய்யவேண்டும். "அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்," என்று கொலோசெயர் 1:29-ல் பவுல் கூறினார். தேவன் நமக்குள்ளே வேலைசெய்து கொண்டிருக்கிறார். எனவே நாம் வெளியே வேலைசெய்யமுடியும். நாம் பெரும்பாலும் வெளியே அநேகக் காரியங்களைச் செய்கி றோம். ஆனால், உள்ளே அதிகமாக ஒன்றும் செய்யப்படவில்லை. உள்ளே, தேவன் அவ்வளவு அதிகமாகச் செய்துவிடவில்லை. பெரும் பாலும் எல்லாவற்றையும் நாமாகவே செய்திருக்கிறோம். இத்தகைய வேலையால்—அது பெரிய காரியமாக இருந்தாலுங் கூட—பயன் ஒன்றும் இல்லை. கர்த்தரை சேவிக்கும் காரியத்தில், கர்த்தரிடமிருந்து வராத எதையும் நாம் விரும்பவில்லை என்னும் நிலைமைக்குத் தேவன் நம்மைக் கொண்டுவர வேண்டும். கர்த்தர் அசையவில்லையென்றால் நாம் அசையத் துணியமாட்டோம்.

ஏவாள் ஆதாமுடைய எலும்பின் எலும்பாகவும், மாம்சத்தின் மாம்சமுமாக இருந்தாள். உள்ளே இருக்கும் ஏலும்புகள், வெளியே

இருக்கும் மாம்சம் ஆகிய எல்லாம் கிறிஸ்துவுக் குரியவை என்று இது குறிக்கிறது. உள்ளே இருக்கும் எல்லாமும், வெளியே இருக்கும் எல்லாமும் அவருக்குரியவை; எதுவும் நமக்குரியதாக இருக்கமுடியாது. ஏவாளுக்குரிய எல்லாம் ஆதாமிலிருந்து வந்தன; சபைக்குரிய எல்லாம் கிறிஸ்துவிலிருந்து வருகின்றன. நாம் ஒரு காரியத்தை எவ்வளவு நன்றாகச் செய்தாலும் சரி அது ஒரு பொருட்டல்ல; தேவனுடைய நித்திய குறிக்கோளை அடைவதில் அதற்கு முற்றிலும் எந்தப்பயனும் இல்லை. ஒரு காரியம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும் சரி, அது ஒரு பொருட்டல்ல; அது நம்மி லிருந்து வெளிவந்தால் அதனால் தேவனை மகிமைப்படுத்த முடியாது.

முதல் பெண் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற பெண்ணுக் குப் பிரதிநிதியாக இருக்கிறாள். அங்கு தேவனுடைய இருதயத் தை வெளியாக்கின ஒரு மனிதன் மட்டும் இல்லை, ஒரு பெண்ணும் இருந்தாள். கிறிஸ்து மட்டும் தேவனுடைய இருதயத் தைத் திருப்திப்படுத்தவில்லை; சபையும் தேவனுடைய இருதயத் தைத் திருப்திப்படுத்துகிறது. கிறிஸ்து தேவனுடைய இருதயத்தைத் திருப்திப்படுத்துகிறார்; ஏனென்றால், அவர் தேவனைத் தம் தலையாக இருக்க அனுமதிக்கிறார். சபையின் காரியத்திலும் அப்படியே இருக்கவேண்டும். அவளும் தேவனைத் தன் தலையாக இருக்க அனுமதிக்கவேண்டும். சபை இந்த நிலைமையை எட்டும் போது, தேவனுடைய சித்தம் நிறைவேறும். இத்தகைய மக்கள் பூமியில் இருக்கவேண்டும் என்று தேவன் வாஞ்சிக்கிறார். அவர் இதை அடையும்போது, அவருடைய இருதய வாஞ்சை நிறை வேறும். மனிதனுடைய சுயத்திலிருந்து வருபவை யெல்லாம் வெறும் மண் என்றும், ஏற்ற துணையைக் கட்டுவதற்கான கட்டுமானப்பொருளாக இருக்கத் தகுதியானது இல்லை என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். கிறிஸ்து விடமிருந்து வெளிவருவது மட்டுமே சபை.

## ஆதாமின் நித்திரையிலிருந்து ஏவாள் உருவாக்கப்படுதல்— கிறிஸ்துவின் "மீட்பில்லாத மரணத்தின்" மூலம் சபை உற்பத்திசெய்யப்படுதல்

ஏவாள் மண்ணினால் உண்டாக்கப்படாமல், ஆதாமி லிருந்து உண்டாக்கப்பட்டாள் என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். ஏவாள் ஆதாம் என்ற கட்டுமானப்பொருளினால் உண்டாக்கப்பட்டாள். சபையை உண்டாக்கத் தேவன் கிறிஸ்துவைப் பயன்படுத்தினார். ஏவாள் எப்படி உண்டாக்கப்பட்டாள் என்றும், சபை எப்படி உண்டாக்கப்பட்டது என்றும் இப்போது நாம் பார்ப்போம்.

ஆதியாகமம் 2:21-23ஐ நாம் வாசிப்போம்: "அப்பொழுது

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதை யினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்."

தேவன் சபையைக் கிறிஸ்துவின் மரணத்திலிருந்து பெற்றெடுத்தார். கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றி ஆதியாகமம் 2-ல் உள்ள வார்த்தைகள் மிகவும் விசேஷமானவை. "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார்," என்று அது கூறுகிறது (வசனம் 21). தேவன் ஆதாமுக்கு மரணத்தை வருவித்தார் என்று இந்த வசனம் கூறவில்லை; மாறாக அவர் அவனுக்கு ஆழ்ந்த நித்திரையை வரப்பண்ணினார் என்று கூறுகிறது. மரணம் என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அங்கு பாவம் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், மரணமும் பாவமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்று முந்தைய பத்தியில் 17-ஆம் வசனம் கூறுகிறது. ஆதாமின் நித்திரை மீட்போடு சம்பந்தப்படாத கிறிஸ்துவின் மரணத்தின் அம்சத்தை அடையாளப் படுத்துகிறது. கிறிஸ்துவின் மரணத்தில், மீட்போடு சம்பந்தப் படாத, ஆனால் தம்மையே விடுவிப்பதோடு தொடர்புடைய ஓர் அம்சம் இருந்தது. கிறிஸ்துவின் மரணம் மீட்புக்காக இல்லை என்று நாம் கூறவில்லை; அது மீட்புக்காகவே என்று நாம் மெய்யாகவே விசுவாசிக்கிறோம்; ஆனால் மீட்போடு தொடர்பில்லாத ஓர் அம்சம் அவருடைய மரணத்தில் சம்பந்தப் பட்டிருந்தது. இந்த அம்சம் சபையை உருவாக்குவதற்காக அவர் தம்மையே விடுவிப்பதாகும். இதற்கு பாவத்தோடு எந்தச் சம்பந்தமும் கிடையாது. தேவன் கிறிஸ்துவிலிருந்து ஏதோவொன்றை எடுத்து, அதைப் பயன்படுத்தி சபையைப் படைக்கிறார். ஆகையால், "நித்திரை" அவருடைய மரணத்திற்கு அடை யாளம்; இந்த மரணத்தின்மூலம் மனிதன் ஜீவனைப் பெற்றுக்கொள்கிறான்.

மீட்பும், ஜீவனைப் பெற்றுக்கொள்வதும் இரண்டு வெவ்வேறு காரியங்கள். மீட்பில் நம் பாவங்களோடு இடைப்படுதல் என்ற எதிர்மறையான அம்சம் சம்பந்தப்பட்டிருக்கிறது. நாம் பாவம்செய்திருக்கிறோம்; எனவே, நாம் மரித்தாகவேண்டும்; ஆகையால், நம் பாவங்களைச் சுமக்க கிறிஸ்து வந்தார். அவருடைய மரணம் நமக்காக மீட்பை நிறைவேற்றியது. அவருடைய மரணத்தின் இந்த அம்சம் பாவத்தோடு தொடர்புடையது. ஆனால், அவருடைய மரணத்தில் மீட்போடு

தொடர்பில்லாத இன்னோர் அம்சம் இருக்கிறது: அது அவருடைய மரணத்தின்மூலம் நாம் ஜீவனைப் பெறுமாறு அவர் தம்மைத்தாமே நமக்குள் பகிர்ந்தளிப்பதாகும்.

ஆதாமின் நித்திரை ஏவாளின் மீட்புக்காக இல்லை; அது ஏவாளைப் படைப்பதற்காக ஒரு விலா எலும்பை எடுப்பதற்காக. (பாவம் இன்னும் காட்சிக்குள் நுழையவில்லை—அந்த விவரம் ஆதியாகமம் 3-ல் இருக்கிறது.) ஏவாள் ஆதாமின் மூலம் இருத்தலுக்குள் வந்தாள். ஆதாம் உறங்கியதால் ஏவாளால் ஜீவனைப் பெறமுடிந்தது. அதேமுறையில், கிறிஸ்துவினுடைய மரணத்தின் ஓர் அம்சம் சபைக்கு ஜீவனைப் பகிர்ந்தளிப்பதற்காகவே.

ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வந்தபோது, தேவன் அவனுடைய ஒரு விலா எலும்பை எடுத்தார். அதுபோல, கிறிஸ்து மரித்தபோது அவருடைய விலா எலும்புக்கு, அவருடைய விலாவிற்கு, ஏதோவொன்று நடந்தது (யோவான் 19:31-37யைப் பார்க்கவும்). அவருடைய விலா மீட்புக்காகக் குத்தப்படவில்லை; ஏனென்றால், குத்துதல் அவருடைய மரணத்திற்குப்பின் நிகழ்ந்தது. மீட்பு என்ற பிரச்சினை ஏற்கெனவே தீர்க்கப்பட்டாயிற்று. யூத முறைமையின்படி, சிலுவையில் அறையப்பட்டவர்களின் உடல் சூரியன் மறைவ தற்குமுன் கீழே இறக்கப்படவேண்டும். அவர்கள் மரிக்காதிருந்தால், அவர்களுடைய மரணத்தைத் துரிதப்படுத்த போர்வீரர்கள் அவர்களுடைய எலும்புகளை முறிப்பார்கள். கர்த்தரோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்கள் மரிக்கவில்லை; ஆகையால், அவர்களுடைய எலும்புகள் முறிக்கப்பட்டன. ஆனால், அவர்கள் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் வந்து, அவர் ஏற்கெனவே மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய எலும்புகளை முறிக்கவில்லை. பதிலாக, அவர்கள் அவருடைய விலாவில் ஈட்டியால் குத்தினார்கள். இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டு வந்தன. அவருடைய விலா குத்தப்பட்டபோது, மீட்பின் வேலை ஏற்கெனவே நிறைவேறிவிட்டது என்று இது குறிக்கிறது. கிறிஸ்துவின் வேலையில் நம்மைப் பாவங்களிலிருந்து மீட்க அவருடைய இரத்தம் சிந்தப்படுதல் மட்டும் சம்பந்தப்படவில்லை, அவருடைய ஜீவன் நமக்குள் பகிர்ந்தளிக்கப்படுவதை அடையாளப்படுத்துகிற தண்ணீர் புறப்படுதலும் சம்பந்தப்பட்டிருந்தது. இந்த அம்சம் பாவம், மரணம் ஆகியவைகளிலிருந்து வித்தியாசமானது. இரத்தம் நம் பாவங்களோடு இடைப்படுகிறது; தண்ணீர் நம்மை ஜீவனைப் பெறும்படிச் செய்கிறது. இதைத்தான் அவருடைய காயப்பட்ட விலா நமக்குப் பேசுகிறது.

கிறிஸ்துவினுடைய மரணத்தின் இந்த இரண்டு அம்சங்களை

நாமெல்லாரும் தெளிவாக வித்தியாசப்படுத்த வேண்டும். ஒன்று மீட்புக்காக; மற்றொன்று மீட்புக்காக இல்லை. அவருடைய மரணத்தின் முதல் அம்சம் ஆதியாகமம் 3-ல் மனிதனுடைய வீழ்ச்சிக்குப்பின் நடந்த எல்லாவற் றோடும் இடைப்படுகிறது. மனிதன் வீழ்ந்தபோனதால், தேவன் மனிதனைப் படைத்ததின் ஆதி நோக்கத்திற்கு நம்மைத் திரும்பக் கொண்டுவர கிறிஸ்து நம்மை மீட்க வந்தார். ஆனால், அவருடைய மரணத்தின் இன்னோர் அம்சத்திற்கு பாவத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லை. அது அவருடைய ஜீவன் நமக்குள் பகிர்ந்தளிக்கப்படுமாறு, முற்றிலும் தம் ஜீவனை விடுவிப்பதற்காகவே.

கிறிஸ்துவின் மரணத்தில் வித்தியாசமான இந்த இரண்டு அம்சங்கள் இருப்பதால், அவைகளைக் குறிக்க வேதாகமம் இரண்டு வித்தியாசமான பொருட்களைப் பயன்படுத்துகிறது. மீட்பிற்காக இரத்தம் பயன்படுத்தப்படுகிறது; மீட்பில்லாத அம்சத்திற்காகத் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தைப் பார்க்க தேவன்தாமே நம் கண்களைத் திறப்பாராக. இரத்தம் மீட்புக்காக; தண்ணீர் தம் ஜீவனைப் பகிர்ந்தளிப்பதற்காக. நாம் பாவம் செய்திருப்ப தாலும், தேவனுக்குமுன் பாவிகளாக இருப்பதாலும் இரத்தம் அவருக்குமுன்பாக இருந்து நம் பாவங்களுக்காகப் பேசிக் கொண்டிருக்கிறது. ஆனால், கர்த்தரே ஜீவன் என்று தண்ணீர் அடையாளப்படுத்துகிறது. தண்ணீர் புறப்பட்டுவந்தது என்று யோவான் 19:34 கூறுகிறது. ஆனால், இருபதாம் அதிகாரத்தில் கர்த்தர் தம் விலாவைத் தம் சீடர்களுக்குக் காண்பித்தார். யோவான் 20 மீட்போடு இடைப்படுகிற அதிகாரம் இல்லை. "நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்," என்று கர்த்தர் கூறினார் (வசனம் 17). இது ஜீவனைப் பகிர்ந்தளிக்கிற விஷயம்.

இத்தோடு முடியவில்லை. ஆதியாகமம் 2:22, 23-யை நாம் மீண்டும் வாசிப்போம்: "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்." வேதாகமத்தில் ஓரிடத்தில் நாம் "மாம்சமும் இரத்தமும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (1 கொரி. 15:50). ஆனால், வேதவாக்கியங்கள் உயிர்த்தெழுதலில் மனிதனைக் குறிப்பிடும்போது, அவன் "மாம்சமும் எலும்புகளும்" என்று மட்டுமே குறிப்பிடப்படுகிறான். அங்கு இரத்தம் குறிப்பிடப்பட வில்லை (லூக்கா 24:39). ஏவாளை உண்டாக்க தேவன் ஆதாமின்

எலும்பைப் பயன்படுத்தினார். வேதாகமம் முழுவதும் இரத்தம் என்ற வார்த்தை நானூறு தடவைகளுக்கும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது; ஆனால், ஆதியாகமம் 2-ல் இரத்தம் குறிப்பிடப்படவில்லை; ஏனென்றால், அப்போது பிரச்சினை மீட்பு இல்லை. இரத்தம் குறிப்பிடப்படும்போதெல்லாம், மீட்பு சம்பந்தப்பட்டிருக்கிறது. இரத்தம் மீட்புக்காக. பாவங்களுக்குப் பரிகாரமாக மனிதன் மிருகங்களின் இரத்தத்தை எப்படிப் பயன்படுத்தினான் என்று பழையஏற்பாடு கூறுகிறது. புதிய ஏற்பாட்டில், "இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது," என்று எபிரேயர் 9:22 கூறுகிறது. பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி, இரத்தம் மீட்போடு தொடர்புடையது என்று நாம் பார்க்கிறோம். ஆனால், ஏவாள் படைக்கப் படுவதில் இரத்தம் குறிப்பிடப்படவில்லை; ஏனென்றால், அங்கு பாவம் இருக்கவில்லை; தேவன் அங்கு எந்தப் பாவத்தையும் பார்க்கவில்லை.

## தேவனுடைய திட்டத்தில் சபை—பாவம் இல்லாமல்

எபேசியர் 5:25, 27-யை வாசிக்கும்போது, அதே அர்த்தத்தை நாம் காண்கிறோம். "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து...அதற்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்." இந்தப் பத்தியில் நாம் மூன்று குறிப்புகளைக் கவனிக்க வேண்டும்.

முதலாவது, கிறிஸ்து நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்; ஏனென்றால், நாமே சபை. கிறிஸ்து பாவிகளுக் காக மரிப்பதைப்பற்றிப் பேசும் ரோமர் 5 மீட்பின் தொடர்பில் பேசப்படுகிறது. ஆயினும், எபேசியர் 5 பாவிகள் என்ற பிரச்சினை யோடு இடைப்படாமல், சபை என்ற விஷயத்தோடு இடைப் படுகிறது. எபேசியர் 5-ன் இட அமைப்பு, நாம் பாவிகளாக இருந்ததால் கிறிஸ்து நமக்காக மரிக்க வந்தார் என்பது இல்லை; மாறாக, நாம் சபையாக இருப்பதால் அவர் தம்மைத்தாமே நமக்காக ஒப்புக்கொடுத்தார் என்பதுதான் இங்கு இட அமைப்பாகும்.

இரண்டாவது, நாம் பாவம்செய்துவிட்டோம் என்பதால் இல்லை, மாறாகக் கிறிஸ்து நம்மை நேசிப்பதால், அவர் தம்மைத்தாமே நமக்காக ஒப்புக்கொடுத்தார். 1 கொரிந்தியரின் படி, கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்தார்; ஆனால், கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என்று எபேசியர் 5 கூறுகிறது. நம் பாவங்களினிமித்தம் இல்லை, மாறாக அன்பினிமித்தம் அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார். பாவத்துக்காக மரிப்பது ஒரு காரியம்; அன்பிற்காக மரிப்பது முற்றிலும் வித்தியாசமானது. பாவத்திற்காக மரிப்பது பாவம் என்ற பிரச்சினை

யோடு இடைப்படுகிறது—இது மீட்பு. ஆனால், கிறிஸ்து தம்மைத் தாமே நமக்காக ஒப்புக்கொடுப்பது அன்பைப்பற்றிய காரியம். எபேசியர் 5-ல் பாவம் சம்பந்தப்படவில்லை. அவருடைய மரணத்தின் இந்த அம்சம் அன்போடு தொடர்புடையது; இதற்குப் பாவத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லை.

மூன்றாவது, நம் பாவங்கள் என்ற எந்தக் கேள்வியும் இல்லாமல், தம்மை நமக்குத் தர, கிறிஸ்து தம்மைத்தாமே நமக்காக ஒப்புக்கொடுத்தார். "அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து...அதற்குத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்," என்றும் இந்த வசனத்தை மொழிபெயர்க்கலாம். ஆதாம் தன் எலும்பை ஏவாளுக்குப் பகிர்ந்தளித்தான்; கிறிஸ்துவும் அப்படியே தம்மைத் தாமே நமக்குப் பகிர்ந்தளித்திருக்கிறார். நாம் அவரை நமக்குள் கொண்டிருக்கிறோம்; ஏனென்றால் அவர் மரித்தார்; அவர் ஏற்கெனவே நமக்குள் நுழைந்து விட்டார். அவர் மரித்ததால், இப்போது நாம் அவருடைய ஜீவனை நமக்குள் கொண்டிருக் கிறோம். அவர்தாமே நமக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறார்.

இதை நாம் ஒரு கணப்பொழுது பரிசீலிப்போம். இது அற்புதமாக இல்லையா? தேவனுடைய பார்வையிலிருந்து, சபை ஒருபோதும் பாவம் செய்ததேயில்லை, சபைக்குப் பாவத்தோடு ஒருபோதும் தொடர்பு இருந்ததேயில்லை. மனிதன் வீழ்ந்தான், அவனுக்கு மீட்பு தேவைப்பட்டது என்று தேவனுக்குத் தெரியும் என்பது உண்மைதான்; ஆனால், ஆச்சரியமாக, இன்னொரு கோட்டில், அவர் பாவத்தைப் பார்க்கவேயில்லை. வேறு வார்த்தை களில் சொல்வதானால், மீட்பு தேவைப்படாத ஒரு பகுதி நம்மில் இருக்கிறது. இந்தப் பகுதியைத்தான் நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டிருக் கிறோம். இது மீட்கப்பட வேண்டிய தேவையில்லை; ஏனென்றால், அது பாவத்தை மிஞ்சிவிடுகிறது (இந்தப் பகுதியை, நிச்சயமாக, நாம் மீட்கப்பட்டபிறகுதான் பெற்றுக் கொண்டோம்.) இந்தப் பகுதியே சபை.

சபையை அடையாளப்படுத்த தேவன் எப்படி அநேகப் பெண்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்று வேத வாக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. ஆதியாகமத்தில் ஏவாளின் கதையோடுகூட ரெபேக்காளின் கதையும், ஆசெனாத்தின் கதையும் இருக்கின்றன. ரெபேக்காள் ஈசாக்கைத் திருமணம்செய்துகொள்ளுதல், சபை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவதை அடையாளப்படுத்து கிறது. ஆசெனாத் யோசேப்பைத் திருமணம்செய்துகொள்ளுதலும், அவள் எகிப்தில் குமாரர்களைப் பெற்றெடுப்பதும், சபை உலகத்தி லிருந்து தேவனுக்கென்று தெரிந்தெடுக்கப்படுவதை அடை யாளப்படுத்துகிறது. சிப்போராள் வனாந்தரத்தில் மோசேயைத் திருமணம்செய்வதைப்பற்றி யாத்திராகமம் பேசுகிறது. இது

வனாந்தரத்தில் இருக்கும் சபைக்கு அடையாளம். யோசுவா புத்தகம் அக்ஷாளைப்பற்றிப் பேசுகிறது; அவள் திருமணம் ஆனபிறகு மேலே இருந்த ஊற்றுக்களையும், கீழே இருந்த ஊற்றுக்களையும் கேட்டாள். இது சபை சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அடையாளம். ரூத் போவாசைத் திருமணம் செய்துகொள்ளுதல் சபையின் மீட்பிற்கு அடையாளம். அபிகாயில் தாவீதைத் திருமணம்செய்துகொள்ளுதல் சபை யுத்தத்திற்காக ஒரு சேனையாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அடையாளம்.

சபையின் பல்வேறு அம்சங்களுக்கு அடையாளமாக இருந்த அநேகப் பெண்களைப்பற்றி பழையஏற்பாடு பேசுகிறது. சபை உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டது, மீட்கப்பட்டது, வனாந்தரத்தினூடாய்க் கொண்டுசெல்லப்பட்டது, யுத்தத்திற்காகச் சேர்க்கப்பட்டது, சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டது, கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. வேதவாக்கியங்களில் உள்ள இந்த அடையாளங்களெல்லாம் சபையைக் குறிக்கின்றன; ஆனால், அவைகளுள், ஆதியாகமம் 2-ல் உள்ள அடையாளம் ஒப்பற்றது. இதற்கு ஒப்பான வேறு அடையாளம் இல்லை; ஏனென்றால், சபை தேவ னுடைய மனதில் உண்மையாகவே எப்படி இருக்கிறது என்றும், அவருடைய நித்திய திட்டத்தில் அது எந்த இடத்தை வகிக்கிறது என்றும் ஏவாள் சித்திரிக்கிறாள். மற்ற அடை யாளங்களெல்லாம் மனிதனுடைய வீழ்ச்சிக்குப்பின் நிகழ்கின்றன; ஏவாளுடைய அடையாளமே வீழ்ச்சிக்குமுன் வருகிறது. மற்ற எல்லா அடையாளங்களிலும் தார்மீகப் பொறுப்பு என்ற காரியம் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஏவாள் என்ற அடையாளத்தில் மட்டுமே அது இல்லை.

தேவன் உண்டாக்கிய ஏவாள் மீட்கப்பட்ட பாவியிலிருந்து வராமல், ஆதாமிலிருந்து வந்தாள். பாவம் நிகழ்வதற்குமுன்பே அவள் உண்டாக்கப்பட்டாள். அதுபோல, சபை கிறிஸ்துவி லிருந்து வெளிவருகிறது; இது பாவிகள் கிருபையைப் பெற்று, இரட்சிக்கப்படுகிற காரியம் இல்லை. ஏவாள் ஆதாமிலிருந்து வெளிவந்தாள்; முற்றிலும் ஆதாமுக்காகவே இருந்தாள். அதுபோல சபை கிறிஸ்துவிலிருந்து வெளிவந்து, முற்றிலும் கிறிஸ்துவுக் காகவே இருக்கிறது.

ரூத்தைப்போல இரட்சிக்கப்பட்ட அநேக மக்களால் தொகுக்கப்பட்டதே சபை என்று நாம் கருதக்கூடும். ரூத் முற்றிலும் பாவத்தில் சம்பந்தப்பட்டிருந்தாள். அவளை மீட்க போவாஸ் வந்தார். ஆனால், ஆதியாகமம் சபையைப்பற்றி நமக்குத் தரும் சித்திரம் இது இல்லை. ரூத் வாழ்ந்த காலத்தில் ஏற்கெனவே பாவம் நுழைந்துவிட்டது; ஆனால், ஆதியாகமம் 2-ல் பாவம் என்ற பிரச்சினை இருக்கவில்லை. இதுவே ஆதியில் இருந்த சபை;

இதற்கு பாவத்தோடு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. ஆ, இது ஓர் அற்புதமான விஷயம். இவை மிகவும் அர்த்தமுள்ள வார்த்தைகள். தேவனுடைய முன் யோசனையில் இருந்த சபைக்கு பாவத்தின் எந்த வரலாறும் கிடையாது.

மக்கள் நம் இரட்சிப்பின் வரலாற்றைப்பற்றிக் கேட்கும் போது, நாம் எப்போதும் வீழ்ச்சியில்தான் ஆரம்பிக்கிறோம், அதாவது நாம் எப்படி பாவம்செய்தோம் என்றும், எப்படி பாவத்தில் அலைந்தோம் என்றும், நாம் எவ்வளவு பொல்லாத வர்களாகவும் மோசமானவர்களாகவும் இருந்தோம் என்றும், நாம் எப்படி சுவிசேஷத்தைக் கேட்டு, கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து, இரட்சிக்கப்பட்டோம் என்றும் கூறுகிறோம். நாம் எப்போதும் வீழ்ச்சியில்தான் ஆரம்பிக்கிறோம். ஆனால், தேவனுடைய பார்வையில், சபை ஒருபோதும் பாவத்தால் தொடப்பட்டதே யில்லை. சபை கிறிஸ்துவின் ஒரு பகுதி; இது ஒருபோதும் பாவத் தால் தொடப்பட்டதும் இல்லை, ஒருபோதும் பாவத்தை அறிந்ததும் இல்லை. முற்றிலும் பாவம் இல்லாததே ஏவாள் என்று அழைக்கப் படுகிறது. முற்றிலும் கிறிஸ்துவிலிருந்து வருவதே சபை என்று அழைக்கப்படுகிறது. முற்றிலும் கிறிஸ்துவிலிருந்து வெளிவந்து, கிறிஸ்துவுக்காக மட்டும் இருப்பதே ஏவாள், சபை. ஏவாள் தேவனால் உண்டாக்கப்பட்ட ஒரு கூட்டு மனிதனுக்கு அடை யாளம்—முற்றிலும் கிறிஸ்துவாலான சபை. சபை எல்லாத் தேசங் களிலிருந்தும், கோத்திரங்களிலிருந்தும், மக்களிலிருந்தும் வந்த மனிதர்களாலான ஒரு தொகுப்பு இல்லை. இல்லை. கிறிஸ்துவி லிருந்து வெளிவருவதை மட்டுமே சபை என்றழைக்க முடியும். இது அநேக மக்கள் இயேசுவை விசுவாசித்து, உடனே சபையாக மாறிவிடுகிற விஷயம் இல்லை. சபை என்பது கிறிஸ்துவிலிருந்து மட்டுமே வெளிவருகிற ஒரு பகுதி. சபை என்பது தம் குமாரனாகிய கிறிஸ்துவை வெளி யரங்கமாக்கவும், தம் நித்திய குறிக்கோளை நிறைவேற்றவும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம் என்பதைப் பார்க்கவேண்டும். இதற்கு பாவத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லை; இது பாவத்தை ஒருபோதும் தொட்ட தேயில்லை.

நாம் நம் எண்ணங்களைப் புதிதாக்கி, தேவன் மாபெரும் காரியம் என்று கருதுகிற காரியத்துக்குள் நுழையவேண்டும். தேவனுடைய அநேகப் பிள்ளைகள் எல்லாவற்றையும் பாவம் என்ற பிரச்சினையோடும், இரட்சிக்கப்படுவதோடும் தொடர்பு படுத்துகிறார்கள். அவர்கள் எவ்வளவு மோசமான பாவிகளாக இருந்தார்கள் என்றும், அவர்கள் எப்படி இரட்சிக்கப்பட்டார்கள் என்றுமே அவர்கள் எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் எப்போதும் பாவம் என்ற கோணத்திலிருந்து பார்ப்பது

போலத் தோன்றுகிறது. இந்த விஷயம் எப்போதும் நம்மோடு இருக்கிறது. ஆனால், தேவன் நம் எண்ணத்தை முழுமையாக மாற்ற விரும்புகிறார். நாம் சபையைப்பற்றி முற்றிலும் ஒரு புதிய பார்வையைக் கொண்டிருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். சபைக்குப் பாவத்தோடு எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நாம் பார்க்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆரம்பத்திலிருந்தே, சபை தேவனிலிருந்து வெளிவருகிறது, தேவனுக்காக இருக்கிறது, அது ஒருபோதும் பாவத்தைத் தொட்டதேயில்லை. நம்மில் ஒரு பகுதி இருக்கிறது; அது கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிறது, அது கிறிஸ்துவே. இந்தப் பங்குக்குப் பாவத்தோடு ஒருபோதும் தொடர்பில்லை, இருக்கவும் முடியாது; இதனுடன் தொடர்பு கொள்ள பாவத்துக்கு எந்த வழியும் இல்லை. நம்மில் பரிசுத்தமாக இருக்கிற ஏதோவொன்று இருக்கிறது என்று நாம் உண்மையாகவே கூறமுடியும். ஆ, நாமெல்லாரும் சபையைப்பற்றிய தேவனுடைய பார்வைக்குள் நுழைவோமாக. அவருடைய பார்வையிலிருந்து, அவர் பாவத்தின் எல்லா வரலாற்றையும் இரத்துசெய்துவிட்டார்போல் தோன்றுகிறது.

நித்தியத்தில் நாம் நம் துதிகளை அவருக்கு ஏறெடுக்கும் போது, நாம் எப்பேர்ப்பட்ட பாவிகளாக இருந்தோம் என்று சொல்லத் தேவையில்லை. ஆதியாகமம் 3-க்குப் பிந்தைய எல்லா வரலாறுகளையும் ஒழித்துவிட்டு, கிறிஸ்துவுக்குரியது மட்டுமே அவரிடத்தில் கொண்டுவரப்படும் என்ற நிலைக்குத் தேவன் நம்மைக் கொண்டுவர விரும்புகிறார். இது தேவனுடைய நித்திய குறிக்கோள். தேவன் ஒரு சபையை, ஒரு கூட்டு மனிதனை, அடைய விரும்புகிறார்; அவனில் எல்லாம் கிறிஸ்துவிலிருந்து வெளிவருபவை, எல்லாம் கிறிஸ்துவுக்காக இருக்கின்றன. பாவத்தின் எந்த வரலாறும் இல்லாத சபை.

ஆதியாகமம் 2:18-க்கு நாம் மீண்டும் திரும்புவோம்: "பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்." ஏவாள் படைக்கப்பட்டது தேவனுடைய இருதய விருப்பத்தைத் திருப்திப்படுத்துவதற்காகவே. அவரிடம் இப்பேர்ப்பட்ட ஆசை இருந்ததால், அவர் இதைச் செய்தார். ஆதியாகமம் 3-ல் உள்ள சம்பவங்கள் நடைபெறுவதற்கு முன்பே, ஏவாள் படைக்கப்படுதல் ஆதியாகமம் 2-ல் கூறப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிக்கவேண்டும். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே தார்மீகப் பொறுப்பு என்ற எந்தப்பிரச்சினையும் அங்கு இருக்கவில்லை; ஏனென்றால், பாவம் இன்னும் அங்கு நுழையவில்லை. மனிதனுக்குத் தேவனிடத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆகையால், ஆதியாகமம் 2-ல்

கூறப்பட்டுள்ள எல்லா நிகழ்ச்சிகளும் மனிதனுடைய குறைபாடுகளோடு இடைப்படவேண்டும் என்பதற்காக இல்லை; மாறாக, தேவனுடைய தேவைகளைச் சந்திக்கவேண்டும் என்ற குறிக்கோளுக்காகவே. நித்தியத்தி லிருந்து நித்தியம்வரை தேவன் தம் சபையைக் கொண்டிருக்க எப்படி உத்தேசித்திருந்தார் என்று ஆதியாகமம் 2-ல் தேவன் ஏவாளை படைத்தல் காண்பிக்கிறது. தேவனுடைய பார்வையில் முதல் காரியம் மனிதனுடைய வீழ்ச்சி இல்லை; மாறாக, கடந்த நித்தியத்தில் அவர் உத்தேசித்திருந்த திட்டமே முதல் காரியம். மனிதன் தேவனுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, சாத்தானுடைய எல்லா வேலைகளையும் நாசமாக்கவேண்டும் என்பதே நித்தியத்தில் தேவனுடைய திட்டமாகும். இதுவே சபைக்கான தேவனுடைய குறிக்கோள். வரப்போகிற நித்தியத்தில் இது நிறைவேறும். தேவன் தம் இருதயத்தைத் திருப்திப்படுத்தும் இப்பேர்ப்பட்ட சபையைத் தேடிக்கொண்டிருக்கிறார். அவர் ஆணையும், பெண்ணையும் உண்டாக்கியபிறகு ஓய்ந்திருந்தார். தேவன் திருப்தியடைந்தார்; ஏனென்றால், அவர் இப்பேர்ப்பட்ட சபையை அடைந்துவிட்டார்.

## அத்தியாயம் மூன்று

# கிறிஸ்துவின் சரீரமும், கிறிஸ்துவின் மணவாட்டியும்

ஏவாள் தேவனுடைய திட்டத்தில் சபைக்கு எப்படி அடையாளமாயிருக்கிறாள் என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். தேவனுடைய திட்டத்தில், சபைக்குரிய எல்லாம் கிறிஸ்துவிலிருந்தே வெளிவருகின்றன. அதில் மனிதனுக்குரிய எதுவுமே இல்லை; அதற்குப் பாவத்தோடு எந்த உறவும் இல்லை. இப்பேர்ப்பட்ட சபையை அடையவேண்டும் என்று நம் தேவன் தீர்மானித்திருக்கிறார். இதைவிடக் குறைவான எதுவும் அவருடைய இருதயத்தை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது. அவர் இத்தகைய சபையைத் திட்டமிட்டதோடு மட்டும் இல்லை, அவர் அதை அடையவும்போகிறார். அல்லேலூயா! இது ஓர் உண்மை! நம் தேவனைத் தடுக்கவோ அல்லது ஏமாற்றவோ முடியாது என்பதை நாம் உணர வேண்டும். அவர் ஒன்றைச் செய்யத் தீர்மானிக்கும் போது பாதாளமும், படைப்பின் எல்லா சக்திகளும் எழுந்து அவரை எதிர்த்தாலும்கூட, அவரை எதிர்த்துநிற்கமுடியாது. நாம் விழுந்து போனவர்களும் தோல்வி நிறைந்தவர்களுமாக இருந்தாலுங்கூட, நாம் மாம்சப்பிரகாரமானவர்களும் ஆத்துமாவுக் குரியவர்களுமாக இருந்து, தேவனைவிட்டுத் தூரம்போய் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களாக இருந்தாலுங்கூட, தேவன் தம் குறிக்கோளை இன்னும் அடைந்தே தீருவார். மனிதன் என்ன செய்தாலும் சரி, அது ஒரு பொருட்டேயில்லை; அவனால் தேவனுடைய திட்டத்தை நாசமாக்கமுடியாது; அவனால் அதிகபட்சம் செய்யமுடிந்ததெல்லாம் அதைக் கொஞ்சம் தள்ளிப்போடலாம். ஆகையால், நாம் தேவனுடைய குறிக்கோளை உணர்ந்தால் மட்டும் போதாது; தேவன் தீர்மானித்ததை அவர் முழுமையாக அடைந்தே தீருவார் என்பதிலும் நாம் தெளிவாக இருக்கவேண்டும். முற்றிலும் கிறிஸ்துவிலிருந்து வெளிவரும் சபையை, மனிதனின் எந்த அசுத்தமோ, பூமிக்குரிய எந்த மூலக்கூறோ, பாவத்தின் எந்த வாசனையோ இல்லாத சபையை, அடையவேண்டும் என்று தேவன் நித்தியத்திலிருந்து தீர்மானித்தார். சபையின் ஒவ்வொரு பகுதியும் கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிற ஏதோ வொன்றாகும்; கிறிஸ்துவே சபையின் ஜீவன்.

ஆயினும், ஆதியாகமம் 3-லிருந்த மனிதன் விழ ஆரம்பித்தான். இப்போது நம்மிடம் படைப்பில் தேவனுடைய குறிக்கோள் என்ற

உண்மை மட்டும் இல்லை, மனிதனுடைய வீழ்ச்சி என்ற உண்மையும் இருக்கிறது. ஆகையால், சூழ்நிலையில் மாற்றம்செய்ய தேவன் என்ன செய்தார் என்று நாம் பார்ப்போம்.

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்,” என்று எபேசியர் 5:25-30 கூறுகிறது.

வேதாகமத்தின் இந்த ஆறு வசனங்களை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்: கணவர்கள் தங்கள் மனைவிகளை நேசிக்கவேண்டும் என்பதற்கான முதல் காரணத்தை 25-27ஆம் வசனங்கள் கூறுகின்றன; கணவர்கள் தங்கள் மனைவிகளை நேசிக்கவேண்டும் என்பதற்கான இரண்டாவது காரணத்தை 28-30ஆம் வசனங்கள் கூறுகின்றன. மனைவியை நேசிக்கவேண்டும் என்ற இரண்டு கட்டளைகளையும், இரண்டு காரணங்களையும் நாம் இந்த இரண்டு பகுதிகளில் பார்க்கிறோம். ஆனால், இந்த இரண்டு பகுதிகளுக்கிடையே ஒரு வித்தியாசம் இருக்கிறது. கிறிஸ்து சபையில் “அன்புகூர்ந்து” தம்மைத்தாமே அதற்காக “ஒப்புக்கொடுத்தார்” என்று முதல் பகுதி கூறுகிறது. இந்த வினைச்சொற்கள் கடந்த காலத்தில் இருக்கின்றன. ஆனால் 28-ஆம் வசனத்திலிருந்து, “போஷிக் கிறார்” “சீராட்டுகிறார்” போன்ற வினைச்சொற்கள் நிகழ் காலத்தில் இருக்கின்றன. ஆகையால், வேதாகமத்தின் இந்த இரண்டு பகுதிகளில் காலத்தின் வித்தியாசமான மூலக்கூறுகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன—ஒரு பகுதி கடந்தகாலத்தில் நடந்த ஏதோவொன்றையும், மற்றொரு பகுதி நிகழ்காலத்தில் நடக்கிற ஏதோவொன்றையும் குறிக்கிறது.

இந்த இரண்டு பகுதிகளின் எழுவாய்களும்கூட வித்தியாசமாக இருக்கின்றன. முதல் பகுதி கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையைக் குறிக்கிறது; இரண்டாவது பகுதி கிறிஸ்துவின்

சரீரமாகிய சபையைப்பற்றிப் பேசுகிறது. முதல் பகுதியில், சபை கிறிஸ்துவின் மணவாட்டி என்று குறிப்பிடப்படும்போது கடந்தகாலம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால், நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, ஒரு மணவாட்டியைப் பெற வேண்டும் என்பதே கிறிஸ்துவின் குறிக்கோளாகும். அவருடைய மரணம்கூட ஒரு மணவாட்டியைப் பெறவேண்டும் என்ற குறிக்கோளுக்காகவே. எதிர்காலத்தில் அவர் தம் மணவாட்டியை அடைவார் என்றாலுங்கூட, வேலை கடந்தகாலத்தில் முடிந்துவிட்டது. நிகழ்காலத்தைப் பொறுத்தவரை, சபை கிறிஸ்துவின் சரீரம். தற்போது கர்த்தர் தம் சபையை சீராட்டுகிறார், போஷிக்கிறார்.

## சரீரத்திற்கும், மணவாட்டிக்குமிடையே உள்ள உறவு

கர்த்தருடைய பார்வையில், சபைக்கு இரண்டு நிலைமைகள் இருக்கின்றன: அதின் ஜீவனைப் பொறுத்தவரை, சபை கிறிஸ்து வின் சரீரம். ஆனால், அதின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை, அது கிறிஸ்துவின் மணவாட்டி. சபையோடு கிறிஸ்துவுக் குரிய சேர்க்கையைப் பொறுத்தவரை, சபை அவருடைய சரீரம்; சபையோடு கிறிஸ்துவுக்குள்ள நெருக்கமான உறவைப் பொறுத்த வரை, சபை அவருடைய மணவாட்டி.

கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையேயுள்ள ஒருமையைப்பற்றி தேவனுடைய வார்த்தை பேசும்போதெல்லாம், நாம் கிறிஸ்துவைத் தலையாகவும், சபையை அவருடைய சரீரமாகவும் பார்க்கிறோம். கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை வார்த்தை காட்டும்போதெல்லாம், சபை கிறிஸ்துவுக்கு மணவாட்டி என்று நாம் பார்க்கிறோம். ஆதாம் ஏவாள் இருவரும் "ஒரே மாம்சம்"ஆவதைப்பற்றிப் பேசப்பட்டார்கள். ஆனால், அவர்கள் இன்னும் இரண்டு நபர்களாகவே இருந்தார்கள்; தேவன் அவர்களை இன்னும் இருவராகவே கருதினார். ஆதாம் ஆதாமாக இருந்தான், ஏவாள் ஏவாளாக இருந்தாள். அவர்கள் ஒன்றாகச் சேர்க்கப் பட்டார்கள். இதுவே சபைக்கும் கிறிஸ்துவுக்கும் இடையேயுள்ள உறவாகும். ஒருவரிலிருந்து அவர்கள் இருவரானார்கள், இருவரிலிருந்து அவர்கள் ஒருவரானார்கள். தேவன் முதலாவது மனிதனைப் படைத்தபோது, அவர் ஆணையும் பெண்ணையும் உண்டாக்கினார். ஏவாள் ஆதாமிலிருந்து வெளிவந்தாள். இவ்வாறு அவளும், ஆதாமும் ஒன்றாக இருந்தார்கள். அதுபோல, சபையும் கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிறது. ஆகையால், சபையும் கிறிஸ்துவுங்கூட ஒன்றாக இருக்கிறார்கள். ஆயினும், ஆதாமும் ஏவாளும் ஒரே நேரத்தில் இருந்ததால், அவர்களுக்கிடையே ஒரு வித்தியாசம் இருந்தது. அதுபோல, சபையும் கிறிஸ்துவும்

உடன்வாழ்வதால், அவர்களுக்கிடையேயும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஒருமையைப் பொறுத்தவரை, அவர்கள் ஒன்று; வேற்றுமையைப் பொறுத்த வரை, அவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் மாறுபடுகிறார்கள்.

இந்த இரண்டு நிலைமைகளுக்கும் காலத்தில் உள்ள வித்தியாசத்தோடு சம்பந்தம் உண்டு. இன்று சபை கிறிஸ் துவின் சரீரம்; ஆனால், எதிர்காலத்தில் சபை கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும். இன்று சபை, கிறிஸ்துவின் ஜீவனை வெளியரங்க மாக்கும் குறிக்கோளுக்காக கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறது. ஒருநாள், சபை ஜீவனில் முதிர்ச்சியடையும்போது, தேவன் சபையைக் கிறிஸ்துவிடம் கொண்டு வருவார்; அந்த நாளில் சபை கிறிஸ்துவின் மணவாட்டியாக மாறும். சபை இன்று கிறிஸ்துவின் மணவாட்டி என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், அது தவறு. இப்பேர்ப்பட்ட ஒரு காரியம் இல்லை. கர்த்தராகிய இயேசு இன்னும் மணவாள னாகவில்லையென்பதால், சபை ஏற்கெனவே எப்படி அவருடைய மணவாட்டியாக இருக்கமுடியும்? சபை கிறிஸ்துவின் சரீரம் என்ற முறையில் அதின் வேலை முழுமைபெறாதவரை, தேவன் சபையைக் கிறிஸ்துவிடம் அவருடைய மணவாட்டியாகக் கொண்டுவரமாட்டார்.

ஆதியாகமம் 2-ல் உள்ள முன்மாதிரியை நாம் பார்த்தால், சரீரத்திற்கும் மணவாட்டிக்கும் இடையேயுள்ள உறவையும் நம்மால் பார்க்கமுடியும். ஏவாள் ஆதாமின் விலா எலும்பிலிருந்து உண்டாக்கப்பட்டபடியால், அவள் ஆதாமின் சரீரமாக இருந்தாள். ஏவாளை உண்டாக்க ஆதாமின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டதால் அவளுடைய நிலைமை ஆதாமின் சரீரமாகும். ஆனால், ஏவாள் உண்டாக்கப்பட்ட பிறகு, தேவன் அவளை ஆதாமிடம் கொண்டுவந்தார். அவள் ஆதாமின் மணவாட்டியாக மாறினாள். இதுவே சரீரத்திற்கும் மணவாட்டிக்கும் இடையேயுள்ள உறவாகும். ஏவாள் ஆதாமிலிருந்து வெளிவருகிறாள் என்று குறிப்பிடப்படும் போது, அவள் ஆதாமின் சரீரம் என்பதே அதன் பொருள். ஆனால், ஏவாள் ஆதாமிடம் கொண்டுவரப்பட்டு அவனுக்கு ஏற்ற துணையாக மாறியபோது, அவள் ஆதாமின் மணவாட்டியாக மாறினாள். ஆதாமிலிருந்து வெளிவந்தது ஆதாமின் சரீரம்; ஆதாமிடம் கொண்டுவரப்பட்டது அவனுடைய மணவாட்டி.

ஆதாமிலிருந்து வெளிவந்தது மட்டுமே ஆதாமுக்கு ஏற்ற துணையாக இருக்கமுடிந்தது. ஆதாமிலிருந்து வெளிவராத எதுவும் ஒருபோதும் அவனுக்கு ஏற்ற துணையாக இருக்கமுடியாது. இவ்வாறு, ஆகாயத்துப் பறவைகளெல்லாம் அவனிடம் கொண்டுவரப்பட்டபோது, அவைகளில் எதையும் அவன் தனக்கு ஏற்ற துணையாக எடுத்துக்கொள்ளவில்லை; ஏனென்றால்,

அவைகள் அவனிடமிருந்து வெளிவரவில்லை. சகல கால்நடைகளும் அவனிடம் கொண்டுவரப்பட்டபோது, அவைகளில் எதையும் ஆதாம் தனக்கு ஏற்ற துணையாக எடுத்துக்கொள்ள வில்லை; ஏனென்றால், அவைகளுங்கூட அவனிடமிருந்து வெளிவரவில்லை. சகல காட்டு மிருகங்களிலும் அவன் தனக்கு ஏற்ற துணையை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களுடைய பிறப்பிடம் சரியில்லை. அவைகள் ஆதாமிலிருந்து வெளிவராத தால், அவைகள் அவனுக்கு ஏற்ற துணையாக இருக்கமுடிய வில்லை. அப்படியானால், யார் அவனுக்கு ஏற்ற துணையாக இருக்கமுடியும்? ஏவாள் அவனுக்கு ஏற்ற துணையாக இருக்க முடியும். ஆகாயத்துப் பறவைகளும், வெளியின் நாட்டுமிருகங் களும், காட்டுமிருகங்களும் ஆதாமிடம் கொண்டுவரப்பட்டது போல, ஏவாளும் அவனிடம் கொண்டுவரப்பட்டாள். ஆயினும், ஏவாளுக்கும் அவைகளுக்கும் இடையே ஓர் அடிப்படை வித்தியாசம் இருந்தது. அவைகள் ஆதாமிலிருந்து வெளிவரவில்லை. ஏவாள் மட்டுமே ஆதாமிலிருந்து வெளிவந்ததால், அவள் மட்டுமே அவனுடைய மணவாட்டியாக இருக்கத் தகுதியுடையவள். அவனிலிருந்து வெளிவந்தபின், அவள் மீண்டும் அவனிடம் கொண்டுவரப்பட்டாள். அவனிடமிருந்து வெளிவருகிற தெல்லாம் அவனுடைய சரீரம்; அவனிடமே மீண்டும் கொண்டுவரப்படுகிற தெல்லாம் அவனுடைய மணவாட்டி.

கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிறது மட்டுமே கிறிஸ்து விடம் திரும்பிவரமுடியும். கிறிஸ்துவிலிருந்து வெளிவராதது ஒருபோதும் கிறிஸ்துவிடம் திரும்பிவரமுடியாது. பரலோகத்தி லிருந்து வருவது மட்டுமே பரலோகத்துக்குத் திரும்பிச்செல்ல முடியும். நாம் பரலோகத்திலிருந்து கீழே இறங்கிவராதிருந்தால், நம்மால் பரலோகத்துக்குத் திரும்பிச்செல்லமுடியாது. வீடுதான் நம் ஆரம்பத்தின் இடம். வீட்டுக்குப்போகிறோம் என்று நாம் கூறும்போது, நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கு திரும்பிச்செல்கி றோம் என்று பொருள். பரலோகத்திலிருந்து வந்தது மட்டுமே பரலோகத்துக்குத் திரும்பிச்செல்லமுடியும். ஆதாமிலிருந்து வந்தது மட்டுமே ஆதாமிடம் திரும்பிச்செல்ல முடிந்தது. தன்னிலிருந்து வந்ததை மட்டுமே ஆதாமால் பெற்றுக்கொள்ளமுடிந்தது. இது ஒரு முன்மாதிரி—தம்மிலிருந்து வெளிவருவதை மட்டுமே கிறிஸ்து பெற்றுக்கொள்வார் என்று இது காண்பிக்கிறது. கிறிஸ்துவிலிருந்து வெளிவருவது மட்டுமே அவரிடம் திரும்பிச்செல்லமுடியும். அவரிடமிருந்து ஜீவனைப் பெற்றுக்கொள்பவர்களை மட்டுமே அவரால் ஏற்றுக் கொள்ளமுடியும்.

தாங்கள் என்னவாக இருக்கிறார்களோ அவையெல்லாவற் றையும், தங்களிடம் என்ன இருக்கிறதோ அவையெல்லாவற்

றையும் கர்த்தருடைய பயனுக்காக ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று நினைக்கிற அநேக மக்கள் இருக்கிறார்கள். ஆனால், மனித ஊற்றிலிருந்து ஏறெடுக்கப்படுகிற எதையும் தேவனால் ஏற்றுக் கொள்ளமுடியாது. மனிதனிடமிருந்து வருகிற எதையும் தேவனால் ஏற்றுக்கொள்ளவோ அல்லது பயன்படுத்தவோ முடியாது. எல்லாக் கிறிஸ்தவர்களுக்கிடையிலும், குறிப்பாக மிகவும் வைராக்கியமான வர்களுக்கிடையே, ஒரு பெரிய தவறு நடைபெறுகிறது. தங்களையும், தங்கள் திறமைகளையும், தங்கள் தாலந்துகளையும், தங்களிடம் இருக்கும் எல்லாவற்றையும் கர்த்தருக்கு ஏறெடுக்கும்வரை எல்லாம் சரிதான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், தம்மிலிருந்து வெளிவருகிறதை மட்டுமே கிறிஸ்து ஏற்றுக்கொள்வார் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். மனிதனிடமிருந்து வெளிவருகிற எதையும் அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

"அப்போஸ்தலர்களுக்கிடையே அங்கு ஒரு பவுல் இல்லையா? அவர் நன்றாகக் கற்றவர் இல்லையா? அவர் நல்ல புத்திக்கூர்மை யானவர் இல்லையா?" என்று நீங்கள் கூறக்கூடும். ஆனால், பவுல் தன்னைப்பற்றிக் கூறும் வார்த்தைகளை நாம் நினைவில்கொள்ளவேண்டும். "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக் குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள தாயிராமல், ஆவியி னாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்ட தாயிருக்கிறது" (1 கொரி. 2:2-5). புத்தியுள்ள, பேச்சுத்திறமையுள்ள மனிதர்கள் சபைக்குள் வரலாம்; ஆனால் அவர்களுடைய இயற்கையான, ஆதியிலிருந்த புத்திசாலித்தனத்துக்கும், அவர்களு டைய இயற்கையான, ஆதியிலிருந்த பேச்சுத்திறமைக்கும் சபையில் ஆவிக்குரிய எந்தப் பயனும் இல்லை. சபையில் ஒரேவொரு காரியம் மட்டுமே அங்கீகரிக்கப்படுகிறது— கிறிஸ்துவிலிருந்து வெளிவருவது மட்டுமே. கிறிஸ்துவிலிருந்து வெளிவருவது மட்டுமே கிறிஸ்துவிடம் திரும்பிச்செல்லமுடியும். கிறிஸ்துவே இப்பேர்ப்பட்ட மணவாட்டியைக் கட்டுவதற்கான கட்டுமானப்பொருள்.

இதுவே நாம் கவனம்செலுத்தவேண்டிய காரியம்: கிறிஸ்துவிலிருந்து வெளிவருவதற்கு மட்டுமே சபையில் எந்த மதிப்பும், ஆவிக்குரிய பயனும் இருக்கமுடியும். தேவன் புதிய படைப்பைக் கட்ட பழைய படைப்பை ஒருபோதும்

பயன்படுத்துவதில்லை. அதுபோல, தேவனுக்குரியதைக் கட்ட தேவன் மனிதனுக்குரியதை ஒருபோதும் பயன்படுத்துவ தில்லை. ஆவிக்குரிய ஏதோவொன்றை உற்பத்திசெய்ய அவரால் மாம்சப்பிரகாரமான காரியங்களை ஒருபோதும் பயன்படுத்த முடியாது. "...ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" (யோவான் 3:6) என்று கர்த்தராகிய இயேசு கூறினார். மாம்சத்தினால் பிறப்பது ஆவியாக மாறுவது சாத்தியமா? இல்லை! "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்." எல்லாப் பிரச்சினைகளும் ஊற்று என்ற காரியத்திலிருந்தே வருகின்றன. விளைவு ஆவிக்குரியதாக இருக்குமா என்று நாம் அறிய விரும்பினால், ஊற்று ஆவிக்குரியதா என்று மட்டுமே நாம் கேட்கவேண்டும். "...ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்," என்று கர்த்தராகிய இயேசு கூறினார். ஆவிக்குரிய ஏதோவொன்றை உற்பத்திசெய்ய நாம் மாம்சத்துக்குரிய எதையும் பயன்படுத்தமுடியாது. எண்ணங் களிலிருந்து வரும் ஒரு செய்தி எண்ணங்களை மட்டுமே உற்பத்திசெய்கிறது. உணர்ச்சியைக் கிளர்ந்தெழப்பண்ணு வதால் செய்யப்படும் வேலை உணர்ச்சிப்பெருக்கை மட்டுமே உற்பத்தி செய்கிறது. ஆவியிலிருந்து வரும் வேலை மட்டுமே ஆவியை உற்பத்திசெய்கிறது. இலக்கு அல்லது குறிக்கோள் சரியா என்பதல்ல கேள்வி; வழிமுறை என்ன என்பதுதான் கேள்வி. இலக்கு சரியாக இருக்கும்வரை, எல்லாம் சரிதான் என்று மனிதர்கள் கருதுகிறார்கள். ஆனால், இலக்கு சரியாக இருக்கிறதா என்று மட்டும் தேவன் கேட்கவில்லை; நாம் அதை எப்படிச்செய்கிறோம் என்றும் அவர் கேட்கிறார். "நான் கர்த்தருக்காகவே இருக்கிறேன்; நான் செய்யும் வேலையும் சபைக்காகவே—ஆத்துமாக்களை இரட்சிக்கும் வேலை, ஆவிக்குரிய வேலை, பரலோக இராஜ்ஜியத்தை விரிவாக்கும் வேலை. என் திறமைகளையும், புத்திசாலித்தனத் தையும் நான் அதற்குக் கொடுத்திருக்கிறேன். இது நல்லதில்லையா?" என்று சிலர் சொல்லக்கூடும். இப்படியிருந்தாலுங்கூட, மனிதனுடைய இயற்கையான திறமையும், புத்திசாலித் தனமும் சிலுவையினால் கையாளப்படவில்லையென்றால், அவைகளுக்கு ஆவிக்குரிய எந்தப் பயனும் இல்லை. "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்," என்று கர்த்தர் கூறினார் (வசனம் 6).

இவ்வாறு, ஆவிக்குரிய குறிக்கோள் இருப்பது மட்டும் போதாது. வழிமுறையுங்கூட ஆவிக்குரியதாக இருக்க வேண்டும். வழி ஆவிக்குரியதாக இருக்கவேண்டும். மனிதனும் ஆவிக்குரிய வனாக இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியிலிருந்துவருவது மட்டுமே ஆவிக்குரியதாக இருக்க முடியும். ஆதாமிலிருந்து வந்தது மட்டுமே ஆதாமிடம் திரும்பிச்செல்லமுடிந்தது. முதலாவது, அது ஆதாமின் சரீரமாக இருக்கவேண்டும்; அதன்பின் அது ஆதாமின்

மணவாட்டியாக மாறமுடியும். முதலாவது, நாம் கிறிஸ்துவின் சரீரமாக இருக்க வேண்டும்; அதன்பின், நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கத் திரும்பக்கொண்டுவரப்படமுடியும். இந்த விஷயத்தில் நம்மால் கொஞ்சம் ஆவிக்குரிய நிஜத்தைத் தொடமுடியும் என்று நாங்கள் நம்புகிறோம். தேவன் மெய்யாகவே எதைத் தேடிக்கொண்டிருக்கிறார் என்று நாம் பார்க்கவேண்டும். எல்லாம் கிறிஸ்துவிலிருந்து வெளிவரவேண்டும், எல்லாரும் ஆவியானவரால் பிறக்கவேண்டும் என்று அவர் கோருகிறார்.

ஆகையால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் சரீரத்தின் வாழ்க்கையை ஆசையாய்ப் பின்தொடரவேண்டும். நாம் சரீரத்தின் வாழ்க்கையைத் தேடாவிட்டால், நம்மால் மணவாட்டியின் வாழ்க்கையைத் தேடமுடியாது. நாம் சரீரத்தின் வாழ்க்கையை அனுபவிக்கிறோமா இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல என்று ஒருபோதும் நினைக்கக்கூடாது. இன்று நம்மிடம் சரீரத்தின் வாழ்க்கை இருந்தால், எதிர்காலத்தில் நம்மிடம் மணவாட்டியின் வாழ்க்கை இருக்கும் என்பதை நாம் உணரவேண்டும். இன்று நாம் எந்த இலக்கும் இல்லாமலும், மேலோட்டமாகவும் வாழ்ந்தால், நாம் ஒருபோதும் மணவாட்டியின் வாழ்க்கையை அறியமாட்டோம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் சரீரத்தை அறிய வேண்டும். தேவனுடைய பார்வையில், நாம் இதைத் தேட வேண்டும். நாம் வெறுமனே தனிநபர்களாக வாழமுடியாது. நாம் தேவனுடைய மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து நடக்கவேண்டும். தான் முழுச் சரீரத்தின் ஓர் அவயவம் என்பதை ஒரு கிறிஸ்தவன் பார்க்கவேண்டும். அவன் வெறுமனே அநேகக் கிறிஸ்தவர்களுக் கிடையே ஒருவன் இல்லை. மாறாக, அவன் ஓர் அவயவம். அவன் மற்ற அநேகக் கிறிஸ்த வர்களுடன் ஒரு பரஸ்பரமான, சரீர உறவுகொண்டு அவர்களுடன் ஓர் அவயவமாக வாழவேண்டும். நாம் மெய்யாகவே சரீரத்தின் வாழ்க்கையை அறிந்தால், ஒரு கிறிஸ்தவனால் கர்த்தராகிய இயேசு இல்லாமல் ஒருநாள்கூட வாழமுடியாது என்றும், மற்ற கிறிஸ்தவர்கள் இல்லாமலும் அவனால் ஒருநாள்கூட வாழமுடியாது என்றும் நாம் பார்ப்போம். கர்த்தராகிய இயேசு இல்லாமல் அவனால் இருக்கமுடியாது; மற்ற கிறிஸ்தவர்கள் இல்லாமலும் அவனால் இருக்கமுடியாது. தேவன், தனித்தனியாக சிதறிக்கிடக்கும் அநேகக் கிறிஸ்த வர்களைத் தேடாமல், ஒரு சரீரத்தைத் தேடிக்கொண் டிருக்கிறார். தேவன் ஒரு கையை இங்கும், ஒரு காலை அங்கும் விரும்பவில்லை, மாறாக அவர் முழு ஏவாளை விரும்புகிறார். அவர் ஏவாளை முழுமையாக அடையவேண்டும்; அப்போது அவள் அவருக்குப் பயன்படுவாள். அவர் செயலிழந்த ஒருவனை விரும்பவில்லை; மாறாக, அவர் ஒரு புதிய மனிதனை, ஒரு

கூட்டு மனிதனை, விரும்புகிறார்.

இந்தக் காரணத்திற்காக எல்லாப் பிரிவினைகளும், தனித்துவமும் களையப்படவேண்டும். பிரிவினை என்ற காரியம் வெறுமனே புறம்பான ஏதோவொன்றல்ல—இது நம் இருதயத்தின் பிரச்சினை. "மிகப்பெரிய போப்பானவர் ரோமாபுரியில் வாழவில்லை; மாறாக, இங்கு நம் இருதயங்களில் வாழ்கிறார்," என்று மார்ட்டின் லூத்தர் கூறினார். புறம்பான பிரிவினைகள் இல்லை, மாறாக சரீரத்தின் வாழ்க்கையை அறியாத தனித்தனி நபர்களாகிய நாமே தேவனுடைய சித்தத்துக்கு மிகப் பெரிய தடை என்பதை நாம் உணரவேண்டும். இந்தக் கட்டத்தில் நமக்கு வித்தியாச மான இரண்டு வெளிப்பாடுகள் தேவை: முதலாவது, சரீரம் ஒன்று என்பதை நாம் பார்க்கவேண்டும். இரண்டாவது, நாம் அதின் ஒரு பகுதி, அதாவது இந்த சரீரத்தின் அவயவங்கள், என்பதைப் பார்க்கவேண்டும். சரீரம் ஒன்று என்பதை நாம் பார்க்கும்போது, நாம் ஒருபோதும் பிரிவினைவாதியாக இருக்கத் துணியமாட்டோம். அவயவங்கள் என்ற முறையில் நாம் முழுச் சரீரத்தின் ஒரு பகுதி என்பதைப் பார்க்கும்போது, நாம் நம்மை ஒருபோதும் நியாயப்படுத்தத் துணியமாட்டோம் அல்லது தனித்தனி அவயவங்கள் என்ற முறையில் நாம் ஒரு முழு அலகாக இருக்கமுடியும் என்று கருதமாட்டோம். முழுச் சரீரமும் சேர்ந்துதான் ஓர் அலகாக இருக்கமுடியும். அவயவங்களாகிய நாம் மிகவும் சிறியவர்கள், மிகவும் குறைவானவர்கள். தனித்தனி நபர்களாக இருப்பதிலிருந்து தேவன்தாமே நம்மை விடுவிப்பாராக. அதன்பின் நாம் அவருக்குப் பயனுள்ளவர்களாக மாறமுடியும்.

## கிறிஸ்து சபையை நேசிக்கிறார்

நாம் இப்போது எபேசியர் 5:28-29யை வாசிப்போம். "அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில் தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்று கிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்." கணவர்கள் தங்கள் மனைவிகளை நேசிக்கவேண்டும்; ஏனென்றால், அவர்க ளுடைய மனைவிகளை நேசிப்பது அவர்களுடைய சொந்த சரீரங்களை நேசிப்பதாகும். மனிதர்கள் எப்போதும் தங்கள் சொந்த சரீரங்களைப் போஷிக்கிறார்கள், சீராட்டுகிறார்கள். கிறிஸ்துவும் சபையைப் போஷிக்கிறார், சீராட்டுகிறார். கிறிஸ்துவின் பார்வையில், சபை அவருடைய சொந்த சரீரம், அவருடைய எலும்பின் எலும்பு,

அவருடைய மாம்சத்தின் மாம்சம். சபை கிறிஸ்துவின் சரீரம் என்றும், சபையைப் போஷிப்பதும் சீராட்டுவதுமே இன்று சபையினிடத்தில் அவருடைய வேலை என்றும் இந்த வசனங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. ஏனென்றால், அவரே சபை. அவர் நம்மை நிச்சயமாகப் போஷிப்பார், சீராட்டுவார். ஏனென்றால், நாமெல்லாரும் கிறிஸ்துவிலிருந்து வெளிவந்திருக்கிறோம். நாம் நம்மை எவ்வளவு நன்றாகப் போஷித்துச் சீராட்டுகிறோம் என்று நமக்குத் தெரியும். அதுபோல, கிறிஸ்துவும் சபையைப் போஷித்துச் சீராட்டுவார். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே," என்பது உண்மை. சாதாரணமான ஒருவன் தன் கையைக் காயப்படுத்திக் கொண்டால், அவன் தன் கையைக் கவனமாகச் சீராட்டு கிறான்; அவனுடைய காலில் காயம் ஏற்பட்டுவிட்டால், அவன் அதைக் கரிசனையோடு கவனிக்கிறான். மனிதர்கள் எப்போதும் தங்களைப் போஷித்துச் சீராட்டுகிறார்கள். அதுபோல, கிறிஸ்துவும் சபையை நேசிக்கிறார். ஏனென்றால், அவரே சபை.

எபேசியர் 5:25-27யை நாம் வாசிப்போம். "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ் துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்கு கிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்." சபை கிறிஸ்துவின் மணவாட்டி என்று இந்த மூன்று வசனங்கள் கூறுகின்றன. "அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும்" என்பது தேவன் ஏவாளை ஆதாமிடம் கொண்டு வருவதைப்பற்றிய ஓர் உணர்வை வழங்குகிறது. அதுபோல, கிறிஸ்துவும் சபையைக் கொண்டுவந்து, அதைத் தமக்கு வழங்குவார். ஆயினும், இந்த வழங்குதல் எதிர்காலத்தில் நடைபெறும். இன்று சபை இன்னும் இந்த நிலையை அடையவில்லை. சபையைத் தமக்கு வழங்கும் அந்த நாள்வரை, கிறிஸ்து சபையில் படிப்படியாக வேலைசெய்துகொண்டிருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மீட்பிலிருந்து இராஜ்ஜியம்வரையிலான பாதையைப்பற்றி எபேசியர் 5:25-27 பேசுகிறது. அந்த நாளில் கிறிஸ்து சபையைத் தமக்கு வழங்குமாறு, சபை இப்போது படிப்படியாக ஆயத்தமாக்கப்படுகிறது.

சபை "சுத்திகரி"க்கப்பட வேண்டும் என்று இந்த வசனம் இங்கு ஏன் கூறுகிறது? ஏனென்றால், இது ஆதியாகமம் 2-ல் இல்லை, மாறாக எபேசியர் 5-ல் இருக்கிறது. சபையைப்பற்றிய தேவனுடைய மிக உயர்ந்த வெளிப்பாடு எபேசியர் புத்தகத்தில்

காணப்படுகிறது. இந்தப் புத்தகம் பாவிகள் இரட்சிக்கப்படுவதில் ஆரம்பிக்காமல், நாம் நித்தியத்தில் தெரிந்துகொள்ளப்பட்டதில் ஆரம்பிப்பது இதன் தனிச்சிறப்பான அம்சமாகும். ரோமர் 1 முதலாவது பாவத்தைப்பற்றிப் பேசுகிறது—நாம் எப்படிப் பாவம்செய்தோம் என்றும், பின்பு எப்படி இரட்சிக்கப்பட்டோம் என்றும் கூறுகிறது. ஆனால், எபேசியர் 1 நித்தியத்திலிருந்தும், உலகத் தோற்றத்திற்கு முன்பே நாம் தெரிந்துகொள்ளப்பட்டதிலிருந்தும் ஆரம்பிக்கிறது. இரண்டாம் அதிகாரம்வரை பாவம் என்ற பிரச்சினை குறிப்பிடப்படவில்லை. எபேசியர் புத்தகம் இரண்டு கோடுகளை வெளிப்படுத்துகிறது: ஒன்று நித்தியத்திலிருந்து நித்தியம்வரை, மற்றொன்று மனிதனுடைய வீழ்ச்சியிலிருந்து அவனுடைய மீட்புவரை. எபேசியரில் வரம்புகடந்த ஏதோவொன்று நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சபை எப்படி கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிறது என்றும், உலகத் தோற்றத்திற்குமுன்பே அது எப்படித் தெரிந்துகொள்ளப்பட்டது என்றும், நித்தியத்தில் அது என்றென்றைக்கும் கிறிஸ்துவின் மகிமையை எப்படி வெளியரங்கமாக்கும் என்றும் நாம் பார்க்கிறோம். மனிதனுடைய வீழ்ச்சி ஓர் உண்மை என்றும், மனிதன் பாவம்செய்தல் ஓர் உண்மை என்றும், நம் இயற்கையான ஜீவன் இருப்பதும் ஓர் உண்மை என்றும் அது காண்பிக்கிறது. ஆகையால், நாம் பரிசுத்தமாக்கப்படும்வரை, வசனத்தி லுள்ள தண்ணீரின் கழுவுதலால் கிறிஸ்து நம்மைச் சுத்திகரிப் பார் என்று ஐந்தாம் அதிகாரம் கூறுகிறது. நாம் தேவனுடைய சித்தத்திற்கு முழுவதும் பொருத்தமாக இருக்கும் கட்டம்வரை தேவன் நம்மைத் திருப்ப விரும்புகிறார்.

ஒரு பக்கம், சபை ஒருபோதும் தோற்றதில்லை, பாவம் செய்ததில்லை, அல்லது வீழ்ந்ததில்லை என்பதைப் பார்ப்ப தற்கு நமக்குத் தரிசனம் தேவை. சபை ஒருபோதும் பாவத்தைத் தொட்டதில்லை; நித்தியத்திலிருந்து நித்தியம்வரை சபை ஒரு நேர்கோட்டில் இருக்கிறது. மறுபக்கம், நாம் வெறுமனே கிருபையால் இரட்சிக்கப்பட்ட பாவிகளின் ஒரு கூட்டம் என்பதைப் பார்க்கவேண்டும்; ஆகையால், நமக்கு வசனத்திலுள்ள தண்ணீரின் கழுவுதல் தேவை. நம்மைப் பரிசுத்தமாக்கி, மிக உயர்ந்த நிலைக்குத் திரும்பக்கொண்டுவர அவருடைய வார்த்தையின் வழியாக அவருடைய ஜீவன் நமக்குத் தேவை. நாம் அந்தக் கட்டத்தை எட்டுமாறு தேவன்தாமே நமக்குக் கிருபை அருள்வாராக.

## வார்த்தையிலுள்ள தண்ணீரின் கழுவுதலால் சபை சுத்திகரிக்கப்படுதல்

"திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து," என்ற சொற்றொடரை நாம் கவனிக்கவேண்டும். வசனத்தைக் குறிக்க புதிய ஏற்பாட்டில் இரண்டு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று *லோகோஸ்* (*logos*); இது பொதுவான அர்த்தத்தில் வார்த்தையைக் குறிக்கிறது. மற்றொன்று *ரேமா* (*rhema*); வேதவாக்கியங்களில் இதுவும் வசனம் என்று மொழிபெயர்க்கப்பட்டாலுங்கூட, இது *லோகோஸ்* என்பதிலிருந்து மிகவும் வித்தியாசமான ஏதோ ஓர் அர்த்தத்தைக் குறிக்கிறது. *லோகோஸ்* என்பது நித்தியத்தில் தீர்மானிக்கப்பட்ட காரியங்களையும், அனுபவம்சாராத வகையில் பயன்படுத்தப்படும் காரியங்களையும் குறிக்கிறது. இது நாம் பொதுவாகப் பயன்படுத்துவதுபோல *வசனம்*; இது பொதுவாகக் கிறிஸ்தவத்தில் பயன்படுத்தப்படுவதுபோல *வசனம்*. ஆனால், *ரேமா* பேசப்படும் வசனங்களைக் குறிக்கிறது. இது லோகோசைவிட மிகவும் அனுபவத்துக்குரியவை. புதிய எற்பாட்டில் *ரேமா* பயன்படுத்தப்பட்டுள்ள அநேக பத்திகளை நாம் பார்ப்போம்.

மத்தேயு *4:4*-ல், "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே," என்று இயேசு கூறினார். இந்த வசனத்தில் உள்ள "வார்த்தை" *ரேமா*. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நாம் கூறும்போது, "வார்த்தை" *லோகோஸ்*, அது *ரேமா* இல்லை. மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வார்த்தையினால் பிழைப்பான் என்று நாம் சொல்லலாமா? கூடாது. தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைக்கு எந்தப் பயனும் இல்லை. ஒருநாள் ஒருவன் ஒரு தாயிடம் சென்று, "உங்கள் மகன்மேல் ஒரு வண்டி ஏறிவிட்டது; அவன் சாகுந்தருவாயில் இருக்கிறான்," என்று கூறினான். உடனே அந்தத் தாய் வேதாகமத்தைத் திறந்து, "இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல்..." என்று கூறும் யோவான் *11:4*யை வாசிக்க நேரிட்டது. இந்த வசனத்தினால் அவள் சமாதானமடைந்து, களிகூரவும் ஆரம்பித்தாள். ஆனால், அவள் விபத்து நடந்த இடத்துக்கு சென்றபோது, தன் மகன் ஏற்கெனவே மரித்துப்போயிருந்ததை அவள் கண்டுபிடித்தாள். யோவான் சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளது தேவனுடைய வார்த்தை இல்லை என்பதா இதன் பொருள்? அது தேவனுடைய வார்த்தை, ஆனால் அது *லோகோஸ்*, *ரேமா* இல்லை. அவள் உறுதியாய்ப் பிடித்துக்கொண்ட வார்த்தை, அந்தத் தருணத்தில் தேவன் அவளுக்குப் பேசிய வார்த்தை இல்லை. *லோகோஸ்*, *ரேமா* ஆகிய இரண்டும் தேவனுடைய வார்த்தையே; ஆனால், முந்தையது வேதாக மத்தில் கூறப்பட்டுள்ள அனுபவம்சாராத

தேவனுடைய வார்த்தை; ஆனால், பிந்தையது ஒரு குறிப்பிட்ட தருணத்தில் தேவன் நமக்குப் பேசும் வார்த்தை.

"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்," என்று ரோமர் 10:17 கூறுகிறது. இந்த வசனத்தில் *லோகோஸ்* இல்லை, மாறாக *ரேமா* மீண்டும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்து முதலாவது நமக்குள் பேசும்போது நம்மால் விசுவாசிக்கமுடியும் என்பதே இதன் பொருள்.

யோவான் 3:16யை நம்மில் அநேகரால் நினைவிலிருந்து மேற்கோள்காட்டமுடியும். இந்த வசனம் தேவனுடைய வார்த்தைதானா? நிச்சயமாக இது தேவனுடைய வார்த்தையே; ஆனால், அது *லோகோஸ்*. ஆயினும், ஒரு நாள் வருகிறது; அன்றைக்கு இந்த வசனத்தை வாசிக்கும்போது, இது இதற்கு முன் இருந்ததைவிட முற்றிலும் வித்தியாசமாகத் தோன்றுகிறது. "தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்..." இப்போது தேவன் வெறுமனே உலகத்தில் அன்புகூருவ தில்லை; அவர் என்னில் அன்புகூர்கிறார். "...தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார்..." தேவன் தம் குமாரனை வெறுமனே உலகத்துக்குத் தரவில்லை; மாறாக எனக்குத் தந்தார். "...அவரை விசுவாசிக்கிறவன் எவனோ..." இது யாரோ ஒருவன் அவரை விசுவாசிப்பது இல்லை, நான் அவரை விசுவாசிக்கிறேன். "...கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான்..." நான் கெட்டுப்போகமாட்டேன், என்னிடம் இப்போது நித்திய ஜீவனுங்கூட இருக்கிறது. இப்போது இந்த வார்த்தை *ரேமா*. தேவன் நமக்கு வார்த்தையைப் பேசுகிறார்; அதே நேரத்தில் நம்மிடம் விசுவாசம் இருக்கிறது. ஆகையால், நாம் தேவனிடம், "தேவனே, நீர் என்னிடம் கிருபை பாராட்டினால், நீர் எப்போதும் எனக்கு *ரேமாவைத்* தருமாறு ஜெபிக்கிறேன்," என்று கேட்கவேண்டும். *லோகோசினால்* எந்தப் பயனும் இல்லை என்பதல்ல இதன் பொருள். *லோகோசுக்கு* அதின் திட்டவட்டமான பொருள் உண்டு. ஏனென்றால், *லோகோஸ்* இல்லாமல் நம்மால் ஒருபோதும் *ரேமாவைப்* பெறமுடியாது. தேவனுடைய *ரேமாவுக்கெல்லாம் லோகோசே* ஆதாரம். யோவான் 3:16 தேவனுடைய வார்த்தை என்பதை நம்மால் மறுக்கமுடியாது. ஆனால், தேவனுடைய *லோகோஸ்* தேவனால் நமக்குப் பேசப்பட்ட *ரேமாவாக* மாறும்போது, நம்மிடம் விசுவாசம் இருக்கிறது; முழு விவகாரமும் தீர்க்கப்பட்டுவிடுகிறது.

"நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது," என்று யோவான் 6:63 கூறுகிறது. யூதர்களிடம் தேவனுடைய *லோகோஸ்* இருக்கவில்லையா? ஆம், அவர்களிடம் இருந்தது. அவர்கள் அதில் மிகவும் பரிச்சயம்

உடையவர்களாக இருந்தார்கள்; அவர்களால் பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளையெல்லாம் மிகவும் நன்றாக ஒப்பிக்கமுடிந்தது. ஆனால், அதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. கர்த்தர் அவர்களிடம் பேசிய வார்த்தைகள் மட்டுமே ஆவியாயும், ஜீவனாயும் இருந்தன. *ரேமா* மட்டுமே ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

"உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று. சேவல் இரண்டுதரங்கூவுவதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த் தையைப் பேதுரு நினைவுகூர்ந்து, மிகவும் அழுதான்," என்று மாற்கு 14:72 கூறுகிறது. இயேசு தன்னிடம் பேசியிருந்த *ரேமாவை* பேதுரு நினைவுகூர்ந்தான். அவனுடைய நினைவுக்கு வந்தது *ரேமா*. பேதுரு பொய்சொன்னபோது, திடீரென்று *ரேமா* வந்தது. கர்த்தர் பேசிய வாக்கியம் அவனிடம் வந்தது. *ரேமாவே* கர்த்தர் பேசியிருந்த வார்த்தை; அதை இப்போது அவர் மீண்டும் பேசுகிறார்.

"...இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்," என்று லூக்கா 1:38-ல் மரியாள் கூறினாள். இந்த வசனத்தில் *rhema* பயன்படுத்தப்பட்டுள்ளது. இது வெறுமனே ஏசாயா 7:14-லுள்ள, "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்," என்ற ஒரு தீர்க்கதரிசன வார்த்தை இல்லை; மாறாக, "இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்," என்று தேவதூதனால் குறிப்பாக மரியாளுக்குப் பேசப்பட்ட வார்த்தையாகும் (லூக்கா 1:31). மரியாள் இதைக் கேட்டதால், அவள் பலத்தைப் பெற்றுக்கொண்டாள்; அது நிறைவேறிற்று.

லூக்கா 2:29-ல், "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போக விடும்," என்று சிமியோன் கூறினார். இந்த வசனத்திலுள்ள "வார்த்தை" *ரேமா*. கர்த்தருடைய கிறிஸ்துவைக் காண்பதற்கு முன்னே அவன் மரணமடையமாட்டான் என்று கர்த்தராகிய இயேசு வருவதற்கு முன் தேவன் சிமியோனிடம் பேசியிருந்தார். ஆனால், அவர் கர்த்தராகிய இயேசுவைப் பார்த்த நாளில், "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத் தோடே போகவிடும்," என்று சிமியோன் கூறினார். சிமியோன் கர்த்தரிடமிருந்து *ரேமாவைப்* பெற்றார். இது வேதாகமத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட அதிகாரத்தின்படியோ அல்லது ஒரு குறிப்பிட்ட வசனத்தின்படியோ இல்லை; மாறாக, அந்த நாளில் கர்த்தரால் அவரிடம் பேசப்பட்ட வார்த்தையின்படியாகும். வெறுமனே வேதாகமத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட அதிகாரத்திலிருந்தும்,

வசனத்திலிருந்தும் வார்த்தையை வைத்திருப்பது போதாது. கர்த்தர் நம்மிடம் பேசும் வார்த்தைக்கு மட்டுமே பயன் உண்டு. *ரேமா* தனிப்பட்ட விதத்திலும், நேரடியாகவும் நமக்கு ஏதோவொன்றை வெளிப்படுத்துகிறது. நாம் எதனுடன் இடைப்பட வேண்டும் என்றும், நாம் எதிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும் என்றும் அது நமக்குக் காண்பிக்கிறது. இந்தக் காரியத்தை நாம் திட்டவட்டமாகத் தேடவேண்டும். ஏனென்றால், இந்த *ரேமா*வே நம் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆதாரம். தேவன் மெய்யாகவே நம்மிடம் என்ன வார்த்தையைப் பேசியிருக்கிறார்? அவர் நம்மிடம் எப்படிப் பேசியிருக்கிறார்? இன்றைய கிறிஸ்தவம் இன்னும் தனிப்பட்ட வெளிப்பாட்டின் கிறிஸ்தவம் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். கர்த்தர் மனிதனுக்குள் பேசவில்லையென்றால், அது கிறிஸ்தவம் இல்லை; அது புதிய ஏற்பாடும் இல்லை.

"அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்தில் வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று," என்று லூக்கா 3:2 கூறுகிறது. இந்த வசனத்திலுள்ள "வார்த்தையும்" *ரேமா*வாகும்.

"அதற்குச் சீமோன்: ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்," என்று லூக்கா 5:5 கூறுகிறது. இந்த வசனத்திலுள்ள "வார்த்தை" அந்தத் தருணத்திற்குக் கர்த்தரால் பேசப்பட்ட ஏதோவொன்றாகும். அது கர்த்தர் சீமோனிடம் தனிப்பட்ட விதத்தில் பேசியதாகும். இது *ரேமா*. சீமோன் வலையைப் போடவேண்டும் என்று கர்த்தர் வேதாகமத்தின் ஒரு குறிப்பிட்ட அதிகாரத்திலும், வசனத்திலும் பேசவில்லை. மத்தேயு 14:29-யை ஆதாரமாகக்கொண்டு யாராவது ஒருவன் கடல் மேல் நடக்க முயன்றால், அவன் நிச்சயமாக மூழ்கிவிடுவான். கர்த்தர் இதை அந்த நாளில் பேசியிருந்தாலுங்கூட அவர் இன்று பேசிக்கொண்டிருக்கும் வார்த்தை இது இல்லை. தேவன் கடந்தகாலத்தில் பேசிய வார்த்தைக்கும், அவர் இன்று பேசுகிற வார்த்தைக்கும் ஒரே அதிகாரம் உண்டு என்பது உண்மைதான். அவை ஒருபோதும் மாறியதேயில்லை. ஆனால், அதே வார்த்தையைத் தேவன் இன்று நம்மிடம் பேசுகிறாரா என்பதுதான் முக்கியமான காரியம்.

"அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை (*ரேமா*) நினைவுகூர்ந்தார்கள்," என்று லூக்கா 24:8 கூறுகிறது. சுருக்கமாகச் சொல்வதானால் *ரேமா* என்றால் என்ன? கர்த்தர் முன்பே பேசிய ஒன்றை இப்போது மீண்டும் பேசுவதே *ரேமா*. வேறு வார்த்தைகளில்

சொல்வதானால், கர்த்தர் இரண்டாவது தடவை பேசும் வார்த்தையே *ரேமா*. இது ஜீவிக்கிற ஒன்றாகும்.

"யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன்," என்று நடபடிகள் 11:16-ல் பேதுரு கூறினார். பேதுரு கொர்நேலியுவின் வீட்டாருக்குப் பிரசங்கித்துக்கொண் டிருந்தபோது, கர்த்தருடைய ஆவியானவர் அவர்கள்மேல் இறங்கினார். கர்த்தருடைய வார்த்தை பேதுருவுக்கு வந்தது. பேதுரு தன் நினைவாற்றலிலிருந்து வார்த்தையை நினைவுக்குக் கொண்டுவர முயலவில்லை. மாறாகக் கர்த்தர் அவனிடம், "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்," என்று பேசினார்.

கர்த்தர் இன்று இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார் என்ற உண்மையை நாங்கள் பொக்கிஷமாகக் கருதுகிறோம். அவர் வேதவாக்கியங்களில் மட்டும் பேசுவதில்லை; அவர் பவுலிடமும், யோவானிடமும் மட்டும் பேசுவதில்லை; அவர் நம்மிடமும் இன்று பேசிக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் நின்றுபோனதேயில்லை. கர்த்தருக்காக வேலைசெய்துகொண் டிருக்கும் ஒருவன் அவருக்காகப் பேச எழுந்துநிற்கும்போதெல்லாம், அவன் *ரேமாவை* எதிர்பார்க்க வேண்டும். இன்று கர்த்தர் நம்மிடம் பேசவில்லையென்றால், நாம் மெய்யாகவே தோல்விகள். எத்தனை தடவை நாம் பிரசங்கித்திருக்கிறோம், ஆனாலும் கர்த்தர் ஒரு வார்த்தைகூட பேசவில்லையே. செய்தியில் ஏதோ தவறு இருந்தது என்பதல்ல விஷயம். மாறாக, அவையெல்லாம் கர்த்தருடைய பொதுவான வார்த்தை. அதில் எந்த *ரேமாவும்* இல்லை. கர்த்தருடைய ஜீவிக்கும் வார்த்தை இல்லை என்பதே இன்று சபையில் உள்ள பிரச்சினை. பதிலாக, செத்த உபதேசங்கள் மட்டுமே இருக்கின்றன. தேவனிடமிருந்து வரும் நேரடியான தொடர்பு மெய்யாகவே குறைவாக இருக்கிறது. மனிதனுடைய பிரசங் கத்தைக் கடத்திவிடுதல் மட்டுமே இருக்கிறது. நல்ல உபதேசங்களின்கீழ் அநேக மக்கள் மரித்துப்போயிருக்கிறார்கள் என்பது பரிதாபம். தேவன் நம்மேல் இரக்கம்பாராட்டி, நமக்கு *ரேமாவை* அருள்வாராக. தேவன் இன்று நம்மிடம் தனிப்பட்ட விதத்திலும், நேரடியாகவும் பேசுவாராக. நம்மிடம் *ரேமா* இருக்கும்போது மட்டுமே நம்மால் முன்னேறிச்செல்லமுடியும், மற்றவர்களுக்கு வழங்க நம்மிடம் ஜீவத்தண்ணீர் இருக்கும். *ரேமாவே* நம் தேவை.

தேவனுடைய நித்திய திட்டத்தில் சபை பாவம் இல்லாமல் இருக்கிறது. சபையிடம் பாவத்தின் வரலாறு இல்லை. அது

முற்றிலும் ஆவிக்குரியது, முற்றிலும் கிறிஸ்துவிலிருந்து வெளி வருகிறது. ஆனால், சபையின் உண்மையான வரலாற்றைப்பற்றிய காரியம் என்ன? சபை முழுவதும் கிறிஸ்துவிலிருந்து வெளிவரவில்லை என்று நமக்குத் தெரியும், சபையின் அதிகமான மூலக்கூறுகள் பூமிக்குரியவை. எந்த வகையில் கிறிஸ்து சபையைப் பரிபூரணத்துக்குள் கொண்டு வருவார்? வார்த்தையிலுள்ள—*ரேமா*விலுள்ள—தண்ணீரின் கழுவுதலால் அதைச் சுத்திகரித்து அப்படிச் செய்வார். தண்ணீர் ஜீவனைக் குறிக்கிறது என்று நாம் முன்பே குறிப்பிட்டோம். அது கிறிஸ்துவினுடைய மரணத்தின் மீட்பில்லாத (கிறிஸ்துவினுடைய மரணத்தின் இரண்டு அம்சங்கள்: (1) எதிர்மறையான எல்லா அம்சங்களோடும் இடைப்படுதல் (2) நேர்மறையான எல்லாக் காரியங்களுக்காகவும், கிறிஸ்துவின் ஜீவனில் உள்ள எல்லாக் காரியங்களுக்காகவும், ஆயத்தம்செய்தல், இவ்வாறு அவருடைய மரணத்தின்மூலம் விடுவிக்கப்பட்ட ஜீவன் மீட்புக்காக இல்லை; மீட்பு கிறிஸ்துவினுடைய மரணத்தின் எதிர்மறையான அம்சம்) அம்சத்தின்மூலம் விடுவிக்கப்பட்ட ஜீவனுக்கு அடையாளம். நம்மைச் சுத்திகரிக்கக் கிறிஸ்து தம் வார்த்தையிலுள்ள, தம் *ரேமா*விலுள்ள, தம் ஜீவனைப் பயன்படுத்து கிறார்.

தம் வார்த்தையின்மூலம், தம் ஜீவனால் கிறிஸ்து நம்மைக் கழுவுகிறார் என்பதின் பொருள் என்ன? முதலாவது, தேவனுடைய பார்வையிலிருந்து, நாம் சபையின் பிரச்சினையைப் பார்க்க வேண்டும். சபையின் குறை அது பெற்றிருக்கும் கிறிஸ்து மிகக் கொஞ்சம் என்பதல்ல. கிறிஸ்துவைத் தவிர சபையிடம் வேறு அநேகக் காரியங்கள் இருக்கின்றன என்பதே குறை. தேவனுடைய சித்தத்தில் சபை எந்தப் பாவமும் இல்லாமல், எந்த மாம்சமும் இல்லாமல், முற்றிலும் கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிறது; அதில் இயற்கையான எந்த ஜீவனும் இல்லை. ஆனால், நம் உண்மையான நிலைமையைப்பற்றிய காரியம் என்ன? உண்மையாகவே கிறிஸ்துவைச் சார்ந்த நம் ஒவ்வொருவரிடமும் ஒரு குறிப்பிட்ட பங்கு இருக்கிறது; அது முற்றிலும், முழுவதும் கிறிஸ்துவே. இந்தப் பங்குக்காக நாம் தேவனுக்கு நன்றிகூறுகிறோம். இந்தப் பங்கோடுகூட கிறிஸ்துவைச் சாராத அநேகக் காரியங்கள் இன்னும் நம்மிடம் இருக்கின்றன. இந்த வேறு காரியங்களெல்லாம் நம்மிட மிருந்து சுத்திகரிக்கப்படவேண்டும். சுத்திகரிக்கப்படுதல் என்றால் என்ன பொருள்? கூட்டல் அல்ல கழித்தல் என்று பொருள். சுத்திகரித்தல் என்பது நம்முடன் கூட்டுதல் என்றால், அது சாயம்பூசுதலாகும். ஆதியாகமம் 2-ல் ஏவாள் சுத்தி கரிக்கப்படவேண்டிய தேவை இருக்கவில்லை; ஏனென்றால், அவள் தேவனுடைய நித்திய திட்டத்தில் சபைக்கு அடையாளம். ஆனால்,

இன்று நாம் சுத்திகரிக்கப்படவேண்டிய தேவையில்லை என்று கருதினால், நாம் நம்மையே ஏமாற்றுகிறோம். சுத்திகரித்தல் தேவையில்லை என்ற இடத்துக்கு நம்மைக் கொண்டுவர தேவன் திட்டமிடுகிறார். ஆனால், நாம் இன்னும் சுத்திகரிக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

தேவன் நம்மை எப்படி சுத்திகரிக்கிறார்? தம் சொந்த வார்த்தையின்மூலம் தம் ஜீவனைக்கொண்டு தேவன் நம்மைச் சுத்திகரிக்கிறார். எந்த அம்சத்தில் நாம் சுத்திகரிக்கப்பட வேண்டியிருக்கிறது என்று அநேக நேரங்களில் நமக்குத் தெரியாது. ஆனால், ஒரு நாள் நமக்குள் இருக்கும் ஜீவன் நம்மைப் போகவிடாது. நேரம் ஆவதற்குள் *ரேமா* நம்மிடம் வந்து, நாம் எந்தக் காரியத்துடன் இடைப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டு கிறது. ஒரு பக்கம், ஜீவன் நம்மைத் தொடுகிறது. மறுபக்கம், வார்த்தை நம்மிடம் கூறுகிறது. சில நேரங்களில், உபதேசத்தின்படி மிகவும் சரியாகத் தோன்றுகிற ஏதோவொரு காரியத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். நாம் அதைச் செய்வதற் கான நம் காரணமும்கூட மிகவும் சரியானதுதான். ஆனால், நமக்குள் ஏதோவொன்று இருக்கிறது; அது நம்மைத் தொட்டுக் கொண்டேயிருக்கிறது, அது நம்மைப் போகவிடாது. இறுதியாகக் கர்த்தர் நம்மிடம் பேசுகிறார். கர்த்தருடைய வல்லமையுள்ள வார்த்தை, *ரேமா*, வருகிறது. ஒரு குறிப்பிட்ட காரியத்தோடு இடைப்படவேண்டும் என்றும், அது சுத்திகரிக்கப்படவேண்டும் என்றும் அது கூறுகிறது. ஒரு பக்கம், இது ஜீவன்; மறுபக்கம், இது கர்த்தருடைய வார்த்தை. இதன்மூலம் நாம் சுத்திகரிக்கப்படுகிறோம். சில சமயங்களில் வரிசை மாறிவிடுகிறது. ஒரு குறிப்பிட்ட காரியத்தில் நாம் ஈடுபட்டிருக்கும்போது, ஆரம்பத்தில் நாம் எதையும் உணர்வதில்லை. உண்மையில், எல்லாம் சரிதான் என்று நாம் உணர்கிறோம். ஆனால், *ரேமா* வரும்போது முதலாவது கர்த்தருடைய வார்த்தை நம்மிடம் பேசுகிறது; இந்தக் குறிப்பிட்ட காரியம் தவறு என்று அது கூறுகிறது. அதன்பின் நாம் அதனுடன் இடைப்படவேண்டும் என்று நமக்குள் இருக்கும் ஜீவன் கோருகிறது. இதுவே நம் அன்றாட வாழ்க்கையாகும். ஒன்று கர்த்தருடைய ஜீவன் ஏதோவொன்றைச்செய்ய நம்மை அனுமதிப்பதில்லை. பின்பு வார்த்தை வருகிறது. அல்லது முதலாவது வார்த்தை வருகிறது. அதன்பின் ஜீவன் தொடர்ந்து வந்து, நாம் அதனுடன் இடைப்பட வேண்டும் என்று கோருகிறது. ஆனால், எப்போதுமே, அது நம்மைச் சுத்திகரிக்க வார்த்தையிலுள்ள தண்ணீரின் கழுவுதலாகும்.

ஆகையால் நம் வளர்ச்சியும், முன்னேற்றமும் என்ற காரியம் ஜீவன் மற்றும் *ரேமாவைப்* பொறுத்த நம் மனப் பாங்கையே

முற்றிலும் சார்ந்திருக்கிறது. நம்மிடம் ஜீவனில் ஏதாவது உள்ளான உணர்ச்சி இருந்தால், அதை நாம் ஒருபோதும் விட்டுவிடக்கூடாது. "கர்த்தாவே, இந்தச் சூழ்நிலை யோடு எப்படி இடைப்படவேண்டும் என்று நான் அறியுமாறு தயவுசெய்து *ரேமாவைத்* தாரும்," என்று நாம் ஜெபிக்க வேண்டும். கர்த்தர் முதலாவது நமக்கு *ரேமாவைத்* தந்து, முதலாவது நம்மிடம் பேசினாலுங்கூட, காரியத்தோடு இடைப்பட நமக்கு ஜீவனை வழங்குமாறு நாம் இன்னும் அவரிடம் கேட்கவேண்டும். நாம் இந்தக் காரியங்களுக்குக் கவனம்செலுத்தினால், அவைகளை இலேசாக எடுத்துக்கொள்ள வில்லையென்றால், நாம் பரிசுத்தமாக்கப்படுமாறு வார்த்தையிலுள்ள தண்ணீரின் கழுவுதலால் கர்த்தர் நம்மைச் சுத்திகரிப்பார்.

கர்த்தருக்குமுன்பாக, சபை தண்ணீரின் கழுவுதலால் சுத்திகரிக்கப்படுதல் என்றால் கிறிஸ்துவிலிருந்து வராத ஒவ்வொரு பகுதியோடும் கிறிஸ்துவின் ஜீவன் இடைப்படுகிறது என்று பொருள். இயற்கையான ஜீவனும், கிறிஸ்துவிலிருந்து வராத எல்லாமும் சுத்திகரிக்கப்படவேண்டும். பரிசுத்தமாக்கப்படுதல் சுத்திகரிக்கப்படுதலுக்குப் பின்னால் மட்டுமே வரமுடியும். கர்த்தருடைய வார்த்தையாகிய *ரேமாவே* சுத்திகரிக்கப்படுவதற்கான ஆதாரம். நமக்குக் கர்த்தருடைய வார்த்தை தெரியாவிட்டால், நாம் சுத்திகரிக்கப்படுவதற்கும், பரிசுத்தமாக்கப்படுவதற்கும் வேறு வழியே இல்லை. நாம் கிறிஸ்தவர்களான நாளிலிருந்து, நம் அறிவு எங்கிருந்து வந்தது? அது புறம்பான ஊற்றிலிருந்தா அல்லது உள்ளான ஊற்றிலிருந்தா, எதிலிருந்து வந்தது? தேவனுடைய சித்தத்தை நாம் உள்ளிருந்து புரிந்துகொள்கிறோமா அல்லது அவருடைய சித்தம் இன்னும் நமக்கு வெளியே இருக்கும் ஏதோவொன்றா? தேவனுடைய வார்த்தை இல்லை என்ற இந்தக் காரியமே அநேகக் கஷ்டங்களுக்கு வேர். கிறிஸ்துவின் சரீரம் கட்டப்பட முடியாது என்பதற்கான காரணம் என்னவென்றால் நம்மிடம் வெறுமனே புறம்பாக ஏதோவொன்று மட்டுமே இருக்கிறது, உள்ளாக எதுவும் இல்லை. கிறிஸ்தவ விசுவாசத்தின் முழு ஆதாரமும் கர்த்தருடைய பேசுதலையே சார்ந்திருக்கிறது. சபையின் வளர்ச்சியும்கூட கர்த்தர் பேசும் வார்த்தையையே சார்ந்திருக்கிறது. ஆகையால், கர்த்தருடைய பேசுதலுக்கான நம் ஏக்கமே நம் ஜெபங்களின் மையப் புள்ளியாக இருக்க வேண்டும். கர்த்தர்தாமே நம்மிடம் பேசுவாராக! நம்மிடம் பேசப்படும் கர்த்தருடைய வார்த்தை நாம் தேவனுடைய நித்திய குறிக்கோளை அடைவதை சாத்தியமாக்கும். இன்று சபை ஆதியாகமம் 2-ல் இருந்த ஏவாளைப்போல் இல்லை. ஏனென்றால் சபை விழுந்துவிட்டது. எனவே, வார்த்தையிலுள்ள தண்ணீரின் கழுவுதலால் கர்த்தர் நம்மைச் சுத்திகரிக்கவேண்டும்.

தேவனுடைய சித்தத்தின்படியான சபை, அனுபவத்தில் சபை ஆகிய இரண்டும் முற்றிலும் வித்தியாசமான இரண்டு காரியங்கள். தேவனுடைய திட்டத்தில் சபை முற்றிலும் பாவம் இல்லாதது; அது ஒருபோதும் பாவத்தை அறியவில்லை; அதற்கு எந்தப் பாவ வரலாறும் கிடையாது. அது பாவத்தின் வரம்புக்கு மிகவும் மேம்பட்டது; அதில் பாவத்தின் சுவடுகூட கிடையாது. அது முற்றிலும் ஆவிக்குரியது, முழுவதும் கிறிஸ்துவிலிருந்து வெளிவருகிறது. ஆயினும், வரலாற்றில் சபை தோற்றுப்போய் விட்டது, விழுந்துபோய் விட்டது. வீழ்ந்துபோன மனிதர்களை தம் ஆதி சித்தத்துக்கு ஏற்ற சபைக்கு மீண்டும் கொண்டுவர இன்று கர்த்தர் அவர்களுக்கிடையே வேலைசெய்து கொண்டிருக் கிறார். வீழ்ந்துபோன, கறைபடிந்த, பாழடைந்த, பாவமும் அழுக்கும் நிறைந்த மக்களுக்கிடையேயிருந்து ஒரு சபையைப் பெறுமாறு அவர்களிடையே வேலைசெய்ய கர்த்தர் விரும்புகிறார். அவர் அவர்களைத் தாம் கடந்த நித்தியத்தில் தீர்மானித்தி ருந்ததற்குத் திரும்பக்கொண்டுவரவும், மீட்டுத்திருப்பவும் உத்தேசிக் கிறார்; அதனால் எதிர்கால நித்தியத்தில் தம் ஆசையை நிறை வேற்றப்போகிறதை அவரால் அடையமுடியும். சபையைத் தம் ஆதி நோக்கத்திற்குத் திரும்பக்கொண்டுவர கர்த்தர் தம் சிறப்பான வேலையில் தாம் பேசுகிற வார்த்தைகளைக் கருவியாகப் பயன்படுத்துகிறார்.

அறிவு ஒரு காரியம், ஆவிக்குரிய வளர்ச்சி முற்றிலும் இன்னொரு காரியம் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். எல்லா உபதேசங்களும், போதனைகளும், இறையியலும், அறிவும் வெறுமனே ஒரு நபரிலிருந்து இன்னொரு நபருக்குப் போகுமானால், அவைகளால் ஒரு பயனும் இல்லை. உண்மையான வளர்ச்சி வார்த்தையைத் தேவனிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்வதைச் சார்ந்திருக்கிறது. தேவன் தம் வேலையைச்செய்ய தம் ரேமாவைப் பயன்படுத்துகிறார். அவர் நம்மிடம் பேச விரும்புகிறார். ஆகையால், அறிவைப் பெவேண்டும் என்பதே நாம் வேதாகமத்தை வாசிப்பதில் நம் குறிக்கோளாக இருந்தால், அது மெய்யாகவே பரிதாபம். இதுதான் நிலைமை என்றால் நம் கதை முடிந்தது. வேதவாக்கியங்கள்மூலம் தேவனால் மனிதனிடம் பேசமுடியும் என்பதே அதன் உண்மையான மதிப்பாகும். நாம் கர்த்தருடைய கரங்களில் பயனுள்ளவர்களாக இருக்க விரும்பினால் கர்த்தர் நம்மிடம் பேசவேண்டும். நம் கட்டுதல் ஆவிக்குரியதா இல்லையா என்பது கர்த்தர் நம்மிடம் பேசியிருக்கிறாரா இல்லையா என்பதையே சார்ந்திருக்கிறது. அறிவுக்கும், உபதேசத்துக்கும் ஆவிக்குரிய எந்தப் பயனும் இல்லை. நம்மில் கர்த்தர் பேசுவதற்கு மட்டுமே ஆவிக்குரிய

மதிப்பு உண்டு.

சபை வீழ்ந்துபோன நிலைமையில் இருக்கும்போது, சபை தேவனை ஏமாற்றிவிட்டபோது, சபை தேவனுடைய சித்தத் துக்குக் குருடாக இருக்கும்போது நாம் எப்படி நம் அறிவிலும், உபதேசங் களிலும் திருப்தியடையமுடியும்? தேவன் நம்மேல் இரங்கி, நமக்குக் கிருபை அருள்வாராக! "கர்த்தாவே, நீர் எங்களிடம் பேசுமாறு ஜெபிக்கிறேன்." இப்பேர்ப்பட்ட ஜெபத்தை நாம் ஏறெடுப் போமாக! வெளியேயிருந்து வரும் எல்லா வார்த்தைகளுக்கும், மற்றவர்களால் நமக்குக் கடத்தப்பட்ட எல்லா வார்த்தைகளுக்கும், அவைகள் ஆயிரம்தடவை அல்லது பத்தாயிரம்தடவை பேசப் பட்டிருந்தாலுங்கூட, எந்தப் பயனும் இல்லை. *ரேமா*வுக்கு மட்டுமே ஏதாவது மதிப்பு உண்டு. ஒரு காரியத்தைச் செய்யுமாறு மற்றவர்கள் நம்மிடம் சொல்வதால் மட்டுமே நாம் அதைச் செய்தால், நாம் நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறோம்; நாம் புதிய ஏற்பாட்டில் இல்லை. தெளிந்த மனதுடைய ஒருவனால் ரோமர் புத்தகத்தை "இரட்சிப்பு" "நீதிப்படுத்தப்படுதல்" போன்ற பல பகுதிக ளாகப் பிரிக்கமுடியும். ஆனால், அவனுக்குள் ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது—தேவன் அவனிடம் பேசவில்லை. ஒரு மனிதனிடம் அறிவு இருக்கக்கூடும்; இருப்பினும் அவன் தேவனுடைய வார்த்தை இல்லாமல் இருக்கக்கூடும். வேத வாக்கியங்களைப்பற்றிய அறிவும், உபதேசங்களைப் புரிந்து கொள்ளுதலும் ஆவிக்குரியநிலை என்று அநேகர் நினைக் கிறார்கள். இப்பேர்ப்பட்ட ஒரு காரியம் இல்லை! வேத அறிவு ஆவிக்குரியநிலைக்கு ஒருபோதும் மாற்றாக இருக்கமுடியாது. தேவன் நேரடியாகவும், தனிப்பட்டவிதத்திலும் நம்மிடம் பேசுவதற்கு மட்டுமே ஏதாவது உண்மையான மதிப்பு உண்டு. தேவன் தம் வார்த்தையின்மூலம் நம்மிடம் பேசும்போது, நாம் பிரகாசிக்கப்படுகிறோம்; அவருடைய வார்த்தையின்மூலம் நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்; அவருடைய வார்த்தையின்மூலம் நாம் வளர்ச்சியடைகிறோம். எது செத்தது எது ஜீவிக்கிறது என்றும், எது வெறும் அறிவு எது ஆவிக்குரியது என்றும் நாம் அறிய வேண்டும். ஜீவிக்காத எதற்கும் எந்த ஆவிக்குரிய மதிப்பும் இல்லை. நம்மிடம் *ரேமா* இருந்தால், தேவனுடைய ஜீவிக்கும் வார்த்தை இருந் தால், நாம் சுத்திகரிக்கப்படவும், பரிசுத்தமாக்கப் படவும்முடியும்.

## "மகிமையுள்ள சபை"

கிறிஸ்துவின் சுத்திகரிக்கிற, பரித்தமாக்குகிற வேலையில் அவருடைய குறிக்கோள் என்ன? ஒரு நாள் "...மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதே..." (எபே.

5:27) அவருடைய குறிக்கோள். சபை ஆயத்தமாக்கப் பட்டு, தமக்கு வழங்கப்படவேண்டும் என்பதற்காகக் கிறிஸ்து காத்துக்கொண்டிருக்கிறார். மூலமொழியில் "மகிமையுள்ள சபை" என்பதற்கு சபை மகிமைக்குள் கொண்டுவரப்படுகிறது என்று பொருள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், சபை மகிமையைத் தரித்துக்கொள்ளும் அல்லது மகிமையால் உடுத்தப்படும். சபை தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டு, கிறிஸ்துவி னுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக வளரும் என்று எபேசியர் 4 கூறுகிறது (வசனம் 4). கிறிஸ்துவுக்கு வழங்கப்பட சபை மகிமையால் உடுத்தப்படும் என்று பின்பு ஐந்தாம் அதிகாரம் கூறுகிறது. முழு சபையையும் இந்த நிலைக்குக் கொண்டுவர தேவன் உத்தேசித்துள்ளார். மெய்யாகவே இது ஒரு பெரிய காரியம்! இன்று நாம் சபையின் நிலையைப் பார்க்கும்போது, "இது எப்படி ஆகும்?" என்று நாம் கேட்கக்கூடும். நாம் தேவனுடைய நோக்கத்தை சந்தேகிக்கவுங்கூடும். ஆனால், கர்த்தர் வேலைசெய்துகொண் டிருக்கிறார். ஒரு நாள் சபை விசுவாசத்தின் ஒருமையை வந்தடையும்; அது கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் முழு அளவை வந்தடையும். அது மகிமையால் தரிப்பிக்கப் பட்டு, கிறிஸ்துவுக்கு வழங்கப்படும். இதையே கர்த்தர் விரும்புகிறார், அவர் அடைவார். இதையே நாமும் விரும்பு கிறோம், நாமும் அடைவோம்.

இந்த மகிமையான சபையில் கறையோ அல்லது திரையோ அல்லது இப்பேர்ப்பட்ட காரியங்களோ இருக்காது. அது பரிசுத்தமாகவும், பிழையற்றதாகவும் இருக்கும் (5:27). சபையில் எந்தக் கறையோ அல்லது அசுத்தமோ ஒருபோதும் இருந்ததேயில்லை என்று தோன்றக்கூடிய அளவுக்கு கர்த்தர் நம்மைச் சுத்திகரிப்பார். சபை ஒருபோதும் பாவம்செய்ததே யில்லை என்பதுபோல் தோன்றும். சபையில் பாவத்தின் எந்தச் சுவடும்கூடக் காணப்படாது.

சபை கறையற்றது மட்டும் இல்லை; அது சுருக்கமற்றது மாகும். குழந்தைகளிடமும், வாலிபர்களிடமும் எந்தச் சுருக்கங் களும் இல்லை என்று நம்மெல்லாருக்கும் தெரியும். ஒரு நபரில் சுருக்கங்கள் தோன்றும்போதெல்லாம், அவனுக்கு வயதாகிறது என்று பொருள். பழமைக்குரிய ஒன்றும் இல்லை, கடந்த காலத்துக்குரிய ஒன்றும் இல்லை என்னும் நிலைக்குக் கர்த்தர் சபையைக் கொண்டுவர விரும்புகிறார். சபையில் எல்லாம் புதிதாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்பு கிறார். சபை கர்த்தருக்குமுன்பாக நிற்கும்போது, அது ஒருபோதும் பாவம்செய்ததேயில்லை என்பதுபோலவும், அதற்கு பாவத்தின் எந்த

வரலாறும் ஒருபோதும் இருந்ததேயில்லை என்பதுபோலவும் தோன்றும். அது கறை அல்லது திரை இல்லாமல் இருக்கும். எதிர்காலத்தில், அது தேவனுக்கு படைப்பின்போது இருந்த குறிக்கோளின்படி இருக்கும்.

சபை கறையோ அல்லது திரையோ மட்டும் இல்லாமல் இருக்காது; அதில் "இப்பேர்ப்பட்ட எந்தக் காரியங்களும்" இருக்காது. கிரேக்க மொழிபெயர்ப்பிலிருந்து, அதை "இந்த அல்லது அந்தவிதமான குறை" என்று வாசிக்கலாம். அது கறையும் திரையும் மட்டும் இல்லாமல் இருப்பதோடு, அதில் எந்தவிதமான குறையும் இருக்காது. எல்லாக் குறைகளும் நீக்கப்பட்டிருக்கும். தேவன் சபையின்மேல் செய்துகொண் டிருக்கும் வேலையி னிமித்தம் சபை முழுவதும் மகிமையாக இருக்கும் நாள் வந்து கொண்டிருக்கிறது.

மேலும், அது "பரிசுத்தமும் பிழையற்றதுமாக" இருக்கும். கிரேக்க மொழியிலுள்ள அர்த்தத்தின்படி, அதை "பரிசுத்தமாகவும், பிழையற்றதாகவும்" என்று வாசிக்கலாம். எந்த அம்சத்திலும் சபைக்கு எதிராக எதையும் பேசமுடியாது என்ற நிலைமைக்குத் தேவன் சபையைக் கொண்டுவருவார். சொல்வதற்கு உலகத்திடம் ஒன்றும் இருக்காது; சொல்வதற்கு சாத்தானிடம் ஒன்றும் இருக்காது; சொல்வதற்கு ஒவ்வொருவனிடமும், ஒவ்வொன்றிற்கும் ஒன்றும் இருக்காது; சொல்வதற்கு தேவனிடம்கூட ஒன்றும் இருக்காது. அந்த நாளில், சபை மிகவும் மகிமையாக இருக்கும்போது, அது கிறிஸ்துவின் மணவாட்டியாக மாறும்.

இந்த இரண்டு காரியங்களையும் நாம் மிகத் தெளிவாகப் பார்க்கவேண்டும். முதலாவது, இன்று நாம் கிறிஸ்துவின் சொந்த சரீரம். அவருடைய சரீரம் என்ற முறையில், நாம் தேவன் நித்தியத்திலிருந்து உத்தேசித்திருந்த சபையாக மாறும்படிக்கு, கிறிஸ்து நம்மை சுத்திகரித்துக்கொண்டும் ஆயத்தமாக்கிக் கொண்டும் இருக்கிறார். இரண்டாவது, நேரம் வரும்போது கிறிஸ்து வருவார். அப்போது நாம் மகிமையான சபையாக, அவருடைய மணவாட்டியாக, அவருக்கு வழங்கப்பட அவருடைய பிரசன்னத்துக்குள் கொண்டுவரப்படுவோம். ஆகையால், முதலாவது பூமியில் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் வரலாறும், பின்பு மகிமையில் மணவாட்டியின் வரலாறும் நம்மிடம் இருக்கின்றன. இப்போது நாம் சுத்திகரிக்கப்படும் வழிமுறையில் இருக்கிறோம். இதுவே நமக்கு *ரேமா* தேவைப்படும் நேரம். நேரடியான வெளிப்பாட்டை ஒருபோதும் பெறாத கிறிஸ்தவர்கள் தேவனைத் தாமதப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் நம்மிடம் பேசியதை நாம் ஒருபோதும் கேட்டதில்லையென்றால், கர்த்தர் தம் கிருபையைப் பொழிவதை நாம் தடுத்துக்கொண்டிருக்கிறோம்.

நாம் அவரைத் தடுக்கிறவர்களாக இல்லாதபடிக்கு தேவன்தாமே நமக்கு இரங்குவாராக. சபை கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும் கட்டத்திற்குக் கொண்டுவரப்படுமாறு, நாம் அவருக்குச் செவிகொடுத்து முன்னேறிச் சொல்வோமாக.

## தேவனுக்குமுன்பாக சபையின் வேலையும், பொறுப்பும்

தேவன் நித்தியத்தில் உத்தேசித்திருந்த சபையை எபேசியர் புத்தகம் வெளிப்படுத்துகிறது. சபை கறையோ அல்லது திரையோ அல்லது அதுபோன்ற காரியங்களோ இல்லாமல், பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையான சபையாக இருக்கும் என்று ஐந்தாம் அதிகாரம் கூறுகிறது. பின்பு, ஆறாம் அதிகாரம் சபையின் நடைமுறைக்குரிய வேலையாகிய ஆவிக்குரிய யுத்தத்தைப்பற்றிப் பேசுகிறது.

நாம் எபேசியர் 6:10-12யை வாசிக்கும்போது, ஆவிக்குரிய யுத்தமே சபையின் வேலையும், பொறுப்புமாகும் என்று நாம் உணர்கிறோம். இந்த யுத்தத்தில் எதிரிகள் மாம்சமும், இரத்தமும் இல்லை; மாறாக ஆகாயத்தில் வாசம்பண்ணுகிற பொல்லாத ஆவிகள். 13-ஆம் வசனத்தை நாம் வாசிப்போம். "ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணி யுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்." இங்கு நாம் தாக்கவேண்டும் என்று கூறப்படாமல், நிற்கவேண்டும் என்று கூறப்பட்டிருக் கிறது. ஆவிக்குரிய யுத்தம் தற்காப்பானது, தாக்குவதல்ல. ஏனென்றால், கர்த்தராகிய இயேசு ஏற்கெனவே யுத்தம்செய்து, வெற்றிபெற்றுவிட்டார். கர்த்தருடைய வேலையை சாதாரண மாகப் பராமரிப்பதுதான் பூமியில் சபையின் வேலையாகும். பிசாசை மேற்கொள்வதல்ல, மாறாகக் கர்த்தரால் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட அவனை எதிர்த்துநிற்பதுதான் சபையின் வேலையாகும். பலவானைக் கட்டுவதல்ல சபையின் வேலை. பலவான் ஏற்கெனவே கட்டப்பட்டுவிட்டான். அவனைக் கட்டவிழ்த்துவிடாமல் இருப்பதுதான் சபையின் வேலை. தாக்கவேண்டிய தேவை இல்லை; சாதாரணமாகக் காத்துக் கொள்ளுதல் போதும். கிறிஸ்துவின் வெற்றியின்மேல் நிற்பதே ஆவிக்குரிய யுத்தத்தின் ஆரம்பப் புள்ளியாகும். இது, கிறிஸ்து ஏற்கெனவே மேற்கொண்டுவிட்டார் என்று பார்ப்பதாகும். இது, சாத்தானோடு இடைப்படுவதல்ல, மாறாக, கர்த்தர்மேல் நம்பிக்கை வைப்பதாகும். இது நாம் வெற்றிபெறுவோம் என்று நம்புவதல்ல; ஏனென்றால் வெற்றியை ஏற்கெனவே பெற்றாயிற்று. பிசாசினால் ஒன்றும் செய்யமுடியாது.

ஆவிக்குரிய யுத்தமே சபையின் வேலையும், பொறுப்புமாகும்.

இது தேவனுடைய அதிகாரத்துக்கும், சாத்தானுடைய வல்லமைக்கும் இடையிலான சண்டையைப்பற்றிய காரியம். இப்போது நாம் சபைக்கும், தேவனுடைய இராஜ்ஜியத்துக்கும் இடையேயுள்ள உறவைப் பார்க்க வருகிறோம்.

தேவனுடைய இராஜ்ஜியம் வெறுமனே வெகுமதிகளைப் பற்றிய காரியம் என்று சிலர் நினைக்கிறார்கள். இது தேவனுடைய இராஜ்ஜியத்தைப்பற்றிய மிகமட்டமான மதிப்பீடாகும். தேவனுடைய இராஜ்ஜியம் என்றால் என்ன என்று கர்த்தராகிய இயேசு ஒருமுறை விளக்கினார். "நான் தேவனுடைய ஆவியினாலே வந்திருக்கிறதே," என்று அவர் கூறினார் (மத். 12:28). தேவனுடைய இராஜ்ஜியம் என்றால் என்ன? தேவனுடைய வல்லமையால் சாத்தானுடைய வல்லமையைக் கவிழ்ப்பதே தேவனுடைய இராஜ்ஜியம். பிசாசினால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்க முடியாதபோது, அந்த இடத்தில் இராஜ்ஜியம் வந்திருக்கிறது. எங்கெல்லாம் பிசாசு துரத்தப்படுகிறானோ, எங்கெல்லாம் தேவனுடைய வல்லமையால் எதிரியின் வேலை இடமாற்றப் படுகிறதோ, அங்கு தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கிறது.

"உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்த முண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான்," என்று திருவெளிப்பாடு 12:9-10 கூறுகிறது. 10-ஆம் வசனத்திலுள்ள "அப்பொழுது" என்ற வார்த்தைக்கு நாம் கவனம்செலுத்தவேண்டும். தேவனுடைய இராஜ்ஜியம் வரமுடிந்தது; ஏனென்றால், சாத்தான் தள்ளப்பட்டான். சாத்தான் தன் இடத்தை இழந்தான்; அங்கு அவனால் அதற்குமேல் நிற்கமுடியவில்லை. அப்பொழுது வானத்தில் ஒரு பெரிய சத்தமுண்டாகி, "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது," என்று கூறியது. சாத்தான் ஓர் இடத்தைவிட்டு ஓடுகிறான் என்றால், அங்கு தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கிறது என்று பொருள். எங்கெல்லாம் தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கிறதோ, அங்கு சாத்தான் இருக்கமுடியாது. வேதவாக்கியங்களில், தேவனுடைய இராஜ்ஜியத்தின் முதலாவது முக்கியமான அர்த்தம் சாத்தானோடு

இடைப்படுவதோடு சம்பந்தப்பட்டது என்று இது நமக்குத் தெளிவாகக் காண்பிக்கிறது.

தேவனுடைய இராஜ்ஜியம் எப்போது வரும் என்று பரிசேயர்கள் கேட்டபோது, "தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படு கிறதற்கும் ஏதுவாயிராது; இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக் குள் இருக்கிறதே," என்று கர்த்தராகிய இயேசு பதிலளித்தார் (லூக்கா 17:20-21). "இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே," என்று கர்த்தர் கூறியதின் பொருள் என்ன? "நான் இங்கு நிற்கிறேன்," என்பதே அவர் கூறியதின் பொருளாகும். தேவனுடைய இராஜ்ஜியம் நிச்சயமாகப் பரிசேயர்களோடு இருந்திருக்க முடியாது என்று நம்மெல்லாருக்கும் தெரியும். அந்த நாளில் தேவனுடைய இராஜ்ஜியம் அவர்கள் நடுவே இருந்தது; ஏனென்றால், கர்த்தராகிய இயேசு அவர்கள் நடுவே நின்றார். அவர் அங்கு இருந்தபோது, சாத்தானால் அங்கு இருக்கமுடியாது. "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை," என்று கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான் 14:30). எங்கெல்லாம் கர்த்தராகிய இயேசு இருக்கிறாரோ, அங்கெல்லாம் சாத்தான் ஓடிவிட வேண்டும். லூக்கா 4-ல் அசுத்த ஆவி பிடித்த ஒரு மனிதன் இருந்தான். அவன் கர்த்தரைப் பார்த்தபோது அசுத்த ஆவி எப்படி நடந்துகொண்டது? அசுத்த ஆவியைத் துரத்த கர்த்தராகிய இயேசு எதையும் கூறுவதற்கு முன்பே, "ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்?" என்று அசுத்த ஆவி கதறியது (வசனம் 34). எங்கு கர்த்தர் இருக்கிறாரோ, அங்கு அசுத்த ஆவிகள் இருக்கமுடியாது. கர்த்தராகிய இயேசுவின் பிரசன்னம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிரதிநிதியாகும். அவரே தேவனுடைய இராஜ்ஜியம். அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கே தேவனுடைய இராஜ்ஜியமும் இருக்கிறது.

இதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக, ஆமென்," என்று திருவெளிப்பாடு 1:6 கூறுகிறது. இந்த வசனத்திலுள்ள "இராஜ்ஜியம்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். கர்த்தராகிய இயேசு இருக்கும் இடத்தில் மட்டும் இல்லை, சபை இருக்கும் இடத்திலும் இராஜ்ஜியம் இருக்கிறது என்று இது நமக்குக் காண்பிக்கிறது. கர்த்தராகிய இயேசு மட்டும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிரதிநிதி இல்லை, சபையும் தேவனுடைய

இராஜ்ஜியத்தின் பிரதிநிதியாகும். இங்கு முக்கியமான குறிப்பு இராஜ்ஜியத்தில் கிடைக்கும் எதிர்கால வெகுமதியையோ அல்லது அந்தஸ் தையோபற்றிய காரியம் இல்லை; அது பெரியதா அல்லது சிறியதா, உயர்வானதா அல்லது தாழ்வானதா என்ற காரியம் இல்லை. அக்கறை இந்தக் காரியங்களில் இல்லை. சபை இராஜ்ஜியத்தின் பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதே முக்கியமான காரியம்.

தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கொண்டுவருவதே பூமியில் சபையின் வேலையாகும். சபையின் எல்லா வேலைகளும் தேவனுடைய இராஜ்ஜியம் என்ற கோட்பாட்டினால் ஆளப் படுகிறது. ஆத்துமாக்களை இரட்சித்தல் இந்தக் கோட்பாட்டின் கீழ் இருக்கிறது. அசுத்த ஆவிகளைத் துரத்துவதும், மற்ற எல்லா வேலைகளும்கூட இந்தக் கோட்பாட்டின்கீழ்தான் இருக்கின்றன. எல்லாம் தேவனுடைய இராஜ்ஜியம் என்ற கோட்பாட்டின்கீழ்தான் இருக்கவேண்டும். நாம் ஏன் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ண வேண்டும்? வெறுமனே மனிதனுக்கு இரட்சிப்பு வேண்டும் என்பதற்காக இல்லை, மாறாகத் தேவனுடைய இராஜ்ஜியத்திற் காகவே. நாம் வேலைசெய்யும்போதெல்லாம், தேவனுடைய இராஜ்ஜியம் என்ற நிலைமையின்மேல் நிற்கவேண்டும். சாத்தானின் வல்லமையோடு இடைப்பட நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பிரயோகிக்கவேண்டும்.

"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக," என்று நாம் ஜெபிக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் (மத். 6:9-10). தேவனுடைய இராஜ்ஜியம் தானாகவே வருமென்றால், இந்த முறையில் நாம் ஜெபிக்கவேண்டும் என்று கர்த்தர் நமக்கு ஒருபோதும் கற்றுத்தந்தி ருக்கமாட்டார். ஆனால், இந்த முறையில் நாம் ஜெபிக்கவேண்டும் என்று கர்த்தர் நமக்குக் கற்றுத்தந்ததால், இது சபையின் வேலை என்று கர்த்தர் தெளிவாகக் காண்பித்தார். ஆம், சபை சுவிசேஷத் தைப் பிரசங்கிக்கவேண்டும்; ஆனால், இன்னும் அதிகமாக, தேவ னுடைய இராஜ்ஜியத்தைக் கொண்டுவர சபை ஜெபிக்கவேண்டும். நாம் ஜெபித்தாலும் சரி, ஜெபிக்காவிட்டாலும் சரி, தேவனுடைய இராஜ்ஜியம் தானாகவே வரும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், நாம் அறிந்திருந்தால், நாம் ஒருபோதும் இதைக் கூறமாட்டோம். தம் மக்கள் அசையவேண்டும் என்பதற்காகக் காத்திருப்பதே தேவனுடைய வேலையின் கோட்பாடாகும். அதன்பின் அவர் அசைவார்.

தங்களை உபத்திரவப்படுத்திய தேசத்திலிருந்து இஸ்ரவேல்

மக்கள் வெளியே புறப்பட்டுப்போவார்கள் என்று தேவன் ஆபிரகாமிடம் கூறினார். ஆயினும், நானூற்று முப்பது ஆண்டுகள் செல்லும்வரை இது நிறைவேறவில்லை. இஸ்ர வேலர்கள் தேவனிடம் கதறியபோது, அவர் அவர்களுடைய கதறுதலைக் கேட்டு, அவர்களை விடுவிக்க வந்தார். நாம் கதறினாலும் சரி, கதறாவிட்டலும் சரி, காரியங்கள் அதன் போக்கில் நடக்கும் என்று ஒருபோதும் ஊகிக்க வேண்டாம். தேவனுடைய வேலையில் அவருடன் ஒத்துழைக்க அவருக்கு மனிதர்கள் தேவை. தேவனுடைய மக்கள் அசையும்போது, தேவனும் அசைவார். தாங்கள் எகிப்தைவிட்டுப் போகவேண்டும் (எல்லா இஸ்ரவேலர்களும் இதை உணராவிட்டாலுங்கூட, சிலர் உணர்ந்தார்கள்) என்று தேவனுடைய மக்கள் பார்த்தபோது, அவர்கள் தேவனிடத்தில் கதறினார்கள். அவர்களை விடுவிக்கத் தேவன் அசைந்தார்.

கர்த்தராகிய இயேசுவின் பிறப்புகூட தேவனுடைய மக்களில் சிலர் அவரோடு ஒத்துழைத்ததின் விளைவேயாகும். இஸ்ரவேலின் ஆறுதல் வர தொடர்ந்து காத்துக்கொண்டிருந்த சிலர் எருசலேமில் இருந்தார்கள். இதனால்தான் கர்த்தர் பிறந்தார். தம் இராஜ்ஜியத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதே தேவனுடைய குறிக்கோளாக இருந்தாலுங்கூட, அவருடைய பங்கு மட்டும் போதாது. அவருடன் சேர்ந்து வேலைசெய்ய சபை வேண்டும். ஜெபத்தின்மூலம், சபை பூமியின்மேல் தேவனுடைய இராஜ்ஜியத்தின் வல்லமையை விடுவிக்கவேண்டும். கர்த்தர் வரும்போது, உலகத்தின் இராஜ்ஜியம் நம் கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்ஜியமாக மாறும் (வெளி. 11:15).

தேவனுக்காக நிற்பதும், சாத்தானுக்கு எந்தத் தளமும் கொடுக்காமல் இருப்பதுமே சபையின் வேலையாக இருப்ப தால், இந்த வேலையைச் செய்துமுடிக்க நாம் எப்பேர்ப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும்? நம் எல்லாப் பாவங்களோடும், அநீதியோடும் இடைப்படவேண்டும், தேவனுக்கு நம் சமர்ப்பணம் முற்றிலுமாக இருக்கவேண்டும், நம் ஆத்தும-ஜீவன் மரணத்துக்குள்ளாக்கப்பட வேண்டும், நம் இயற்கையான மனிதன் கைவிடப்படவேண்டும். ஆவிக்குரிய யுத்தத்தில், மாம்சத்தின் திறமை முற்றிலும் பயனற்றது. “நான்” சாத்தானை எதிர்த்து நிற்கமுடியாது. “நான்” போய்விட வேண்டும். எப்போதெல்லாம் “நான்” போய்விடுகிறதோ, அப்போதெல்லாம் கர்த்தராகிய இயேசு உள்ளே வருவார். எப்போதெல்லாம் கர்த்தர் உள்ளே வருகிறாரோ, அங்கு வெற்றி உண்டு. கர்த்தராகிய இயேசு என்ற ஒரேவொரு நபரை மட்டுமே சாத்தான் கண்டுணர்கிறான். நம்மால் சாத்தானை எதிர்த்துநிற்க முடியாது. சாத்தானின் அக்கினியாஸ்திரங்களால் நம் மாம்சத்தை

ஊடுருவக்குத்த முடியும். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், வெற்றிபெற்றிருக்கும் கிறிஸ்துவை நாம் தரித்துக்கொள்ளமுடியும்.

கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார் என்று நாம் விசுவாசிக் கிறோம். ஆனால், நாம் சும்மா உட்கார்ந்துகொண்டு, உயிர்ப்பற்று காத்துக்கொண்டிருந்தால், கர்த்தராகிய இயேசு தானாக வந்துவிடுவார் என்று எண்ணாதீர்கள். இல்லை, சபை கண்டிப்பாகச் செய்யவேண்டிய ஒரு வேலை இருக்கிறது. கிறிஸ்துவின் சரீரம் என்றமுறையில், நாம் தேவனோடு சேர்ந்து வேலைசெய்ய கற்றுக் கொள்ளவேண்டும். இரட்சிக்கப்பட்டால் மட்டும் போதும் என்று நாம் ஒருபோதும் நினைக்கக்கூடாது. அது போதாது. தேவனுடைய தேவையைப்பற்றி நாம் அக்கறைப்படவேண்டும். மனிதனுடைய வீழ்ச்சியினால் இரண்டு விளைவுகள் ஏற்பட்டன: ஒன்று மனிதனுடைய தார்மீகப் பொறுப்பு என்ற பிரச்சினை, மற்றொன்று சாத்தான் பூமியின்மேல் அதிகாரத்தைத் பறித்துக் கொள்ளுதல். ஒருபக்கம், மனிதன் இழப்பை அனுபவித்தான். மறுபக்கம், தேவனும் இழப்பை அனுபவித்தார். மனிதனுடைய தார்மீகப் பொறுப்பு மற்றும் மனிதனுடைய இழப்பு என்ற பிரச்சினையை மீட்பு தீர்த்துவிடுகிறது. ஆனால், தேவன் அனுபவித்த இழப்பு இன்னும் தீர்க்கப்படவில்லை. தேவனுடைய இழப்பை மீட்பின்மூலம் சரிசெய்யமுடியாது. இராஜ்ஜியத்தால் மட்டுமே அதை சரிசெய்யமுடியும். மனிதனுடைய தார்மீகப் பொறுப்போடு சிலுவை இடைப்பட்டிருக்கிறது. ஆனால், இராஜ்ஜியம்தான் சாத்தானுடைய அதிகாரம் என்ற பிரச்சினையோடு இடைப்பட வேண்டும். மீட்பின் நேரடியான குறிக்கோள் மனிதனுக்காகவே. ஆனால், இராஜ்ஜியத்தின் நேரடியான குறிக்கோள் சாத்தானோடு இடைப்படுவதற்காகவே. மனிதன் இழந்ததை மீட்பு ஆதாயப்படுத்தியது; சாத்தான் ஆதாயப்படுத்திய தை இராஜ்ஜியம் அழிக்கும்.

சாத்தானின் அதிகாரத்தைக் கவிழ்க்கும் பொறுப்பு ஆரம்பத்தில் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், மனிதன் வீழ்ந்துபோய், அதிகாரத்தை சாத்தானுக்குக் கொடுத்துவிட்டான். மனிதன்கூட அவனுடைய பிரஜையாகிவிட்டான். சாத்தான் பலமான மனிதனாக மாறிவிட்டான். மனிதன் அவனுடைய உடைமையாக மாறினான் (மத். 12:29). இராஜ்ஜியம் இதனுடன் இடைப்படவேண்டும் என்று இந்தச் சூழ்நிலை கோருகிறது. இராஜ்ஜியம் இல்லையென்றால், மனிதனுடைய வீழ்ச்சியின் காரணமாக சாத்தானின் வேலையைக் கவிழ்க்கமுடியாது.

மீட்பை நிறைவேற்றியபின், புதிய வானமும் புதிய பூமியும் உடனே தோன்றவில்லை; ஏனென்றால், சாத்தானின் பிரச்சினை யோடு இன்னும் இடைப்படவில்லை. புதிய வானமும் புதிய

பூமியும் வருவதற்குமுன், முதலாவது அங்கு இராஜ்ஜியம் இருக்கவேண்டும். "அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங் களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்," என்று திருவெளிப்பாடு 11:15 கூறுகிறது. இராஜ்ஜியம் வந்தவுடன் நித்தியமும் கொண்டுவரப்படுகிறது. இராஜ்ஜியம் நித்தியத்துடன் இணைக் கிறது. இராஜ்ஜியம் புதிய வானத்துக்கும் புதிய பூமிக்கும் முன்னுரை என்று நாம் கூறலாம். புதிய வானமும் புதிய பூமியும் இராஜ்ஜியத்துக்குப்பின் தோன்றுகின்றன என்று திருவெளிப்பாடு 21, 22-ஆம் அதிகாரங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. இராஜ்ஜியமே புதிய வானமும் புதிய பூமியும் ஆகும் என்று ஏசாயா 65 விவரிக்கின்றன. இராஜ்ஜியத்தைப் புதிய வானத்துக்கும் புதிய பூமிக்கும் முன்னுரையாக ஏசாயா பார்த்தார் என்பதே இதன் பொருள். இவ்வாறு இராஜ்ஜியம் ஆரம்பிக்கும்போது புதிய வானமும் புதிய பூமியும் ஆரம்பிக்கின்றன.

நாம் நம்மையே மையமாகக் கருதாமலிருக்குமாறு தேவன் தாமே கண்களைத் திறப்பாராக. நாம் ஏன் இரட்சிக்கப் பட்டோம்? அது வெறுமனே நாம் நரகத்திற்குப் போகக்கூடாது என்பதற்காகவா? இல்லை. இது மையம் இல்லை. அப்படி யானால் நம்மை இரட்சிக்கவேண்டும் என்று கிறிஸ்து ஏன் விரும்பினார்? மனிதனுடைய கருத்துக்கோணம், தேவ னுடைய கருத்துக்கோணம் என்ற வித்தியாசமான இரண்டு கருத்துக் கோணங்களிலிருந்து இந்தக் கேள்விக்கு நம்மால் பதிலளிக்கமுடியும். ஒரே காரியத்தை நாம் இரண்டு கோணங் களில் பார்க்கும்போது நாம் அதை வித்தியாசமாகப் பார்க் கிறோம். நாம் வெறுமனே இந்த விஷயத்தை மனிதனுடைய கருத்துக்கோணத்திலிருந்து கருதக்கூடாது. நாம் அதைத் தேவனுடைய கருத்துக்கோணத்தி லிருந்து பார்க்கவேண்டும். உண்மையில், மனிதன் இழந்ததை மீட்டுத்திருப்புதல் தேவன் இழந்ததை மீட்டுத்திருப்புவதற்காகவே. இராஜ்ஜியத்தின்மூலம், தேவன் இழந்தது மீட்டுத்திருப்பப்பட வேண்டும். இன்று தேவன் நம்மைக் கர்த்தராகிய இயேசுவின் வெற்றியில் பங்குபெறச்செய்திருக்கிறார். எங்கெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் வெற்றி காட்சியாக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் சாத்தான் ஓடிவிடவேண்டும். நாம் சாதாரணமாக உறுதியுடன் நிற்கவேண்டும்; ஏனெனில், கர்த்தராகிய இயேசு ஏற்கெனவே வெற்றிபெற்றுவிட்டார். தம் மீட்பின் வேலையில், கர்த்தராகிய இயேசு பிசாசின் சட்டப்பிரகாரமான எல்லாத் தளத்தையும் அழித்தார். மீட்பின்மூலம், சாத்தானின் சட்டப்பிரகாரமான ஆளுகை யெல்லாம் தீர்த்துக்கட்டப்பட்டாயிற்று. மீட்பு என்ற தீர்ப்பின்மூலம்

சாத்தானுடைய சட்டப்பிரகாரமான நிலைமை அவனிடமிருந்து பறிக்கப்பட்டது. இப்போது இந்தத் தீர்ப்பைச் செயல்படுத்தும் பொறுப்பு சபையின்மேல் இருக்கிறது. சபை இந்தக் கடமையைப் போதுமான அளவுக்கு நிறைவேற்றிவிட்டது என்பதைத் தேவன் பார்க்கும்போது இராஜ்ஜியம் வரும், அதைத் தொடர்ந்து புதிய வானமும் புதிய பூமியும் வரும். ஏசாயா புத்தகத்திலுள்ள புதிய வானமும் புதிய பூமியும் திருவெளிப்பாட்டிலுள்ள புதிய வானத்துக்கும் புதிய பூமிக்கும் வழிநடத்தும்.

இன்று நாம் மீட்புக்கும் இராஜ்ஜியத்துக்கும் இடையே நடுவழியில் நின்றுகொண்டிருக்கிறோம். நாம் பின்னோக்கிப் பார்க்கையில் மீட்பைப் பார்க்கிறோம்; முன்னோக்கிப் பார்க்கும் போது இராஜ்ஜியத்தைப் பார்க்கிறோம். நமக்கு இருமடங்கு பொறுப்பு உண்டு. ஒரு பக்கம் உலகத்தின் மக்களை இரட்சிப் புக்கு வழிநடத்தவேண்டும்; மறுபக்கம் இராஜ்ஜியத்துக்காக உறுதியாக நிற்கவேண்டும். கர்த்தரால் சபைக்கு ஒப்புவிக்கப் பட்ட பொறுப்பை நாம் பார்க்குமாறு நாம் இந்தத் தரிசனத்தைப் பார்ப்போமாக.

தேவனுடைய இராஜ்ஜியம் என்றால் என்னவென்று நாம் மறுஆய்வு செய்வோமாக. தேவன் தம் அதிகாரத்தைப் பயன் படுத்துகிற மண்டலமே இராஜ்ஜியம். இப்பேர்ப்பட்ட இராஜ்ஜியம் நம்மிடையே இருக்கவேண்டும். பரலோகங்களில் தம் அதிகாரத்தைப் பயன்படுத்த நாம் தேவனை அனுமதிக்கையில், நம்மேலும் தம் அதிகாரத்தைப் பயன்படுத்த நாம் அவரை அனுமதிக்கவேண்டும். தேவன் தம் அதிகாரத்தையும், வல்லமையையும், தம் மகிமையையும் நம்மிடையே பெற வேண்டும். நாம் எபேசியர் 5-ன்படி தேவனுக்குமுன்பாக வாழ முயன்றால் மட்டும் போதாது; எபேசியர் 6-ல் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள பொறுப்பையும் நாம் ஆசையாய்ப் பின்தொடரவேண்டும். அப்போது நாம் மகிமையான, பரிசுத்த மான, குற்றமற்ற சபையாக மட்டுமின்றி, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கொண்டுவர அவரோடு ஒத்துழைப்பவர்க ளாகவும், இந்தப் பூமியில் சாத்தானுக்கு இழப்பை உண்டு பண்ணுகிறவர்களாகவும் இருப்போம்.

## அத்தியாயம் நான்கு

## "ஓர் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்"

ஆதியாகமம் 2-ல் உள்ள பெண்ணையும், தேவன் தம் நாமத்தை மகிமைப்படுத்த தம் நித்திய திட்டத்தில் அடைய விரும்புகிற மனிதனைப்பற்றி அவள் எப்படிப் பேசுகிறாள் என்றும் நாம் ஏற்கெனவே பார்த்தோம். பின்பு, எபேசியர் 5-ல், நாம் இன்னொரு பெண்ணைப் பார்த்தோம்; அவள் ஆதியாகமம் 2-ல் உள்ள பெண்ணின் நிஜம். மனிதனின் வீழ்ச்சிக்குப்பின், எல்லாவற்றையும் தன் ஆதி நோக்கத்திற்குத் திரும்பக் கொண்டுவர தேவன் எப்படி வேலைசெய்துகொண் டிருக்கிறார் என்று இந்தப் பெண் காண்பிக்கிறாள். இப்போது திருவெளிப்பாடு 12-ல் உள்ள இன்னொரு பெண்ணைப் பார்ப்போம். இந்தப் பெண்ணை ஆதியாகமம் 2-ல் உள்ள பெண்ணோடு தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டும்.

திருவெளிப்பாடு கடைசிக் காலக் காரியங்களை வெளிப் படுத்துகிற புத்தகம். இந்தப் புத்தகத்தில் மொத்தம் இருபத் திரண்டு அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால், பதினோராம் அதிகாரத்தின் முடிவில் எல்லாம் முடிந்துவிடுகின்றன என்று நாம் கூறமுடியும். "ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும்," என்று திருவெளிப்பாடு 10:6 கூறுகிறது. பதினோராம் அதிகாரத்தில் ஏழாம் தூதன் எக்காளம் ஊதும் போது, தேவனுடைய பரம இரகசியத்தைப்பற்றிய எல்லாமும், தேவனோடு தொடர்புடைய எல்லாமும், முழுமையாக நிறை வேறிவிடுகின்றன. "ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின," என்று 15-ஆம் வசனம் கூறுகிறது. ஏழாவது தூதன் எக்காளம் ஊதும்போது நித்தியம் ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது என்பதே இதன் பொருள். ஆயிரவருட அரசாட்சியும், புதிய வானம் புதிய பூமியும், நித்தியத்தைப்பற்றிய எல்லாமும் இந்த வசனத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளன. அப்படியானால், முதல் பதினோரு அதிகாரங் களுக்குப்பிறகு இன்னும் கூடுதலாக பதினோரு அதிகாரங்கள் ஏன் இருக்கின்றன? கடைசிப் பதினோரு அதிகாரங்கள் முதல் பதினோரு அதிகாரங்களுக்குத்

துணைநிறைவாக இருக் கின்றன என்பதே எங்கள் பதில். இந்த உலகத்தின் இராஜ்ஜியம் நம் கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்ஜிய மாக எப்படி மாறும் என்றும், தேவன் தம் குமாரனை சதா காலங்களுக்கும் எப்படி இராஜாவாக்குவார் என்றும் பன்னி ரெண்டாம் அதிகாரத்தின் தொடக்கத்திலிருந்து கூறப்படுகிறது.

ஏழாவது தூதன் எக்காளம் ஊதும்போது, திருவெளிப்பாடு *11:19*-ன்படி, ஏதோவொன்று சம்பவிக்கிறது. "அப்பொழுது தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது. அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல் மழையும் உண்டாயின." திருவெளிப்பாடு புத்தகத்தில் அநேகத் தரிசனங்கள் அடங்கியுள்ளன. ஆனால், இரண்டு மைய தரிசனங்கள் மற்ற எல்லாத் தரிசனங்களுக்கம் ஆதாரமாக இருக்கின்றன. முதல் தரிசனம் சிங்காசனத்தைப்பற்றிய தரிசனமாகும் (வெளி. *4:2*). நான்காம் அதிகாரத்திலிருந்து பதினோராம் அதிகாரத்தில் ஏழாம் தூதன் எக்காளம் ஊதும் வரையிலான எல்லாத் தரிசனங்களுக்கும் சிங்காசனமே ஆதாரம். இரண்டாவது தரிசனம் ஆலயத்தைப்பற்றிய தரிசன மாகும் (வெளி. *11:19*). பன்னிரண்டாம் அதிகாரத்திலிருந்து புத்தகத்தின் கடைசிவரையிலான எல்லாத் தரிசனங்களுக்கும் தேவனுடைய ஆலயமே ஆதாரம்.

நான்காம் அதிகாரத்தில் யோவான் ஒரு தரிசனத்தைப் பார்த்தார்; அதில் ஒரு சிங்காசனத்தையும், அதைச் சுற்றி ஒரு வானவில்லையும் பார்த்தார். இந்த அதிகாரத்திலிருந்து எல்லாமே தேவனுடைய அதிகாரத்தையும், தேவன் பூமியின் எல்லா ஜீவராசிகளோடும் பண்ணின உடன்படிக்கையின் நினைவுகூருதலையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்று இது குறிக்கிறது. வானவில், தேவன் எல்லா ஜீவராசிகளோடும் உண்டுபண்ணின அவருடைய உடன்படிக்கையின் அடை யாளம். இன்றைய காலத்தில் நம்மால் முழு வானவில்லைப் பார்க்கமுடியாது. அதிகபட்சம், நாம் அதின் ஒரு பாதியை மட்டுமே பார்க்கிறோம். ஆனால், சிங்காசனத்தைச்சுற்றி ஒரு முழு வானவில் இருக்கிறது. அது முழுமையானது; அதில் எந்த உடைபாடும் இல்லை. தேவன் உண்மையுள்ளவர்; அவர் தம் உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, அதைப் பாதுகாப்பார். தேவன் பூமியின் எல்லா ஜீவராசிகளோடும் செய்த உடன் படிக்கையை நினைவுகூர்வார். தேவன் மனிதனுக்குச் செய்ய விரும்புகிற எல்லாவற்றிலும் அவர் தாம் செய்த உடன் படிக்கையின்படி நடக்கவேண்டும்.

பதினோராம் அதிகாரத்தின் முடிவில், யோவான் இன்னொரு தரிசனத்தை—தேவனுடைய ஆலயத்தைப்பற்றிய தரிசனத்தை—பார்த்தார். ஆலயத்துக்குள் உடன்படிக்கைப் பெட்டியைப் பார்க்கமுடிந்தது. மலையிலே காண்பித்த முன்மாதிரியின்படி பெட்டியைக் கட்டவேண்டும் என்றும், கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பெட்டியை வைக்கவேண்டும் என்றும் தேவன் தொடக்கத்தில் இஸ்ரவேலர்களிடம் கூறினார். பின்பு, சாலோமோன் ஆலயத்தைக் கட்டியபோது பெட்டி அதனுள் வைக்கப்பட்டது. இஸ்ரவேலர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டு போனபோது, பெட்டி தொலைந்துபோனது. பூமியில் பெட்டி தொலைந்துபோனபோதுங்கூட பரலோகத்தில் இன்னும் பெட்டி இருந்தது. பூமியில் இருந்த பெட்டி பரலோகத்தில் இருந்த பெட்டியின்படி உண்டாக்கப்பட்டது. பூமியில் நிழல் மறைந்துபோனது. ஆனால், பரலோகத்தில் சாரம், நிஜம், இன்னும் இருக்கிறது. திருவெளிப்பாடு 11-ன் முடிவில், தேவன் பெட்டியை மீண்டும் நமக்குக் காண்பிக்கிறார்.

பெட்டி என்றால் என்ன? தேவனுடைய வெளியாக்கமே பெட்டி. தேவன் தமக்குத்தாமே உத்தமமாக இருக்கவேண்டும் என்று இது குறிக்கிறது. சிங்காசனம் தேவன் தம் அதிகாரத்தைப் பயன்படுத்துகிற இடம். ஆலயம் தேவன் வாசம்பண்ணுகிற இடம். சிங்காசனம் உலகத்தையும், மனுக் குலத்தையும் பொறுத்தவகையில் புறம்பானது. ஆனால், ஆலயம் தேவனுக்காகவே இருக்கிறது. தேவன் மனிதனுக்கு பொல்லாங்கான எதையும் செய்யமாட்டார் என்று சிங்காச னத்தைச்சுற்றியுள்ள வானவில் குறிக்கிறது. தமக்குக் குறைவான எதையும் தேவன் செய்யமாட்டார் என்று ஆலயத்திலுள்ள பெட்டி குறிக்கிறது. தேவன் திட்டமிட்டதை அவர் செய்துமுடித்தாகவேண்டும். தேவன் செய்ய விரும்புகிறதை அவரால் வெற்றிகரமாக நடத்தமுடியும். பெட்டி மனிதனுக்காக மட்டும் இல்லை, அது தேவனுக்காகவும் ஆகும். தேவனால் தம்மைத்தாமே மறுதலிக்கமுடியாது; அவரால் தம்மோடு முரண்படமுடியாது. மகிமையடைந்த ஒரு கூட்டம் மக்களைப் பெறவேண்டும் என்று தேவன் நித்தியத்தில் திட்டமிட்டார். இந்த உலகத்தின் இராஜ்ஜியம் நம் கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்ஜியமாக மாறவேண்டும் என்று அவர் தீர்மானித்தார். "தேவனால் தம் குறிக்கோளை எவ்வாறு நிறைவேற்றமுடியும்?" என்று கேட்பதை நம்மால் தவிர்க்க முடியாது. இருந்தபோதும், தேவன் ஒருபோதும் பாதிவழியில் நிறுத்தமாட்டார் என்று நமக்குத் தெரியும். அவரிடம் பெட்டி இருக்கிறது. அவர்தாமே உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக் கிறார். நீதியுள்ள தேவன் மனிதனிடம் அநீதியாக இருக்க முடியாது.

மேலும் நீதியுள்ள தேவன் தமக்குத்தாமே ஒருபோதும் அநீதியாக இருக்கமுடியாது. மனிதன் தனக்கு முரண்பாடான எதையும் ஒருபோதும் செய்வதில்லை. ஏனென் றால், ஒவ்வொரு மனிதனிடமும் அவனவனுக்குரிய குணம் இருக்கிறது. தேவனுங்கூட தம் குணத்தினிமித்தம் தம் வேலையில் தம்மை மறுதலிக்கமுடியாது. தேவன் பெட்டியை நமக்குத் திரைநீக்கிக்காண்பித்தபோது, தாம் செய்ய விரும்புகிறதை அவர் நிறைவேற்றவேண்டும் என்று அவர் உணர்த்தினார்.

இங்கு நாம் ஒரு குறிப்பைப் பார்க்கவேண்டும். தேவனும், அவருடைய கிறிஸ்துவும் எந்த ஆதாரத்தின்மேல் சதாகாலங் களிலும் இராஜ்யபாரம் பண்ணுவார்கள்? எந்த ஆதாரத்தின் மேல் தேவன் இந்த உலகத்தின் இராஜ்ஜியம் நம் கர்த்த ருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்ஜியமாகும் படிச் செய்வார்? அவருடைய குணமே ஆதாரம். தேவன் தம் குணத்தினிமித்தம் இவையெல்லாவற்றையும் நிறைவேற்று வார். எதுவும் அவரைத் தடுக்கமுடியாது. தேவனுக்குரிய எதையும் ஒருபோதும் குலைக்கமுடியாது என்பதை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். பெட்டி தேவனையும், அவருடைய உடன்படிக்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தி இன்னும் இருக்கிறது. தேவன் தம்மால்தாமே இந்தக் காரியத்தை நிறைவேற்றுவார். தம் உத்தமத்தின்மூலம் நித்தியத்தில் தாம் திட்டமிட்ட எல்லாவற்றையும் தேவன் எப்படி நிறைவேற்றுவார் என்று பன்னிரண்டாம் அதிகாரத்திலிருந்து புத்தகத்தின் கடைசிவரை நமக்குக் காண்பிப்பதற்காக நாம் தேவனுக்கு நன்றிகூறுகிறோம்.

## இந்தத் தரிசனத்தில் பெண்

"அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்தில் காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின்கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன," என்று திருவெளிப்பாடு *12:1* கூறுகிறது. இங்கு விவரிக்கப்பட்டுள்ள பெண் யார்? இந்தப் பெண்ணைப்பற்றி அநேக வேதாகம மாணவர்களிடம் அதிகமான கருத்துவேறுபாடு இருந்திருக் கிறது. இவள் கர்த்தராகிய இயேசுவின் தாயாகிய மரியாளைக் குறிக்கிறாள் என்று சிலர் கூறியிருக்கிறார்கள். இவள் இஸ்ரயேல் தேசத்துக்கு அடையாளம் என்று வேறு சிலர் கூறியிருக்கிறார்கள். ஆயினும், வேதவாக்கியங்களின்படி, இந்தப் பெண் கர்த்தருடைய தாயாகிய மரியாளாகவோ அல்லது இஸ்ரயேல் தேசமாகவே இருக்கமுடியாது. இவையே காரணங்கள்:

(1) இந்தத் தரிசனம் பரலோகத்தில் வெளிப்படுத்தப்

பட்டிருப்பதால், இந்தப் பெண் முற்றிலும் பரலோகத்துக் குரியவள். மரியாளிடமோ அல்லது இஸ்ரயேல் தேசத்திடமோ இந்த நிலைமை இல்லை.

(2) இந்தப் பெண் ஆண்பிள்ளையைப் பெற்றபின் வனாந் தரத்திற்கு ஓடிப்போனாள். இந்தப் பெண்ணை இஸ்ரயேல் தேசத்திற்கும், அவள் பெற்றெடுத்த ஆண்பிள்ளையைக் கிறிஸ்துவுக்கும், ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப்படுவதை கிறிஸ்துவின் பரமேறுதலுக்கும் நாம் ஒப்பிட்டால், இது உண்மையான சம்பவங்களுக்கு ஒத்துப்போகவில்லை. இஸ்ர யேல் தேசம் சிதறடிக்கப்பட்டாலுங்கூட அவள் வனாந்தரத் திற்குச் செல்லுதல் கிறிஸ்துவினுடைய பரமேறுதலின் விளைவு இல்லை. கிறிஸ்து பரமேறிய நேரத்தில், இஸ்ரயேல் தேசம் கொஞ்சக் காலமாக ஏற்கெனவே சிதறடிக்கப்பட் டிருந்தது; அது ஒரு தேசமாக இருக்கவில்லை. ஆனால், ஆண்பிள்ளை தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபிறகு பெண் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள் என்று இங்கு நாம் காண்கிறோம். கிறிஸ்து பரமேறுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பே இஸ்ரயேல் தேசம் போய்விட்டது. ஆகையால், இந்தப் பெண் இஸ்ரயேல் தேசத்திற்குக் குறிப்பாக இருப்பது அசாத்தியம். அவளை மரியாளுக்குக் குறிப்பிடுவதற்கு அதை விடக் குறைவான ஆதாரமே உண்டு.

(3) இந்தப் பெண் ஆண்பிள்ளைளைப் பெற்றெடுக்க பிரசவவேதனைபட்டபோது அவள் ஒரு பெரிய வலு சர்ப்பத்தை எதிர்கொண்டாள். இந்த வலுசர்ப்பத்திற்கு ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் இருந்தன. இந்த ஏழு தலைகளும் ஏழு இராஜாக்கள் என்று பதினேழாம் அதிகாரம் கூறுகிறது: இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இன்னும் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை. பத்துக் கொம்புகளும் பத்து இராஜாக்களாம்: இவர்கள் இன்னும் இராஜ்ஜியத்தைப் பெறவில்லை, இவர்கள் பின்பு எழும்பி வருவார்கள். கிறிஸ்து பரமேறுவதற்குமுன்பு இப்பேர்ப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை என்று நமக்குத் தெரியும். ஆகையால், இந்தப் பெண்ணும், ஆண்பிள்ளையும் எதிர்காலத்தில் உள்ள காரியங்களைளே குறிக்கவேண்டும். இந்தப் பெண் இஸ்ரயேல் தேசத்தை அல்லது மரியாளைக் குறிக்கிறாள் என்றும், ஆண்பிள்ளை கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது என்றும் நாம் கூறினார் நாம் வரலாற்றுக்கு முரண்படுகிறோம்.

(4) ஆண்பிள்ளை தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டபிறகு வானத்திலே யுத்தம் உண்டாயிற்று. சாத்தான் பூமியிலே தள்ளப்பட்டான். பின்பு வானத்திலே ஒரு பெரிய சத்தம் உண்டாயிற்று: "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும்

உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்" (வெளி. 12:10). இது இன்னும் நிறைவேறவில்லை என்று நமக்குத் தெரியும். பூமியில் சபை துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், வான மண்டலங் களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் இன்னும் யுத்தம்செய்யவேண்டும் என்று எபேசியர் 6 கூறுகிறது. சாத்தான் இன்னும் அங்கு இருக்கிறான். வேதாகமத்தின் இந்தப் பகுதி இன்னும் நிறைவேறாததால் இது இயேசுவின் காலத்தைக் குறிப்பது அசாத்தியம்.

(5) வலுசர்ப்பம் பூமியில் தள்ளப்பட்டபோது, அது ஆண் பிள்ளையைப் பெற்ற பெண்ணை சித்திரவரைசெய்தது. இந்தப் பெண் மரியாள் என்பதை உறுதிப்படுத்த அநேகர் இதைப் பயன்படுத்துகிறார்கள். மரியாள் கர்த்தராகிய இயேசுவைப் பெற்றபிறகு எகிப்துக்கு ஓடிப்போனாள். ஆயினும், அவள் அதைக் கர்த்தருடைய பரமேறுதலில் செய்யவில்லை. "ஸ்திரீ யானவள் அந்தப் பாம்பின் முகத்துக்கு விலகி ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன்னிடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப் பட்டது. அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங் கொண்டு போகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றி விட்டது. பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றிய வெள்ளத்தை விழுங்கினது," என்று 14-16 வசனங்கள் கூறுகின்றன. இந்தப் பெண் மரியாளைக் குறிக்கிறாள் அல்லது இஸ்ரயேல் தேசத்தைக் குறிக்கிறாள் என்று கூறினாலும், கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிச்சென்றபோது இப்பேர்ப்பட்ட ஒரு காரியம் நிகழவில்லை என்று வரலாற்றிலிருந்து நமக்குத் தெரியும். ஆகையால், இந்தப் பெண் மரியாளுக்கோ அல்லது இஸ்ரயேல் தேசத்திற்கோ ஒரு குறிப்பாக இருக்கமுடியாது.

(6) இன்னும் ஒரு நிரூபணம் இருக்கிறது. "அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவ னுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று," என்று 17-ஆம் வசனம் கூறுகிறது. பெண்ணிடம் பிறந்த ஆண்பிள்ளை சிங்காசனத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டபிறகு, அவளுடைய வித்தின் ஒரு பகுதி இன்னும்

பூமியிலேயே இருந்தது. இது மரியாளாக இருக்கமுடியாது. மேலும் இந்த எஞ்சியோர் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறார்கள், அவர்களிடம் இயேசுவின் சாட்சி இருக்கிறது. இஸ்ரயேல் தேசம் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டது என்று கூறுவது சரிதான். ஆனால், இஸ்ர யேல் தேசத்திடம் இயேசுவின் சாட்சி இருந்தது என்று கூறுவது பழைய ஏற்பாட்டைப் புதிய ஏற்பாட்டோடு கலப்பதாகும். முடிவுரையாக, இந்தப் பெண் மரியாளகவோ அல்லது இஸ்ரயேல் தேசமாகவோ இருப்பது அசாத்தியம்.

அப்படியானால் இந்தப் பெண் யார்? ஒரேவொரு பெண் மட்டுமே சர்ப்பத்தை எதிர்கொண்டாள் என்று பழைய ஏற்பாடு காண்பிக்கிறது—ஆதியாகமம் 3-ல் ஏவாள். புதிய ஏற்பாட்டிலுங்கூட ஒரேவொரு பெண்தான் சர்ப்பத்தை எதிர்கொள் கிறாள். இங்கு நாம் வேதவாக்கியங்களின் இடைத் தொடர்பையும், இடைஒப்புமையையும் பார்க்கிறோம், தொடக்கம் முடிவுடன் தொடர்புடையது, ஒத்திருக்கிறது. மேலும், பெரிய வலுசர்ப்பம் பழைய பாம்பு என்று தேவன் சுட்டிக்காட்டுகிறார். ஏற்கெனவே ஒருமுறை குறிப்பிடப்பட்ட சர்ப்பத்தை அவர் குறிப்பிடுகிறார் என்பதே இதன் பொருள். அது அந்த ஒரேவொரு பழைய பாம்பு என்ற குறிப்பைத் தேவன் தெளிவாக்குகிறார். *அந்த* பழைய பாம்பு என்பதில் “அந்த” என்ற வார்த்தை வலியுறுத்தப்படுகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெண்ணுங்கூட அந்தப் பெண்ணாகவே இருக்கவேண்டும்.

அதே கோட்பாட்டின்படி, ஆதியாகமம் 1-ல் குறிப்பிடப் பட்டுள்ள சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் திருவெளிப்பாடு 12-லும் குறிப்பிடப்பட்டுள்ளன. சர்ப்பம் ஆதியாகமம் 3-ல் இருந்ததுபோல, இங்கும் இருக்கிறது. ஆதியாகமம் 3-ல் பெண்ணின் வித்து குறிப்பிடப்பட்டுள்ளது போல, இங்கும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பிரசவ வேதனை ஆதியாகமம் 3-ல் இருக்கிறது; இங்கும் இருக்கிறது. வேதாகமத்தின் இந்த இரண்டு பகுதிகளையும் நாம் ஒன்றாகச் சேர்த்தால், திருவெளிப்பாடு 12-ல் உள்ள பெண் தேவன் தம் நித்திய சித்தத்தில் தீர்மானித்த பெண் என்பதை நாம் நிச்சயமாகப் பார்க்கமுடியும். கடைசிக் காலத்தில் அவளுக்கு சம்பவிக்கப்போகிற எல்லாம் இங்கு தெளிவாகக் கூறப் பட்டிருக்கிறது. ஆதியாகமம் 2-ல் உள்ள பெண் தேவனுடைய நித்திய குறிக்கோளைப்பற்றிப் பேசுகிறாள். எபேசியர் 5-ல் உள்ள பெண் சபையின் நிலையையும், எதிர்காலத்தையும் பற்றிப் பேசுகிறாள். திருவெளிப்பாடு 12-ல் உள்ள பெண் கடைசிக் காலத்தில் சம்பவிக்கப்போகிற காரியங்களை வெளிப்படுத்துகிறாள். இந்த

மூன்று பெண்களோடுகூட, இன்னொரு பெண் இருக்கிறாள்; அவள் நித்தியத்தில் உள்ள காரியங்களைக் காண்பிக்கிறாள்.

பெண் தரிசனத்தில் தோன்றியபோது, அவள், "சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின்கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன," என்று வேதவாக்கியங்கள் முதலாவது சுட்டிக் காட்டின (12:1). இந்த உண்மைகள் காலத்தின் தொடர்பில் மிகவும் அர்த்தம்வாய்ந்தவை.

(1) பெண் சூரியனை அணிந்திருந்தாள். சூரியன் கர்த்த ராகிய இயேசுவைக் குறிக்கிறது. சூரியன் பிரகாசமாய்ப் பிரகாசிக்கும்போது, அது அவள்மேல் பிரகாசிக்கிறது என்பதே அவள் சூரியனை அணிந்திருக்கிறாள் என்பதின் பொரு ளாகும். இந்தத் தற்போதைய யுகத்தில், தேவன் தம்மை அவள்மூலம் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். இது கிறிஸ்துவோடும், கிருபையின் யுகத்தோடும் அவளுக்கிருக்கும் உறவைக் காண்பிக்கிறது.

(2) பெண்ணின் பாதங்களின்கீழே சந்திரன் இருந்தது. "அவள் பாதங்களின்கீழே" என்ற சொற்றொடருக்கு அவள் அதை மிதித்துக்கொண்டிருக்கிறாள் என்ற பொருள் இல்லை. கிரேக்க மொழியின்படி சந்திரன் அவளுடைய பாதங்களின்கீழ் அடங்கியிருக்கிறது என்று மட்டுமே பொருள். சந்திரனின் வெளிச்சம் பிரதிபலிக்கும் வெளிச்சம். அதில் தன்னில்தானே வெளிச்சம் இல்லை. நியாயப்பிரமாணத்தின் காலத்தில் இருந்த எல்லாக் காரியங்களும் கிருபையின் காலத்தில் இருக்கும் காரியங்களை வெறுமனே பிரதிபலித்தன. நியாயப் பிரமாணம் ஓர் அடையாளம்தானே தவிர வேறொன்றும் இல்லை. ஆலயமும், பெட்டியும் அடையாளங்களே. தூபம், பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த அப்பம், ஆசாரியர்கள் ஏறெடுத்த பலிகள் ஆகிய எல்லாமே அடையாளங்களே. ஆடுகளின் இரத்தமும், காளைகளின் இரத்தமும் அடையாளங்களே. நியாயப்பிரமாணத்தோடு தொடர்புடைய எல்லாக் காரியங் களும் அவளுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன என்பதே பெண்ணின் பாதங்களின்கீழ் சந்திரன் இருக்கிறது என்பதின் பொருளாகும். இது நியாயப்பிரமாணத்தின் யுகத்தோடு அவளுக்கு இருக்கும் உறவைப்பற்றிப் பேசுகிறது.

(3) பெண்ணின் தலையின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங் களுள்ள ஒரு கிரீடம் இருந்தது. ஆபிரகாமின் காலத்திலிருந்து பன்னிரண்டு கோத்திரங்கள்வரையிலானவர்களே பிதாக்களின் காலத்தைச் சேர்ந்த முக்கியமானவர்கள். பெண்ணின் தலையின்மேல் இருக்கும் பன்னிரண்டு நட்சத்திரங்களாலான கிரீடம் பிதாக்களின் காலத்தோடு அவளுக்கு இருக்கும்

உறவைப்பற்றிப் பேசுகிறது.

இந்த வகையில், பெண்ணுக்குக் கிருபையின் யுகத்தோடு மட்டும் இல்லை, நியாயப்பிரமாணத்தின் யுகத்தோடும், பிதாக்களின் யுகத்தோடும் உறவு உண்டு. ஆயினும், அவளுக்குக் கிருபையின் யுகத்தோடு நெருக்கமான உறவு உண்டு. அவளில் கிருபையின் யுகத்தில் உள்ள எல்லாப் பரிசுத்தவான்களும், நியாயப்பிரமாணத்தின் யுகத்திலும், பிதாக்களின் யுகத்திலும் வாழ்ந்த எல்லாப் பரிசுத்தவான்களும் அடங்குவர்.

## ஆண்பிள்ளையின் பிறப்பு

"அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்," என்று திருவெளிப்பாடு 12:2 கூறுகிறது. கர்ப்பவதியாயிருப்பது உருவகமானது, நிஜம் இல்லை. கர்ப்பவதியாயிருப்பது என்றால் என்ன பொருள்? ஒரு குழந்தை தாயின் கர்ப்பத்தில் இருக்கிறது என்று பொருள்; குழந்தையும், தாயும் ஒரே சரீரத்தில் இணைந்திருக்கிறார்கள். தாய் சாப்பிடும்போது, குழந்தை போஷிக்கப்படுகிறது. தாய் சுகவீனமாக இருக்கும் போது, குழந்தையும் பாதிக்கப்படுகிறது. தாயின் நிலைமையே குழந்தையின் நிலைமையுமாகும். தாயும், குழந்தையும் ஒன்றாக இருக்கிறார்கள்.

ஆயினும், இந்தக் குழந்தை தாயிலிருந்து வித்தியாச மானது; அவன் இன்னொரு பிறவி. அவர்கள் ஒன்று என்று நீங்கள் கூறினால், உண்மையில் அவர்கள் ஒன்றுதான்; ஏனென்றால், குழந்தை தாயிடமிருந்து ஜீவனைப் பெறுகிறது. ஆயினும், குழந்தையின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை, அவன் வித்தியாசமானவன். அவனுடைய எதிர்காலம், அவனுடைய தாயின் எதிர்காலத்திலிருந்து வித்தியாசமானது. அவன் பிறந்தவுடனே, தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறான். அவனுடைய தாய் வனாந் தரத்திற்கு ஓடிப்போகிறாள்.

மேலும், பெண் கர்ப்பவதியாக இருக்கும்போது, தாயை மட்டுமே நம்மால் பார்க்கமுடியும்; குழந்தை மறைந்திருக் கிறது. புறம்பாக, தாய் மட்டுமே இருப்பதுபோல் தோன்று கிறது. நிச்சயமாகக் குழந்தை இருக்கிறது. ஆனால், அவன் தாய்க்குள் மறைந்திருக்கிறான். அவன் தாய்க்குள் அடங்கி யிருக்கிறான்.

"அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது," என்று 3-ஆம் வசனம் கூறுகிறது. அந்தச் சர்ப்பம் பல்லாயிரம் வருடங்களுக்குப்பிறகு முற்றிலும்

வித்தியாசமாக இருக்கிறது. ஆரம்பத்தில் அது ஒரு சர்ப்பமாக இருந்தது. ஆனால், அது இப்போது பெரிதாகி ஒரு வலுசர்ப்ப மாகிவிட்டது. இந்த வலுசர்ப்பத்தின் தோற்றம் என்ன? அதற்கு ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும், அதின் தலைகளின் மேல் ஏழு கிரீடங்களும் இருக்கின்றன. அதற்கு சமுத்திரத்தி லிருந்து எழும்பிவருகிற மிருகத்தின் அதே தோற்றம் இருக்கிறது. "அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும் இருந்தன," என்று திருவெளிப்பாடு 13:1 கூறுகிறது. சமுத்திரத்திலிருந்து எழும்பிவருகிற மிருகத்திற்கும் ஏழு தலை களும், முடிகளையுடைய பத்துக் கொம்புகளும் இருக்கின்றன. இது சாத்தானுடைய இலக்கை வெளிப்படுத்துகிறது—அவன் அதிகாரத்தைக் குறிக்கிற கிரீடங்களை ஆதாயப்படுத்த விரும்பு கிறான். வலுசர்ப்பத்திற்கும், மிருகத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்னவென்றால் வலுசர்ப்பத்தின் கிரீடங்கள் அதின் தலைகளின்மேல் இருக்கின்றன; ஆனால், மிருகத்தின் கிரீடங்கள் அதின் கொம்புகளின்மேல் இருக்கின்றன. தலைகள் தீர்மானிக்கும் அதிகாரத்தைக் குறிக்கின்றன; கொம்புகள் செயல்படுத்தும் அதிகாரத்தைக் குறிக்கின்றன. தலைகள் கட்டுப்படுத்துகின்றன, கொம்புகள் செயல்படுத்துகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கொம்புகள் தலை களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன. தலைகள் அசையும்போதெல்லாம், கொம்புகள் பின்தொடர்கின்றன. மிருகத்தின் நடத்தையெல்லாம் வலுசர்ப்பத்தின் கட்டுப் பாட்டின்கீழ் இருக்கிறது என்பதே இதன் பொருள்.

"அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று," என்று திருவெளிப்பாடு 12:4 கூறுகிறது. வால், பொய் சொல்லுதலையும் வஞ்சகத்தையும் குறிக்கிறது என்று ஏசாயா 9:15 காண்பிக்கிறது. திருவெளிப்பாடு 2, 3-ஆம் அதிகாரங் களில் நட்சத்திரங்கள் தூதர்களைக் குறிக்கின்றன. இங்கு வானத்தின் நட்சத்திரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால், அவைகள் தூதர்களே. பரலோகத்தில் தூதர்களின் மூன்றிலொரு பங்கு வலுசர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்டு, விழுந்துபோனார்கள், அவர்கள் வலுசர்ப்பத்தோடு சேர்த்துத் தள்ளப்பட்டார்கள்.

"பிரசவ வேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்ற வுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும் படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது," என்று 4-ஆம் வசனம் தொடர்ந்து கூறுகிறது. இங்கு, தேவன் தம் சித்தத்தில் தீர்மானித்திருந்த பெண்ணையும், அவர் தாம் அடைய விரும்புகிற

ஆண்பிள்ளையையும் பார்க்கிறோம். ஆனால், தேவன் பெண்ணில் தேடிக்கொண்டிருக்கிற காரியத்தை வலுசர்ப்பம் தடுத்துக்கொண்டிருக்கிறான். இந்தப் பெண் ஓர் ஆண்பிள்ளையைப் பெறப்போகிறாள் என்று வலுசர்ப்பத்திற்குத் தெரியும்; ஆகையால், அந்தப் பெண் பிள்ளையைப் பெற்றவுடன், அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போட அது அவளுக்குமுன்பாக நின்று, காத்துக் கொண்டிருக்கிறது.

"ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்," என்று 5-ஆம் வசனம் கூறுகிறது. பெண்ணுக்கும், ஆண் பிள்ளைக்கும் இடையேயுள்ள உறவைப் பார்ப்பதற்கும், நாம் கலாத்தியர் 4:26யைப் பார்ப்போம்: "மேலான எருசலேமோ சுயாதீன மானவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்." "புருஷ னுள்ளவளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைக ளுண்டு," என்று கலாத்தியர் 4:27-ன் கடைசிப் பகுதி கூறு கிறது. மேலேயுள்ள எருசலேமே புதிய எருசலேம், பெண்ணே புதிய எருசலேம். இதுவே தேவன் நித்தியத்தில் அடைய விரும்புகிற இலக்கு. படைப்பில் பெண் ஏவாள், கிருபையின் யுகத்தில் பெண் கிறிஸ்துவின் சரீரம், கிருபையின் யுகத்தின் முடிவிலுள்ள பெண் திருவெளிப்பாடு 12-ல் விவரிக்கப் பட்டுள்ளாள், எதிர்கால நித்தியத்தில் பெண் புதிய எருசலே மாக இருக்கும். மேலேயுள்ள எருசலேமுக்கு அநேகப் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று வசனம் கூறும்போது, தாயும் பிள்ளைகளும் தனித்தனியாக இருக்கிறார்கள் என்ப தல்ல இதன் பொருள். ஒன்று அநேகமாகிவிட்டது என்றும், அநேகர் ஒன்றாகத் தொகுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுமே அதன் பொருள். அநேகக் குழந்தைகளை ஒன்றுசேர்த்தால், அதன் சமம் தாய். தாய் ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத் தால், அதன்பின் அங்கு ஆறு தனிப்பட்ட நபர்கள் இருக் கிறார்கள் என்பதல்ல இதன் பொருள்; மாறாக, ஒன்றாகச் சேர்க்கப்பட்ட ஐந்து குழந்தைகளே தாயைத் தொகுக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் தாயின் ஒரு பகுதி—தாயின் ஒரு பகுதி இந்தக் குழந்தைக்காக எடுக்கப்படுகிறது, இன்னொரு பகுதி இன்னொரு குழந்தைக்காக எடுக்கப்படுகிறது, இவ்வாறு ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு பகுதி எடுக்கப்படுகிறது. அவர்களெல்லாரும் அவளிடமிருந்து பிறந்தவர்கள்போல் தோன்றுகிறார்கள். ஆனால், உண்மையில், அவர்கள் அவளே. தாய் குழந்தைகளோடு சேர்த்து இன்னொரு பிறவி இல்லை; அவளே எல்லாக் குழந்தைகளின் கூட்டுமொத்தம். நாம் மொத்தத்தைப் பார்க்கும்போது, தாயைப் பார்க்கிறோம். நாம் அவர்களை ஒருவரொருவராகப் பார்க்கும்போது, குழந்தை களைப் பார்க்கிறோம். நாம் தேவனுடைய குறிக்கோளில் மக்களின் முழுமொத்தத்தைப் பார்க்கும்போது, பெண்ணைப் பார்க்கிறோம்;

நாம் அவர்களைத் தனித்தனியாகப் பார்த்தால், அநேகக் குமாரர்களைப் பார்க்கிறோம். இது ஒரு விசேஷமான கோட்பாடு.

ஒரு பெண் ஆண்பிள்ளையைப் பெற்றெடுப்பதைப்பற்றி திருவெளிப்பாடு 12 பேசுகையில் அங்கும் இதே கோட்பாடு பிரயோகிக்கப்படுகிறது. இந்தப் பெண் பெற்றெடுக்கும் ஆண்பிள்ளை ஓர் அதிசயம், ஓர் அடையாளம். "பெற்றெடுத் தாள்" என்ற வார்த்தைகளுக்குக் குழந்தையின் தொடக்கம் அவளிடம் இருந்தது என்றும், பின்பு அது அவளிடமிருந்து பிரிக்கப்பட்டது என்றும் பொருள் இல்லை. மாறாக, வெறுமனே அவளுக்குள் இப்பேர்ப்பட்ட ஒரு பிறவி இருந்தது என்று பொருள். "அவள் ஒரு குமாரனாகிய ஆண்பிள்ளையைப் பெற்றாள்," என்பதற்கு ஒரு கூட்டம் மக்கள் இந்தப் பெண்ணில் அடங்கியிருக்கிறார்கள் என்று பொருள்.

தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் அவருடைய நித்திய குறிக்கோளில் ஒரு பங்கு உண்டு. ஆனால், எல்லாரும் தங்களுடைய நியாயமான பொறுப்பைச் சுமப்பதில்லை. ஆகையால், அவர்களுக்கிடையேயிருந்து தேவன் ஒரு கூட்டம் மக்களைத் தெரிந்தெடுக்கிறார். இந்தக் கூட்டம் முழுமையின் ஒரு பங்கு, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அநேகரின் ஒரு பகுதி. இதுவே பெண் பெற்றெடுக்கும் ஆண்பிள்ளை. முழுமையாக எடுத்துக்கொண்டால், அது தாய்; சிறுபான்மையை எடுத்துக்கொண்டால், அது ஆண்பிள்ளை. ஆண்பிள்ளையே 10-ஆம் வசனத்திலுள்ள "சகோதரர்கள்", 11-ஆம் வசனத்தி லுள்ள "அவர்கள்." ஆண்பிள்ளை தனிப்பட்ட ஒரு நபர் இல்லை; மாறாக, அநேக நபர்களாலான ஒரு தொகுப்பு என்பதே இதன் பொருள். இந்த நபர்களையெல்லாம் ஒன்றாகக் கூட்டிச்சேர்த்தால் அதுவே ஆண்பிள்ளை. தாயோடு ஒப்பிடும் போது, ஆண்பிள்ளை சிறியதாகத் தோன்றுகிறது. கூட்டத்தை முழுமையோடு ஒப்பிடும்போது, அவர்களுடைய எண்ணிக்கை சிறுபான்மையில் இருக்கிறது. ஆனால், தேவனுடைய திட்டம் அவர்களில் நிறைவேறுகிறது, அவருடைய குறிக்கோள் அவர்கள்மேல் இருக்கிறது.

"சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்," என்று 5-ஆம் வசனம் கூறுகிறது. இது ஆயிரவருட அரசாட்சியைப்பற்றிப் பேசு கிறது. ஜெயங்கொள்கிறவர்களே தேவனுடைய குறிக்கோளை அடைய அவருக்கு உதவுகிற கருகியாகும். "தேசங்களை இருப்புக்கோலால்" ஆளுகைசெய்வதைப்பற்றி திருவெளிப்பாடு மூன்றுமுறை குறிப்பிடுகிறது. முதலாவது, "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு,

நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம்கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்," என்று 2:26-27 கூறுகின்றன. இந்தப் பத்தி சபையிலுள்ள ஜெயங்கொள்பவர்களையே மிகவும் அப்பட்டமாகக் குறிப்பிடுகிறது. இதே சொற்றொடர் கடைசியாக 19:15-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. "புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்பட்டது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்," என்று அந்த வசனம் கூறுகிறது. இந்தப் பத்தி கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது. அப்படியானால் பன்னிரண்டாம் அதிகாரத்திலுள்ள பத்தி யாரைக் குறிக்கிறது? அது ஒன்று சபையிலுள்ள ஜெயங்கொள்பவர்களை அல்லது கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கவேண்டும். இது கர்த்தராகிய இயேசுவைக் குறிப்பது சாத்தியமா? இல்லை. (ஆயினும், இது முற்றிலும் அசாத்தியம் இல்லை; ஏனென்றால், கர்த்தராகிய இயேசுவும் இதில் அடங்கியிருக்கிறார் என்று நாம் பின்பு பார்ப்போம்.) இது ஏன் சாத்தியம் இல்லை? முதலாவது, ஆண்பிள்ளை பிறந்தவுடனே தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆகையால், இது கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கமுடியாது. ஏனென்றால், கர்த்தராகிய இயேசு பிறந்தவுடனே எடுத்துக்கொள்ளப்பட வில்லை. அவர் இந்தப் பூமியில் முப்பத்து மூன்றரை ஆண்டுகள் வாழ்ந்தார், மரித்தார், உயிர்த்தெழுந்தார், பின்பு பரலோகங்களுக்கு ஏறிச்சென்றார். இந்தக் காரணத்தால், ஆண்பிள்ளை சபையிலுள்ள ஜெயங்கொள் பவர்களைக் குறிக்கவேண்டும் என்று நாம் விசுவாசிக்கிறோம். சபையி லுள்ள மக்களின் இந்தப் பங்குதான் ஜெயங்கொள்பவர்கள். ஆண்பிள்ளை கர்த்தராகிய இயேசுவை இல்லை, அவர்களைக் குறிக்கிறது. (ஆயினும், ஆண்பிள்ளையில் கர்த்தராகிய இயேசுவும் அடக்கம்; ஏனென்றால், கர்த்தராகிய இயேசுவே முதல் ஜெயங்கொள்பவர். எல்லா ஜெயங்கொள்பவர்களும் கர்த்தராகிய இயேசுவில் அடங்கியுள்ளனர்.) ஆண்பிள்ளையும் தாமும் வித்தியாசமானவர்கள். இருப்பினும், அவர்கள் ஒன்றாக இருக்கிறார்கள். ஜெயங்கொள்பவர்கள் சபையிலிருந்து வித்தியாச மானவர்கள். ஆனாலும், அவர்கள் சபையில் அடங்கியிருக் கின்றனர்.

## ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப்படுதல்

"அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது," என்று

திருவெளிப்பாடு 12:5 தொடர்ந்து கூறுகிறது. இந்த வசனத்தி லுள்ள "எடுத்துக்கொள்ளப்படுதல்" என்ற வார்த்தைக்கும், 1 தெசலோனிக்கேயர் 4-ல் பயன்படுத்தப்பட்டுள்ள "எடுத்துக் கொள்ளப்படுதல்" என்ற அதே வார்த்தைக்கும் வித்தியாசமான பொருள் உண்டு. சிலர் மேகங்கள்மேல் எடுத்துக்கொள்ளப் படுவார்கள் என்று அங்கு அது கூறுகிறது. ஆனால், ஆண் பிள்ளை தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்று இங்கு இது கூறுகிறது. ஆண்பிள்ளை சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது; ஏனென்றால், ஒருவர் ஏற்கெனவே சிங்காசனத்தில் இருந்தார். சபையின் தலையானவர் சிங்காசனத்தில் இருக்கிறார். வெறுமனே ஒரேவொரு மனிதன் மட்டும் சிங்காசனத்தில் இருப்பது தேவனுடைய நோக்கம் இல்லை; அநேக மனிதர்கள் சிங்காசனத்தில் இருக்கவேண்டும் என்பதே அவர் நோக்கம். தம் அதிகாரத்தைப் பயன்படுத்த ஒரு கூட்டம் மனிதர்கள் சிங்காசனத்தில் இருக்கவேண்டும் என்பதே அவருடைய ஆதி விருப்பம். கிறிஸ்துவும், சபையும் சேர்ந்து அவருடைய குறிக்கோளை நிறைவேற்றவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆயினும், சபையிலுள்ள பெரும்பான்மையான மக்களால் அந்த நேரத்தில் இன்னும் சிங்காசனத்தை அடையமுடியாது. ஜெயங்கொள்பவர்கள் என்று அழைக்கப்படுகிற ஒரு சிறுபான்மையினரால் மட்டுமே தேவனுடைய சிங்காசனத்திற்குப் போகமுடியும். அவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்; ஏனென்றால், அவர்கள் தேவனுடைய குறிக்கோளை நிறைவேற்றுவார்கள்.

ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப்பட்டவுடனே இரண்டு காரியங்கள் சம்பவிக்கின்றன: "ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது. வானத்திலே யுத்த முண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை" (வெளி. 12:6-7). "வும்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள்; 5-ஆம் வசனத்தில் ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப்பட்டவுடன் இந்த வார்த்தை இரண்டுமுறை பயன் படுத்தப்படுகிறது. "ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்," என்று 6-ஆம் வசனம் கூறுகிறது. "வானத்திலே யுத்தமுண்டாயிற்று" என்று பின்பு 7-ஆம் வசனம் கூறுகிறது. பெண் வனாந்தரத்திற்கு ஓடிப்போகுதல், வானத்திலே யுத்தமுண்டாகுதல் ஆகிய இரண்டும் ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்படுவதின் விளைவாகும்.

வானத்திலே ஏற்படும் யுத்தம் என்ற விஷயத்தை நாம் இப்போது பார்ப்போம். முதலாவது அங்கு மிகாவேல் இருக்கிறார்; இந்தப் பெயருக்கு அதிக அர்த்தம் உண்டு. மிகாவேல் என்பதற்கு "தேவனைப் போன்றவன் யார்?" என்று பொருள். இது ஓர் அருமையான கேள்வி. தேவனைப்போல் இருக்க வேண்டும் என்பதே சாத்தானுடைய நோக்கம். ஆனால், "தேவனைப் போன்றவன் யார்?" என்று மிகாவேல் கேட்கிறார். தேவனைப்போல் இருக்கவேண்டும் என்று சாத்தான் மட்டும் விரும்பவில்லை. தேவனைப்போல் இருக்க அவன் மனித னையும் சோதித்தான். ஆயினும், "தேவனைப் போன்றவன் யார்?" என்ற மிகாவேலின் கேள்வி சாத்தானின் வல்லமையை அசைக்கிறது. "நீ தேவனைப்போல் இருக்க விரும்புகிறாய்; ஆனால், நீ ஒருபோதும் தேவனைப்போல் மாறமாட்டாய்," என்று மிகாவேல் சாத்தானிடம் கூறுவதுபோல் தோன்றுகிறது. மிகாவேலின் பெயர் இதைத்தான் நமக்கு வெளிப்படுத்துகிறது.

ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப்பட்டவுடனே, வானத்தில் யுத்தம் ஏற்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப்படுவதே வானத்தில் யுத்தம் ஏற்படுவதற்கான காரணமாகும். ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்படுதல் வெறுமனே ஒருசில தனிநபர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிற காரியம் இல்லை என்று நாம் இதிலிருந்து பார்க்கிறோம். இது அதைவிட அதிகம்; இது பல யுகங்களாக, பல தலைமுறைகளாக நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாகும். தேவனுடைய எதிரியாகிய பழைய பாம்பு தேவனுக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான வருடங்களாக யுத்தம்செய்துகொண்டேயிருக்கிறான். இந்த யுத்தம் வானத்தில் நிகழும்போது, மிகாவேலும் அவனுடைய தூதர்களும் பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்திற்கு எதிராக யுத்தம்செய்கிறார்கள். முன்பு அவன் ஒரு பாம்பு. ஆனால், இப்போது அவன் உருமாறி வலுசர்ப்பமாகிவிட்டான். அவன் தொடர்ந்து தன் வல்லமையை வளர்த்துக்கொண்டான். ஆயினும், ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்பட்டவுடன், வலுசர்ப்பத்தால் அதற்குமேல் பெரிதாக முடியவில்லை என்பதோடு மட்டும் இல்லை, அவன் வானத்திலிருந்து தள்ளப்படுகிறான். ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்படுதல் ஒரு வாணிப நடவடிக்கை; இதனால் சாத்தான் அதற்குமேல் வானத்தில் எந்த நிலைமையும் வகிக்கமுடியாது.

மிகாவேலும் அவனுடைய தூதர்களும், வலுசர்ப்பமும் அவனுடைய தூதர்களும் செய்த யுத்தத்தின் விளைவு என்ன? "வானத்தில் அவர்கள் (வலுசர்ப்பமும், அவனுடைய தூதர் களும்) இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலக மனைத்தையும்

மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்," என்று 8, 9-ஆம் வசனங்கள் கூறுகின்றன. வலுசர்ப்பத்தின் தோல்வியே இந்த யுத்தத்தின் விளைவாகும். அவனுக்கு வானத்தில் எந்த இடமும் இல்லாமல் போயிற்று; அவனும், அவனுடைய தூதர்களும் பூமியில் தள்ளப்பட்டார்கள்.

மனிதனுடைய வீழ்ச்சியினால் சாத்தான் ஆதாயப்படுத்தியிருந்த அந்தஸ்தோடு கர்த்தராகிய இயேசுவின் மரணம் ஏற்கெனவே இடைப்பட்டிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மீட்பு சாத்தானின் சட்டப்பிரகாரமான அந்தஸ்தை அழித்துவிட்டது. கர்த்தராகிய இயேசு மீட்பில் செய்துமுடித்த தேவனுடைய இராஜ்ஜியத்தைச் செயல்படுத்துவதும், அதன் விளைவாக, மனிதனுடைய வீழ்ச்சியினால் சாத்தான் சம்பாதித்திருந்த சட்டப்பிரகாரமான அந்தஸ்தை முழுவதும் முடிவுக்குக் கொண்டுவருவதுமே சபையின் வேலை யாகும். மீட்புதான் வீழ்ச்சிக்காகக் கிறிஸ்துவின் தீர்வாகும்; இராஜ்ஜியம்தான் வீழ்ச்சிக்காக சபையின் தீர்வாகும். தீர்ப்பின் வேலை கிறிஸ்துவினுடையது; ஆனால், இந்தத் தீர்ப்பைச் செயல்படுத்தும் கடமை சபையைச் சார்ந்தது. சாத்தானைக் கவிழ்ப்பது நம் வேலை. தேவன் இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்புகிறார். அவருக்கு ஜெயங்கொள்பவர்கள் தேவை. ஆண்பிள்ளை இல்லையென்றால், சாத்தானின் வேலையைக் கவிழ்க்க எந்த வழியும் இருக்காது. சாத்தான் மீட்பினால் ஏற்கெனவே நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டான்; இப்போது தண்டனையை இராஜ்ஜியம் நிறைவேற்றவேண்டும்.

வலுசர்ப்பமும், அவனுடைய தூதர்களும் வானத்திலிருந்து தள்ளப்பட்டபிறகு, "அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது," என்று 10-ஆம் வசனம் கூறுகிறது. இதுவே இராஜ்ஜியம். சாத்தான் தள்ளப்படும்போது, அவனுடைய தூதர்கள் அவனோடு சேர்ந்து தள்ளப்படும் போது, வானத்தில் அவர்களுக்கு எந்த இடமும் இல்லாமல் போகும்போது, இதுவே இரட்சிப்பும், வல்லமையும், நம் தேவனுடைய இராஜ்ஜியமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமுமாகும்.

திருவெளிப்பாட்டில் நாம் இரண்டு வசனங்களைச் சேர்த்து வாசிப்போம். "ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங் களிலும்

ராஜ்யபாரம்பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின" (11:15). இதுவே தலைப்புப் பொருள். "அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்த முண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது" (12:10). இதுவே தலைப்புப் பொருளின் வெற்றிகரமான நிறைவேற்றம். ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப்படுவதே வெற்றியின் திறவுகோல். ஆண் பிள்ளை எடுத்துக்கொள்ளப்படுவதால், வானத்தில் யுத்த முண்டாகும். சாத்தான் தள்ளப்படுவான். நம் கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்ஜியம் வருவதே சாத்தான் தள்ளப்படுவதின் விளைவாகும். ஜெயங்கொள்பவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவதின் விளைவாக சாத்தான் தள்ளப் படுகிறான், இராஜ்ஜியம் வருகிறது. தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கொண்டுவருவதே ஜெயங்கொள்பவர்களின் வேலை. கர்த்தருடைய வேலை நிறைவேறிவிட்டது. அவர் சிங்காசனத்தில் இருக்கிறார். இப்போது ஜெயங்கொள்பவர்கள் இதை நிஜமாக்குகிறார்கள்.

இதற்கு ஒத்த ஒரு பத்தி லூக்கா 10-ல் இருக்கிறது. "பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்," என்று அது கூறு கிறது (வசனம் 17). சீடர்கள் பிசாசுகளைத் துரத்திக்கொண் டிருந்தார்கள். அப்போது கர்த்தர், "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்," என்றார் (வசனம் 18). இது சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்படுவதைக் குறிக்கிறது. ஆனால், இது எப்போது நடக்கிறது? இது திருவெளிப்பாடு 12-ல் நடக்கிறது. எது சாத்தானைத் தள்ளிவிடுகிறது? 17-ஆம் வசனத்தை ஆதாரமாகக்கொண்ட லூக்கா 10:18-ன்படி, சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்படுகிறான்; ஏனென்றால், சபை பிசாசுகளைத் துரத்துகிறது. பிசாசுகளைத் துரத்துதல் ஒரேமுறை நடந்துமுடிந்துவிடுகிற காரியம் இல்லை என்று 17-ஆம் வசனமும் காண்பிக்கிறது. மாறாக, சபை பூமியில் தொடர்ந்து பிசாசுகளைத் துரத்தவேண்டும்; அதனால் சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்படுவான். கர்த்தராகிய இயேசு மரித்த போது, சாத்தானின் வல்லமையெல்லாம் அழிக்கப்பட்டன. ஆனால், உண்மையில், எது வானத்தில் சாத்தானின் வல்லமையை இழக்கச்செய்யும்? ஒவ்வொரு நிகழ்ச்சியாக அவனோடு தொடர்ந்து இடைப்படுவதின்மூலம், பூமியில் தேவ னுடைய பிள்ளைகளால் அவனுடைய வல்லமையெல்லாம் முடிவுக்குக் கொண்டுவரப்படும். கர்த்தராகிய இயேசுவின் பெயரில், பிசாசுகள் பல தடவை கீழ்ப்படுத்தப்படும்போது, சாத்தான் தள்ளப்படுவான்.

எடை பார்ப்பதற்கான ஒரு தராசு நம்மிடம் இருக்கிறது என்று

வைத்துக்கொள்வோம். தராசின் ஒரு தட்டில் சாத்தான் இருக்கிறான்; அவனுடைய எடை எவ்வளவு என்று நமக்குத் தெரியாததால், தட்டின் மறுபக்கத்தில் நாம் எடைக் கற்களை வைத்துக்கொண்டே இருக்கவேண்டும். நாம் சாத்தனோடு இடைப்படும் ஒவ்வொரு நேரமும், அடுத்த பக்கத்தில் எதைக் கற்களை வைத்துக்கொண்டே இருக்கிறோம். எடை ஒரு குறிப்பிட்ட புள்ளிக்கு உயரும்போது, சாத்தான் அசைவான். ஆரம்பத்தில், நாம் தட்டின் மறுபக்கத்தில் தொடர்ந்து எடைக் கற்களை வைக்கும்போது, அதனால் எந்தப் பயனும் இல்லாதது போல் தோன்றுகிறது. ஆனால், ஒவ்வொரு எடைக்கல்லும் விலையேறப்பெற்றது. இறுதியாக, கடைசி எடைக் கல்லை வைக்கும்போது, தராசு அசைய ஆரம்பிக்கும், யார் கடைசி எடைக் கல்லை வைப்பார் என்று நமக்குத் தெரியாது. ஆனால், ஆரம்பத்தில் வைத்த எடைக் கல்லும், கடைசியில் வைத்த எடைக் கல்லும் ஆகிய எல்லா எடைக் கற்களும் சேர்ந்து விளைவை ஏற்படுத்துகின்றன. சாத்தானின் வேலையை எதிர்த்துநிற்பதே சபையின் வேலை; அதனால் நாமெல்லாரும் சேர்ந்து பிசாசுகளைத் துரத்தலாம். இதனால்தான் ஜெயங்கொள் பவர்களாக இருப்பதைத் தடுக்க அவன் தன் வல்லமையில் எதை வேண்டுமானாலும் செய்வான்.

பிசாசுகளைத் துரத்துவது என்றால் நாம் ஒரு பிசாசை எதிர்கொள்ளும்போது, அவனை எதிர்த்துநிற்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. பிசாசுகளைத் துரத்துவது என்றால் நாம் பிசாசின் எல்லா வேலைகளையும், வல்லமையையும் துரத்து கிறோம் என்று பொருள். நாம் கர்த்தருடைய அதிகாரத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டு, நம் நிலைமையில் உறுதியாக நிற்கிறோம் என்று பொருள். ஒரு சகோதரன் கொஞ்சம் எடையைச் சேர்க்கிறான், இன்னொரு சகோதரன் இன்னும் கொஞ்சம் எடையைச் சேர்க்கிறான். அதன்பின் ஒருநாள், சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்படுவான். சாத்தானை வானத்திலிருந்து கீழே விழவைக்க தேவன் தம் சொந்தக் கையால் நேரடியான வேலை செய்வதில்லை. இந்த வேலையைச் செய்வது அவருக்கு மிகவும் எளிதாக இருக்கும். ஆனால், அவர் இதைச் செய்வதில்லை. அவர் இந்த வேலையை சபையிடம் ஒப்படைத்திருக்கிறார். ஆ, இந்த விஷயத்தில் சபை எவ்வளவு பரிதாபமாகத் தோற்றுப்போனது; இந்த வேலையை சபையால் செய்யமுடியாமல் இருப்பது எவ்வளவு பரிதாபம். இந்தக் காரணத்தால்தான் தேவனுடைய வேலையைச் செய்ய சபையின் நிலைமையில் நிற்கிற ஜெயங் கொள்பவர்கள் தேவை. ஜெயங்கொள்பவர்கள் சபையின் நிலை மையில் நின்று, சபை செய்திருக்க வேண்டிய வேலையைச் செய்யும்போது அதன் விளைவு என்னவாக இருக்கும்

என்றால்: “இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது கர்த்தருடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது.” திருவெளிப்பாடு 12-லுள்ள ஆண்பிள்ளை சபையினிமித்தம் நிற்கிற ஜெயங்கொள்பவர்களால் தொகுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்பட்டவுடன், சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்படுகிறான், இராஜ்ஜியம் வருகிறது.

## ஆண்பிள்ளையின் கோட்பாடு

இந்த ஆண்பிள்ளை “இருப்புக்கோலால் தேசங்களை ராஜ்யபாரம்பண்ணுவார்,” என்று வேதாகமம் கூறுகிறது. இது தேவனுடைய குறிக்கோள். சாத்தானின் வல்லமையை இழக்கச் செய்து, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கொண்டு வருவதே சபையின் வேலையாகும். தேவன் விரும்புகிற சபையிடம் அபிகாயிலின் குணம், அதாவது கிறிஸ்துவோடு ஒத்துழைக்கும் குணம், இருக்கவேண்டும். ஆயினும், சபை தேவனுடைய குறிக்கோளை அடையாததாலும், அது தேவனுடைய குறிக்கோளை அறியாததாலுங்கூட, தேவன் என்ன செய்யமுடியும்? அவருடைய குறிக்கோளை அடைந்து, அவருடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகிற ஒரு கூட்டம் ஜெயங்கொள்பவர்களை அவர் தெரிந்தெடுப்பார். இதுவே ஆண்பிள்ளையின் கோட்பாடாகும்.

வேதாகமத்தில் இந்தக் கோட்பாட்டின் அநேக எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. பழையஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் மக்களைத் தெரிந்தெடுத்தலில் தேவனுடைய குறிக்கோள் என்ன? அவர்கள் ஆசாரியர்களின் இராஜ்ஜியமாக இருப்பதற்காகவே அவர் அவர்களைத் தெரிந்தெடுத்தார் என்று யாத்திராகமம் 19 கூறுகிறது. ஆசாரியர்களின் இராஜ்ஜியம் என்றால் என்ன பொருள்? தேசம் முழுவதும் தேவனைச் சேவிக்கவேண்டும், அவருடைய ஆசாரியர்களாக இருக்க வேண்டும் என்பதே இதன் பொருள். ஆயினும், இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் ஆசாரியர்களாகிவிடவில்லை. ஏனென்றால், அவர்கள் பொன்கன்றுக்குட்டியை ஆராதித்தார்கள். தேவனை சேவிப்பதற்குப் பதிலாக, அவர்கள் ஒரு விக்கிரகத்தை ஆராதித்தார்கள். மோசே இஸ்ரவேல் மக்களைப் பார்த்து, “கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள்,” என்றான் (யாத். 32:26). அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் மோசேயினிடத்தில் கூடிவந்தார்கள். அப்போது மோசே அவர்களைப் பார்த்து, “உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும்

ஒவ்வொருவனும் தன்தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்," என்று கூறினார் (வசனம் 27). விக்கிரகங்களை ஆராதிப்பதே மிகப்பெரிய பாவம். எனவே, தன்தன் பட்டயத் தால் இந்த மனிதர்கள் தங்கள் சகோதரர்களைக் கொன்றுபோட வேண்டும் என்று தேவன் கோரினார். "லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்தார்கள்" (வசனம் 28). தங்களுடைய மனுஷிக பாசத்துக்கும் மேலாக அவர்கள் தேவனை சேவிக்கச் சித்தமாயிருந்தார்கள். எனவே, தேவன் அவர்களை ஆசாரியர்களாக இருக்கும்படித் தெரிந்தெடுத்தார். அந்த நேரத்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் எல்லாரிடையிலும் லேவி கோத்திரத்தார் மட்டுமே ஆசாரியர்களாக இருந்தார்கள். அதுமுதல், இஸ்ரவேலர்கள் எல்லாரும் லேவியர்கள் மூலமாகவே தேவனை நெருங்கினார்கள். ஆரம்பத்தில் இஸ்ர வேலர்கள் எல்லாரும் தேவனைச் சேவிக்க தெரிந்தெடுக்கப் பட்டார்கள். ஆனால், அவர்கள் தோற்றுப்போனார்கள். ஆகை யால், தோற்றுப்போன ஒரு முழு குழுமத்திலிருந்து தங்கள் இடத்தில் நிற்கும் ஒரு கூட்டம் மக்களை தேவன் தெரிந்தெடுத் தார். இந்தக் கூட்டம் மக்களே ஜெயங்கொள்பவர்கள்.

லேவியர்கள் தங்களுக்காகத் தேவனைச் சேவிக்கவில்லை என்பதையும், அவர்கள் தங்கள் சொந்தத் தெரிந்தெடுப்பின்படி ஜெயங்கொள்பவர்களாக இருக்கவில்லை என்பதையும் நாம் நினைவில்கொள்ளவேண்டும். அவர்கள் நிச்சயமாகத் தங்களை மற்றவர்களைவிட உயர்வாகக் கருதவில்லை. இப்படி நடந் திருந்தால் அவர்களுடைய கதை அத்தோடு முடிந்திருக்கும். முழு இஸ்ரவேல் மக்கள் குழுமத்தின் பிரதிநிதியாக ஆசாரியர்க ளாக இருக்க லேவியர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கு ஏறெடுத்தார்கள். தேவனுக்கு முன்பாக லேவியர்களின் சேவை முழு இஸ்ரவேல் தேசத்தன் சேவையாகவே கருத்தப்பட்டது. லேவியின் பிள்ளைகள் மட்டுமே ஆசாரியர்களாக இருந்தார்கள். ஆனால், இஸ்ரவேல் தேசம் முழுவதும் அவர்களுடைய ஆசாரியத்துவத் திலிருந்து பயனடைந்தது. அதேமுறையில், ஜெயங்கொள்பவர் களின் வேலை முழு சபைக்காகவே இருக்கிறது. வேலை ஜெயங்கொள்பவர்களைச் சார்ந்தது; ஆனால், சபை வேலையின் ஆசீர்வாதத்தைப் பெறுகிறது. இதுவே ஜெயங்கொள்பவர்களின் மகிமை. கடமை அவர்க ளுடையது; ஆனால், அவர்களுடைய சாதனை முழு சபைக்கும் மகிமையைக் கொண்டுவருகிறது; வேலை அவர்களுடையது; ஆனால், முழு சபையும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறது.

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் மக்கள்

மீதியானர்களால் நெருக்கப்பட்டு, பெருந்தவிப்பில் இருந் தார்கள். ஒரு கூட்டம் மனிதர்களை வழிநடத்தவும், எதிரியை விரட்டவும், அவர்களுடைய ஒரு கோத்திரத்திலிருந்து தேவன் கிதியோனை எழுப்பினார். இந்தக் குழுவினால் தேசம் முழுவதும் விடுதலை பெற்றது. பொறுப்பு முழு தேசத்தையும் சார்ந்தது; ஆனால், சிலர் பயந்தார்கள்; சிலர் சோம்பேறிகளாக இருந்தார்கள்; ஆகையால், அவர்களில் ஒரு கூட்டத்தார் யுத்தத்துக்குச் சென்று, முழு தேசத்துக்கும் அனுகூலத்தைக் கொண்டுவந்தார்கள்.

இஸ்ரவேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்து திரும்பிவந்த போதும் இதே கோட்பாட்டைப் பார்க்கிறோம். எழுபது வருடங்கள் அடிமைத்தனத்திற்குப்பிறகு இஸ்ரவேல் மக்கள் திரும்பிவந்து தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று தேவன் ஆரம்பத்தில் அவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணினார். ஆயினும், எல்லாரும் திரும்பிவரவில்லை; ஆலயத்தையும், எருசலேம் நகரத்தையும் கட்ட எஸ்றா, நெகேமியா, செருபாபேல், யோசுவா ஆகியோரின் தலைமையின்கீழ் ஒரு சிறுபான்மையினரே திரும்பிவந்தார்கள். ஆனால், அவர்கள் செய்தது முழு தேசத்துக்காகவும் செய்ததாகக் கருதப்பட்டது. அது முழு தேசத்தின் மீட்டுத்திருப்புதலாகவும், திரும்பிவருத லாகவும் கருதப்பட்டது.

ஜெயங்கொள்பவர்களின் கோட்பாடு, விசேஷமான ஆவிக் குரிய ஒரு தனிநபருக்காக கிரீடமும், மகிமையும் காத்துக் கொண்டிருக்கின்றன என்பது இல்லை. அந்த நாளில் தனி நபர்களுக்குக் கிரீடமும், மகிமையும் வெகுமதிகளாகக் கிடைக்காது என்று நான் கூறவில்லை. இவைகளை அவர்கள் பெறக்கூடும். ஆனால், அவர்கள் இவைகளுக்காக இல்லை; இது அவர்களுடைய பிரதானமான குறிக்கோள் இல்லை. தங்களுக்காக மகிமையை அல்லது கிரீடங்களைப் பெறுவது இல்லை, மாறாக முழு சபையும் எடுக்கவேண்டிய நிலையை எடுத்து, சபைக்காக வேலைசெய்ய வேண்டும் என்பதே ஜெயங்கொள்பவர்கள் ஜெயங்கொள்ப வர்களாக இருப்பதற்கான காரணமாகும். தேவனுக்குமுன்பாக, சபை அவர் விரும்புகிற அந்த நிலைமையில் இருக்கவேண்டும். சபை தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட வேலையை நிறைவேற்றி, தன் நேர்த்தியான நிலைமையில் நின்று, அவருக்குப் பொறுப்புள்ள தாக இருக்கவேண்டும். ஆயினும், சபை தோற்றுப்போனது, இன்னும் இன்றைக்கும் தோற்றுக்கொண்டிருக்கிறது. சபை எப்படி இருக்கவேண்டும் என்று ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட அந்த நிலைமையில் இல்லை. அது தன் வேலையைச் செய்யவில்லை, அது தன் பொறுப்பை நிறைவேற்றவில்லை, அது தன் நேர்த்தியான நிலைமையில் நிற்கவில்லை. அது தேவனுக்கான தளத்தைப் பெறவில்லை. சபைக்காக அந்த வேலையைச் செய்யவும்,

சபையின் பொறுப்பைச் சுமக்கவும் ஒரு சிறுகூட்டம் மக்கள் மட்டுமே இருக்கிறார்கள். இந்தக் கூட்டமே ஜெயங்கொள்பவர்கள். அவர்கள் செய்வது முழுச் சபையின் வேலையாகக் கருதப்படுகிறது. ஜெயங்கொள்பவர்கள் இருந்தால், தேவனுடைய குறிக்கோள் நிறைவேறும், அவர் திருப்தியடைவார். இதுவே ஆண்பிள்ளையின் கோட்பாடு.

தேவனுடைய நித்திய திட்டத்தில் அவருக்கு ஒரு கூட்டம் ஜெயங்கொள்பவர்கள் தேவை என்பதே ஆண்பிள்ளையைப் பற்றிய இந்தக் காரியத்தை நாம் பரிசீலிப்பதற்கான காரண மாகும். வரலாற்றின்படி, சபை தோற்றுப்போனது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால், சபைக்காக நிற்க தேவன் ஜெயங்கொள்பவர்களை அழைக்கிறார். திருவெளிப் பாட்டில் இந்தப் பத்தியில் பேசப்படுகிற ஆண்பிள்ளை குறிப்பாகக் கடைசிக் காலத்திலுள்ள ஜெயங்கொள்பவர்களைக் குறிக்கிறது. ஆண்பிள்ளை பிறந்தவுடன், அது தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அதன்பின், உடனே காரியங்கள் வானத்தில் நிகழும், சாத்தான் தள்ளப்படுவான். ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்படுவதால் தேவனுடைய கஷ்டம் நீக்கப்படுகிறது. அவருடைய பிரச்சினை தீர்ந்துவிடுகிறது. ஆண்பிள்ளை பிறந்தபிறகு, அவருடைய குறிக்கோளை அதற்குமேல் தடுக்கமுடியாது என்பதுபோல் தோன்றுகிறது. தேவன் இதைத்தான் இன்று அழைக்கிறார்; இதில்தான் இன்று அவருக்கு நாட்டம். அவருடைய ஆதி இலக்கை அடைய தேவனுக்கு ஒரு கூட்டம் மக்கள் தேவை.

## ஜெயங்கொள்பவர்களின் ஆதாரமும், மனப்பாங்கும்

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்," என்று திருவெளிப்பாடு 3:21 கூறுகிறது. ஆண் பிள்ளை சிங்காசனத்தில் இருக்கமுடியும்; ஏனென்றால், அது ஜெயங்கொண்டுவிட்டது. அவர்கள் எப்படி ஜெயங்கொள் கிறார்கள் என்றும், அவர்களுடைய மனப்பாங்கு என்ன வென்றும் நாம் இப்போது பார்ப்போம்.

"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத் தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்," என்று திருவெளிப்பாடு 12:11 கூறுகிறது.

"அவர்கள் அவனை ஜெயித்தார்கள்." "அவனை" என்பது சாத்தானைக் குறிக்கிறது. தங்கள்மேல் சாத்தான் தன்னுடைய எந்த வேலையையும் செய்ய அவனை இயலாதவனாக்கி, அவர்கள்

சாத்தானை ஜெயித்தார்கள். (1) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், (2) அவர்களுடைய சாட்சியின் வசனத்தினாலும், (3) மரணபரியந்தம் தங்கள் ஆத்தும-ஜீவனை நேசிக்காத மனப்பாங்கு அவர்களிடம் இருந்ததாலும் அவர்கள் அவனை ஜெயித்தார்கள்.

## ஆட்டுக்குட்டியின் இரத்தம்

முதலாவது, "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அவர்கள் அவனை ஜெயித்தார்கள்." ஆவிக்குரிய யுத்தத்தில் ஆட்டுக் குட்டியின் இரத்தமே வெற்றியின் ஆதாரம். இரத்தம் மன்னிப்புக்காகவும், இரட்சிப்புக்காகவும் மட்டும் இல்லை, இதுதான் நாம் சாத்தானை ஜெயங்கொள்வதற்கான ஆதாரமுமாகும். கர்த்தரில் அதிகமாக வளர்ந்தவர்களுக்கு இரத்தத்தி னால் அதிக பயன் இல்லை என்று சிலர் நினைக்கக்கூடும். இனிமேல் இரத்தம் தேவையில்லை என்ற அளவுக்கு சிலர் வளரக்கூடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட ஒரு காரியம் இல்லவே இல்லை என்பதை நாம் வலியுறுத்திக் கூறவேண்டும். இனிமேல் இரத்தம் தேவையில்லை என்னும் அளவுக்கு ஒருவனாலும் வளரமுடியாது. "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் அவர்கள் அவனை ஜெயித்தார்கள்," என்று தேவனுடைய வசனம் கூறுகிறது.

கிறிஸ்தவர்களைக் குற்றப்படுத்துவதே அவர்களுக்கு எதிராக சாத்தானின் முக்கியமான நடவடிக்கையாகும். சாத்தான் ஒரு கொலைகாரனா? ஆம். அவன் ஒரு பொய்யனா? அவன் ஒரு சோதனைக்காரனா? ஆம். அவன் நம்மைத் தாக்குகிறவனா? ஆம். ஆனால், இத்தோடு முடியவில்லை. குற்றப்படுத்துவதே அவனுடைய பிரதானமான வேலையாகும். "இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்," என்று திருவெளிப்பாடு 12:10 கூறுகிறது. சாத்தான் சகோதரர்கள்மேல் இரவும் பகலும் குற்றஞ்சுமத்துகிறான் என்று இங்கு நாம் பார்க்கிறோம். அவன் தேவனுக்குமுன்பாகக் குற்றஞ்சுமத்து கிறவன் மட்டும் இல்லை; நம் மனச்சாட்சியிலும் குற்றஞ் சுமத்துகிறவன். அவனுடைய குற்றச்சாட்டுக்களால் நம்மைப் பலவீனமானவர்களாகவும், முற்றிலும் வல்லமையற்றவர்க ளாகவும் ஆக்கமுடியும். மக்கள் தாங்கள் பயனற்றவர்கள் என்று கருதி, அவனோடு யுத்தம்செய்வதற்கான தங்களுடைய எல்லாத் தளத்தையும் இழக்கும் அளவுக்கு அவர்களைக் குற்றப்படுத்த அவன் விரும்புகிறான். நாம் பாவத்தோடு இடைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று நாம் கூற வில்லை. பாவத்தைக்குறித்த கூர்மையான உணர்வு நம்மிடம் இருக்கவேண்டும். ஆனால்,

நாம் சாத்தானின் குற்றச் சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

தேவனுடைய பிள்ளை ஒருவன் சாத்தானின் குற்றச்சாட்டுகளை ஒருமுறை ஏற்றுக்கொண்டால், அவன் நாள் முழுதும் தவறாகவே இருப்பதாக உணரக்கூடும். அவன் அதிகாலையில் எழுந்தவுடன், தான் தவறாக இருப்பதாக உணர்வான். ஜெபிக்க முழங்கால் படியிடும்போது, தான் தவறாக இருப்பதாக உணர்வான். தேவன் தன் ஜெபத்துக்குப் பதிலளிப்பார் என்று அவன் விசுவாசிப்பதுகூட இல்லை. கூட்டத்தில் அவன் ஒரு வார்த்தை பேச விரும்பும்போது, தான் சரியாக இல்லாததால் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை என்று அவன் உணர்வான். அவன் கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க விரும்பும்போது, தன்னைப்போன்ற இப்பேர்ப்பட்ட ஒரு நபரிடமிருந்து அவர் எந்தக் காணிக்கையையும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதால், ஏன் காணிக்கை கொடுக்கவேண்டும் என்று அவன் வியக்கிறான். கர்த்தராகிய இயேசு எவ்வளவு மகிமையானவர், எவ்வளவு வெற்றிச்சிறந்தவர் என்பதைவிட, தாங்கள் எவ்வளவு பொல்லாதவர்கள், உதவாதவர்கள் என்பதே இதுபோன்ற கிறிஸ்தவர்களின் பிரதானமான அக்கறையாகும். தாங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற எண்ணத்தினாலேயே காலையிலிருந்து மாலைவரை அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வேலைசெய்தாலும், இளைப்பாறினாலும், நடந்தாலும், வேதாகமத்தை வாசித்தாலும், அல்லது ஜெபித்தாலும், தாங்கள் எவ்வளவு உதவாதவர்கள் என்ற எண்ணம் இல்லாமல் ஒரு கணப்பொழுதுகூட போவதில்லை. இதுவே சாத்தானின் குற்றச்சாட்டு. அவர்களை சாத்தானால் இப்பேர்ப்பட்ட நிலைமையில் வைக்கமுடியுமானால், அவன் வெற்றி பெற்றுவிட்டான். இந்த நிலையில் இருக்கும் மக்கள் சாத்தானுக்கு முன் வல்லமையற்றவர்கள். நாம் இந்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டால், நம்மால் ஒருபோதும் ஜெயங்கொள்பவராக இருக்கமுடியாது. எவ்வளவு அதிகமாக நாம் நம்மிடமிருக்கும் தீமையைப்பற்றிய எண்ணத்தால் ஆக்கிரமிக்கப்படுகிறோமோ, அவ்வளவு எளிதாக நாம் சாத்தானின் குற்றச்சாட்டுகளின் தீங்கான விளைவை அனுபவிக்கிறோம் என்று உணராமல், அதைத் தவறாகக் கிறிஸ்தவத் தாழ்மையாகக் கருதுவது எளிது. நாம் பாவம் செய்யும்போது, அதை அறிக்கைசெய்து, அதனுடன் இடைப் படவேண்டும். ஆனால், நாம் இன்னொரு பாடத்தையும் கற்றுக்கொள்ளவேண்டும்; நாம் நம்மை நோக்கிப்பார்க்காமல், கர்த்தராகிய இயேசுவை மட்டும் நோக்கிப்பார்க்கக் கற்றுக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளும், காலையிலிருந்து மாலைவரை நம்மைப்பற்றிய உணர்வுடன் இருப்பது நோயுற்ற நிலைமையாகும். இது சாத்தானின் குற்றச்சாட்டுகளை

ஒப்புக்கொள்வதின் விளைவாகும்.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலருடைய மனச்சாட்சியில் பாவத்தைப்பற்றிய உணர்ச்சி இல்லை. இப்பேர்ப்பட்ட மக்களால் அதிகமான ஆவிக்குரிய பயன் இல்லை. ஆயினும், கர்த்தருடைய பிள்ளைகள் வேறு அநேகர் இருக்கிறார்கள்; இவர்களுடைய மனச்சாட்சிகள் எவ்வளவு தூரம் பலவீனமாக இருக்கின்றன என்றால் கர்த்தராகிய இயேசுவின் வேலையைப்பற்றிய எந்த நிஜமான விழிப்புணர்வும் அவர்களிடம் இல்லை. ஒரு குறிப்பிட்ட பாவத்தைக்குறித்த உணர்வு அவர்களிடம் இருக்கிறதா என்று நாம் அவர்களிடம் கேட்டால், அவர்களால் எதையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. இருப்பினும், தாங்கள் தவறாக இருப்பதுபோன்ற உணர்ச்சி அவர்களிடம் எப்போதும் இருக்கிறது. தாங்கள் பலவீனமானவர்கள், உதவாதவர்கள் என்று அவர்கள் எப்போதும் உணர்கிறார்கள். அவர்கள் தங்களைப்பற்றி நினைத்துப்பார்க்கும் போதெல்லாம், அவர்கள் தங்களுடைய சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் இழந்துவிடுகிறார்கள். அவர்கள் சாத்தானுடைய குற்றச்சாட்டுகளையெல்லாம் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். சாத்தான் நமக்கு இத்தகைய உணர்ச்சியைத் தரும்போதெல்லாம், நாம் பலவீனமடைகிறோம், அதற்குமேல் நம்மால் அவனை எதிர்த்துநிற்க முடியாது.

ஆகையால், சாத்தானுடைய குற்றச்சாட்டுகளையெல்லாம் நாம் இலேசாக எடுத்துக்கொள்ளக்கூடாது. நம்மைக் குற்றப்படுத்த வேண்டும் என்பதே அவனுடைய பிரதானமான வேலையாகும். இதை அவன் இரவும் பகலும் இடைவிடாமல் செய்கிறான். அவன் நம்மை நம் மனச்சாட்சியிலும், அதைப் பலப்படுத்தமுடியாது என்று சொல்லும் அளவுக்கு அது பலவீனமாக மாறும்வரை தேவனுக்கு முன்பாகவும் குற்றப்படுத்துகிறான்.

ஒரு கிறிஸ்தவனின் அன்றாட வாழ்க்கையிலும், வேலை யிலும், மனச்சாட்சி மிகவும் முக்கியமானது. ஒருவனுடைய மனச்சாட்சி கெட்டுவிட்டதென்றால், அவன் அழிந்துவிட்டான் என்று அப்போஸ்தலனாகிய பவுல் *1* கொரிந்தியர் *8*-ல் கூறினார். அழிக்கப்படுவதென்றால் நித்திய அழிவு என்று பொருள் இல்லை; மாறாக, ஒரு நபர் கட்டப்படமுடியாது என்று பொருள். அவன் எவ்வளவு தூரத்துக்குப் பலவீனமாகிவிட்டான் என்றால், அவன் உதவாதவனாகிவிட்டான். தன் மனச்சாட்சியைத் தள்ளிவிடுகிறவன், விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்துகிறான் என்று *1* தீமோத்தேயு *1* கூறுகிறது. சேதமடைந்த கப்பலால் தொடர்ந்து பயணஞ் செய்யமுடியாது. ஆகையால், ஒரு கிறிஸ்தவனால் தேவனுக்கு முன் நிற்கமுடியுமா முடியாதா என்பது அவனுடைய மனச்சாட்சியில் ஏதாவது குற்ற உணர்வு இருக்கிறதா இல்லையா

என்பதையே சார்ந்திருக்கிறது. அவன் சாத்தா னுடைய குற்றச்சாட்டுகளை ஏற்றவுடன், அவனுடைய மனச்சாட்சியில் குற்ற உணர்வு ஏற்படுகிறது. அவனுடைய மனச்சாட்சியில் குற்ற உணர்வு ஏற்பட்டவுடன், அவனால் தன் சேவையில் தொடர்ந்துசெல்ல முடியாது, தேவனுக்காக அவனால் அதற்குமேல் யுத்தம்செய்யமுடியாது. ஆகையால், நம்மைக் குற்றப்படுத்துவதே சாத்தானுடைய பிரதானமான வேலையாகும் என்பதை நாம் உணரவேண்டும். இதுதான் நாம் ஜெயங்கொள்ளவேண்டிய வேலையாகும்.

நம்மால் சாத்தானின் குற்றச்சாட்டுகளை எப்படி ஜெயங் கொள்ளமுடியும்? "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அவர்கள் அவனை ஜெயித்தார்கள்," என்று பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் கூறுகிறது. இரத்தமே வெற்றியின் ஆதாரம். அதுவே சாத்தானை ஜெயங்கொள்வதற்கான கருவி. அவன் நம்மைக் குற்றப்படுத்தக் கூடும். ஆனால், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் நம்மைக் கழுவுகிறது என்று நாம் பதிலளிக்கமுடியும் (1 யோவான் 1:7). "சகல பாவங்கள்" என்றால் எந்தப் பாவத்தையும், அது சிறியதாக இருந்தாலும் சரி அல்லது பெரியதாக இருந்தாலும் சரி, என்று பொருள். தேவனுடைய குமாரனுடைய இரத்தம் அவைகளெல்லாவற்றி லிருந்தும் நம்மைக் கழுவுகிறது. நாம் தவறாக இருக்கிறோம் என்று சாத்தான் நம்மிடம் கூறக்கூடும். ஆனால், நம்மிடம் கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் இருக்கிறது. கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் நம்முடைய அநேகப் பாவங்களிலிருந்து நம்மைக் கழுவமுடியும். இதுதான் தேவனுடைய வசனம். தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் நம்மைக் கழுவுகிறது.

காரணமில்லாத குற்றச்சாட்டுகளை மட்டும் நாம் ஒதுக்கித் தள்ளினால் போதாது; காரணம் உள்ள குற்றச்சாட்டுகளையும் கூட நாம் ஒதுக்கித்தள்ளவேண்டும். தேவனுடைய பிள்ளைகள் ஏதாவது தவறுசெய்யும்போது, சாத்தானின் குற்றச்சாட்டுகள் இல்லை, மாறாக அவருடைய குமாரனாகிய இயேசுவின் இரத்தம் மட்டுமே நமக்குத் தேவை. விலையேறப்பெற்ற இரத்தம் குற்றச் சாட்டுக்காக இல்லை, மாறாகப் பாவத்துக்காக தேவைப்படுகிறது. நாம் பாவம்செய்தபிறகு, குற்றச்சாட்டுக்கான தேவையைக்குறித்து தேவனுடைய வசனம் ஒருபோதும் பேசுவதில்லை. நாம் நம் பாவத்தை அறிக்கைசெய்தோமா இல்லையா என்பது மட்டுமே பிரச்சினை. நாம் அறிக்கை செய்துவிட்டால், அதற்குமேல் வேறென்ன சொல்லமுடியும்? நாம் பாவம்செய்தபிறகு, அதை அறிக்கைசெய்யவில்லையென்றால், நாம் குற்றஞ்சாட்டப்பட

வேண்டியவர்கள்தான். ஆனால், எங்கே பாவம் இல்லையோ, அங்கே குற்றஞ்சாட்டுவதற்குக் காரணம் இல்லை. நாம் பாவம்செய்தபின், அறிக்கைசெய்துவிட்டால், நாம் குற்றஞ்சாட்டப் படக்கூடாது.

நீ பாவம்செய்துவிட்டால், குனிந்து தேவனிடம் அறிக்கை செய்யமுடியும். உடனே கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் உன்னைக் கழுவும். நீ எவ்வளவு பாவம் நிறைந்தவன் என்று நீ கருதினால் நீ இன்னும் அதிக பரிசுத்தமாக இருப்பாய் அல்லது பாவத்தைக்குறித்த உணர்ச்சி உன்னிடம் அதிகமாக இருந்தால் நீ இன்னும் அதிக பரிசுத்தமாக இருப்பாய் என்று எண்ணாதே. இல்லை. நீ உன்னிடம் ஒரேவொரு காரியம்தான் கேட்கவேண்டும்: கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தை நான் எப்படிக் கருதுகிறேன்? நாம் பாவம்செய்துவிட்டோம். அவருடைய இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் நம்மைக் கழுவுகிறது. "சகல பாவம்" என்றால் பெரிய பாவம் அல்லது சிறிய பாவம், நினைவுகூர்ந்த பாவம் அல்லது மறந்துபோன பாவம், தெரிந்த பாவம் அல்லது தெரியாத பாவம், மன்னிக்கப்படமுடியும் என்று நாம் நினைக்கிற பாவம் அல்லது மன்னிக்கப்படமுடியாது என்று நாம் நினைக்கிற பாவம்—எல்லாவிதமான பாவங்களும் "சகல" என்பதில் அடங்கி யுள்ளன. தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் இரத்தம் ஒன்று அல்லது இரண்டு அல்லது இன்னும் அநேகப் பாவங்களிலிருந்து மட்டும் நம்மைக் கழுவாமல், சகல பாவங்களிலுமிருந்து நம்மைக் கழுவுகிறது.

நம்மிடம் பாவம் உண்டு என்று நாம் ஒப்புக்கொள்கிறோம். நம்மிடம் பாவம் இல்லை என்று நாம் கூறவில்லை. இது எப்படியிருந்தாலும் சரி, நாம் சாத்தானுடைய குற்றச் சாட்டுகளை ஏற்றுக்கொள்வதில்லை. தேவனுக்குமுன் நாம் சுத்தமாக இருக்கிறோம். ஏனென்றால் நம்மிடம் விலையேறப் பெற்ற இரத்தம் இருக்கிறது. நாம் விலையேறப்பெற்ற இரத்தத்தை விசுவாசிப்பதை விட குற்றச்சாட்டுகளை அதிகமாக விசுவாசிக்கக்கூடாது. நாம் பாவம்செய்யும்போது, நாம் தேவனை மகிமைப்படுத்துவதில்லை; ஆனால், நாம் விலை யேறப்பெற்ற இரத்தத்தை நம்பாதபோது, நாம் அவரை இன்னும் அதிகமாக அவமதிக்கிறோம். பாவம்செய்வது அவமானமான காரியம்; ஆனால் விலையேறப்பெற்ற இரத்தத்தை விசுவாசிக்காதது அதைவிட இன்னும் அவமானமான காரியம்.

"இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்க ளாக்கப்பட்டிருக்கிறோம்..." என்று ரோமர் 5:9 கூறுகிறது. அநேகர் கர்த்தருடைய பிரசன்னத்துக்குள் வரும்போது, அவர்களுடைய இருதயத்தில் சந்தோஷம் இல்லை. தங்களால் பயனொன்றும்

இல்லை என்ற உணர்ச்சியும், தாங்கள் உள்ளே தவறாக இருக்கிறோம் என்ற உணர்ச்சியும் அவர்களிடம் இருக்கிறது. அவர்களிடம் ஒரு பொய்யான நம்பிக்கை இருப்பதே இதற்கான காரணம். தேவனுக்கு ஏறெடுக்கத் தங்களில்தாமே நேர்மறையான ஏதோவொன்று இருக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஏறெடுக்கத் தங்களில்தாமே நேர்மறையான ஒன்றும் இல்லை என்று அவர்கள் கண்டுபிடிக்கும்போது, குற்றச்சாட்டுகள் வரு கின்றன. ஒரு குற்றச்சாட்டு இதுபோன்றது: "தேவனுக்கு ஏறெடுக்க உன்னைப்போன்ற ஒரு நபரிடம் நன்மையான எதுவும் ஒருபோதும் இருக்காது." ஆனால், தேவனுக்குமுன்பாக நம்மிடம் ஆரம்பத்தில் நேர்மறையான எந்த நன்மையும் இருக்கவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். நாம் தேவனுக்கு ஏறெடுக்கத்தக்க நன்மையான எதுவும் நம்மில்தாமே இருந்ததில்லை. ஒரேவொரு காரியத்தை மட்டுமே நாம் தேவனுக்கு ஏறெடுக்கமுடிந்தது—இரத்தம். நாம் இரத்தத் தால் மட்டுமே நீதிப்படுத்தப்படமுடிந்தது. நம்மில்தாமே நேர்மறையான எந்த நீதியும் இல்லை. மீட்பின்மூலம் நாம் பெற்றுக்கொள்கிற நீதியினால் மட்டுமே நாம் நீதிமான்களாகி றோம். நாம் கிருபாசனத்திற்கு வருகிற ஒவ்வொரு முறையும், கிருபைக்காக நாம் அவரை நோக்கிப் பார்க்கலாம். இது நீதியாசனம் இல்லை, மாறாகக் கிருபாசனம். நாம் தேவனுக்கு முன் வருகிற ஒவ்வொரு முறையும், நாம் நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேறியிருக்கிறோம் என்பதல்ல, மாறாக நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் என்பதே நம் ஒரேவொரு தகுதியாகும். "சமீப காலமாக நான் கொஞ்சம் நன்றாக நடக்கிறேன். இப்போது ஜெபிக்க என்னிடம் தைரியம் இருக்கிறது," என்று சொல்லக்கூடிய கட்டத்தை ஒரு கிறிஸ்தவன்கூட அடையமுடியாது. இல்லை. நாம் தேவனுக்குமுன் வருகிற ஒவ்வொரு முறையும், இரத்தமே நம் ஒரே தளம், ஒரே நிலைமை. ஆவிக்குரிய எந்த வளர்ச்சியும் இரத்தத்தின் வீரியத்தை இடமாற்றம் செய்யமுடியாது என்பதை நாம் உணரவேண்டும். ஆவிக்குரிய அனுபவம் ஒன்றுகூட இரத்தத்தின் வேலையை ஒருபோதும் இடமாற்றம் செய்யமுடியாது. ஒருவன் அப்போஸ்தலனாகிய பவுலைப்போல அல்லது அப்போஸ்தலனாகிய யோவானைப்போல அல்லது அப்போஸ்தல னாகிய பேதுருவைப்போல ஆவிக்குரியவனாக மாறினாலுங்கூட, தேவனுக்குமுன் நிற்க இரத்தம் அவனுக்கு இன்னும் தேவைப்படும்.

சில நேரங்களில், நாம் பாவம்செய்திருக்கும்போது நம்மைக் குற்றப்படுத்த சாத்தான் வருகிறான். சில நேரங்களில், நாம் பாவம்செய்யாதிருக்கும்போதுகூட இன்னும் நம்மைக் குற்றப் படுத்த சாத்தான் வருகிறான். சில நேரங்களில், நாம் பாவம் செய்திருக்கிறோமா இல்லையா என்பது ஒரு பிரச்சினையேயில்லை;

மாறாகத் தேவனுக்கு ஏறெடுக்க நம்மிடம் நேர்மறையான நீதி இல்லை என்பதுதான் பிரச்சினை. எனவே, சாத்தான் நம்மைக் குற்றப்படுத்துகிறான். ஆயினும், நாம் தெளிவாக இருக்க வேண்டும்: இரத்தத்தினாலே மட்டுமே தவிர, வேறெதினாலும் நாம் தேவனுடைய பிரசன்னத்துக்குள் வரமுடியாது. நாம் இரத்தத்தினால் கழுவப்பட்டு, இரத்தத்தினால் நீதிப்படுத்தப்பட்டிருப் பதால் நாம் சாத்தானுடைய குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டிய எந்தக் கடமையின்கீழும் இல்லை.

விலையேறப்பெற்ற இரத்தமே ஆவிக்குரிய யுத்தத்திற்கான தளம். இரத்தத்தின் மதிப்பு நமக்குத் தெரியாவிட்டால், நம்மால் யுத்தம்செய்யமுடியாது. நம் மனச்சாட்சி பலவீனமாகிவிட்டால், நம் கதை அத்தோடு முடிந்தது. ஆகையால், நாம் குற்றமற்ற, சுத்தமான மனச்சாட்சியைப் பராமரிக்காவிட்டால், சாத்தானோடு இடைப்பட நம்மிடம் வேறு எந்த வழியும் இருக்காது. நமக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் சாத்தான் நம்மிடம் பேசும்போது, இரத்தம் என்ற ஒரே பதிலைக்கொண்டு நம்மால் அவனுடைய எல்லாக் காரணங்களுக்கும் பதிலளிக்கமுடியும். இரத்தத்தால் பதிலளிக்கமுடியாத ஒரு காரணம்கூட இல்லை. ஆவிக்குரிய யுத்தத்திற்குக் குற்றமற்ற மனச்சாட்சி தேவைப்படுகிறது. இரத்தம் மட்டுமே இப்பேர்ப்பட்ட மனச்சாட்சியை நமக்குத் தரமுடியும்.

"ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்ட பின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால்" என்று எபிரேயர் *10:2* கூறுகிறது. ஒரு கிறிஸ்தவனுடைய மனச்சாட்சியில் இதற்குமேல் பாவத்தைப்பற்றிய உணர்வு இல்லையென்றால், அது இரத்தத்தி னாலேயே. நாம் இரத்தம் என்ற தளத்தின்மேல் நிற்கும்போது, நாம் இரத்தத்தை விசுவாசிக்கும்போது, சாத்தான் அதற்குமேல் நம்மேல் வேலைசெய்யமுடியாது. நாம் பாவம்செய்துவிட்டதால் நம்மால் இனிமேல் யுத்தம்செய்ய முடியாது என்று நாம் அடிக்கடி காரணம் கூற விரும்புகிறோம். ஆனால், நாம் பாவம் நிறைந்தவர்கள் என்று கர்த்தருக்குத் தெரியும். எனவே, அவர் இரத்தத்தை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். பாவ மனிதர்களுக்காகக் கர்த்தரிடம் ஒரு வழி இருக்கிறது. ஏனென்றால், கர்த்தரிடம் இரத்தம் இருக்கிறது. ஆனால், சாத்தானுடைய குற்றச்சாட்டுகளை விருப்பமுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவனுக்காக அவரிடம் எந்த வழியும் இல்லை. சாத்தானுடைய குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவன் இரத்தத்தின் வல்லமையை மறுதலிக்கிறான். விலையேறப்பெற்ற இரத்தத்தை விசுவாசிக்கிற ஒருவன் அதே நேரத்தில் சாத்தானுடைய குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக் கொள்ளமாட்டான். ஒன்று இரத்தம் அல்லது குற்றச்சாட்டுகள்

போய்விடவேண்டும். நாம் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டால், இரத்தம் போய்விடவேண்டும்; நாம் இரத்தத்தை ஏற்றுக்கொண்டால் குற்றச்சாட்டுகள் போய்விடவேண்டும்.

கர்த்தராகிய இயேசுவே நம் பிரதான ஆசாரியராகவும், மத்தியஸ்தராகவும் இருக்கிறார் (எபி. 2:17-18; 4:14-16; 7:20-28; 8:6; 9:15; 1 யோவான் 2:1). அவர் எப்போதும் இந்த நிலைமையில் சேவித்துக்கொண்டிருக்கிறார்—பிரதான ஆசாரியராகவும், மத்தியஸ்தராகவும். சாத்தானின் குற்றச்சாட்டுகளிலிருந்து நம்மைப் பாதுகாப்பதே அவர் சேவிப்பதின் குறிக்கோளாகும். அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு மனிதனுக்கு ஒரு கணப்பொழுது மட்டுமே தேவைப்படுகிறது. ஆனால், சாத்தானின் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வது வாழ் நாள் முழுவதும் நடைபெறுகிற ஒரு காரியம். *மத்தியஸ்தர்* என்ற வார்த்தைக்குக் கிரேக்க மொழியில் "நியமிக்கப்பட்ட தற்காப்பாளர்" என்று பொருள். கர்த்தரே நம் மத்தியஸ்தர், நம் தற்காப்பாளர். கர்த்தர் நமக்காகப் பேசுகிறார். ஆனால், நாம் மத்தியஸ்தர் பக்கத்தில் நிற்கிறோமா அல்லது குற்றஞ் சாட்டுகிறவன் பக்கத்தில் நிற்கிறோமா? நம் மத்தியஸ்தர் நம்மைத் தற்காத்துக்கொண்டிருக்கும் செயலில் ஈடுபட்டிருக்கும்போது, நாம் குற்றஞ்சாட்டுகிறவனின் வார்த்தைகளை விசுவாசித்தால் அது நகைப்புக்குரியதாகும். ஒரு பிரதிவாதி குற்றவாளி இல்லை என்று ஒரு வழக்கறிஞர் தொடர்ந்து நிரூபித்துக்கொண்டிருக்கையில், பிரதிவாதி குற்றஞ்சாட்டு கிறவனை விசுவாசிப்பதில் உறுதியாக இருந்தால், அது மிகவும் நகைப்புக்குரியதாக இருக்காதா? கர்த்தராகிய இயேசுவே நம் மத்தியஸ்தர் என்பதையும், அவர் நம்மைத் தற்காத்துக்கொண்டிருக் கிறார் என்பதையும் நாம் பார்ப்போமாக. சாத்தானோடு இடைப்பட இரத்தமே ஆதாரம் என்பதை நாம் பார்ப்போமாக. நன்னடத் தையைக்கொண்டு நாம் ஒருபோதும் சாத்தானுடைய குற்றச்சாட்டு களுக்குப் பதிலளிக்கக்கூடாது. மாறாக, இரத்தத்தைக்கொண்டு நாம் பதிலளிக்க வேண்டும். நாம் இரத்தத்தின் மதிப்பை அறிந்திருந்தால், பூமியில் இன்று சமாதானமும், மகிழ்ச்சியும் நிறைந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கும்.

"ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அவர்கள் அவனை ஜெயித்தார்கள்." இந்த வார்த்தைகள் எவ்வளவு விலையேறப் பெற்றவை! சகோதரர்கள் அவனைத் தங்கள் தகுதியினாலோ அல்லது முன்னேற்றத்தினாலோ அல்லது அனுபவத்தினாலோ ஜெயங்கொள்ளவில்லை. அவர்கள் அவனை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலே ஜெயித்தார்கள். சாத்தானிடமிருந்து குற்றச் சாட்டுகள் வரும்போதெல்லாம், நாம் இரத்தத்தினால் அவைக ளோடு இடைப்படவேண்டும். ஒருதரம் நாம் இரத்தத்தை

ஏற்றுக்கொண்டால், சாத்தானுடைய வல்லமை பயனற்றுப் போய்விடும். நாம் என்னவாக இருக்கிறோமோ, அவையெல்லாம் இரத்தத்தையே சார்ந்திருக்கின்றன. நமக்கு ஒவ்வொரு நாளும் இரத்தம் தேவை. நாம் இரட்சிக்கப்பட்ட நாளில் இரத்தத்தைச் சார்ந்திருந்ததுபோலவும், இரத்தத்தை விசுவாசித்ததுபோலவும், அந்த நாளிலிருந்து நாம் தொடர்ந்து இரத்தத்தையே சார்ந்திருக்க வேண்டும், இரத்தத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டும். இரத்தமே நம் ஒரே அஸ்திபாரம். புத்திகெட்ட அநேகக் குற்றச்சாட்டுகளிலிருந்து தேவன் நம்மை விடுவிக்க விரும்புகிறார். இந்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்வதின்மூலம், நாம் தாழ்மையாக இருக்கிறோம் என்று ஒருபோதும் நினைக்கக்கூடாது. இந்தக் குற்றச்சாட்டுகளை ஜெயங்கொள்ள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் குற்றச்சாட்டுகளை ஜெயங்கொள்ளவில்லை யென்றால், நம்மால் ஒருபோதும் ஜெயங்கொள்பவர்களாக இருக்கமுடியாது. ஜெயங்கொள்பவர்கள் இரத்தத்தின் மதிப்பை அறியவேண்டும். இரத்தத்தின் ஆழமான மதிப்பு நமக்குத் தெரியாவிட்டாலுங்கூட, நாம் இன்னும் கர்த்தரிடம், "கர்த்தாவே, இரத்தத்தைப்பற்றிய உம் மதிப்பீட்டின்படி என்னிமித்தம் நீர் அதைப் பிரயோகியும்," என்று கூறமுடியும். இரத்தத்தைப்பற்றிய நம் மதிப்பீட்டின்படி இல்லை, மாறாக, இரத்தத்தைப்பற்றிய தேவ னுடைய மதிப்பீட்டின்படி நாம் சாத்தானுடைய வல்லமை யோடு இடைப்படவேண்டும்.

## அவர்களுடைய சாட்சியின் வசனம்

"அவர்களுடைய சாட்சியின் வசனத்தினாலே" சகோதரர்கள் அவனை ஜெயித்தார்கள் என்பதே இரண்டாவது காரியம். நம் மனச்சாட்சி குற்றமற்றதாயிருக்கும்போது, நம் வாயினால் சாட்சிகொடுக்கமுடியும். நம் மனச்சாட்சியில் ஒரு குற்றச்சாட்டு இருக்கும்போது, நம்மால் எதையும் பேசமுடியாது. எவ்வளவு அதிகமாக நாம் பேசுகிறோமோ, அவ்வளவு அதிகமாக நம் தொனி மெல்ல ஒலிக்கிறதாகத் தோன்றுகிறது. இங்கு சாட்சியென்றால், நமக்கு நாமே கூறிக்கொள்ளுதல் இல்லை, மாறாக மற்றவர்களுக்கு சாட்சிகூறுதல் என்று பொருள். தேவனுக்குமுன்பாக உன்னிடம் இரத்தம் இருக்கும்போது, தேவனுக்குமுன்பாக உன்னிடம் தைரியம் இருக்கும், மனிதனுக்குமுன்பாக உன்னிடம் சாட்சி இருக்கும். கிறிஸ்துவினிமித்தம் பாவிகள் இரட்சிக்கப்படமுடியும் என்றும், மனிதர்கள் ஏற்றுக்கொள்ளப்படமுடியும் என்றும் மட்டும் சாட்சிகூறாமல், தேவனுடைய இராஜ்ஜியத்தைப்பற்றியுங்கூட நீ சாட்சிகொடுப்பாய். கிறிஸ்துவில் என்ன இருக்கிறது என்பதை மற்றவர்களுக்குக் கூறுவதே "சாட்சி"யின் பொருளாகும். சாட்சியின்

வசனம் என்பது பேசப்படவேண்டிய ஒன்றாகும். ஜெயங்கொள் பவர்கள் கிறிஸ்துவின் வெற்றியை அடிக்கடி பறைசாற்றவேண்டும். இந்த உண்மையை மீண்டும் மீண்டும் கூறும்போது, சாத்தான் மிகவும் பயப்படுகிறான். பரலோக இராஜ்ஜியம் வரும் என்பது ஓர் உண்மை. கர்த்தர் இராஜா என்பது ஓர் உண்மை. கர்த்தர் வெற்றிச்சிறந்தவர், என்றென்றைக்கும் வெற்றிச்சிறந்தவர் என்பது ஓர் உண்மை. சாத்தான் தோற்றுப்போனவன் என்பது ஓர் உண்மை. பலவான் கட்டப்பட்டுவிட்டான் என்பதும், சட்டப்பிரகாரமாக ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்பட்டுவிட்டான் என்பதும் ஓர் உண்மை. கிறிஸ்து சாத்தானின் வேலையையெல்லாம் சிலுவையில் அழித்துவிட்டார் என்பது ஓர் உண்மை. இந்த எல்லா உண்மைகளையும் நாம் பறைசாற்றும்போது, நம்மிடம் சாட்சி இருக்கிறது. கிறிஸ்து இதுவாக இருக்கிறார் என்றும், கிறிஸ்து அதுவாக இருக்கிறார் என்றும் நாம் அறிக்கைசெய்யும்போது, இதுவே சாட்சியாகும்.

சாட்சியின் வசனமே சாத்தானுக்கு அதிகமான பயத்தைக் கொடுக்கிறது. சாத்தானுடன் காரணகாரியங்களைப் பேச நாம் முயலும்போது, சாத்தான் பயப்படுவதில்லை. ஆனால், நாம் உண்மைகளை அறிக்கைசெய்யும்போது அவன் நிச்சயமாகப் பயப்படுகிறான். நாம் இறையியல் பேசும்போது அல்லது வேதவாக்கியங்களை வியாக்கியானம்செய்யும்போது சாத்தான் பயப்படுவதில்லை; மாறாக, நாம் ஆவிக்குரிய உண்மைகளை பறைசாற்றும்போது அவன் நிச்சயமாகப்பயப்படுகிறான். "இயேசுவே கர்த்தர்" என்பது ஓர் ஆவிக்குரிய உண்மை. அநேகர் இயேசுவைப்பற்றி கர்த்தர் என்று பேசுகிறார்கள். இயேசு எப்படி கர்த்தர் என்று அவர்கள் விளக்குகிறார்கள். ஆனால், சாத்தான் கொஞ்சங்கூட அதற்குப் பயப்படுவதில்லை. ஆயினும், ஒருவன் விசுவாசத்தோடு "இயேசுவே கர்த்தர்" என்று அறிக்கைசெய்யும் போது, சாத்தான் பயப்படுகிறான். நம் பிரசங்கத்திற்கோ அல்லது இறையியலுக்கோ அவன் பயப்படுவதில்லை; மாறாக, அவன் நம் சாட்சியின் வசனத் திற்குப் பயப்படுகிறான்.

இயேசு என்ற பெயர் மற்ற எல்லாப் பெயர்களுக்கும் மேலானது என்பது ஓர் ஆவிக்குரிய உண்மை. நாம் இதை விசுவாசத்தோடு மனிதர்களுக்கு மட்டும் இல்லை, சாத்தா னுக்கும்கூட அறிக்கைசெய்யவேண்டும். நாம் பெரும்பாலும் சாத்தான் கேட்கவேண்டும் என்பதற்காகப் பேசுகிறோம்; அவன் கேட்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் நாம் பேசுகிறோம். இதைத்தான் நாம் சாட்சியின் வசனம் என்று அழைக்கிறோம். நாம் நம் அறையில் தனியாக இருக்கும்போதுங்கூட "இயேசுவே கர்த்தர்" என்று சத்தமாகப் பிரகடனம்செய்யலாம். "கர்த்தராகிய

இயேசு பலவானைவிடப் பலமானவர்" அல்லது "தேவனுடைய குமாரன் சாத்தானை ஏற்கெனவே கட்டிவிட்டார்" என்று நாம் கூறலாம். இதுவே நம் சாட்சியின் வசனம்.

கிறிஸ்தவர்கள் எல்லாவற்றிலும் ஜெபத்தைச் சார்ந்திருக்க வேண்டும். ஆனால், சில நேரங்களில் ஜெபத்தைவிட நம் சாட்சியின் வசனம் வீரியமுள்ளது. "எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும்," என்று மாற்கு 11:23-ல் கர்த்தராகிய இயேசு கூறினார். ஒருவன் ஜெபிப்பது நடக்கும் என்று கர்த்த ராகிய இயேசு கூறவில்லை; மாறாக, ஒருவன் சொல்வது நடக்கும் என்று அவர் கூறினார். "ஒருவனுடைய வாயிலிருந்து உடனே ஒரு கட்டுரை வெளிவரமுடியும்," என்று ஒரு சீனப் பழமொழி கூறுகிறது. ஆனால், "ஒருவனுடைய வாயிலிருந்து உடனே ஒரு சாதனை வெளிவரமுடியும்," என்று ஒரு கிறிஸ்தவனால் கூறமுடியும். தேவன் தம் வாயின் ஒரு வார்த்தையினால் வானங்களையும், பூமியையும் படைத்தார். நாம் மலைகளிடம் பேசமுடியும் என்று மாற்கு 11-லுள்ள நிகழ்ச்சி நமக்குக் காண்பிக்கிறது. நாம் விசுவாசத்தில் பேசினால் மட்டுமே ஏதாவது நடக்கும். அநேக நேரங்களில் ஜெபத்தின் வல்லமை அறிக்கையின் வல்லமையைப்போல் பலமாக இல்லை. சாத்தானோடு இடைப்பட நாம் அநேக நேரங்களில் சாட்சியின் வசனத்தைப் பயன்படுத்தவேண்டும்.

நாம் நடபடிகளின் புத்தகத்தை வாசிக்கும்போது, சாட்சியின் அநேக வசனங்களை நம்மால் பார்க்கமுடியும். மூன்றாம் அதிகாரத்தில், ஆலய வாசலில் பேதுருவும், யோவானும் முடவனைப் பார்த்தார்கள். பேதுரு செய்ததென்னவென்றால், அவனைப் பார்த்து, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட," என்று கூறினார்கள். இதுதான் சாட்சியின் வசனம் என்றழைக்கப்படுகிறது. இது சூழ்நிலையோடு இடைப்படுமாறு தேவனிடம் மன்றாடும் காரியம் இல்லை; மாறாகக் கர்த்தருடைய பெயரில் அதனுடன் நேரடியாக இடைப்படுவதாகும். நடபடிகள் 16-லும், பவுல் பிசாசுகளைத் துரத்தியபோது, அவரும் அறிக்கையின் வசனத்தைப் பயன் படுத்தினார்: "...நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்." உடனே பிசாசு புறப்பட்டுப்போயிற்று.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைச் சொல்லி நாம் இதை மேலும்

விளக்கிக்காட்டலாம். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் ஈடுபட்டிருந்த இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். ஒருநாள் அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஊருக்குச் சென்று, அங்கு கொஞ்சம் நேரம் தங்கினார்கள். பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு பெண் அங்கிருந்தாள். பிசாசைத் துரத்த அந்த இரண்டு சகோதரிகளும் தன் வீட்டுக்கு வரவேண்டும் என்று அவளுடைய குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் அவர்களை அழைத்தார். ஜெபித்தபிறகு, அவர்கள் செல்லவேண்டும் என்று உணர்ந்தார்கள். அவர்கள் அங்கு போனபோது, அந்தப் பெண் நேர்த்தியாக உடையணிந்திருந் ததையும், எல்லாம் நல்ல ஒழுங்காக இருந்ததையும் பார்த்தார்கள். அந்தப் பெண் உண்மையிலேயே பிசாசு பிடித்தவள்தானா என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். பின்பு, அவர்கள் அவளுக்குப் பிரசங்கித்தார்கள். அவள் மிகவும் தெளிவாக இருந்ததுபோல் தோன்றியது. (உண்மையில் பிசாசுகள் தெளிவாக இருக்க முடியாது. அவை அப்படி இருப்பதுபோல் நடிக்கின்றன.) சூழ்நிலையைப்பற்றி இரண்டு சகோதரிகளும் விநோதமாக உணர்ந்தார்கள். "நீ கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக் கிறாயா?" என்று அவர்கள் அந்தப் பெண்ணிடம் கேட்டார்கள். "நான் பல வருடங்களாக விசுவாசித்திருக்கிறேன்," என்று அவள் பதிலளித்தாள். இந்தப் பதிலைக் கேட்டு, இரண்டு சகோதரிகளும் உண்மையாகவே குழம்பிப்போனார்கள். அந்தச் சூழ்நிலையில் என்ன செய்யவேண்டும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. "இயேசு யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று அவர்கள் அவளிடம் கேட்டார்கள். "இயேசு யார் என்று நீங்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்றால், வந்து, பாருங்கள்," என்று அவள் சொன்னாள். அப்போது அவள் அவர்களை முன்னறை யிலிருந்து வீட்டின் பின்புறத்திலிருந்த இன்னோர் அறைக்கு அழைத்துச் சென்றாள். ஒரு விக்கிரகத்தைச் சுட்டிக்காட்டி, "இதுதான் இயேசு. நான் அவரில் அநேக ஆண்டுகள் விசுவாசம் வைத்திருக் கிறேன்," என்று அவள் கூறினாள். அப்போது, தான் ஒரு சாட்சி கொடுக்கவேண்டும் என்று ஒரு சகோதரி உணர்ந்தாள். அவள் சொன்ன சாட்சி நாம் இங்கு பேசிக்கொண்டிருக்கிற வகையான சாட்சியாகும் என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள்.

சகோதரி பெண்ணின் கையைப் பிடித்து (பெண்ணிடம் இல்லை, மாறாகப் பிசாசிடம்) "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தேவனுடைய குமாரன் பரலோகத்திலிருந்து வந்து பூமியில் முப்பத்து மூன்றரை ஆண்டுகள் ஒரு மனிதனாக வாழ்ந்தார் என்பது உனக்கு நினைவிருக்கிறதா? உன்னைப்போன்ற பிசாசுகளை அவர் அநேகமுறை விரட்டினார். நீ அவரைத் தாக்கவும், காயப்படுத்தவும் விரும்பினாய் என்பது உனக்கு நினைவிருக்கிறதா? அவரைக்

கொல்லவும், அவரை சிலுவையில் அறையவும், நீயும் உன்னுடையவைகளும் எழும்பினீர்கள். நீ அந்த நேரத்தில் சந்தோஷமாக இருந்தாய். அவர் மூன்று நாட்களுக்குப்பிறகு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, உன் எல்லா வல்லமையையும் முறிப்பார் என்பது உனக்குத் தெரியவில்லை. நீ சாத்தானின் கையின்கீழ் இருக்கும் ஒரு பொல்லாத ஆவியேதவிர வேறொன்றும் இல்லை. தேவனுடைய குமாரன் பாதாளத்திலிருந்து ஏறிவந்தபோது, தேவன் பரலோகத்திலிருந்து சகல ஜீவராசிகளையும், சகல ஆவிகளையும் பார்த்து, 'இதுமுதல் இயேசு என்ற பெயர் எல்லா பெயருக்கும் மேலான பெயர். அவருடைய பெயர் சொல்லப்படும் போதெல்லாம் எல்லா நாவுகளும் அறிக்கை செய்யவேண்டும், எல்லா முழங்கால்களும் முடங்கவேண்டும்' என்று அறிவித்தார். எனவே, இவளிடமிருந்து வெளியே வருமாறு இயேசுவின் பெயரில் கட்டளையிடுகிறேன்," என்று கூறினாள். சகோதரி இந்தப் பிரகடனத்தைச் செய்தபோது, பிசாசு பெண்ணைத் தரையில் தள்ளிவிட்டு, ஓடிவிட்டது.

சகோதரி கேட்ட "உனக்கு நினைவிருக்கிறதா?" என்ற கேள்வி மிகவும் முக்கியமானது. அந்தக் கேள்வியை அவள் திரும்பத் திரும்பக் கேட்டதுதான் அவளுடைய சாட்சி. நாம் சாத்தானுக்குப் பிரசங்கம்பண்ணினால் அவனால்கூட பிரசங்கிக்கமுடியும். அவனால் அதைக் கொஞ்சம் நன்றாகவே செய்யமுடியும். நாம் அவனிடம் காரணகாரியங்களைப் பேசினால், அவனிடம் எல்லா வகையான காரணங்களும் இருக்கின்றன. ஆனால், நாம் இந்த உண்மைகளை, குறிப்பாக ஆவிக்குரிய உண்மைகளைப் பேசினால், சாத்தானால் ஒன்றும் செய்யமுடியாது.

வேதவாக்கியங்களில் உள்ள உண்மைகள் நமக்குத் தெரிந்திருக்கவேண்டும், அவைகளை நாம் விசுவாசிக்க வேண்டும். எதிரியின் எல்லாத் தாக்குதல்களிலிருந்தும் தேவன் நம்மைப் பாதுகாக்குமாறு நாம் இரத்தத்தால் மூடப்பட வேண்டும். அதன்பின் நாம் சாத்தானிடம் பேசக்கூடும். நாம் சாட்சியின் வசனத்தை அவனிடம் பேசும்போது சாத்தான் பயப்படுகிறான். நம் கிறிஸ்தவ அனுபவத்தில், சில நேரங்களில் நம்மால் தேவனிடம் ஜெபிக்கமுடியாத அளவுக்கு நாம் பலவீனமாக இருக்கிறோம். இப்பேர்ப்பட்ட நேரங்களில் நாம் ஆவிக்குரிய உண்மைகளை, வெற்றிகரமான உண்மைகளை, நினைவில்கொள்ளவேண்டும். கர்த்தராகிய இயேசு வெற்றிச்சிறந்தவர் என்றும், இயேசுவே கர்த்தர் என்றும் நாம் சாத்தானிடமும், அவனுடைய பிசாசுகளிடமும் பிரகடனம் செய்யவேண்டும். இப்பேர்ப்பட்ட பிரகடனமே சாட்சி, சாட்சியே பிரகடனம். நாம் என்ன பிரகடனம்செய்கிறோம்? இயேசுவே கர்த்தர் என்றும், கர்த்தர் வெற்றிச்சிறந்தவர் என்றும்,

சாத்தான் அவருடைய பாதங்களின்கீழே மிதிக்கப் பட்டான் என்றும் நாம் பிரகடனம்செய்கிறோம். சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், எதிரியின் சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் கர்த்தர் நமக்கு அதிகாரம் அளித்திருக்கிறார் என்றும் நாம் மேலும் பிரகடனம்செய்கிறோம். இதுவே சாட்சியின் வசனம். சாட்சியின் வசனம் சாத்தான் தன் தளத்தை இழக்கும்படிச் செய்கிறது. நாம் சாட்சியின் வசனம் கொடுக்கும்போது, சாத்தானுக்குத் தர்மஅடி கொடுக்கிறோம். கர்த்தருடைய வேலை நம்மைப் பாதுகாக்க நமக்கு இரத்தத்தை மட்டும் தரவில்லை, நாம் சாத்தானைத் தோற்கடிக்க சாட்சியின் வசனத்தையும் தந்திருக்கிறது.

## நம் ஆத்தும ஜீவனை நேசிக்காதிருத்தல்

ஜெயங்கொள்வதற்கான ஆதாரத்தைப்பற்றி நாம் பேசியிருக்கிறோம். ஆனால், ஜெயங்கொள்பவர்களின் அனுபவம் என்ன? அவர்கள் சோதனைகளைச் சந்திக்கிறார்கள், அநேகக் கஷ்டங்களை எதிர்கொள்கிறார்கள். இருப்பினும் திருவெளிப் பாடு 12:11, "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும்...தங்கள் ஜீவனையும் பாராமல்..." என்று கூறுகிறது. இதுவே யுத்தத்தில் ஜெயங்கொள்பவர்களின் மனப்பாங்காகும். இந்த வசனத்தில் "ஜீவன்" என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஒன்று பௌதீக ஜீவனைக் குறிக்கிறது. மற்றொன்று ஆத்துமாவின் வல்லமையைக் குறிக்கிறது. ("ஜீவன்" என்ற வார்த்தையை "ஆத்தும-ஜீவன்" என்று மொழிபெயர்க்கலாம்.) நாம் ஆத்துமாவின் வல்லமையை அல்லது இயற்கையான திறமையைப் பரிசீலிப்போம்.

நம் சொந்தப் பலத்தில் நம்மை செயல்பட வைப்பதே சாத்தான் நம்மோடு இடைப்படுவதற்கான மிகச் சிறந்த வழி யாகும். நாம் நம்மில்தாமே அசையவேண்டும் என்று சாத்தான் விரும்புகிறான். நாம் தேவனுக்காகச் செய்யும் வேலையில் நம் சொந்தத் திறமையையும், மாம்சப்பிரகாரமான சக்தியையும் பயன்படுத்த வேண்டும் என்று அவன் விரும்புகிறான்.

இயற்கையான திறமை என்றால் என்ன? நம்மிடத்தில் ஆரம்பத்தில் இருந்த திறமையே, சிலுவையினால் ஒருபோதும் கையாளப்படாத திறமையே இயற்கையான திறமையாகும். இது நம் குணத்தோடு சேர்ந்துசெல்கிறது. ஒருவனுடைய இயற்கையான திறமை அவனுடைய புத்திசாலித்தனமாக இருக்கக்கூடும். இன்னொருவனுடைய இயற்கையான திறமை அவனுடைய பேச்சுத்திறமையாக இருக்கக்கூடும். பரிசுத்த ஆவியிடமிருந்து விசேஷமான எந்த வல்லமையும் பெறாமல் அவனால் நன்றாகப் பேசமுடியும். ஆயினும், சிலுவையினால் ஒருபோதும்

கையாளப்படாத இயற்கையான திறமையைக் கொண்டு மனிதனால் தேவனைச் சேவிக்கமுடியாது. மனிதன் தன் இயற்கையான திறமையை உள்ளே கொண்டுவருவதே சபையின் தோல்விக்கான காரணமாகும். கர்த்தர் இல்லாமல் நாம் எதையாவது செய்துவிடுவோமோ என்று பயந்து நடுங்கக்கூடிய இடத்திற்கு நாமெல்லாரும் கொண்டுவரப்பட வேண்டும். நாம் இப்பேர்ப்பட்ட நபர்களாக இருக்க வேண்டும்—வெறுமனே இப்பேர்ப்பட்ட காரியங்களைப் பேசுகிறவர்களாக இல்லை, மாறாக உண்மையில் இப்பேர்ப்பட்ட நபர்களாக இருத்தல். அப்போது, நாம் தேவனுடைய கரத்தில் பயனுள்ளவர்களாக இருப்போம்.

ஒருவன் தான் பரிசுத்தமாக இருப்பதாக நடிப்பதற்கு நாங்கள் யாரையும் உற்சாகப்படுத்தவில்லை. இதனால் எந்தப் பயனும் இல்லை. ஏனென்றால், இது கிறிஸ்துவிடமிருந்து வரவில்லை. ஒரு மனிதனில் இருக்கும் இயற்கையான எல்லாவற்றையும் தேவன் உடைக்க விரும்புகிறார் என்று நாங்கள் கூறுகிறோம். நம் சுயத்திலிருந்து வருகிற எல்லா மூலக்கூறுகளிலிருந்தும் நாம் வெட்டப்படும்போது மட்டுமே, கிறிஸ்து வெளியரங்கமாவார். சிலுவையின்மூலம் சுயத்தை இரத்துசெய்ய நாம் தேவனை அனுமதிக்கவேண்டும். ஒரு நாள் நம் இயற்கையான ஜீவனின் முதுகெலும்பை உடைக்க நாம் தேவனை அனுமதிக்கவேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக, துண்டு துண்டாக, இந்தக் காரியத்தோடு இடைப்பட நாம் முயலக்கூடாது. புறம்பான காரியங்களோடு மட்டும் இடைப்பட்டுவிட்டு, உள்ளான இயற்கையான ஜீவனைத் தொடாமல் விட்டுவிடுவது பயனற்றது மட்டும் இல்லை, அதற்கு மாறாக அது நம்மைப் பெருமைக்காரர்களாகவும் ஆக்கிவிடும். நாம் நம்மை மிகவும் திருப்திகரமானவர்களாகக் கருதுவோம்; இருப்பினும், நம் உள்ளான நிலைமையோ இடைப்படுவதற்கு இன்னும் கஷ்டமாக இருக்கும்.

நன்மைசெய்வதற்கான நம் பலமும், தேவனை சேவிப்பதற்கான நம் திறமையும் உடைக்கப்பட்டுவிட்டன என்று சொல்லும் நாள் வரவேண்டும். அப்போது நம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்று தேவனுக்கும், மனிதனுக்கும் முன்பாக நாம் அறிக்கை செய்வோம். இதுமுதல், கிறிஸ்துவால் தம் வல்லமையை நம்மேல் வெளியரங்கமாக்கமுடியும். நம் இயற்கையான திறமையைக் கொண்டு சபையில் நம்மால் எதையும்செய்யமுடியாது என்ற இடத்திற்குத் தேவன் நம்மெல்லாரையும் கொண்டுவரவேண்டும். தங்களுடைய உள்நோக்கம் சரியாக இருக்கும்வரை, அது போதும் என்று அநேகர் நினைக்கிறார்கள். ஆனால், உண்மை இதுவல்ல. நீ வேலைசெய்துகொண்டிருக்கிறாய் என்று கூறும்போது, "எதனால் நீ வேலைசெய்கிறாய்?" என்று கர்த்தர் கேட்பார். நீ வைராக்கிய

மானவன் என்று கூறினால், "உன் வைராக்கியம் எங்கிருந்து வருகிறது?" என்று கர்த்தர் கேட்பார். உன்னிடம் வல்லமை இருக்கிறது என்று நீ கூறினால், "உன் வல்லமையின் ஊற்று எது?" என்று கர்த்தர் கேட்பார். நீ என்னசெய்கிறாய் என்பதல்ல கேள்வி, நீ எதைக்கொண்டு அதைச் செய்கிறாய் என்பதுதான் கேள்வி. காரியம் நல்லதா இல்லையா என்பதல்ல பிரச்சினை, நன்மைத்தனத்தின் ஊற்று எது என்பதுதான் பிரச்சினை.

நாம் சிலுவையை அனுபவிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நம்முடன் இடைப்படுவதே சிலுவையின் குறிக்கோள். எனவே, நாம் நாமாகவே அசையத் துணியமாட்டோம். வெறுமனே சிலுவையைப்பற்றிய செய்தியைப் பேசுவதோ அல்லது சிலுவையைப்பற்றிய செய்தியைக் கேட்பதோ பயனற்றது. சிலுவையினூடாய்ச் சென்றவர்களும், சிலுவையினால் கையாளப் பட்டவர்களும் தேவனுக்குத் தேவை. நம் செய்தி சரியாக இருந்தால் மட்டும் போதாது. "நம்மைப்பற்றிய காரியம் என்ன? நாம் எத்தகைய நபர்?" என்று நாம் கேட்க வேண்டும். "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே யன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன். அல்லாமலும் நான் பலவீனத் தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் நான் உங்களிடத்தில் இருந்தேன்...என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது," என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார் (1 கொரி. 2:2-5). இந்த வசனங்களின் முதல் பகுதி பவுலின் செய்தியைக் குறிக்கிறது. கடைசிப் பகுதி பவுல் என்ற நபரைக் குறிக்கிறது. பவுலைப்போன்ற ஒரு நபர் பேச எழுந்துநிற்கும்போது, அவர் வளமாக உணரவேண்டும் என்றும், தன் சொந்த வள ஆதாரங்கள் நிறைந்தவராக இருக்கவேண்டும் என்றும் நாம் பெரும்பாலும் நினைக்கிறோம். ஆனால், சிலுவையே பவுலின் செய்தியாக இருந்தது, அவர்தாமே பலவீனத்தோடும், பயத்தோடும், அதிகமான நடுக்கத்தோடும் இருந்தார். நாம் சிலுவையை அறியும்போதெல்லாம், பலவீனத்திலும் பயத் திலும் அதிக நடுக்கத்திலும் இருப்போம். நாம் சிலுவையினால் கையாளப்பட்டிருந்தால், நம்மிடம் எந்தத் தன்னம்பிக்கையும் இருக்காது, நாம் மேன்மைபாராட்டத் துணியமாட்டோம். நாம் மிகவும் திறமைசாலி என்று கருதி பெருமைப்பட்டால், நமக்கு சிலுவையைப்பற்றி ஒன்றும் தெரியாது.

தேவனிடமிருந்து வராத காரியங்களை எடுத்துப்போடுவதே நம்மில் சிலுவையின் அனுபவம்சார்ந்த வேலையாகும். தேவ னுக்குரிய காரியங்களை மட்டுமே சிலுவை விட்டுவைக்கிறது.

தேவனிடமிருந்து வருபவைகளை அதனால் அசைக்கமுடியாது. ஆனால், மனிதனுக்குரிய எல்லாம் அதற்குமுன் வல்லமை யற்றவை. மக்களை இரட்சிப்புக்குள் நடத்த கடந்த காலத்தில் தங்களிடம் பல்வேறு வழிகள் இருந்ததாகவும், ஆனால் சிலுவையின் இடைப்படுதலை அனுபவிக்க ஆரம்பித்தபிறகு சிலுவை தங்களுடைய பல்வேறு வழிகளோடு இடைப்பட் டிருப்பதாகவும், இப்போது தங்களால் ஒன்றுமே செய்ய முடியாததுபோல் தோன்றுவதாகவும் சில சகோதரர்கள் கூறி யிருக்கிறார்கள். முன்பு அவர்கள் செய்தது அவர்களிடமிருந்தே வந்தது என்று இது நிரூபிக்கிறது. ஏனென்றால், தேவனுக் குரியதையெல்லாம் சிலுவையினால் கொல்லமுடியாது. சிலுவையினால் அழிக்கப்படமுடியும் என்கிற எதுவானாலும் நிச்சயமாக மனிதனுக்குரியதாகத்தான் இருக்கவேண்டும். சிலுவையினூடாய்ச் சென்று மீண்டும் எழும்பிவருகிறது தேவ னுக்குரியதாகும்; எழும்பிவரமுடியாத எதுவும் மனிதனுக் குரியதாகும். கர்த்தராகிய இயேசு தேவனுக்குரியவர். ஏனென் றால், அவர் சிலுவையினூடாய்ச் சென்றபிறகு, அவரால் மீண்டும் எழும்பிவரமுடிந்தது. ஆத்தும ஜீவனுக்குரிய எதையும் அல்லது மாம்சத்தின் ஜீவனுக்குரிய எதையும் நாம் நேசிக்கக் கூடாது. அவையெல்லாம் மரணத்துக்குள் செல்லட்டும். இப்பேர்ப்பட்ட ஜீவனுக்குரிய எதுவும் நம்மில் நிலைத்திருக்க நாம் அனுமதிக்கக்கூடாது. ஆட்டுக்குட்டியின் இரத்தமும், நம் சாட்சியின் வசனமுமே ஜெயங்கொள்வதற்கான ஆதாரம். எந்த வகையிலும் நாம் நம்மால்தாமே வாழமாட்டோம் என்பதே நம் மனப்பாங்காகும்; நாம் நம் சொந்தத் திறமையை மதிக்கமாட்டோம்; நாம் எந்தத் தன்னம்பிக்கையும் கொண் டிருக்கமாட்டோம். நாம் பயமும், நடுக்கமும் நிறைந்த மனிதர்களாக வாழவேண்டும். நாம் எப்பேர்ப்பட்ட ஆற்றலற்ற சிருஷ்டிகள் என்பதை உணரவேண்டும்.

நாம் பௌதீக ஜீவனை வாழவில்லை என்பது நம் ஆத்தும ஜீவனை நேசிக்காதிருத்தல் என்பதின் இன்னொரு பொரு ளாகும். நம் ஜீவன் போவதாயிருந்தாலுங்கூட நாம் தேவனுக் காக நிற்கவேண்டும். யோபுவின் புத்தகத்தில், சாத்தான் தேவனைப் பார்த்து, "தோலுக்குப் பதிலாக தோலையும், தன் ஜீவனுக்குப் பதிலாக தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனுஷன் கொடுத்துவிடுவான்," என்று கூறினான் (2:4). மனிதன் எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் ஜீவனை மதிக்கிறான் என்று சாத்தானுக்குத் தெரியும். ஆனால், ஜெயங்கொள்பவர்கள் தங்கள் ஜீவன்களை நேசிப்பதில்லை என்று தேவன் கூறினார். ஜெயங்கொள்பவனின் மனப்பாங்கு என்னவென்றால் சாத்தான்

தனக்கு என்ன செய்வான் என்பதைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. சாத்தான் அவனுடைய ஜீவனை எடுத்துக்கொண்டால்கூட, அவன் சாத்தானுக்கு ஒருபோதும் பணியாமல், எப்போதும் தேவ னுக்கு உத்தமமாக இருப்பான். ஜெயங்கொள்பவனின் மனப் பாங்கு எப்படி இருக்கிறதென்றால், "உம்நிமித்தம், நான் கைவிடாத ஒரு காரியம்கூட இல்லை, என் ஜீவனையும்கூட கைவிடுவேன்" என்று அவனால் கர்த்தரிடம் கூறமுடிய வேண்டும்.

## அத்தியாயம் ஐந்து

## பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேம்

ஆதியாகமம் 2-லுள்ள அதே பெண்ணைத்தான் எபேசியர் 5-லும், திருவெளிப்பாடு 12-லும் நாம் பார்க்கிறோம் என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். இப்போது, திருவெளிப்பாடு 21, 22-ல் காணப்படுகிற இன்னொரு பெண்ணைப் பார்ப்போம்.

அவர்களுக்கிடையே நீண்ட தூரம் இருந்தாலுங்கூட, திருவெளிப்பாட்டின் கடைசி இரண்டு அதிகாரங்கள், ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களுக்கு ஒத்திருக்கின்றன. ஆதியாகமத்தில் தேவன் வானத்தையும், பூமியையும் படைத்தார். திருவெளிப்பாட்டின் கடைசி இரண்டு அதிகாரங்களில் புதிய வானமும், புதிய பூமியும் இருக்கின்றன. ஆதியாகமத்தில் ஏதேன் தோட்டத்திலிருந்து ஒரு நதி பாய்ந்தோடுகிறது. திருவெளிப்பாட்டில் தேவனும், ஆட்டுக்குட்டி யானவரும் இருக்கிற சிங்காசனத்தி லிருந்து ஜீவத் தண்ணீருள்ள ஒரு நதி பாய்ந்தோடுகிறது. ஆதியாகமத்தில் பொன்னும், முத்தும் (பிதோலாகும்), ஒரு விலையேறப்பெற்ற கல்லும் (கோமேதகமும்) இருக்கின்றன. திருவெளிப்பாட்டில் பொன்னும், முத்தும், எல்லா வகையான விலையேறப்பெற்ற கற்களும் இருக்கின்றன. ஆதியாகமத்தில் ஏவாள் ஆதாமின் மனைவி. திருவெளிப்பாட்டில் ஆட்டுக் குட்டியானவருக்கு ஒரு மனைவி இருக்கிறாள். ஆட்டுக்குட்டி யானவரின் மனைவி புதிய எருசலேம். தேவனுடைய நித்திய நோக்கம் இந்தப் பெண்ணில் நிறைவேறுகிறது. ஆதியாகமம் 3-ல் மனிதனுடைய வீழ்ச்சியைத் தொடர்ந்து மரணமும், நோயும், துன்பமும், சாபமும் வந்தன. ஆனால், திருவெளிப்பாடு 21-ல் புதிய எருசலேம் பரலோகத்திலிருந்து இறங்கிவரும்போது, அதற்குமேல் மரணமோ, துக்கமோ, அழுகையோ, வேதனையோ இல்லை. ஏனென்றால், முந்தினவைகளெல்லாம் ஒழிந்து போயின. நாம் வேதவாக்கியங்களைக் கவனமாக வாசித்தால், ஆதியாகமம் 1—3 மெய்யாகவே திருவெளிப்பாடு 21, 22க்கு ஒத்திருக்கின்றன என்று நாம் காண்போம். காலம் என்ற வான்வெளியின் இரு அற்றங்களிலும் அவை ஒன்றையொன்று சந்திக்கின்றன.

இப்போது நாம் நான்கு பெண்களைப் பார்த்திருக்கிறோம்: ஆதியாகமம் 2-ல் ஏவாள், எபேசியர் 5-ல் மனைவி (சபை), திருவெளிப்பாடு 12-ல் தரிசனத்தில் பெண், திருவெளிப்பாடு 21-ல் ஆட்டுக்குட்டியானவரின் மனைவி. இந்த நான்கு

பெண்களும் உண்மையில் ஒரு பெண்ணே. ஆனால், அவளுடைய வரலாற்றை நான்கு கட்டங்களாக நாம் பிரிக்கலாம். அவள் தேவனுடைய திட்டத்தில் கருத்தரிக்கப்பட்டபோது, ஏவாள் என்றழைக்கப்பட்டாள். அவள் மீட்கப்பட்டு, பூமியில் கிறிஸ்துவை வெளியரங்கமாக்கும்போது சபை என்றழைக்கப்படுகிறாள். அவள் பெரிய வலுசர்ப்பத்தால் சித்திரவதை செய்யப்படும்போது, தரிசனத்தில் உள்ள பெண். அவள் நித்தியத்தில் முழுமையாக மகிமைப்படுத்தப்படும்போது, ஆட்டுக்குட்டியானவரின் மனைவி. இந்த நான்கு பெண்களும் தேவனுடைய குறிக்கோளை நித்தியத்திலிருந்து நித்தியம்வரை வெளிப்படுத்துகிறார்கள். ஆதியாகமம் 2-லுள்ள பெண் கடந்த நித்தியத்தில் தேவனுடைய இருதயத்தில் திட்டமிடப்பட்ட பெண். திருவெளிப்பாடு 21-லுள்ள பெண் எதிர்கால நித்தியத்தில் தேவனுடைய குறிக்கோளை நிறைவேற்றப்போகிற பெண். இதற்கிடையேயுள்ள இரண்டு பெண்களில் ஒன்று தேவனால் கிறிஸ்துவுக்காக ஆயத்தமாக்கப் பட்ட சபை, மற்றொருத்தி கடைசி காலத்தில் ஆண்பிள்ளையைப் பெற் றெடுக்கும் பெண். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இந்த நான்கு பெண்களும் ஒரே பெண்ணின் வரலாற்றின் நான்கு கட்டங்களைக் காண்பிக்கிறார்கள்: ஒரு கட்டம் நித்தியத்தில் இருக்கிறது, இரண்டு கட்டங்கள் நித்தியங்களுக்கிடையே இருக்கின்றன, இன்னொரு கட்டம் எதிர்கால நித்தியத்தில் இருக்கிறது. இந்த நான்கு பெண்களையும்பற்றி நாம் தனித்தனியாகப் பேசும்போது, அவர்கள் வித்தியாசமானவர்களாகத் தோன்றினாலுங்கூட, நாம் அவர்களை ஒன்றாகச் சேர்க்கும்போது அவர்கள் ஒரே பெண்தான். ஆட்டுக் குட்டியானவரின் மனைவியே எபேசியர் 5-ல் கூறப்பட்டுள்ள பெண். கர்த்தராகிய இயேசுவே ஆட்டுக்குட்டியானவராக இருப்பதால், எபேசியர் 5-ல் கூறப்பட்டுள்ள பெண் ஆட்டுக் குட்டியானவரின் மனைவியாக இருப்பதைவிட வேறு யாராகவும் இருக்கமுடியாது. எபேசியர் 5-ல் உள்ள பெண்ணும்கூட ஏவாளுக்கு ஒப்பிடப்படுகிறாள். ஏவாளுங்கூட திருவெளிப்பாட்டிலுள்ள ஆட்டுக்குட்டியானவரின் மனைவிக்கு ஒப்பிடப்படுகிறாள். முழுச் சபையின் வேலையைப் பிரதிநிதித் துவப்படுத்துகிற வேலையைச் செய்கிற ஜெயங்கொள் பவர்கள் இருக்கும்போது, திருவெளிப்பாடு 12-ல் உள்ள பெண் திரு வெளிப்பாடு 21-ல் உள்ள பெண்ணை அறிமுகப்படுத்துவாள். இதன் விளைவாக, எதிர்கால நித்தியத்தில் தேவன் மெய்யாகவே ஒரு பெண்ணை, சாத்தானோடு முழுமையாக இடைப்பட்டுள்ள ஆள்கின்ற ஒரு பெண்ணை, அடைவார். தேவன் மெய்யாகவே ஆட்டுக்குட்டியானவருக்காக ஒரு மனைவியை அடைவார். அவருடைய குறிக்கோள் நிறைவேறும். திருவெளிப்பாடு 12-

லுள்ள பெண் எப்படி திருவெளிப்பாடு 21-லுள்ள பெண்ணாக மாறுகிறாள் என்று நாம் பார்ப்போம்.

## பாபிலோனின் வீழ்ச்சி

திருவெளிப்பாடு 17:1-3லும், 21:9-10லும் பேசப்பட்டுள்ள இரண்டு பெண்களில் ஒருத்தி மகா வேசி என்றழைக்கப் படுகிறாள், மற்றவள் மணவாட்டி என்றழைக்கப்படுகிறாள். "ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணி னார்களே..." என்று திருவெளிப்பாடு 17:1 கூறுகிறது. "பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன்," என்று திருவெளிப்பாடு 21:9 கூறுகிறது. "ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டு போனான்...அப்பொழுது ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்," என்று திருவெளிப்பாடு 17:3 கூறுகிறது. பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருவதை எனக்குக் காண்பித்தான்," என்று திருவெளிப்பாடு 21:10 கூறுகிறது. வேதவாக்கியங்களை எழுத பரிசுத்த ஆவி மனிதனை ஏவியபோது, நாம் தெளிவான ஒரு சித்திரத்தைப் பெறுமாறு, இந்த இரண்டு பெண்களையும் சுட்டிக்காட்டுகிற இணையான அமைப்பு முறையை அவர் வேண்டுமென்றே பயன்படுத்தினார்.

நாம் முதலாவது வேசியோடு தொடர்புடைய காரியங்களைப் பரிசீலிப்போம். திருவெளிப்பாடு 17, 18-ல் பேசப்பட்டுள்ள வேசி பாபிலோன்; அவளுடைய செயல்கள் முற்றுமுடிய தேவனுக்கு அருவருப்பாக இருக்கின்றன. அவளுடைய நடத்தை தேவனுக்கு ஏன் இப்பேர்ப்பட்ட அருவருப்பாக இருக்கிறது? பாபிலோன் எதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது? பாபிலோனின் கோட்பாடு என்ன? தேவன் ஏன் பாபிலோனோடு இடைப்படுகிறார்? ஆட்டுக்குட்டியான வரின் மனைவி தோன்றுவதற்குமுன் பாபிலோன் நியாயந்தீர்க்கப் படும்வரை காத்திருக்கவேண்டிய அவசியம் என்ன? நாம் மெய்யாகவே வேதவாக்கியங்களின்படி பாபிலோனைப் பார்க்குமாறு தேவன் தாமே நம் கண்களைத் திறப்பாராக.

பாபிலோன் என்ற வார்த்தை 'பாபேல்' என்ற வார்த்தையி லிருந்து வருகிறது. வேதாகமத்தில் பாபேல் கோபுரத்தின் கதை நமக்குத் தெரியும். பாபேல் கோபுரத்தின் கோட்பாட்டில் வானத்தை

எட்டும் அளவுக்குப் பூமியிலிருந்து ஏதோ வொன்றைக் கட்ட முயற்சிசெய்தல் சம்பந்தப்பட்டிருக்கிறது. மனிதர்கள் இந்தக் கோபுரத்தைக் கட்டியபோது, அவர்கள் செங்கற்களைப் பயன்படுத்தி னார்கள். செங்கல்லுக்கும், கல்லுக்கும் இடையே அடிப்படையான ஒரு வித்தியாசம் இருக்கிறது. கல் தேவனால் உண்டாக்கப்பட்டது; செங்கற்கள் மனிதனால் உண்டாக்கப்படுகின்றன. செங்கற்கள் மனிதனுடைய கண்டுபிடிப்பு, மனிதனுடைய உற்பத்திப்பொருள். பாபிலோனின் அர்த்தம் வானத்தை எட்டும் அளவுக்கு ஒரு கோபுரத்தைக் கட்டும் மனிதனுடைய சொந்த முயற்சிகளோடு தொடர்புடையது. பாபிலோன் மனிதனுடைய திறமையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அது பொய்யான கிறிஸ்தவத்தை, பரிசுத்த ஆவியானவர் அதிகாரத்தைக் கொண்டிருக்க அவரை அனுமதிக்காத கிறிஸ்தவத்தை, பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அது பரிசுத்த ஆவியின் நடத்துதலைத் தேடுவதில்லை; அது எல்லாக் காரியங்களையும் மனித முயற்சியால் செய்கிறது. எல்லாம் மனிதனால் சுடப்பட்ட செங்கற்களால் ஆனது. எல்லாம் மனிதனின் நடவடிக்கையையே சார்ந்திருக்கிறது. இந்தக் கோட்பாட்டின்படியானவர்கள் தாங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப் பதைப் பார்ப்பதில்லை; அதற்குப் பதிலாக, அவர்கள் கர்த்தருடைய வேலையைத் தங்கள் இயற்கையான திறமையால் செய்ய முயல்கிறார்கள். "கர்த்தாவே, நீர் எங்களுக்குக் கிருபை தராவிட்டால், எங்களால் ஒன்றும் செய்யமுடியாது," என்று மெய்யாகவே சொல்லக்கூடிய இடத்தில் அவர்கள் நிற்பதில்லை. மனிதனுடைய திறமையால் ஆவிக்குரிய காரியங்களை நிறைவாக்கமுடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். வானம்வரை எட்டும் ஏதோவொன்றைப் பூமியில் ஸ்தாபிப்பதே அவர்களுடைய நோக்கம்.

ஆயினும், தேவனால் இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருவனிடம் கொஞ்சம் தாலந்து இருக்கிறது; கொஞ்சம் இறையியலைப் படித்தபிறகு தன்னால் பிரசங்கிக்க முடியும் என்று அவன் நினைக்கிறான். இது என்ன? செங்கற்கள்! மிகவும் புத்திசாலியான இன்னொருவன் கொஞ்சம் உதவியைப் பெறுகிறான்; அவனிடம் கொஞ்சம் அறிவு இருக்கிறது; உடனே அவன் ஒரு கிறிஸ்தவ வேலையாளாக மாறிவிடுகிறான். மீண்டும், இது என்ன? ஒரு குறிப்பிட்ட மனிதனால் காரியங்களைச்செய்ய திறமை இருக்கிறது; எனவே, அவனை அழைத்து, சபையின் விவகாரங்களைக் கவனித்துக்கொள்ளுமாறு கேட்கிறோம். இந்தக் காரியங்க ளெல்லாம் மனிதனுடைய திறமையால், செங்கற்களால், பூமியிலிருந்து வானத்திற்கு ஏதோவொன்றைக் கட்ட மனிதனுடைய பிரயாசங்களாகும்.

சபையில் மனிதனுக்கு எந்த இடமும் இல்லை என்பதை நாம் மீண்டும் வலியுறுத்தவேண்டும். பரலோகக் காரியங்கள் பரலோகத்திலிருந்து மட்டுமே வரமுடியும்; இந்தப் பூமியின் காரியங்கள் ஒருபோதும் பரலோகத்திற்குச் செல்லமுடியாது. தான் நியாயத்தீர்ப்பின்கீழ் இருப்பதை மனிதன் பார்க்கவில்லை என்பதுதான் மனிதனுடைய கஷ்டம்; தான் வெறும் தூசியும், களிமண்ணும்தான் என்பதையும் அவன் பார்க்கவில்லை. மனிதன் உயரமாகக் கட்டலாம்; ஆனால், பரலோகம் மனிதனுடைய மிக உயரமான உயரத்தைவிட உயர்வானது. மனிதர்கள் தங்கள் கோபுரத்தை எவ்வளவு உயரமாகக் கட்டினாலும் சரி, அவைகளால் இன்னும் பரலோகத்தைத் தொட முடியாது. பரலோகம் எப்போதும் மனிதனுக்கு மேலாகவே இருக்கிறது. மனிதன் ஏறினாலும், கட்டினாலும்கூட, அவன் விழாமல்போனாலும்கூட அவனால் இன்னும் பரலோகத்தைத் தொடமுடியாது. ஆவிக்குரிய காரியங்களில் மனிதன் பயனற்றவன் என்று அவனுக்குக் காண்பிக்க பாபேல் கோபுரத்தைக் கட்டுகிற மனிதனுடைய திட்டத்தைத் தேவன் அழித்தார். மனிதனால் ஒன்றும் செய்யமுடியாது.

பழைய ஏற்பாட்டில் இன்னொரு நிகழ்ச்சி இருக்கிறது; அது இந்தக் கோட்பாட்டை முனைப்பாக வெளியரங்கமாக்கு கிறது. இஸ்ரவேலர்கள் கானான் தேசத்துக்குள் நுழைந்தபோது, பாவம் செய்த முதல் நபர் ஆகான். ஆகான் செய்த பாவம் என்ன? "கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையைக்...கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக் கொண்டேன்," என்று அவன் கூறினான் (யோசுவா 7:21). ஒரு பாபிலோனிய சால்வை ஆகானைப் பாவம்செய்ய வஞ்சித்தது. இந்தப் பாபிலோனிய சால்வை எதைக் குறிக்கிறது? ஓர் அழகான சால்வை தோற்றத்திற்காக நெய்யப்படுகிறது. ஒருவன் அழகான மேலங்கியைத் தரித்துக்கொள்ளும்போது, அவன் தன் தோற்றத்தை மேம்படுத்தவும் தனக்குக் கொஞ்சம் பளபளப்பு சேர்த்துக் கொள்ளவும் தன்னை அலங்கரித்துக்கொள்கிறான் என்று பொருள். ஆகான் பாபிலோனிய சால்வையை இச்சித்ததற்கு அவன் தன்னை மேம்படுத்த விரும்பினான், தன் தோற்றத்தை அதிகரிக்க விரும்பினான் என்று பொருள். இதுதான் ஆகானின் பாவம்.

சபை ஆரம்பித்தபிறகு, புதிய ஏற்பாட்டில் முதன்முதலாக பாவம் செய்தவர்கள் யார்? அனனியாவும், சப்பீராளுமே என்று வேதவாக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. அவர்கள் செய்த பாவம் என்ன? அவர்கள் பரிசுத்த ஆவியிடம் பொய் சொன்னார்கள். அவர்கள் கர்த்தரை அதிகமாக நேசிக்கவில்லை. ஆனால், அவர்கள் கர்த்தரை அதிகமாக நேசித்ததுபோல் காணப்பட விரும்பினார்கள்.

அவர்கள் சும்மா நடித்தார்கள். அவர்கள் எல்லாவற்றையும் மனமுவந்து தேவனுக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கவில்லை. ஆயினும், மனிதனுக்கு முன், அவர்கள் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டதுபோல் நடித்தார்கள். இதுவே பாபிலோனிய சால்வை.

ஆகையால், மாய்மாலமே பாபிலோனிய கோட்பாடாகும். நிஜம் இல்லை; இருப்பினும், மனிதனிடமிருந்து மகிமையைப் பெற நிஜம் இருப்பதுபோல் மக்கள் நடிக்கிறார்கள். தேவ னுடைய மக்களுக்கு இங்கு நிஜமான ஆபத்து இருக்கிறது—ஆவிக்குரியவர்களாக இருப்பதுபோல் நடித்தல். பொய்யாக நடிக்கப்படுகிற ஆவிக்குரிய நடத்தை அதிகமாக இருக்கிறது. அது பகட்டான மேல்பூச்சாகத் தரித்துக்கொள்ளப்படுகிறது. அநேக நீண்ட ஜெபங்கள் போலியானவை; அநேக ஜெப தொனிகள் நிஜமானவை இல்லை. அங்கு நிஜம் இல்லை. ஆனால், நிஜம் இருப்பதுபோல் தோற்றம் அளிக்கப்படுகிறது. இதுவே பாபிலோனின் கோட்பாடாகும். நம் உண்மையான நிலைமைக்குப் பொருந்தாத ஆடையை நாம் தரித்துக்கொள்ளும்போதெல்லாம், நாம் பாபிலோனின் கோட்பாட்டில் இருக்கிறோம்.

மனிதனிடமிருந்து மகிமையைப் பெறுவதற்காகத் தேவனுடைய மக்கள் எவ்வளவு பொய்மையைத் தரித்திருக் கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. இது மணவாட்டியின் மனப்பாங்கிற்கு முற்றிலும் எதிரானது. பொய்மையில் செய்யப்படும் எல்லாம் மணவாட்டியின் கோட்பாட்டில் இல்லை, மாறாக வேசியின் கோட்பாட்டில்தான் செய்யப்படுகிறது. மனிதனுக்குமுன்பாக நடிப்பதிலிருந்து தேவனுடைய பிள்ளைகள் விடுவிக்கப்படுவது ஒரு பெரிய காரியம். நம் பார்வையை சபையில் மனிதனுடைய மகிமையிலும், மனிதனுடைய அந்தஸ்திலும் வைத்தல் நாம் பாபிலோனிய சால்வையின் பாவத்திலும், அனனியாவும் சப்பீரா ளும் கட்டிக்கொண்ட பாவத்திலும் பங்குபெறுகிறோம். பொய்யான பிரதிஷ்டை பாவம், பொய்யான ஆவிக்குரிய நிலையும் பாவமே. மெய்யான ஆராதனை ஆவியிலும், உண்மையிலும் இருக்கிறது. தேவன்தாமே நம்மை உண்மையான மனிதர்களாக்குவாராக.

பாபிலோனின் இன்னொரு நிலைமை திருவெளிப்பாடு 18:7-ல் காணப்படுகிறது: "நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல." அவள் ஓர் இராணியைப்போல் வீற்றிருக்கி றாள். அவள் ஒரு விதவையின் எல்லாக் குணத்தையும் இழந்து விட்டாள். கர்த்தராகிய இயேசு சிலுவையில் அறையப்பட்டு, கொல்லப்பட்டதைக்குறித்த எந்த உணர்ச்சியும் அவளிடம் இல்லை. மாறாக அவள், "நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்," என்று கூறுகிறாள். அவள் தன் உத்தமத்தை இழந்துவிட்டாள்; அவள்

தன் நேர்த்தியான இலக்கைத் தவறவிட்டுவிட்டாள். இதுவே பாபிலோனின் கோட்பாடு; இதுவே சீர்கெட்ட கிறிஸ்தவம்.

பதினெட்டாம் அதிகாரம் பாபிலோனைப்பற்றிய வேறு அநேகக் காரியங்களை, விசேஷமாக அவள் அனுபவித்து மகிழ்ந்த ஆடம்பரங்களை, நமக்குக் காண்பிக்கிறது. அறிவியல் கண்டுபிடிப்புகளைப்பற்றிய நம் மனப்பாங்கு எப்படி இருக்கவேண்டும் என்றால், நமக்கு ஒரு தேவை இருக்கும்போது நாம் அநேகக் காரியங்களைப் பயன்படுத்த லாம். உலகத்தைப் பயன்படுத்துவதைப்பற்றி (1 கொரி. 7:31) பவுல் பேசியதுபோல, அவைகளைப் பயன்படுத்துவதே இந்தக் காரியங்களில் நம் நோக்கமாகும். ஆயினும், ஆடம்பரமான காரியங்களை அனுபவித்தல் இன்னொரு விஷயம். மாம்சம் அனுபவித்து மகிழ்வதற்கு ஏதுவாக இருக்கிற எல்லா ஆடம்பரங்களையும், எல்லாக் காரியங்களையும் ஏற்க மறுக்கிற சில கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். சில காரியங்களை நாம் பயன்படுத்தவேகூடாது என்று நாம் கூறுவில்லை; மாறாக, அளவுக்கு அதிகமான எதுவும் ஆடம்பரமே. உடுத்துவதானாலும் சரி, உண்பதானாலும் சரி, வீடானாலும் சரி, அது அளவுக்கு அதிகமாக இருந்தால், நம் தேவைக்கு அதிகமாக இருந்தால், அது ஆடம்பரம்; அது பாபிலோனின் கோட்பாட்டில் இருக்கிறது. நமக்குத் தேவையான எல்லா வற்றையும் தேவன் அனுமதிக்கிறார். ஆனால், நம் தேவைக்கு அதிகமான எதையும் தேவன் அனுமதிப்பதில்லை. தேவையின் கோட்பாட்டின்படி நாம் நம் வாழ்க்கையை ஒழுங்கு செய்ய வேண்டும். அப்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். நாம் நம் இச்சையின்படி வாழ்ந்தால், நாம் பாபிலோனின் கோட் பாட்டில் இருக்கிறோம்; அப்போது தேவன் நம்மை ஆசீர்வதிக்க மாட்டார்.

***மனிதனுடைய காரியங்களைத் தேவனுடைய வசனத் தோடும், மாம்சத்தின் காரியங்களை ஆவியானவரின் காரியங்களோடும் கலப்பதே பாபிலோனின் கோட்பாடு என்று நாம் பார்த்தோம். மனிதனுடையதை தேவனுடையதாகக் காட்டுவது பாசாங்கு. இது மனிதனுடைய இச்சையைத் திருப்திப்படுத்த மனிதனுடைய மகிமையை ஏற்றுக்கொள்ளுதல். ஆகையால் கலப்படமான, சீர்கெட்ட கிறிஸ்தவமே பாபிலோன். பாபி லோனைக்குறித்த நம் மனப்பாங்கு எப்படி இருக்கவேண்டும்? "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்," என்று திருவெளிப்பாடு 18:4 கூறுகிறது.

“ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்,” என்று 2 கொரிந்தியர் 6:17-18 கூறுகின்றன. தேவனுடைய வசனத்தின்படி, அவருடைய பிள்ளைகள் பாபிலோனின் குணத்தையுடைய எந்தக் காரியத்திலும் சம்பந்தப்படமுடியாது. மனிதனுடைய வல்லமை தேவனுடைய வல்லமையோடு கலந்திருக்கிற, மனிதனுடைய திறமை தேவனுடைய வேலையோடு கலந்திருக்கிற, மனிதனுடைய அபிப்பிராயம் தேவனுடைய வார்த்தையோடு கலந்திருக்கிற எல்லாச் சூழ்நிலையையும் விட்டு நாம் வெளியே வரவேண்டும் என்று தேவன் கூறினார். பாபிலோனின் குணத்தையுடைய எதிலும் நாம் பங்குபெற முடியாது. நாம் அதை விட்டு வெளியே வரவேண்டும். பாபிலோனை விட்டுப் பிரிந்துபோகவும், அவளுடைய எல்லா நடவடிக்கைகளை நியாயந்தீர்க்கவும் தேவனுடைய பிள்ளைகள் தங்கள் ஆவியின் ஆழங்களிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். இதைச் செய்தால் நாம் பாபிலோனோடுகூடச் சேர்ந்து ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப் படமாட்டோம்.

பாபிலோனின் ஆரம்பம் பாபேல் கோபுரத்தில் இருந்தது. தினம்தினம் பாபிலோன் பெரிதாகிக்கொண்டே இருக்கிறது. ஆனால், முடிவில் தேவன் அவளை நியாயந்தீர்ப்பார். “இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன்; அவர்கள்: அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத் தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். தன் வேசித்தனத் தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத் தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக்காரனின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள். மறுபடியும் அவர்கள்: அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள். இருபத்துநான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் வணக்க மாய் விழுந்து: ஆமென், அல்லேலூயா, என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுதுகொண்டார்கள்,” என்று திருவெளிப்பாடு 19:1-4 கூறுகின்றன. தேவன் வேசியை நியாயந்தீர்த்து, அவளுடைய எல்லா வேலைகளையும் சிதறடிக்கும்போதும், அவள் என்னவாக இருக்கிறாளோ அதையும், அவள் பிரதிநிதித்துவப்படுத்துகிற கோட்பாட்டையும் அவர்

தள்ளிவிடும்போதும், வானத்தி லிருந்து சத்தங்கள் உண்டாகி "அல்லேலூயா" என்று ஆர்ப்பரிக்கும். புதிய ஏற்பாட்டில் மிகக் குறைவான அல்லேலூயாக்களே இருக்கின்றன; அவையெல்லாம் இந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன; ஏனென்றால், தேவனுடைய வார்த்தையைக் கலப்படம்செய்கிற பாபிலோனாகிய அவள் நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டாள்.

பாபிலோனின் வீழ்ச்சிக்கும், நியாயத்தீர்ப்புக்கும் என்ன காரணம் என்று திருவெளிப்பாடு 18:2-8லுள்ள பத்தி கூறுகிறது. பாபிலோனின் பாவ காரியங்கள் அறிவிக்கப்படுகின்றன; அவள் நியாயந்தீர்க்கப்படுவதின் விளைவுகளும் சொல்லப்படுகின்றன. தேவனுடைய மனதையுடைய எல்லாரும், "அல்லேலூயா, தேவன் பாபிலோனை நியாயந்தீர்த்தார்," என்று சொல்லவேண்டும். உண்மையான நியாயத்தீர்ப்பு எதிர்காலத்தில்தான் வரும் என்றாலுங் கூட ஆவிக்குரிய நியாயத்தீர்ப்பு இன்றைக்கே நிகழவேண்டும். உண்மையான நியாயத்தீர்ப்பைத் தேவன் எதிர்காலத்தில் செய்வார். ஆனால், ஆவிக்குரிய நியாயத்தீர்ப்பை நாம் இன்றைக்கே செய்யவேண்டும். தேவனுடைய பிள்ளைகள் ஆவிக்குரியதல்லாத அநேகக் காரியங்களை சபைக்குள் கொண்டுவரும்போது, அதைப்பற்றி நாம் எப்படி உணர்கிறோம்? நாமெல்லாரும் தேவனுடைய பிள்ளைகள் என்பது ஓர் உண்மை என்பதாலும், நாம் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டும் என்பது ஓர் உண்மை என்பதாலும், நாம் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு அல்லே லூயா சொல்லக்கூடாது என்பதா பொருள்? இது அன்பைப் பற்றிய காரியம் இல்லை என்பதை நாம் உணரவேண்டும். மாறாக, இது தேவனுடைய மகிமையைப்பற்றிய காரியம். குழப்பமும், அசுத்தமுமே பாபிலோனின் கோட்பாடாகும்; ஆகையால், அவளுடைய பெயர் வேசி. திருவெளிப்பாட்டில் பாபிலோனை விவரிக்கத் தேவன் பயன்படுத்தும் ஒரு சில பத்திகள் அவர் அவளை எவ்வளவு அதிகமாக வெறுக்கிறார் என்று நமக்குக் காண்பிக்கின்றன. திருவெளிப்பாடு 11:18-லுள்ள "பூமியைக் கெடுத்தவர்கள்," இந்தப் பெண்ணைச் சார்ந்தவர்கள்; இவர்களைக் குறித்து பத்தொன்பதாம் அதிகாரத்தில் "பூமியைக் கெடுத்த" (வசனம் 2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

வேறெதையும்விட பாபிலோனின் கோட்பாட்டைத் தேவன் அதிகமாக வெறுக்கிறார். நம் ஆள்தத்துவத்தின் எவ்வளவு பகுதி இன்னும் அவருக்காக முற்றிலும் இல்லை என்பதை அவருடைய பிரசன்னத்தில் நாம் அறியவேண்டும். பாதி வழியில் இருக்கிறதும், முற்றிலும் அவருக்காக இல்லாததும் பாபிலோன் என்றழைக்கப் படுகிறது. நம்மிடத்தில் தேவனுக் காகவே முற்றிலும் இல்லாத எல்லாவற்றையும் தேவனுடைய வெளிச்சத்தில் நாம்

நியாயந்தீர்க்குமாறு அவர் நம்மைப் பிரகாசிக்கவேண்டும். இந்த முறையில் நாம் நம்மை நியாயந்தீர்க்கும்போது மட்டுமே, நாமும் பாபிலோனின் கோட்பாட்டை வெறுக்கிறோம் என்று நம்மால் அறிக்கைசெய்யமுடியும். கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் எந்த மகிமையையும், கனத்தையும் நாம் தேடாமலிருக்கக் கர்த்தர் தாமே தம் கிருபையின்படி நம்மை அனுமதிக்காதிருப்பாராக. நாம் பாபிலோனின் கோட்பாட்டில் வாழ்கிறவர்களாக இராமல், முற்றிலும் தேவனுக்காக இருப்பதில் பிரியப்படுகிறவர்களாகவும், அதைத் தேடுகிறவர்களாகவும் இருக்கவேண்டும் என்று கர்த்தர் கோருகிறார்.

"மேலும், நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது," என்று திருவெளிப்பாடு 19:5 கூறுகிறது. வானத்திலிருந்து வரும் பிரகடனங்களே திருவெளிப்பாடு புத்தகத்தின் விசேஷமான தனி ச்சிறப்பாகும். "வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்" "ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது" (18:4; 19:5) போன்ற இப்பேர்ப்பட்ட காரியங்களை நாம் வாசிக்கிறோம். இவை தேவன் எப்போது பேசுகிறார் என்ற நேரத்தையும், தேவன் எங்கு பேசுகிறார் என்ற இடத்தையும், தேவன் என்ன பேசுகிறார் என்ற வலியுறுத்துதலையும் குறிக்கிற வானத்திலிருந்து வரும் பறைசாற்றுதல்கள். திருவெளிப்பாடு 19:5-லுள்ள பிரகடனத்திற்குத் திட்டவட்டமான காரணங்கள் இருக்கின்றன. ஒரு பக்கம், வேசி நியாயந்தீர்க்கப் பட்டு விட்டாள் என்பது காரணம். மறு பக்கம், ஆட்டுக்குட்டியானவரின் வரப்போகிற கல்யாணத்தை எதிர்நோக்கியிருப்பது காரணம். ஆகையால், நம் தேவனுக்குத் துதிசெலுத்த சிங்காசனத்திலிருந்து ஒரு சத்தம் வருகிறது. தேவன் துதியைப் பெறுமாறு நித்தியத்திலிருந்து வேலைசெய்துகொண்டிருக்கிறார், இதற்காக அவர்தம் வேலையில் அதிகமான சக்தியைச் செலவழித்திருக்கிறார். பரிசுத்தவான்களிடத்தில் தேவனுக்கு ஒரு சுதந்தரம் உண்டு என்று எபேசியர் குறிப்பிடுகிறது. பரிசுத்தவான்களிடத்தில் தேவனுடைய சுதந்தரம் என்ன? துதி என்ற ஒரேவொரு காரியத்தை மட்டுமே மனிதன் தேவனுக்கு ஏறெடுக்கமுடியும். தேவனுடைய வேலைக்காரர்களெல்லாரும், தேவனுக்குச் சொந்தமான எல்லாரும், சிறியோர்களும் பெரியோர்களும், அவரைத் துதிக்கவேண்டும் என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் பிரகடனம்செய்கிறது. தேவனுடைய குறிக்கோள் நிறைவேறவேண்டும். அது சீக்கிரம் நிறைவேறும். தேவன் எதைத் தேடிக்கொண்டிருக்கிறாரோ அதை அவர் அடையவேண்டும்; நாமெல்லாரும் அவரைத் துதிக்க

வேண்டும்.

தேவனுக்குத் துதி செலுத்துங்கள் என்று சிங்காசனத்திலிருந்து ஒரு சத்தம் வந்தபோது திரளான சத்தங்கள் பிரபஞ்சம் முழுவதும் எதிரொலித்தன. "அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லே லூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்," என்று திருவெளிப்பாடு 19:6 கூறுகிறது. ஒரு பக்கம் சிங்காசனத்திலிருந்து ஒரு சத்தம் வந்தது. மறுபக்கம், ஆயிரக்கணக்கான, பத்தாயிரக் கணக்கான மக்கள் மாறுத்தரம் அளித்தார்கள். யோவான் கேட்ட போது, அவர் ஒரு தனிமனிதனின் சத்தத்தைக் கேட்கவில்லை; மாறாக, பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும் திரளான ஜனங்கள் இடும் ஆரவாரத்தைக் கேட்டார். ஒரு பெரிய நீர்வீழ்ச்சியின் சத்தத்தை அல்லது சமுத்திர அலைகளின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது பெருவெள்ள இரைச்சல் எவ்வளவு ஆரவாரமாக இருக்கும் என்று நீங்கள் உணர்வீர்கள். இடிமுழக்கமே போதுமான அளவுக்கு சத்தமாக இருக்கும். அப்படியானால் பலத்த இடிமுழக்கத்தின் சத்தம் எவ்வளவு அதிகமாக இருக்கும். இந்தப் பலத்த இடிமுழக்கம் போன்ற சத்தங்களெல்லாம் அல்லேலூயா சொல்லிக்கொண் டிருந்தன. வானத்திலிருந்து வந்த சத்தமும், முழுப் பிரபஞ்சத் திலிருந்து வந்த மாறுத்தாரமும், எல்லா சத்தங்களும் நடக்கவிருந்த ஒரு விசேஷமான நிகழ்ச்சியினிமித்தம் அல்லேலூயா சொல்லிக் கொண்டிருந்தன. அந்த நிகழ்ச்சி "சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்," என்பதாம்.

நாம் இந்தப் பிரகடனத்தை வாசிக்கையில், நம் இருத யங்கள் எதன்மேல் பொருத்தப்பட்டிருக்கின்றன? நாம் அரசாளுவோம் என்றும், ஆகையால் நாம் களிகூர்ந்து சந்தோஷப்படவேண்டும் என்றும் இந்தப் பத்தி கூறவில்லை. நாம் ஒரு கிரீடத்தைப் பெறு வோம் என்றும், ஆகையால் நாம் தேவனைத் துதிக்கவேண்டும் என்றும் இது கூறவில்லை. சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார் என்று இது கூறுகிறது. அவர் அரசாள வேண்டும் என்பதே, அவர் அதிகாரத்தைச் செலுத்தவேண்டும் என்பதே தேவனுடைய மனம். தேவன் ஆளுகைசெய்யும்போது, கிறிஸ்துவே ஆளுகைசெய்கிறார். நாம் திருவெளிப்பாடு 11:15க்குத் திரும்புவோம்: "அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கு முரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார்." "நம்முடைய கர்த்தர்" தேவனைக் குறிக்கிறது. "அவருடைய கிறிஸ்து" கிறிஸ்துவைக் குறிக்கிறது. ஆனால், அதைத் தொடர்ந்துவரும்

"அவர்" என்ற பிரதிப்பெயர்ச்சொல் கொஞ்சம் நூதனமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பத்தி "நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்து வுக்கும்" என்று தொடங்குவதால், அந்தச் சொற்றொடர் "அவர்கள் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணு வார்கள்," என்று தொடர்வதுதான் வாதப்பொருத்தமாக இருக்கும் என்பதுபோல் தோன்றுகிறது. இலக்கணரீதியாக இது சரியாக இருக்கும். ஆனால், இது இப்படி எழுதப்படவில்லை. இதைத் தொடர்ந்து, "அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார்," என்று கூறப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஆளுகை கிறிஸ்துவின் ஆளுகை என்பதையும், கிறிஸ்துவின் ஆளுகை கர்த்தருடைய ஆளுகை என்பதையும் நாம் புரிந்துகொள்ள இது நமக்கு உதவுகிறது. தேவனுடைய இராஜ்ஜியம் கிறிஸ்துவின் இராஜ்ஜியம். தேவன் ஆளுகைசெய்தல் கிறிஸ்து ஆளுகைசெய்தலாகும். தேவன் ஆளுகைசெய்வதால், கிறிஸ்து ஆளுகைசெய்கிறார்; எல்லாரும் களிகூர்ந்து சந்தோஷப்பட்டு அல்லேலூயா என்று ஆர்ப்பரிக் கிறார்கள்.

"நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம்," என்று திருவெளிப்பாடு 19:7 தொடர்ந்து கூறுகிறது. இதுதான் தேவன் மகிமைப்படும் நேரம். இதைத் தொடர்ந்து, "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்," என்று அந்த வசனம் கூறுகிறது. (மனைவி என்பதுதான் சரியான மொழியாக்கம். ஆயினும் சில மொழிபெயர்ப் பாளர்கள் மணவாட்டி என்று பயன்படுத்து கிறார்கள்.) தேவனுடைய அதிகாரம் மட்டும் ஆரம்பிக்கவில்லை, இராஜ்ஜியமும் வந்துவிட்டது. மேலும், தேவன் ஆசைப்பட்ட நித்திய ஏவாளாகிய கூட்டு மனிதனை அடைந் தாயிற்று. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள். துதிப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, தேவன் ஆளுகைசெய்கிறார். இதற்கு நாம் அல்லேலூயா சொல்கிறோம். இரண்டாவது, கடந்த நித்தியத்தில் தேவன் தாம் பெறவேண்டும் என்று தீர்மானித்திருந்ததை இப்போது அடைந்துவிட்டார். இதற்கும் நாம் அல்லேலூயா சொல்கிறோம். நாம் களிகூர்ந்து சந்தோஷப்படவேண்டும். ஏனென்றால், ஒரு நாள் அவர் தாம் விரும்புகிறதை நிச்சயமாக அடைவார். ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் வரும்போது, மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்.

நாம் நம்மைப் பார்க்கும்போது, கறை அல்லது திரை அல்லது இதுபோன்ற எதுவும் இல்லாத மகிமையான சபையைக் கிறிஸ்து தமக்குத்தாமே வழங்கும்போது இப்பேர்ப்பட்ட நாள் வரும் என்பது

அசாத்தியம்போல் தோன்றுகிறது. ஆனால், இது நடக்கும் என்பதால், நம்மால் எப்படி அல்லேலூயா சொல்லாமல் இருக்கமுடியும்? நேற்றும் இன்றும், நம்மிடம் எவ்வளவு பலவீனம் இருந்தாலும் சரி, தேவன் தாம் தீர்மானித்திருந்ததை அந்த நாளில் அடைவார். இதை ஒருபோதும் மறவாதீர்கள்—அந்த நாளில் மனைவி ஆயத்தமாயிருப்பாள். ஆகையால், நாம் அவருக்கு மகிமையைச் செலுத்தவேண்டும். நாம் அல்லேலூயா சொல்ல வேண்டும்.

7-ஆம் வசனத்தை மீண்டும் வாசிப்போம்: "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்." இந்தப் பத்தி ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியைக் குறிக்கவில்லை, மாறாக ஆட்டுக்குட்டியான வரின் மனைவியைக் குறிக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். நாம் இப்போது 21:1-2க்குப் போவோம்: "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்... யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது." பத்தொன்பதாம் அதிகாரத்தி லுள்ள நிகழ்ச்சிகள், அதாவது தன்னை ஆயத்தம்பண்ணின மனைவியைப்பற்றியது, எப்போது நடக்கிறது? இது ஆயிரவருட அரசாட்சிக்குமுன் நடக்கிறது. இருபத்தொன்றாம் அதிகாரத்திலுள்ள நிகழ்ச்சிகள், அதாவது ஆயத்தமாயிருக்கிற மணவாட்டியைப் பற்றியது, எப்போது நடக்கிறது? இது ஆயிரவருட அரசாட்சிக்குப் பின் நடக்கிறது. புதிய எருசலேம் ஆட்டுக்குட்டியின் மணவாட்டி யாக இருப்பதற்குமுன் புதிய வானத்திற்காகவும், புதிய பூமிக்காகவும் காத்திருக்கவேண்டியிருப்பதால், ஆயிரவருட அரசாட்சிக்குமுன்பே ஆட்டுக்குட்டியின் மனைவி ஆயத்தமா யிருக்கிறாள் என்று அது ஏன் கூறுகிறது? பத்தொன்பதாம் அதிகாரம் ஆட்டுக்குட்டியின் கலியாணத்தைப்பற்றிப் பேச வில்லை என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். ஆட்டுக்குட்டியின் கலியாணம் வந்தது என்று மட்டுமே அது கூறுகிறது. அந்த நேரத்தில், நாம் பின்னோக்கிப் பார்த்தால், வேசி விழுந்துவிட்டாள்; முன்னோக்கிப் பார்த்தால் நாம் புதிய வானத்தையும் புதிய பூமியையும் பார்ப்போம். ஆகையால், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது என்ற அறிவிப்பு செய்யப்படுகிறது. ஆயினும், நிஜத்தில், இதற்கிடையே ஆயிரம் வருடங்கள் இருக்கின்றன. ஆயிரம் வருடங்கள் சென்றபிறகுதான் ஆட்டுக்குட்டியானவருடைய

கலியாணத் திற்கான உண்மையான நேரம் வரும். பெண், உண்மையில், இராஜ்ஜியத்தின் காலத்தில் இல்லை, மாறாகப் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் கிறிஸ்துவின் மனைவியாக இருக்கிறாள்.

நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு காரியம் இருக்கிறது. பன்னிரண்டாம் அதிகாரத்தில் ஆண்பிள்ளையையும், மற்ற அநேகப் பிள்ளைகளையும் உடைய பெண் இருக்கிறாள். ஆனால், பத்தொன்பதாம் அதிகாரத்தில் மனைவி மட்டுமே இருக்கிறாள். ஆண்பிள்ளையும், மற்ற அநேகப் பிள்ளைகளும் எங்கே? அவர்கள் மறைந்துபோனார்கள் என்பதுபோல் தோன்றுகிறது. பெண்ணும், ஆண்பிள்ளையும், அவளுடைய மற்ற குழந்தைகளும் எப்படி ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக மாறமுடியும்?

தெளிவாக இருப்பதற்காக, நாம் ஆண்பிள்ளையின் கோட்பாட்டைப் பார்க்கவேண்டும். ஆண்பிள்ளை முழுச் சபையின் பிரதிநிதியாக இருந்து எல்லாவற்றையும் செய்து முடிப்பதுபோல் தோன்றுகிறது என்பதை நினைவில்கொள்ளுங்கள். பத்தொன்பதாம் அதிகாரத்தில், மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்ற அறிவிப்பு ஜெயங்கொள்பவர்களைப் பார்க்கையில் பேசப்படுகிறது. மணவாட்டியாக இருக்கப் புதிய வானம் புதிய பூமிவரை சபையின் முழுச் சரீரமும் காத்திருக்கவேண்டும். அதுவரை அவள் ஆயத்தமாக இருக்கமாட்டாள். ஆனால், இதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பே மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்ற அறிவிப்பு இருக்கிறது. இது ஏன் பேசப்படுகிறது? எப்பேர்ப்பட்ட ஆயத்தம் அங்கு இருக்கிறது? இந்த அறிவிப்பு ஜெயங்கொள்பவர்களின் ஆயத்தத்தைக் குறிக்கிறது. இது ஜெயங்கொள்பவர்களின் ஆயத்தத்தைத்தவிர வேறு யாருடைய ஆயத்தத்தையும் குறிக்கவில்லை. ஜெயங்கொள்பவர்கள் முற்றிலும் ஆயத்தமாக இருப்பதால், மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்ற அறிவிப்பைச் செய்யமுடியும்.

ஜெயங்கொள்பவர்கள் செய்துமுடிப்பது தங்களுக்காக மட்டும் இல்லை, மாறாக முழுச் சபைக்காகவும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஓர் அவயவம் மகிமைப்படும்போது எல்லா அவயவங்களும் அதனுடன் களிகூர்கின்றன என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது (1 கொரி. 12:26). ஜெயங்கொள்பவர்கள் முழுச் சபையின் சார்பாக சாத்தானோடு யுத்தம்செய்கிறார்கள். அவர்களுடைய வெற்றி முழுச் சபைக்கும் அனுகூலத்தைக் கொண்டுவருகிறது. ஆகையால், பத்தொன்பதாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயத்தம் ஜீவன் என்ற காரியத்தோடு தொடர்புடையது. ஜெயங்கொள்பவர்களிடம் ஜீவனின் முதிர்ச்சி அதிகமாக இருப்பதால், அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

ஜெயங் கொள்பவர்கள் தேவனுக்குமுன் ஆயத்தமாக இருப்பதால் அவர்களுடைய ஆயத்தத்தை அவர் முழுச் சரீரத்தின் ஆயத்த மாகக் கணக்கில் எடுக்கிறார்.

இதன் விலையேறப்பெற்றதன்மையை நாம் உணர்கிறோமா? நாம் இந்த ஒரு காரியத்தை நினைவில்கொள்ள வேண்டும்—நம் தேடுதல்களெல்லாம், நம் வளர்ச்சியெல்லாம் தனிப்பட்ட நபர்க ளாகிய நமக்காக இல்லை, மாறாக சரீரத்திற்காகவே. ஒவ்வோர் அவயவமும் தேவனிடமிருந்து பெறுவது முழுச் சரீரத்திற்காகவே. உன் காதுகள் ஒரு வார்த்தையைக் கேட்கும்போது, நீ கேட்க வில்லை என்று கூறமுடியாது. ஏனென்றால், உன் காதுகள் உன் சரீரத்துடன் இணைந்திருக்கின்றன. உன் வாய் தவறான ஒன்றைச் சொல்லும்போது, நீ தவறாகப்பேசவில்லை என்று நீ அதை மறுக்கமுடியாது. ஏனென்றால், உன் வாயும் சரீரமும் இணைந்திருக் கின்றன. அதுபோல, ஜெயங்கொள்பவர்கள் சாதிப்பதெல்லாம் முழுச் சரீரத்தின் சாதனையாகும். நம் கர்த்தரே சபையின் தலையாக இருப்பதால், அவர் சிலுவையில் செய்துமுடித்தவையெல்லாம் சபைக்குச் சொந்தம். அதுபோல, நாம் தலையிலிருந்து அனுகூலத்தைப் பெறுகையில், நாம் சரீரத்திலிருந்தும் அனுகூலத் தைப் பெறுகிறோம். கர்த்தர் செய்துமுடித்ததில் நாம் பங்குபெறு கையில், மற்ற அவயவங்கள் செய்துமுடித்தவைக ளிலும் நாம் பங்குபெறுகிறோம். தேவன் ஜெயங்கொள்ப வர்களின் ஆயத்தத்தைப் பார்க்கும்போது, அதை முழுச் சபையின் ஆயத்தமாகவே அவர் கருதுகிறார். ஆகையால், மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லலாம்.

மனைவியின் ஆயத்தம் விசேஷமாக மனைவியின் வஸ்திரங்களைக் குறிக்கிறது. "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே," என்று 19:8-ஆம் வசனம் கூறுகிறது. கிறிஸ்தவர்களுக்கு இரண்டு விதமான வஸ்திரங்கள் இருக்கின்றன என்று வேதவாக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. ஒன்று கர்த்தராகிய இயேசு. கர்த்தராகிய இயேசுவே நம் ஆடை. மற்றொன்று 8-ஆம் வசனத்தில் பேசப்பட்டுள்ள சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம். நாம் தேவனுக்கு முன்பாக வரும்போதெல்லாம் கர்த்தராகிய இயேசுவே நம் வஸ்திரம். அவரே நம் நீதி. நாம் தேவனை அணுகும்போது அவரைத் தரித்துக்கொள்கிறோம். இந்த வஸ்திரம் நம் பொது வான ஆடை; எல்லாப் பரிசுத்தவான்களும் தேவனுக்கு முன்பாக ஆடை தரித்திருக்கிறார்கள், அவர்கள் நிர்வாணமாகக் காணப்படமுடியாது. மறு பக்கம், நாம் தேவனுக்கு வழங்கப் படும்போது, நாம் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்

தரித்திருக்கவேண்டும். இது பரிசுத்தவான்களின் நீதிகள். “நீதிகள்” என்றால் ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ச்சியான நீதியுள்ள கிரியைகள் என்று பொருள். நீதியுள்ள இந்தக் கிரியைகளெல்லாம் ஒன்றாகச் சேரும்போது அதுவே நம் மெல்லிய வஸ்திரம். நாம் இரட்சிக்கப்பட்டபோது, நம்மை அலங்கரிப்பதற்காக நாம் ஒரு மெல்லிய வஸ்திரத்தை வாங்க ஆரம்பித்தோம்—பரிசுத்தவான் களின் நீதிகள்.

கிறிஸ்தவர்களுக்கான இந்த இரண்டு வகையான வஸ்திரங் களை சங்கீதம் 45-லும்கூட நாம் காணமுடியும். “ராஜகுமாரத்தி உள்ளாக பூரண மகிமையுள்ளவள்; அவள் உடை பொற்சரிகையா யிருக்கிறது,” என்று 13-ஆம் வசனம் கூறுகிறது. அவளுடைய ஆடை பொன்னால், அடிக்கப்பட்ட பொன்னால், செய்யப்பட் டிருக்கிறது. “சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் கொண்டுவரப்படுவாள்,” என்று 14-ஆம் வசனம் கூறுகிறது. 13-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆடை 14-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆடையி லிருந்து வித்தியாசமானது. 13-ஆம் வசனத்தில் உள்ள ஆடை பொன்னாலானது. 14-ஆம் வசனத்தில் உள்ள ஆடை சித்திரவேலைப்பாடாலானது. திருவெளிப்பாடு 19-லுள்ள மெல்லிய நூல் வஸ்திரங்கள் சித்திர வேலைப்பாடாலானவை, அவை பொன்னாலானவை இல்லை.

அப்படியானால், பொன் என்றால் என்ன? கர்த்தராகிய இயேசுவே பொன். அவர் பொன்; ஏனென்றால், அவர் முற்றிலும் தேவனுக்குரியவர். கர்த்தராகிய இயேசு நமக்குத் தந்த நீதி, நாம் இரட்சிக்கப்பட்டபோது அவர் நமக்குத் தந்த ஆடை, பொன்னுக்குரியதாகும். இந்த ஆடையோடுகூட, நாம் நம் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து இன்னொரு வஸ்திரத்தை சித்திரவேலைப்பாடாய்ப் பின்னிக்கொண்டிருக் கிறோம். இது பரிசுத்தவான்களின் நீதியுள்ள நடவடிக்கை களைக் குறிக்கிறது. வேறுவார்த்தைகளில் சொல்வதானால், பொன்னாலான ஆடை நமக்குக் கர்த்தராகிய இயேசுவின்மூலம் தேவனால் கொடுக்கப்படுகிறது. சித்திரவேலைப்பாடாலான ஆடை நமக்குப் பரிசுத்த ஆவியின்மூலம் கர்த்தராகிய இயேசுவால் கொடுக்கப் படுகிறது. நாம் கர்த்தரை விசுவாசித்தபோது, கர்த்தராகிய இயேசுவின்மூலம் தேவன் நமக்குப் பொன்னாலான வஸ்திரத்தைத் தந்தார். இந்த வஸ்திரம் கர்த்தராகிய இயேசுவே. இதற்கும் நம் நடத்தைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அது ஆயத்தநிலையில் அவரால் நமக்கு வழங்கப்பட்டது. ஆயினும், சித்திரவேலைப் பாடாலான வஸ்திரம் நம் செயல்களோடு தொடர்புடையது. இது தினம் தினம் பரிசுத்த ஆவி நம்மில் வேலைசெய்வதால் ஒரு நேரத்தில் ஒரு தையல் என்று கொஞ்சம்கொஞ்சமாகச்

செய்யப்படுகிறது.

சித்திரவேலைப்பாடு என்றால் என்ன பொருள்? ஆரம் பத்தில் தெளிவான ஒரு துண்டுத் துணி இருக்கிறது; அதில் எதுவும் இல்லை. பின்பு, அதில் நூலை வைத்து ஏதோவொன்று தைக்கப் படுகிறது. இந்தத் தைக்கும் வேலையால், ஆரம்பத்தில் இருந்த துணியும் நூலும் ஒன்றாகிவிடுகின்றன. தேவனுடைய ஆவியானவர் நம்மேல் வேலைசெய்யும்போது, அவர் கிறிஸ் துவை நமக்குள் கட்டியமைக்கிறார் என்பதே இதன் பொருள்—இதுவே சித்திரவேலைப்பாடு. அப்போது நம்மிடம் பொன்னா லான வஸ்திரம் மட்டும் இல்லை, பரிசுத்த ஆவியால் சித்திர வேலைப் பாடாகப் பின்னப்பட்ட ஒரு வஸ்திரமும் இருக்கிறது. இந்த வேலை யால், கிறிஸ்து நம்மில் கட்டியமைக்கப்படுவார், நம்மிலிருந்து வெளியாக்கப்படுவார். சித்திரவேலைப்பாடாலான இந்த வஸ்திரமே பரிசுத்தவான்களின் நீதியுள்ள நடவடிக்கைகளாகும். இது ஒரேதரம் செய்துமுடிக்கப்படுவதில்லை, இது ஆயத்தமாயிருக்கிறது என்று தேவன் சொல்லும்வரை தினந் தோறும் அது தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டிருக்கிறது.

இங்கு குறிப்பாகப் பேசப்படுகிற நீதியுள்ள நடவடிக்கைகள் என்னவென்று ஒருவேளை சிலர் கேட்கக்கூடும். தைலத்தால் கர்த்தரைப் பூசி அவருக்குத் தன் அன்பை வெளிக்காட்டுகிற மரியாளின் கிரியையைப்போன்ற அநேக நீதியுள்ள கிரியைகளை சுவிசேஷங்களில் காண்கிறோம். இந்த நீதி அவளுடைய மெல்லிய வஸ்திரத்திலுள்ள நீளவாக்கில் அல்லது குறுக்குவாக்கில் உள்ள ஒரு நூலாக இருக்கக்கூடும்.

கூசாவின் மனைவியாகிய யோவன்னாளைப்போன்றவர் களும், வேறு அநேகப் பெண்களும் இருந்தார்கள்; அவர்கள் கர்த்தர்மேல் கொண்ட அன்பினிமித்தம் அவருடைய பொருளா தாரத் தேவை களுக்கும், அவருடைய சீடர்களின் பொருளாதாரத் தேவைகளுக் கும் கொடுத்துதவினார்கள். இவைகளும்கூட நீதியுள்ள கிரியைக ளே. நம் இருதயம் கர்த்தருடைய அன்பி னால் அடிக்கடித் தொடப் படுகிறது. அப்போது நாம் அதைப் புறம்பாக வெளியாக்குகிறோம். இதுவே நம் நீதி, நம் மெல்லிய நூல் வஸ்திரம். இதுவே இன்று செய்யப்படுகிற சித்திரவேலைப்பாடாகும். கர்த்தர்மேலுள்ள அன்பினால் வருகிற, பரிசுத்த ஆவியின்மூலம் செய்யப்படுகிற வெளியாக்கம் சித்திரவேலைப்பாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான தையல்களுள் ஒரு தையலாகும். சிறியரில் ஒருவனுக்கு ஒரு கோப்பைத் தண்ணீர் மட்டும் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் வெகுமதியை அடையாமல் போகமாட்டான் என்று வேதாகமம் கூறுகிறது. இது கர்த்தர்மேலுள்ள அன்பினிமித்தம் செய்யப்படுகிற நீதியுள்ள கிரியையாகும். நாம் கர்த்தருக்காக நம் அன்பை

வெளிக்காட்டும்போது அல்லது எதையாவது செய்யும்போது, அது நீதியாகும்.

இந்த வஸ்திரம் வெள்ளை அங்கி என்று திருவெளிப்பாடு 7:9 கூறுகிறது. அது ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, வெள்ளையாக்கப்பட்டிருக்கிறது. இரத்தத்தின் மூலம் பாவங்களிலிருந்து கழுவப்படுவதினால் மட்டுமே நாம் வெள்ளையாக்கப்படமுடியும் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். நம் பாவங்களிலிருந்து மட்டும் இல்லை, நம் நன்னடத்தையிலிருந்தும் நாம் கழுவப்படவேண்டும். இரத்தத்தில் கழுவப்படுவதால் மட்டுமே அது வெள்ளையாக்கப் படமுடியும். எந்தக் கிறிஸ்தவனின் ஒரு கிரியைகூட ஆரம்பத்தில் வெள்ளையாக இருப்பதில்லை. நம்மிடம் ஏதோ கொஞ்சம் நீதி இருந்தாலுங்கூட, அது கலப்படமானது, பரிசுத்தமாக இல்லை. நாம் பெரும்பாலும் மற்றவர்களுக்குக் கனிவு காட்டுகிறோம். ஆனால், உள்ளாக மனவிருப்பமில்லாமல் இருக்கிறோம். நாம் பெரும்பாலும் மற்றவர்களிடம் பொறுமையாக இருக்கிறோம்; ஆனால் வீட்டுக்குப் போனபிறகு முறுமுறுக்கிறோம். ஆகையால், சில நீதியுள்ள செயல்களைச் செய்தபிறகும்கூட நமக்கு இரத்தத்தின் கழுவுதல் இன்னும் தேவைப்படுகிறது. நாம் கட்டிக்கொள்ளும் பாவங்களிலிருந்து நம்மைக் கழுவ நமக்குக் கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் தேவை; நம் நீதியுள்ள கிரியைகளைக் கழுவவும் நமக்குக் கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் தேவை.

சுத்தமான வெள்ளை அங்கியை ஒரு கிறிஸ்தவனாலும் ஒருபோதும் செய்யமுடியாது. தொண்ணூற்றொன்பது சத விகிதம் சுத்தமான ஒன்றை ஒருவனால் செய்யமுடிந்தாலுங் கூட, அங்கு இன்னும் ஒரு சதவிகிதம் கலப்படம் இருக்கும். தேவனுக்குமுன் ஒரு மனிதன்கூட முற்றிலும் கறையற்றவன் இல்லை. கர்த்தர்மேலுள்ள அன்பினிமித்தம் செய்யப்படும் நல்ல கிரியைகளுக்கும்கூட இரத்தத்தின் கழுவுதல் தேவைப்படுகிறது. பாவத்துக்காகச் சிந்தப்படும் கண்ணீர்கள்கூட இரத்தத்தால் கழுவப்படவேண்டும் என்று ஒருமுறை மிகவும் ஆவிக்குரிய ஒரு மனிதன் கூறினார். மனந்திரும்புதலின் கண்ணீர்கள்கூட இரத்தத்தால் சுத்தமாக்கப்படவேண்டும். ஆகையால், அவர்களுடைய அங்கிகள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் தோய்த்து வெளுக்கப் பட்டன என்று திருவெளிப் பாடு 7:14 கூறுகிறது. நாம் பெருமை பாராட்ட நம்மிடம் ஒன்றும் இல்லை. வெளியேயிருந்து உள்ளே வரை எதுவும் முற்றிலும் பரிசுத்தமாக இல்லை. எவ்வளவு அதிகமாக நாம் நம்மை அறிகிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அழுக்கானவர்கள் என்று நாம் உணர்வோம். நம் மிகச் சிறந்த செயல்களும், நம் மிகச் சிறந்த நோக்கங்களும் அழுக்குடன்

கலந்திருக்கின்றன. இரத்தத்தின் சுத்திகரித்தல் இல்லாமல், வெள்ளையாக இருப்பது அசாத்தியம்.

வஸ்திரங்கள் வெள்ளையாக மட்டும் இல்லை, அவை பிரகாசமாகவும் அல்லது பளபளப்பாகவும் இருக்கின்றன (19:8). பிரகாசம் என்றால் பளபளப்பு என்று பொருள். வெண்மைக்கு மங்குகிற, வெளுக்கிற, அழகுகுறைகிற போக்கு உண்டு. ஆனால், இந்த வஸ்திரம் வெள்ளையாக மட்டும் இல்லை, பளபளப்பாகவும் இருக்கிறது. ஏவாள் பாவம் செய்வதற்குமுன் அவள் வெள்ளையாக இருந்திருக்கக்கூடும்; ஆனால், நிச்சயமாக அவள் பளபளப்பாக இருக்கவில்லை. வீழ்ச்சிக்குமுன் ஏவாள் பாவமில்லாமலிருந்தாள். ஆனால், அவள் பாவம்செய்யாதவளாகவே மட்டுமே இருந்தாள், பரிசுத்தமாக இருக்கவில்லை. நாம் வெறுமனே வெள்ளையாக மட்டும் இருக்கவேண்டும் என்று தேவன் கோரவில்லை; நாம் பளபளப்பாகவும் இருக்கவேண்டும் என்று அவர் கோருகிறார். வெண்மை என்பது மந்தமான, இயங்காத அம்சம்; ஆனால், பிரகாசம் என்பது நேர்மறையான, சுறுசுறுப்பான அம்சம்.

ஆகையால், நாம் கஷ்டத்தைக் கண்டு பயப்படக்கூடாது, மிருதுவான வழிப்பாதைக்காக ஏங்கக்கூடாது; ஏனென்றால், கஷ்டமான நாட்களால் நம்மைப் பிரகாசிப்பிக்கமுடியும். சில கிறிஸ்தவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் பாவம்செய்தது போலவோ அல்லது எந்த வகையிலாவது தவறாக இருப்பது போலவோ நாம் உணர்வதில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் ஏறக்குறைய எல்லா அம்சங்களிலும் மிகவும் சரியாக இருப்பதுபோலவே நாம் உணர்கிறோம். ஆனால், நாம் எந்தப் பிரகாசத்தையும்கூட உணர்வதில்லை. அவர்களுடைய நன்மைத் தனம் வெறுமனே சாதாரண நன்மைத்தனம். அவர்கள் வெள்ளை யாக இருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் பிரகாசிக்க வில்லை. ஆயினும், பாடுகளினால் சோதிக்கப்படுகிற, பாடுகளைச் சந்திக்கிற மற்ற அநேகக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாக விழுவார்கள் என்று தோன்றக்கூடிய அளவுக்கு அவர்கள் அசைக்கப்படுகிறார்கள்—ஆனால், அவர்கள் தொடர்ந்து நிற்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின், இந்தக் கிறிஸ்தவர்கள் பிரகாசிக்கும் தன்மையைப் பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் குணத்திலும், தங்கள் நற்பண்பிலும் பிரகாசிக்கிறார்கள். அவர்கள் தெளிவாக இல்லை, மாறாகப் பிரகாசிக்கிறார்கள். அவர்கள் வெள்ளையாக மட்டும் இல்லை, அவர்கள் பிரகாசிக்கவும் செய்கிறார்கள்.

தேவன் எல்லா நேரமும் நம்மில் வேலைசெய்துகொண் டிருக்கிறார். நாம் வெள்ளையாக இருக்குமாறு அவர் தொடர்ந்து நம்மேல் அதிகமான பிரயாசத்தைச் செலவழித்துக்

கொண்டேயிருக்கிறார். நம்மைப் பிரகாசிக்க அவர் நம்மேல் தொடர்ந்து பிரயாசப்பட்டு உழைத்துக்கொண்டேயிருக்கிறார். நாம் பிரகாசமாக இருக்கவேண்டும் என்பதே அவருடைய ஆசை. ஆகையால், நாம் ஒரு மிகப் பெரிய விலைக்கிரயம் செலுத்தவேண்டும். எல்லா வகையான கஷ்டமும் நம்மேல் வர நாம் சித்தமாயிருக்கவேண்டும். இல்லையென்றால், நாம் ஒருபோதும் பிரகாசமாக இருக்கமுடியாது. வெறுமனே வெள்ளையாக மட்டும் இருந்தால் போதாது. நம்மில் நேர்மறையான பிரகாசம் காணப்படவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். கஷ்டத்தைப்பற்றிய பயம், பிரச்சினையைப் பற்றிய பயம், எளிய வழிக்காகவும், மிருதுவான பாதைக் காகவும் ஏக்கம் ஆகியவையெல்லாம் நம் பிரகாசத்தை இழக்கச்செய்யும். எவ்வளவு அதிகமாக நாம் கஷ்டங்களையும், பாடுகளையும் சந்திக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் பிரகாசிக்கமுடியும். எளிதான, சாதாரணமான முறையில் தங்கள் வாழ்க்கையைக் கழிக்கிற மக்கள் வெள்ளையாக இருக்கக்கூடும்; ஆனால், அவர்கள் ஒருபோதும் பிரகாசிக்கமாட்டார்கள்.

இந்த வஸ்திரம் மெல்லிய நூலினாலானது. வேதவாக்கியங் களின்படி நூல் வேறு, கம்பளி வேறு. கம்பளிக்கு வேறு அர்த்தம் உண்டு. கம்பளி கர்த்தராகிய இயேசுவின் வேலையைக் குறிக்கிறது; நூல் பரிசுத்த ஆவியின் வேலையைக் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஓர் ஆட்டைப்போல் இருக்கிறார் என்று ஏசாயா 53:7 விவரிக்கிறது. கம்பளிக்கு மீட்பின் குணம் இருக்கிறது என்று இந்த வசனத்திலிருந்து நம்மால் பார்க்க முடியும். ஆயினும், மெல்லிய நூலில் மீட்பின் எந்தக் குணமும் சம்பந்தப்படவில்லை. அது செடியிலிருந்து உற்பத்திசெய்யப்படுகிறது; அதற்கு இரத்தத்தோடு சம்பந்தம் இல்லை. மெல்லிய நூல் மனிதனுக்குள் பரிசுத்த ஆவி செய்யும் வேலையின் விளைவாகும். மனிதனிடம் தேவனுடைய நீதி மட்டும் இல்லை, அவனுடைய சொந்த நீதியான கிரியைகளும் கூட இருக்கவேண்டும் என்று தேவன் கோருகிறார் என்று மெல்லிய நூல் வஸ்திரம் நமக்குக் கூறுகிறது. தேவன் நம்மில் நீதியை மட்டும் அடைய விரும்பவில்லை; தேவன் நம்மில் தம் நீதிகளையும் அடைய விரும்புகிறார்.

"சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது" (வெளி. 19:8). எல்லா செயல்களும், புறம்பான எல்லா நீதிகளும், கிருபையால் உற்பத்திசெய்யப்படுகின்றன. "அவளுக்கு அளிக்கப்பட்டது." செயல்கள் இயற்கையான மனிதனால் உற்பத்திசெய்யப் படுவதில்லை; மாறாக அவைகள் மனிதனில் பரிசுத்த ஆவி

செய்யும் வேலையின் விளைவாகும். நாம் கர்த்தரை நோக்கிப் பார்த்து, எதிர்பார்ப்புடன், "கர்த்தாவே, அதை எனக்குத் தாரும்; கர்த்தாவே, எனக்குக் கிருபை அருளும்," என்று கூறவேண்டும். இது எவ்வளவு நல்லது—இந்த வஸ்திரம் கிருபையால் அளிக்கப் படுகிறது! இந்த வஸ்திரம் நம்மால் செய்யப்படுகிறது என்று நாம் கூறினால், அது உண்மைதான்; அது மெய்யாகவே நம்மால் அடிப்புவேலைப்பாடாய்ச் செய்யப்படுகிறது. ஆனால், மறுபக்கம், அது தேவனால் அளிக்கப்படுகிறது. ஏனென்றால், நாம் நம்மைத் தாமே சார்ந்திருக்கும்போது ஒரு பொருளை நம்மால் உற்பத்தி செய்யமுடியாது. கர்த்தர் அதை நம்மில் பரிசுத்த ஆவியின் மூலம் செய்துமுடிக்கிறார்.

பாரம் மிகவும் அதிகமாக இருப்பதுபோல் நாம் அநேக நேரங்களில் உணர்கிறோம். "கர்த்தாவே, என்னை விடுவியும்," என்று ஏறக்குறைய கர்த்தரிடம் மன்றாடி நாம் தப்பிக்க விரும்புகிறோம். ஆனால், நாம் நம் ஜெபத்தை மாற்றி, "கர்த்தாவே, இந்தப் பாரத்தைச் சுமக்க என்னைப் பலப்படுத்தும். கர்த்தாவே, அதன்கீழ் நிற்க எனக்குத் திராணியைத் தாரும். என்னை வெள்ளையாக்கி, பிரகாசிக்கும் வஸ்திரத்தால் தரிப்பிக்கப்படும்படி எனக்கு அருளும்," என்று கூறவேண்டும்.

"பின்னும் அவன் (தூதன்) என்னை நோக்கி...என்றெழுது," என்று திருவெளிப்பாடு *19:9* கூறுகிறது. தேவன் பேசினார். அதை எழுதும்படி அவர் யோவானிடம் கேட்டார். அவர் என்ன எழுதினார்? "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்." "இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள்," என்று தூதன் கூறினார். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்துக்கு அழைக்கப் படுவதைவிட உயர்ந்த வேறு சிலாக்கியமோ, வேறு அந்தஸ்தோ இருக்கமுடியாது. இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள்." இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்பதை தேவன் விசேஷமாகத் தெளிவாக்குகிறார். நாம் அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், நாம் அவைகளுக்கு செவிகொடுக்கவேண்டும், நாம் அவைகளை நினைவில்கொள்ள வேண்டும்.

ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்படுவதற்கும், ஆட்டுக்குட்டியின் மணவாட்டியாக அழைக்கப்படுவதற்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன? மணவாட்டி தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு கூட்டம்—புதிய மனிதன். ஆனால், கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பெருந்திரளான தனிமனிதர்கள்—ஜெயங்கொள்பவர்கள். ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவிருந்து இராஜ்ஜியத்தின்

விருந்தைக் குறிக்கிறது. அழைக்கப்பட்டவர்கள் கர்த்தரோடு ஒன்றாக இருந்து, இதுவரை ஒருவரும் ஒருபோதும் சுவைத்தி ராத விசேஷமான, ஒப்பற்ற ஐக்கியத்தை அனுபவித்துமகிழ் வார்கள். "ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட் டவர்கள் பாக்கியவான்கள். இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள்," என்று கர்த்தர் தூதன்மூலம் கூறினார். தேவன்தாமே தம் நிமித்தம் அவருடனான இந்த விசேஷமான ஐக்கியத்தை நம்மை அனுபவித்துமகிழச் செய்வாராக. தேவன்தாமே நம்மை அவருடைய இருதய விருப்பத்தை நிறைவேற்றத் தாழ்மையோடு தேடுபவர்களாக மாற்றுவாராக. தேவன்தாமே நம்மை சபைக்காக ஜீவனைப் பகிர்ந்தளிக்கிறவர்களாக மாற்றுவாராக. அவர்தாமே நம்மை இராஜ்ஜியத்தினிமித்தம் ஜெயங்கொள்பவர்களாக இருக்கத் திராணியருள்வாராக.

## புதிய வானமும், புதிய பூமியும்

"பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று." இங்கு மீண்டும், கொஞ்சத் தூரத்திலிருந்து, நாம் ஆதியாகமத்திற்கு எதிரில் நிற்கிறோம். ஆதியாகமம் 1-ல், வானமும் பூமியும் ஆதியில் இருந்த வானமும் பூமியுமாகும். ஆனால், இந்த வசனத்தில் நாம் புதிய வானத்தையும், புதிய பூமியையும் பார்க்கிறோம். ஆதியாகமத்தில் சமுத்திரம் இருந்தது. ஆனால், இந்த வசனத்தில் சமுத்திரம் இல்லாமல் போயிற்று.

"புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத் தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன்; அது தன் புருஷனுக் காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப் பட்டிருந்தது," என்று 2-ஆம் வசனம் தொடர்ந்து கூறுகிறது. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்ற பிரகடனம் பத்தொன்பதாம் அதிகாரத்தில் இருக்கிறது. ஆனால், இந்த அதிகாரத் தில், புதிய எருசலேம் தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. இதுவே உண்மை. திருவெளிப் பாட்டில் அநேகப் பிரகடனங்கள் இருக்கின்றன; ஆனால், திருவெளிப்பாடு 11:15தான் மிக முக்கியமான பிரகடனமாகும். சம்பவங்களின் வரிசைப்படி, ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப் படுவதும், வலுசர்ப்பம் வானத்திலிருந்து தள்ளப்படுவதும் இந்தச் சத்தத்திற்குப்பின் நடக்கின்றன. அப்படியானால், "உலகத்தின் ராஜ்யங்கள் நம் கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின," என்ற வார்த்தைகளை இந்த நேரத்தில் எப்படிப்

பேசமுடியும்? இது சாத்தியம்; ஏனென்றால், இந்த சத்தம் காரியங்களின் ஆரம்பத்தில் கேட்டது, அவைகள் நடந்து கொண்டிருக்கும் கட்டத்தில் கேட்கவில்லை. ஒரு திருப்புமுனை வந்துவிட்டது என்பதே இதன் பொருள். தேவனுடைய நித்திய குறிக்கோளை நோக்கி திட்டவட்டமான ஒரு திருப்பம் ஏற்படும் போது, இப்பேர்ப்பட்ட பிரகடனத்தைத் தேவனால் பரலோகத்தில் செய்யமுடியும். ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது என்றும், அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்றும் பத்தொன்பதாம் அதிகாரத்தில் தேவன் இன்னொரு பிரகடனம்பண்ணுகிறார். இந்தப் பிரகடனமும்கூட நடக்கப்போகிற சம்பவங்களின் ஆரம்பக்கட்டத்தில் பண்ணப்படுகிறது. அவருக்குமுன்பாக ஜெயங்கொள்பவர்கள் மணவாட்டியின் பிரதிநிதியாக இருப்பதாலும், இந்தக் கூட்டம் மக்கள் அவருடைய பார்வையில் ஆயத்தமாக இருப்பதாலும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது என்றும், அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்றும் தேவனால் பறைசாற்ற முடிகிறது. ஆயினும், "வந்தது" என்பது புதிய வானத்திலும், புதிய பூமியிலும் தான் முழுமையாக நிஜமாகிறது. திருவெளிப்பாடு 21:2-ல், யோவான் உண்மையில் புதிய எருசலேமைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டார். அந்த நேரத்தில் எல்லா அர்த்தத்திலும் மணவாட்டி மெய்யாகவே ஆயத்தமாக இருந்தாள். இது வெறுமனே பத்தொன்பதாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள ஆயத்தம் இல்லை; மாறாக, உண்மையான அனுபவத்தில் ஆயத்தம்.

இப்போது நாம் எபேசியர் 5:26, 27யை வாசிக்க நாம் திரும்பிச்செல்லவேண்டும். "தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்கு கிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்." "அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற் கும்..." என்பது திருவெளிப்பாடு 21-ல் நிறைவேறுகிறது. இப்போது, தேவனுக்குமுன்பாக, கர்த்தருக்கு வழங்கப்பட மணவாட்டி ஆயத்தமாக இருக்கிறாள். "மணவாட்டியாக ஆயத்தம்பண்ணப்பட்ட" என்பதைப் புரிந்துகொள்வது இதற்குமேல் கடினம் இல்லை. இராஜ்ஜியத்தின் யுகத்தின் முடிவில், முழுச் சபையும் இந்த இடத்திற்குக் கொண்டுவரப்படும். இன்று நாம் காணத் தவறுபவை அந்த நாளில் முழுமையாகக் காணப்படும். சபையைப்பற்றிய தேவனுடைய தரம் உயர்ந்தது என்று இன்று நாம் கூறக்கூடும்; சபை எப்படி இப்பேர்ப்பட்ட

நிலைமையை அடையும் என்று நாம் கேட்கக்கூடும். தேவன் இதை எப்படிச்செய்வார் என்று நமக்குத் தெரியாமல் இருக்கக்கூடும். ஆனால், புதிய வானமும் புதிய பூமியும் வரும் நேரத்தில் சபை அந்த நிலைமையை அடையும் என்று நமக்கு நிச்சயமாகத் தெரியும். இராஜ்ஜியத்தின் யுகத்திற்குமுன்பே சபை எபேசியர் 5-ன் கட்டத்தை எட்டும் என்று சிலர் நினைக்கக்கூடும். ஆயினும், கர்த்தர் இப்படிக் கூறவில்லை. திருவெளிப்பாடு 21 வரும்வரை, சபை அந்தக் கட்டத்தை வந்தடையாது. புதிய வானமும், புதிய பூமியும் வரும் நேரத்தில், பரிபூரணமாக்கப் பட்ட ஒரு கூட்டம் பரிசுத்தவான்கள் மட்டும் அங்கு இருக்க மாட்டார்கள்; எல்லா யுகங்களிலும் வாழ்ந்த எல்லாத் தேசங்களி லிருந்தும் எல்லாப் பரிசுத்தவான்களும், அதாவது முழு சரீரமும், அங்கு இருக்கும். அவர்களெல்லாரும் சேர்ந்து தேவனுக்குமுன்பாக இருப்பார்கள்; அவருடைய பிரசன் னத்தில் மகிமைப்படுத்தப் படுவார்கள்.

“மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப் பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்க ளுடைய தேவனாயிருப்பார்,” என்று திருவெளிப்பாடு 21:3 கூறுகிறது. புதிய வானத்திலும் புதிய பூமியிலும் அது எப்படி இருக்கும் என்று இந்த வசனம் கூறுகிறது. புதிய வானமும் புதிய பூமியும் நித்திய ஆசீர்வாதத்தில் இருக்கின்றன; இங்கு நேர்மறையான ஆசீர்வாதம் பேசப்படுகிறது. இந்த வசனத்தைத் தொடர்ந்து, இனிமேல் இது அங்கு இருக்காது, அது அங்கு இருக்காது என்ற பிரகடனங்கள் வருகின்றன. இவை நேர்மறையான அம்சங்கள் இல்லை, மாறாக எதிர்மறையான அம்சங்கள். நேர்மறையான, நித்தியமான ஆசீர்வாதம் என்ன? தேவன் நம்மோடிருப்பார் என்பதே அது. தேவனுடைய பிரசன்னமே ஆசீர்வாதம். நித்தியத்திலுள்ள ஆசீர்வாதத்தைப் பற்றி வேதவாக்கியங்கள் சொல்லியிருப்பவை யெல்லாம் “தேவன்தாமே அவர்களோடேகூட இருப்பார்” என்ற வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. தேவனுடைய பிரசன்னம் இல்லாமல் இருப்பதே மிகக்கடினமான துன்பமாகும். ஆனால், தேவனுடைய பிரசன்னமே நாம் நித்தியத்தில் அனுபவித்துமகிழும் எல்லாமாக இருக்கும். அந்த நாளின் ஆசீர்வாதம் தேவன் நம்மோடுகூட இருப்பதைத் தவிர வேறொன்றாக இருக்காது. “தேவரீர் மெய்யாக பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம்

எம்மாத்திரம்?" (1 இரா. 8:27) என்று ஒருமுறை சாலோமோன் கூறினார். வானங்களும் வானாதி வானங்களும் அவரைக் கொள்ளமுடியாது. ஆனால், புதிய எருசலேமால் அவரைக் கொள்ளமுடியும் என்று நாம் கூறக்கூடும். தேவன் புதிய எருசலேமில் வாசம்பண்ணுகிறார்; தேவனுடைய சிங்காசனம் அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

புதிய எருசலேம் என்ற பெண்ணைப்பற்றியே நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆதியாகமத்தில் நாம் ஒரு தோட்டத்தையும், ஒரு பெண்ணையும் பார்த்தோம். இந்தப் பெண் பாவம்செய்தாள். தேவன் அவளைத் தோட்டத்தை விட்டு விரட்டினார். இப்போது புதிய வானத்திலும், புதிய பூமியிலும், பெண்ணும் பரிசுத்த நகரமும் ஒன்றே; இனிமேல் அவர்கள் தனித்தனியாக இருக்கும் இரண்டு வஸ்துக்கள் இல்லை. புதிய எருசலேம் பெண்ணாக இருப்பதால், புதிய எருசலேமே ஆட்டுக்குட்டியானவரின் மனைவி; ஆகையால், பெண்ணும் பரிசுத்த நகரமும் ஒன்றே. அது மட்டும் இல்லை; தேவனுடைய சிங்காசனம்கூட புதிய எருசலேமில் ஸ்தாபிக்கப் படுகிறது அல்லது தேவன்தாமே இந்தப் பெண்ணுக்குள் வாசம்பண்ணுகிறார் என்று நாம் சொல்லக்கூடும். சர்வ வல்லமையுள்ளவர் அவளில் வாசம்பண்ணுகிறார். ஆகையால், வெளியேயிருந்து வரும் சக்தி அல்லது சோதனை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் சரி, அது ஒரு பொருட்டேயில்லை. இனிமேல் பொல்லாத வல்லமைகளால் உள்ளே நுழைய முடியாது அல்லது மனிதனால் மீண்டும் விழமுடியாது; ஏனென்றால், தேவன் அவளுக்குள் வாசம்பண்ணுகிறார். தேவனுடைய பிரசன்னமே புதிய வானம் மற்றும் புதிய பூமியின் ஆசீர்வாதமாகும். தங்கள் அனுபவத்தில் தேவ னுடைய பிரசன்னத்தைக் கொஞ்சமாவது அனுபவித்தவர்கள், மெய்யாகவே அது ஓர் ஆசீர்வாதம் என்பதை அறிந்திருக் கிறார்கள். இதைவிடப் பெரிய அல்லது விலையேறப்பெற்ற ஆசீர்வாதம் வேறொன்றும் இல்லை.

3-ஆம் வசனத்தின் கடைசிப் பகுதியை நாம் மீண்டும் வாசிப்போம்: "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்." தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயிருக்கும் உறவை நாம் பார்க்கிறோமா? நாம் தேவனுடைய மக்களாக இருப்பதென்றால் மெய்யாகவே என்ன பொருள்? தேவன் நம்மோடுகூட இருப்பார் என்பதே அதன் பொருள்; ஆகையால், நாம் அவருடைய மக்களாக்கப்படுவோம். தேவன் நம் தேவனாக இருப்பார் என்றால்

என்ன பொருள்? தேவன் நம்மோடிருப்பார் என்பதே அதன் பொருள்; ஆகையால், தேவன் நம் தேவனாயிருப்பார். நாம் அவருடைய பிரசன்னத்திலிருந்து தூரமாக இருக்கும்போது தேவன் நம் தேவனாக இருக்கமுடியாது. தேவன்தாமே நம்மோடேகூட இருந்து நம்முடைய தேவனாயிருப்பதே நித்தியத்தில் மிகப் பெரிய, மிகஉயர்ந்த ஆசீர்வாதமாக இருக்கும்.

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது," என்று 4-ஆம் வசனம் கூறுகிறது. எல்லா மனிதர்களும் கண்ணீர்விடுவதை அனுபவித்திருக்கிறார்கள்; ஆனால், புதிய வானத்திலும் புதிய பூமியிலும் அவர்கள் இந்த ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள்—அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். மரணம் முழுக்க முழுக்க வீழ்ச்சியின் விளைவாகும். ஆனால், புதிய வானத்திலும், புதிய பூமியிலும் இனிமேல் மரணம் இருக்காது. கடைசி எதிரி ஒழிக்கப் படுவான். துக்கம் அல்லது துயரம் நம் இருதயத்தின் வலி, உள்ளான துன்பத்தின் உணர்ச்சி; அழுகை வெளியே அழுவதாகும், புறம்பான வெளியாக்கம். வலி நம் பௌதீக சரீரத்தின் துன்பம். ஆனால், தேவன் இவை யெல்லாவற்றிற்கும் ஒரு முடிவுகட்டுவார். அவையெல்லாம் *கண்ணீர், மரணம், துக்கம், அலறுதல், வருத்தம்* என்ற வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை இனிமேல் இருக்காது; அவையெல்லாம் ஒழிந்துபோகும்.

"சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்," என்று 5-ஆம் வசனம் கூறுகிறது. நாம் புதிய படைப்பாக இருந்தபோதுங் கூட, நாம் இன்னும் பழைய படைப்பில் வாழ்கிறோம் என்பது தான் இன்று நாம் சந்திக்கும் பிரச்சினையாகும். ஆனால், அந்த நாளில் எல்லாம் புதிதாகிவிடும்; எல்லாம் புதிய படைப்பில் இருக்கும். உள்ளான ஆள்தத்துவம் மட்டும் புதிதாக இருக்காது; புறம்பாகவும் எல்லாம் புதிதாக இருக்கும். முழு சுற்றுச்சூழலும், அதற்குள் இருக்கும் எல்லாமும் புதிதாக்கப்படும். இதுவே நித்தியம் என்றழைக் கப்படுகிறது. புதிய படைப்பு நமக்காகவே. எல்லாம் புதிய படைப்பில் இருக்கும்போது மட்டுமே நம் இருதயங்கள் திருப்தியடையும். நாமெல்லாரும் அனுபவிக்கிற வேதனையான அனுபவத்தைப்பற்றி ஏசாயா 6 பேசுகிறது: "நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்." இதோடுகூட இன்னொரு வேதனையான அனுபவமும் கூறப்பட்டுள்ளது: "அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்." ஆனால், அந்த

நாளில், நம்மைச்சுற்றி எல்லாம் புதிய படைப்பில் இருக்கும். அந்த நாள் முற்றிலும் மகிமையாக இருக்கும்.

"பின்னும் அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்," என்று 5-ஆம் வசனம் தொடர்ந்து கூறுகிறது. இது எழுதப்பட்டிருப்பது எவ்வளவு நல்லது. தேவன் இந்த வார்த்தைகளை யோவானுக்குக் கொடுத்து, அவைகளை எழுதும்படி அவனிடம் சொன்னார். எழுதப்பட்டவைகளில் ஓர் எழுத்தோ அல்லது ஒரு புள்ளியோகூட ஒழிந்துபோகாது. இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமான வைகள். தேவன் கடைசி வெற்றியைப் பெற வேண்டும் என்பதே நம் கடைசி விசுவாசமாகும்.

6-ஆம் வசனத்தில் தேவன் யோவானிடம், "ஆயிற்று," என்று கூறினார். எந்த ஆதாரத்தை வைத்துத் தேவனால் யோவானிடம் "இது ஆயிற்று" என்று கூறமுடிந்தது? அவரால் இதைக் கூறமுடியும்; ஏனென்றால், அவர் "அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாக" இருக்கிறார். தேவனுடைய வேலை வெற்றிகரமாக இல்லாததுபோல் பெரும்பாலும் தோன்றுகிறது. ஆனால், "நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாக இருக்கிறேன்," என்று அவர் கூறுகிறார். தேவனே முதலாவதான திட்டவரைபடத்தை உண்டாக்கினார். தேவன் தாமே அதை அதின் கடைசி முழுமைக்குக் கொண்டுவருவார். தேவனே அல்பாவாக, எல்லாவற்றையும் ஆரம்பிப்பவராக, இருப்பதற்காக நாம் அவருக்கு எவ்வளவாய் நன்றிகூறுகிறோம். எல்லாவற்றிற்கும் ஆரம்பம் தேவனில்தாம் இருந்தது. அதே நேரத்தில் அவரே ஓமெகாவாகவும் இருக்கிறார். மனிதனால் தோற்றுப்போகமுடியும், அவன் தோற்றுப் போவான். ஆனால், தேவனே ஓமெகா. மனிதன் இதைக் கூறக்கூடும்; மனிதன் அதைக் கூறக்கூடும். ஆனால், தேவன் தாம் கடைசி வார்த்தையைக் கூறுவார். அவரே ஓமெகா.

தேவன் இந்தக் காரியங்களைப் பேசினார்; ஏனென்றால், அவர் தம் திட்டத்தை நிறைவேற்றுவார் என்று அவர் நமக்குக் கூற விரும்புகிறார். அவர் தம் இலக்கை அடைவார். அவர் தாம் ஆரம்பித்ததைச் செய்துமுடிப்பார். சாத்தானுடைய வேலை தேவனுடைய வேலைக்கு மெய்யாகவே தடங்கல் ஏற்படுத்தி யிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், தேவன் ஆதியில் வெறுமனே திட்டமிட்ட அல்பாவாக மட்டும் இல்லை, அவர் கடைசியாக வெற்றிபெறப்போகிற ஓமெகாவாகவும் இருக்கிறார் என்பதையும் நாம் மேலும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். தேவன் ஒருபோதும் கைகழுவுகிறவர் இல்லை, அவர் தம் எந்தக் குறிக்கோளையும் ஒருபோதும் நிறைவேற்றாமல்விடார். சபையில் தற்போதைய

அனுபவத்தில் அதின் நிலைமை எப்படியிருந்தாலும் சரி, தேவனுடைய இலக்கில் அதில் எந்தக் கறையோ அல்லது திரையோ அல்லது இதுபோன்ற வேறு எந்தக் காரியங்களோ இருக்காது. மேலும், அது மகிமையால் தரிப்பிக்கப்பட்டு, அவருடைய குமாரனுக்கு வழங்கப்படும்.

விசுவாசத்திலும், உபதேசத்திலும், நடைமுறையிலும் தேவனுடைய பிள்ளைகள் ஒருவரிலிருந்து ஒருவர் இவ்வளவு அதிகமாக வித்தியாசமாக இருப்பதை நாம் பார்க்கும்போது, அவர்கள் எபேசியர் 4-ல் பேசப்பட்டுள்ள விசுவாசத்தின் ஒருமையை எப்போதாவது அடைவது எப்படி சாத்தியமாகும் என்று நாம் ஆச்சரியப்படக்கூடும். இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் காத்திருந்தாலுங்கூட, இது ஒருபோதும் நடக்காது என்று பெருமூச்சுவிட்டு நாம் கூறக்கூடும். ஆனால், தாமே ஒமெகா என்று தேவன் கூறினார். ஒரு நாள் வரும்; அந்த நாளில் அவருக்குமுன்பாக ஒரு மகிமையான சபை இருக்கும். அவர் தண்ணீரைப் பயன்படுத்தக்கூடும் அல்லது அவர் அக்கினியைப் பயன்படுத்தக்கூடும். ஆனால், அவர் நிச்சய மாக மகிமையான சபையைப் பெறுவார். நம்மால் தேவனைத் தடைசெய்யமுடியாது. அவர் தம்மைத் திருப்திப்படுத்தும் சபையை அடைவார். நாம் எவ்வளவு பலவீனமாக இருந்தாலும் சரி, எவ்வளவு ஏனோதானோவென்று இருந்தாலும் சரி, அல்லது எவ்வளவு கடினமாக இருந்தாலும் சரி, ஒரு நாள் வரும்; அந்த நாளில் தேவன் நம்மைத் தூள்தூளாக நொறுக்கிப்போடுவார். அவர் நம்மை உடைப்பார், நம்மை நொறுக்குவார்; அப்போது நாம் எப்படி இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அப்படி நாம் மாறுவோம். தேவன் இதைச்செய்துகொண்டிருப்பதால், அவர் இதைக் கடைசிவரை ஆசையாய்ப் பின்தொடர்வார். அவர் ஒருபோதும் பாதியில் விடமாட்டார். நாம் களிகூர்ந்து அவரைத் துதிப் போம். அவர் தம் இலக்கை அடைந்தாகவேண்டும்!

"தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்," என்று 6-ஆம் வசனம் தொடர்ந்து கூறுகிறது. இங்கு மீட்பு வலியுறுத்தப்படவில்லை; மாறாகத் தேவன் நமக்கு எவ்வளவாய்த் தேவைப்படுகிறார் என்பது வலியுறுத்தப்படுகிறது. தேவன் தேவைப்படுகிறார் என்பதே தாகத்தின் அர்த்தமாகும். தேவன் இல்லாமல் இருப்ப தென்றால், தண்ணீர் இல்லாமல் இருப்பதாகும். ஆகையால், ஜீவத்தண்ணீர் ஊற்று தாகமாயிருப்பவர்களின் தாகத்தைத் தீர்ப்பதற்காகவே.

இப்போது நாம் 7-வது வசனத்துக்கு முழுக் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக இந்த வசனத்திலுள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்துக்காக நாம் தேவனுக்கு

எவ்வளவாய் நன்றி கூறுகிறோம்; அது ஜெயங்கொள்பவர்கள் அடையப்போகிறவைகளைப்பற்றிக் கூறுகிறது. இங்கு கூறப் பட்டுள்ள ஜெயங்கொள்பவர்கள் திருவெளிப்பாடு 2, 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஜெயங்கொள்பவர்களிலிருந்து வித்தியாச மானவர்கள். இரண்டாம், மூன்றாம் அதிகாரங்களில் கூறப் பட்டுள்ள ஜெயங்கொள்பவர்கள் முழுச் சபையிலிருந்து வருகிற ஒரு கூட்டம். ஆனால் இங்கு கூறப்பட்டுள்ள ஜெயங் கொள்பவர்கள் "தாகமாயிருக்கிறவனோடு" தொடர்புடைய வர்கள். "தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்," என்று முந்தைய வசனம் கூறுகிறது. பின்பு, "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்," என்று 7-ஆம் வசனம் கூறுகிறது. வேறு வார்த்தை களில் கூறுவதானால், ஜீவத்தண்ணீரூற்றில் குடிப்பவர்களே இங்கு கூறப்பட்டுள்ள ஜெயங்கொள்பவர்கள். இந்த ஜெயங்கொள்பவர்கள் இந்தத் தண்ணீரைக் குடிக்காதவர்களிடமிருந்து வித்தியாசப்படுகிறார்கள். இத்தகைய ஜெயங்கொள்ளுதல் 1 யோவான் 5:4-ல் கூறப்பட்டுள்ள ஜெயங் கொள்ளுதலைப் போன்றதாகும்: "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." தேவனால் பிறந்தவர்களிடம், கர்த்த ருக்குச் சொந்த மானவர்களிடம், விசுவாசம் இருக்கிறது. கர்த்தரைச் சேராதவர் களிடம் விசுவாசம் இல்லை. இந்த விசுவாசம் நம்மை உலகத்தை ஜெயிக்கச்செய்கிறது. இது நம்மை நிச்சயமாக சந்தோஷப்படுத்த வேண்டும், இது நம்மைக் களிகூரச்செய்து, அல்லேலூயா என்று ஆர்ப்பரிக்கச்செய்ய வேண்டும். இராஜ்ஜியத்தின் யுகத்தில் ஆண்பிள்ளை ஒரு சிறுபான்மையினர். ஆனால், புதிய எருசலேமில் முழுச் சரீரமும் ஜெயங்கொள்கிறது. புதிய எருசலேமில், நம்மிடம் விசுவாசம் இருக்கிறதா இல்லையா என்பதே காரியம். நம்மிடம் விசுவாசம் இருந்தால் நாம் ஜெயங்கொள்பவர்கள்.

அந்த நாளில் தேவன் நம் கண்களிலிருந்து எல்லாக் கண்ணீரையும் துடைப்பார். இனிமேல் மரணம் இருக்காது, இனிமேல் துக்கமோ, அலறுதலோ, வருத்தமோ இருக்காது. ஏனென்றால், முந்தினவைகள் ஒழிந்துபோயின. ஆனால், இவைகளெல்லாம் எதிர்மறையான அம்சங்கள். நேர்மறையான காரியம் என்னவென்றால், "அவர்களிடத்திலே அவர் வாசமா யிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்." 7-ஆம் வசனமும், "நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்," என்று கூறுகிறது. ஆகையால், கிறிஸ்தவர்கள் என்ற முறையில் தேவனுக்குமுன்பாக நம் நிலைமை என்னவென்றால் நாம் மக்கள் மட்டும் இல்லை,

குமாரர்களுமாவோம். அநேகக் குமாரர்கள் மகிமைக்குள் நுழையவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். "நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்," என்று தேவன் கூறியதற்காக நாம் அவருக்கு நன்றிகூறுகிறோம், அவரைத் துதிக்கிறோம். நித்தியத்தில் இதைவிட உயர்ந்த ஆசீர்வாதம் வேறொன்றும் இல்லை.

"பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பான வர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக் காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்," என்று 8-ஆம் வசனம் கூறுகிறது. நித்தியத்தில் உள்ள ஆசீர்வாதம் எப்படி ஓர் உண்மையோ, அதுபோல நித்தியத்தில் உள்ள தண்டனையும் ஓர் உண்மை. அன்பின் தேவனிடமிருந்து வரும் தண்டனை தவிர்க்க முடியாதது, அதிலிருந்து தப்பிக்கமுடியாது. இது எல்லாருக்கும் ஒரு கடுமையான எச்சரிக்கை.

## பரிசுத்த நகரம் பரலோகத்திலிருந்து இறங்கிவருதல்

இப்போது நாம் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைப் பற்றிய விவரங்களைப் பார்ப்போம். "பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டி யானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான்," என்று திருவெளிப்பாடு 21:9-10 கூறுகின்றன.

தூதன் திருவெளிப்பாடு 17:1-3லுள்ள மகா வேசியை யோவானுக்குக் காண்பிக்க விரும்பினபோது, அவர் அவனை வனாந்தரத்திற்கு நடத்தினார். தேவனுடைய பார்வையிலும், பரிசுத்த ஆவியால் ஏவப்படுகிறவர்களின் பார்வையிலும், வேசி என்பவள் வனாந்தரத்தில் வாசம்பண்ணுகிறவள். அவள் ஜீவனோ அல்லது கனியோ இல்லாத இடத்தில், அதாவது தரிசு நிலத்தில், வாழ்கிறாள். மனிதர்கள் இன்று உயர்ந்த சபைக் கட்டிடங்களைப் பார்க்கலாம், மிக நன்றாக ஆயத்தம்பண்ணப்பட்ட ஞாயிற்றுக் கிழமை ஆராதனைகளில் அவர்கள் பங்குபெறலாம், அவர்கள் மனிதனின் திறமையைப் பாராட்டலாம்; ஆனால், தேவனுடைய பார்வையில், பாபிலோனில் தொடங்கிய எல்லாமே வனாந்தரத்தில்

தான் இருக்கிறது; அது பாலைவனம்.

தூதன் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியை யோவானுக்குக் காண்பித்தபோது, பெரிதும் உயரமுமான ஒரு மலைக்கு அவனைக் கொண்டுவந்தார். அங்கு அவர் எருசலேமாகிய பரிசுத்த நகரம் தேவனிடத்திலிருந்து பரலோகத்தைவிட்டு இறங்கிவருவதைக் காண்பித்தார். நாம் தேவனுடைய நித்திய தரிசனத்தைப் பார்க்க விரும்பினால், தேவன் நம்மைப் பெரிதும் உயரமுமான மலைக்குக் கொண்டுவரவேண்டும் என்று இது வெளிப்படுத்துகிறது. நாம் ஆவிக்குரியரீதியில் உயர்ந்த மலையில் நிற்கவில்லையென்றால், சமவெளியில் வாழ்ந்துகொண்டிருக்கிறவர்களை நம்மால் பார்க்க முடியாது, நம்மால் புதிய எருசலேமைப் பார்க்கமுடியாது, நம்மால் தேவனுடைய இறுதியான வேலையையும் பார்க்கமுடியாது. மோசே இஸ்ரவேல் மக்களோடுகூட யோர்தானை அடைந்தபோது என்ன செய்யவேண்டும் என்று தேவன் அவனிடம் கூறினார்? பிஸ்கா மலையின் உச்சிக்குச் சென்று, தாம் வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தை நோக்கிப்பார்க்கத் தன் கண்களை ஏறெடுக்குமாறு தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். தரிசனத்தையும், வெளிப்பாட்டையும் பெறுவதற்கும், தேவனுடைய திட்டத்தை நோக்கிப் பார்ப்பதற்கும், நாம் உயரத்தில் இருக்கவேண்டும் என்று இதுவும் நமக்குக் கூறுகிறது.

பெரிய பாவம் எதுவும் செய்யாமல், சாதாரண கிறிஸ்தவனாக இருப்பது போதும் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். நாம் இந்த நிலையை எடுத்துக்கொள்ளும்போதெல்லாம், தேவனுடைய நித்திய திட்டம் நமக்கு வெறும் உபதேசமும், அறிவும்தானே தவிர வேறொன்றும் இல்லை என்பதை நாம் உணரவேண்டும். நாம் கொஞ்சம் ஆவிக்குரிய முறையில் ஏறிச்சென்று, கொஞ்சம் ஆவிக்குரியவற்றை அடையவேண்டும். நாம் ஓர் உயர்ந்த மலையில் ஏறிச்செல்ல எதிர்பார்க்கவேண்டும். நாம் இதைச் செய்யும்போது மட்டுமே, நம்மால் புதிய எருசலேமைப் பார்க்கமுடியும்.

தேவன் தாம் செய்ய விரும்புகிறதை செய்துமுடிப்பார். தேவன் தாம் கடந்த நித்தியத்தில் திட்டமிட்டதை வரும் நித்தியத்தில் அடைவார். முதலாவது, இராஜ்ஜியத்தைக் கொண்டுவர ஜெயங்கொள்பவர்கள் இருக்கவேண்டும். பின்பு, புதிய வானத்தையும் புதிய பூமியையும் கொண்டுவர ஜெயங்கொள்பவர்கள் இருக்கவேண்டும். ஆனால், யார் ஜெயங்கொள்பவர்களாக இருப்பார்கள் என்பதே பிரச்சினை. ஜெயங்கொள்பவனாக இருக்க நம்மிடம் வெளிப்பாடு இருக்கவேண்டும். வெளிப்பாடு இல்லையென்றால், எதை வேண்டுமானாலும் போதனையாக ஏற்றுக்கொள்வது சுலபம். ஆனால், அறிவினால்

ஒருபோதும் கனியை உற்பத்திசெய்யமுடியாது என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும்; வெளிப்பாடு மட்டுமே கனி தரும். ஆயினும், வெளிப்பாட்டைப் பெற நாம் உயர்ந்த மலைக்கு ஏறிச்செல்லவேண்டும்; நாம் சமவெளியில் வாசம்பண்ண முடியாது. மலையில் ஏறிச்செல்வதில் கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. ஏனென்றால், ஏறிச்செல்ல நாம் நம் பலத்தைப் பயன்படுத்த வேண்டும். நாம் கொஞ்சம் முயற்சி எடுக்கவில்லையென்றால் நம்மால் சிகரத்தை எட்டமுடியாது. தேவன்தாமே நமக்கு இந்த ஆவிக்குரிய பேற்றைத் தந்து, தாழ்வான சமவெளியிலிருந்து நம்மை விடுவிப்பாராக. வெறுமனே இரட்சிக்கப்பட்டு, அதற்குமேல் வேறொன்றையும் விரும்பாமல் இருந்தால் அது போதும் என்று நாம் நினைக்கக் கூடாது. வாழ்வின் இந்தத் தாழ்வான மட்டத்திலிருந்து தேவன் நம்மை இரட்சித்து, அவர் நமக்குத் தம் இருதய விருப்பத்தைக் காண்பிப்பாராக. நாம் உயர்ந்த மலையில் இருக்கும்போது மட்டுமே, வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்வோம்.

யோவான் புதிய எருசலேமைப் பார்த்தபிறகு, அவர் ஒரு முட்டாள்தனமான காரியத்தைச் செய்தார்—தூதனை வணங் கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தான். அவனுடைய இந்தச் செயல் முட்டாள்தனமானது என்றாலுங்கூட, மிகவும் அர்த்தமுள்ளது. பன்னிரண்டு சீடர்களில் யோவான்தான் இந்த உலகத்தைவிட்டுச் சென்ற கடைசி சீடர். அவருடைய அறிவும், அவருடைய கிரியைகளும், அவருடைய அன்பும், அவருடைய அனுபவமும் நம்முடையவைகளைவிட மிகவும் அதிகமானவை; இருப்பினும், முட்டாள்தனமான இந்தக் காரியத்தை அவர் இரண்டுமுறை செய்தார் என்று திருவெளிப்பாட்டில் நாம் பார்க்கிறோம். அவர் தூதர்களை ஆராதிக்க விரும்பின இரண்டு நிகழ்ச்சிகள் இருக்கின்றன—ஒருமுறை 19:10-ல், மீண்டும் ஒருமுறை 22:8-ல். யோவானின் இந்தச் செயல் சட்டவிரோதமானதாக இருந்து, "இப்படிச் செய்யாதபடிக்குப் பார்," என்று அவரிடம் கூறப்பட்டாலுங்கூட, யோவான் எவ்வளவு முழு இருதயத்தோடு இருந்த நபர் என்றும், அவர் எவ்வளவு அதிகமாகத் தேவனுடைய திட்டத்தையும், வேலையையும் பாராட்டினார் என்றும் இது வெளிப்படுத்துகிறது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் அவரால் தன்னைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. அவர் முட்டாள்தனமான காரியத்தைச்செய்தார். அவர் செய்த காரியம் தவறு; ஆனால், அவருடைய இருதயம் சரியாக இருந்தது என்பது வெளிப்படுத்தப் பட்டது. நாம் தேவனுடைய தரிசனத்தைப் பார்க்கும்போது நம்மிடம் எப்படிப்பட்ட மனப்பாங்கு இருக்கவேண்டும் என்று இது நமக்குக் காண்பிக்கிறது. நாம் இப்பேர்ப்பட்ட தரிசனத்தைப் பார்க்க கர்த்தர்தாமே நமக்கு அருள்வாராக. புதிய எருச லேமைப்

பார்க்கும் உயரத்துக்கு நாம் ஏறிச்செல்ல அவர்தாமே நம்மைப் பலப்படுத்துவாராக. ஆ, நமக்குள் இருக்கும் எல்லாமே இந்தத் தரிசனத்தின் வெற்றிக்காகவேயன்றி வேறெதற்காகவும் இருக்கக்கூடாது.

"ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன்," என்று தூதன் யோவானிடம் கூறினான் (வெளி. 21:9). ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியை யோவானுக்குக் காண்பிக்கப்போவ தாகத் தூதன் அவனிடம் கூறினான். ஆனால், யோவானோ "எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதைக்" கண்டான் (வசனம் 10). எருசலேமாகிய பரிசுத்த நகரமே யோவான் பார்த்த ஆட்டுக்குட்டியானவரின் மனைவி. ஆகையால், நகரத்தின் விவரம் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியின் விவரமுமாகும். நகரம் ஓர் அடையாளம்; இது படைப்புக்குமுன்பே தேவன் தெரிந் தெடுத்த கூட்டு சரீரத்தின் குணநலன்களையும், ஆவிக்குரிய நிலைமையையும் விவரிக்கிறது.

இந்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறது. இந்தக் கூட்டு மனிதன் போய்ச்சேரும் இடத்தைப்பற்றி மட்டும் இல்லை, இந்தக் கூட்டு மனிதன் புறப்பட்டுவரும் இடத்தைப்பற்றியும் தேவன் அக்கறைப்படுகிறார் என்பதே இதன் பொருள். இது வெறுமனே எதிர் காலத்தைப்பற்றிய காரியம் மட்டும் இல்லை, ஊற்றைப்பற்றிய காரியமுமாகும். ஆட்டுக்குட்டியானவரின் மனைவி பரலோகத்தைவிட்டு வருகிறாள். புதிய எருசலேம் பூமியிலிருந்து வரவில்லை, மாறாகப் பரலோகத்திலிருந்து வருகிறது. பிற்காலத்தில் இரட்சிக்கப்பட்ட பாவ வரலாற்றையுடைய ஒரு மனிதனைத் தேவன் நமக்குக் காண்பிக்கவில்லை. (நம்மிடம் பாவ வரலாறு இல்லை என்பதோ, நாம் மனந்திரும்பி கிருபையால் இரட்சிக்கப்பட வேண்டிய தேவை இல்லை என்பதோ இதன் பொருள் இல்லை.) அதற்குப்பதிலாக, தேவனிடமிருந்து வெளிவருகிற அந்தப் பகுதியை மட்டுமே இந்தப் பத்தி நமக்குக் காண்பிக்கிறது. இது கிறிஸ்துவுக்கு வழங்கப்படவிருக்கிற எபேசியர் 5-ன் மகிமையான சபையை நமக்குக் காண்பிக்கிறது.

கிறிஸ்துவுக்கு வழங்கப்படவிருக்கிற சபையை ஒரு பெண், பழைய ஏற்பாட்டில், விசேஷமான முறையில் பிரதிநிதித்துவப் படுத்துகிறாள். அவள் ரெபேக்காள். "நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல், நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்திற்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண் கொள்,"

என்று ஆபிரகாம் தன் வயதான வேலைக்காரனிடம் கூறினான் (ஆதி. 24:3-4). அவள் ஐப்பிராத்துக்கு மேற்கே இருந்த தேசத்தின் குடி இல்லை, அவள் யோர்தானுக்கு மேற்கே இருந்த தேசத்தின் குடியும் இல்லை; மாறாக, அவள் ஈசாக்கின் இனத்தாள்.

கிறிஸ்துவின் இனத்தைச் சார்ந்த ஒரு கூட்டு மனிதனைப் பெறவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். கிறிஸ்து பரலோகத்திலிருந்து வந்தவர் என்பதால், சபையும் பரலோகத் திலிருந்துதான் வரவேண்டும். "எப்படியெனில், பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்," என்று எபிரேயர் 2:11 கூறுகிறது. சகோதரர்கள் என்றால் என்ன பொருள்? ஒரே தாயிடமும், தகப்பனிடமும் பிறந்தவர்களே சகோதரர்கள். ஒரு பக்கம், நாம் கர்த்தருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால் வாங்கப்பட்டதற்காக தேவனுக்கு எவ்வளவாய் நன்றிகூறுகிறோம். மறுபக்கம், நாம் மெய்யாகவே தேவனால் பிறந்தோம். ஒவ்வொரு கிறிஸ் தவனின் வரலாற்றிற்கும் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன; ஒன்று, புறம்பாக நாம் தேவனால் விலைக்கு வாங்கப்பட் டோம், மற்றொன்று உள்ளாக நாம் தேவனால் பிறந்தோம். பாவத்துடனான நம் வரலாற்றின் நோக்கு நிலையிலிருந்து, நாம் புறம்பாக விலைக்குவாங்கப்பட்டோம்; பாவம் இல்லாத நம் வரலாற்றின் நோக்குநிலையிலிருந்து, நாம் தேவனால் பிறந்தோம். ஏனென்றால், தேவனால் பிறந்தவர்களால் பாவம் செய்யமுடியாது. இந்தப் பங்கிற்குப் பாவத்தின் தொடக்கமோ அல்லது பாவத்தின் வரலாறோ கிடையாது. சபை ஒருபோதும் இந்தப் பூமியில் இருந்ததில்லை என்பதையே புதிய எருசலேம் தேவனிடமிருந்து கீழே இறங்கிவருகிற உண்மை சுட்டிக் காட்டுகிறது. சபை முதன்முறையாகப் பூமிக்கு இறங்கி வருகிறதுபோல் தோன்றுகிறது. நாம் பாவிகள் என்ற முறையில் தேவனிடம் வரவில்லை என்பதல்ல இதன் பொருள்; மாறாக, நம்மில் ஒரு பங்கு இருக்கிறது; அது தேவனிடமிருந்து வருகிறது, அது முற்றிலும் தேவனாலானது. புதிய எருசலேம் தேவனிடமிருந்து பரலோகத்தைவிட்டு இறங்கிவருவதற்காக நாம் எவ்வளவாய்த் தேவனுக்கு நன்றிகூறவேண்டும்.

இந்த நகரம் பதினேழாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள நகரத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. அந்த நகரம் மகா நகரம் என்றழைக்கப்படுகிறது; இந்த நகரம் பரிசுத்த நகரம் என்றழைக்கப்படுகிறது. பாபிலோனின் குணம் அதின் பெருந்தோற்றம், புதிய எருசலேமின் குணம் அதின் பரிசுத்தம். கிறிஸ்தவர்களிடையே பெருந்தோற்றத்தால் ஆட்கொள்ளப்பட்ட

சிலர் இருக்கிறார்கள், பரிசுத்தத்திற்குக் கவனம்செலுத்துகிற சிலர் இருக்கிறார்கள். பெருந்தோற்றத்தில் கவனம்செலுத்துகிறவர்கள் பாபிலோனின் கோட்பாட்டில் இருக்கிறார்கள். பரிசுத்தத்திற்குக் கவனம்செலுத்துகிறவர்கள் புதிய எருசலேமின் கோட்பாட்டில் இருக்கிறார்கள்.

பரிசுத்தம் என்றால் என்ன பொருள்? தேவன் மட்டுமே பரிசுத்தமாக இருப்பதால், அவரிடமிருந்து வெளிவருகிற எதுவும் பரிசுத்தமாகத்தான் இருக்கவேண்டும். "பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்," என்றால் கிறிஸ்து பரிசுத்தர், ஏனென்றால் அவர் ஒருவரால் உண்டாயிருக்கிறார் என்றும், நாமும் பரிசுத்தர், ஏனென்றால் நாமும் ஒருவரால் உண்டாயிருக்கிறோம் என்றும் பொருள். ஒருவரால் உண்டாயிருக்கிறவர்கள் மட்டுமே பரிசுத்தமாயிருக்கிறார்கள். தேவனிடமிருந்து வெளிவருவதற்கு மட்டுமே மதிப்பு உண்டு. தேவனிடமிருந்து வெளிவருவது மட்டுமே, அது மட்டுமே, புதிய எருசலேம். மனிதனுக்குரிய எல்லாம் ஓரமாக ஒதுக்கப்படவேண்டும். எடுத்துக்கொள்ளப்படும் விஷயத்துக்கு இதுவே ஆதாரம். சிலர் ஏன் கைவிடப்படுவார்கள்? கிறிஸ்துவல்லாத அநேகக் காரியங்கள் அவர்களிடம் இருப்பதே இதற்குக் காரணம். கிறிஸ்துவல்லாத எதையும் பரலோகத் திற்குக் கொண்டுவரமுடியாது. பரலோகத்தைச் சாராத எதுவும் பரலோகத்துக்குத் திரும்பிச்செல்லமுடியாது. பூமிக்குரிய எல்லாம் பூமியில் விடப்படவேண்டும்; பரலோகத்துக்குரிய எல்லாம் பரலோகத்துக்குத் திரும்பிச்செல்லவேண்டும்.

## பரிசுத்த நகரத்தின் வெளிச்சம்

"அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது," என்று திருவெளிப்பாடு 21:11 இந்த நகரத்தைப்பற்றி விவரிக்கிறது. வச்சிரக்கல் ஏற்கெனவே திருவெளிப்பாடு 4-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. யோவான் சிங்காசனத்தில் வீற்றிருந்த ஒருவரைப் பார்த்தார்; அவருடைய தோற்றம் வச்சிரக்கல்லைப்போலவும், பதுமராகத்தைப் போலவும் இருந்தது. யோவான் பார்த்த சிங்காசனத்தில் வீற்றிருந்தவர் வச்சிரக் கல்லைப்போல் இருந்தார். வேறுவார்த்தைகளில் சொல்வதானால், வச்சிரக்கல் என்றால் காணப்படுகிற தேவன், காணத்தக்க தேவன், என்று பொருள். மனிதன் சிங்காசனத்திற்குமுன் நிற்கும்போது, தேவன் அவனுக்கு வச்சிரக்கல்லாக தெரியப்படுத்தப்படுவார். நாம் அங்கு போகும்போது, இப்படித்தான் நாம் அவரை அறிந்து கொள்வோம்; ஆனால், இங்கு இருக்கும்போது அறியமாட்டோம்.

நாம் இன்று உணர்வது அநேக அம்சங்களில் மிகவும் தெளிவில்லாமல் இருக்கிறது. ஆனால், அந்த நகரத்தில் தேவனுடைய மகிமைக்கு வச்சிரக்கல்லின் பிரகாசம் இருக்கிறது. புதிய எருசலேம் பூமிக்கு இறங்கிவரும்போது, நம்மால் தேவனைப் பார்க்கமுடியும் என்பதே இதன் பொருள். நாம் அவரை ஒருபோதும் மீண்டும் தவறாகப் புரிந்துகொள்ளமாட்டோம், எதற்கான காரணத்தையும் நாம் அவரிடம் கேட்கவேண்டிய தேவை இருக்காது. புதிய எருசலேமின் வெளிச்சம் எந்தக் கலப்படமும் இல்லாமல் பளிங்கைப்போல் தெள்ளத்தெளிவாக இருக்கிறது. அந்த நாளில், நமக்கு எல்லாம் தெள்ளத்தெளிவாக இருக்கும், தெளிவாகக் காண்பிக்கப்படும். அந்த நாளில் நாம் தேவனைக் காண்போம்; நாம் தேவனை அறிவோம்.

## பரிசுத்த நகரத்தின் குடிகள்

"அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன. நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன," என்று 12-14ஆம் வசனங்கள் கூறுகின்றன. இந்தக் கூட்டு மனிதனில் எத்தனை பேர் அடங்கியிருக்கிறார்கள்? வாசல்களின் மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன என்றும், அஸ்திபாரங்களின்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன என்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்த நகரத்தில் பழைய ஏற்பாட்டிலிருந்தும், புதிய ஏற்பாட்டிலிருந்தும் பரிசுத்தவான்கள் அடங்கியிருக்கிறார்கள் என்று இது காண்பிக்கிறது.

வேதவாக்கியங்களின் பின்வரும் பத்திகளை வாசிப்பதின் மூலம் இதை நிரூபிக்கமுடியும். "நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்க ளுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும். கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து, தேவனுடைய ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள்," என்று லூக்கா

13:28-29 கூறுகின்றன. இங்கு தேவ னுடைய இராஜ்ஜியத்தில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் பிரதிநிதிகளாக இருக்கிற ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் இருப்பதைக் காண்கிறோம். கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் இருந்து வருகிறவர்கள் புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். இந்த இரண்டுவிதமான மக்கள் கூட்டத்தார் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பங்குபெறுகிறார்கள்; அவர்க ளெல்லாரும் சேர்ந்து புதிய எருசலேமுக்குள் நுழைவார்கள்.

"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத் தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத் தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும், யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான். ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்," என்று எபிரேயர் 11:8-10 கூறுகின்றன. இந்தப் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நகரம் புதிய எருசலேம். இந்த நகரம் மட்டுமே அஸ்திபாரங்களுள்ள நகரம். இதன் சிற்பியும், இதைக் கட்டுபவரும் தேவனே. "இவர்களெல்லாரும்... விசுவாசத்தோடே மரித்தார்கள்," என்று 13-ஆம் வசனம் கூறுகிறது. ஆபேல், ஏனோக்கு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அநேகரே இந்த "இவர்களெல்லாரும்." "அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவ னென்னப்பட வெட்கப்படுகிற தில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே," என்று 16-ஆம் வசனம் தொடர்ந்து கூறுகிறது. 16-ஆம் வசனத்திலுள்ள "அவர்கள்" 13-ஆம் வசனத்திலுள்ள "இவர்கள்." பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்குப் புதிய எருசலேமில் ஒரு பங்கு உண்டு என்று இது நமக்குக் காண்பிக்கிறது. தொடக்கத்தில் ஆபேலிலிருந்து, பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த எல்லாப் பரிசுத்தவான்களுக்காகவும் புதிய எருசலேமாகிய நகரத்தில் தேவன் ஒரு பங்கை நியமித்திருக்கிறார். அதில் அவர்களெல்லாருக்கும் ஒரு பங்கு உண்டு. "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப் பட்டதை அடை யாமற்போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணமாகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக் கென்று முன்னதாக நியமித்தார்," என்று 39-40ஆம் வசனங்கள் கூறுகின்றன. தேவன் பழையஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் எல்லாரையும் காத்திருக்கச்செய்திருக்கிறார்;

அவர்கள் இன்னும் அந்த நகரத்தை அடையவில்லை. நாமும், அவர்களும் அங்கு சேர்ந்து செல்லுமாறு அவர் அவர்களைக் காத்திருக்கச்செய்திருக்கிறார். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் புதிய எருசலேமில் இருப்பார்கள் என்று இதிலிருந்து நாம் பார்க்கிறோம்.

"ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினால் செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப் பட்ட நீங்கள், அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து," என்று எபேசியர் 2:11-14 கூறுகிறது. 11-ஆம் வசனத்திலிருந்து 13-ஆம் வசனம்வரை "நீங்கள்" என்ற பிரதிப்பெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், 14-ஆம் வசனத்தில் அது "நம்முடைய" என்று மாறுகிறது. "நீங்கள்" பயன்படுத்தப்படும்போது, அது எபேசுவில் இருந்த பரிசுத்தவான்களைக் குறிக்கிறது. ஆனால், "நம்முடைய" பயன்படுத்தப்படும்போது, அது யூதப் பரிசுத்தவான்கள், எபேசுவில் இருந்த பரிசுத்தவான்கள், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஆகிய எல்லாரையும் குறிக்கிறது. கிறிஸ்துவே நம் சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தார். "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகப் படைத்து, இப்படிச் சமாதானம்பண்ணி," என்று 15-ஆம் வசனம் கூறுகிறது. இந்த வசனத்திலுள்ள "இருதிறத்தார்" 14-ஆம் வசனத்திலுள்ள "இருதிறத்தாருக்கு" ஒத்திருக்கிறது. இது பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஆகிய இருதிறத்தாரையும் கூடக் குறிக்கிறது. இது மனிதனுக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள உறவைக் குறிக்கவில்லை. தேவனும், மனிதனும் ஒரே மனிதனாக மாறும்படிக்கு ஒன்றாகச் சேர்த்துப் படைக்கப்படமுடியுமா? முடியாது. இந்தப் பத்தி புறவினத்தாராகிய பரிசுத்தவான்களையும், யூதர்களாகிய பரிசுத்தவான்

களையும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களையும், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களையும் குறிக்கிறது.

"பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கி னார்," என்று 16-ஆம் வசனம் கூறுகிறது. "இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக" தேவனுக்கு ஒப்புரவாக்குவதென்றால், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்த வான்களும் ஒப்புரவாக்கப்படுகிறார்கள் என்று பொருள். "அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து," என்று 17-19ஆம் வசனங்கள் கூறுகின்றன. எனவே, எபேசுவில் இருந்த பரிசுத்தவான்கள் இனிமேல் அந்நியரும் பரதேசிகளு மாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவ னுடைய வீட்டாருமாயிருந்தார்கள். "அப்போஸ்தலர் தீர்க்க தரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்ட வர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டு வருகிறீர்கள்," என்று 20-22ஆம் வசனங்கள் கூறுகின்றன. இவ்வாறு, தேவனுடைய வாசஸ்தலத்தில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் அடங்கியிருக்கின்றனர். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகி யோர் அங்கு இருக்கிறார்கள்; நாமும் அங்கு இருக்கிறோம். முடிவாகச் சொல்வதானால், புதிய வானமும் புதிய பூமியும் இருக்கும் நேரத்தில், தேவனுடைய ஜீவனை உடைய எல்லாரும் புதிய எருசலேமில் இருப்பார்கள்.

## நகரமும், வாசல்களும், மதிலும்

திருவெளிப்பாடு 21யை நாம் தொடர்ந்து வாசிப்போம். நகரத்தின் மதில்சுவருக்கு நாம் விசேஷமான கவனம்செலுத்த வேண்டும். "அதற்குப் பெரிதும் உயரமுமான மதில்... இருந்தது," என்று 12-ஆம் வசனம் கூறுகிறது. "என்னுடனே பேசினவன், நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான்," என்று 15-

ஆம் வசனம் கூறுகிறது. "அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனித அளவின்படியே நூற்றுநாற்பத்து நான்கு முழமாயிருந்தது," என்று 17-ஆம் வசனம் கூறுகிறது.

ஆதியில், தேவன் ஏதேனில் ஒரு தோட்டத்தை உண்டாக்கி னார். ஏவாளிடம் பேச சர்ப்பத்தால் இந்தத் தோட்டத்துக்குள் வரமுடிந்தது. தோட்டத்தைச்சுற்றி அங்கு மதில் இருக்கவில்லை என்று இது நமக்குக் காண்பிக்கிறது. ஆதாம் தோட்டத்தைக் காக்கவேண்டும் என்று தேவன் ஆரம்பத்தில் உத்தேசித்திருந்தார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஆதாமே தோட்டத்தின் மதிலாக இருக்கவேண்டும் என்பதே அவருடைய நோக்கம். ஆயினும், ஆதாம் அதைக்காக்கவில்லை. சாத்தான் உள்ளே நுழைந்தான். ஆனால், புதிய எருசலேமைப்பற்றிய காரியம் என்ன? புதிய எருசலேமுக்கு மதில் இருக்கிறது. ஒரு பக்கம், மதில் அடக்கிவைத்துக்கொள்கிறது; இன்னொரு பக்கம், அது பிரித்துவைக்கிறது. அது நகரத்துக்குள் இருக்கும் எல்லாவற்றையும் அடக்கிவைத்துக்கொள்கிறது, பாதுகாத்துக்கொள்கிறது; அது நகரத்துக்கு வெளியே இருக்கும் எல்லா வற்றையும் ஒதுக்கி விடுகிறது, தள்ளிவிடுகிறது. ஒரு நகரத்தைச் சுற்றி மதில் இருக்கும் போது, அது நகரத்துக்கு உள்ளே இருக்கும் எல்லாவற்றையும் நகரத்துக்கு வெளியே இருக்கும் எல்லாவற்றிலுமிருந்து பிரித்து வைக்கப் பயன்படுகிறது. அது அவைகளுக்கிடையே ஒரு வித்தியா சத்தை ஏற்படுத்தப் பயன்படுகிறது. புதிய எருசலேமே தேவன் அடைய விரும்பிய புதிய மனிதன். புதிய மனிதன் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறான்; அவன் வெளியே இருக்கும் எல்லாவற்றிலுமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறான். சர்ப்பத்தால் இனிமேல் உள்ளே நுழைந்து வரமுடியாது. அங்கு ஒரு மதில், தடுப்பு, வித்தியாசம், இருக்கிறது. சர்ப்பம் மீண்டும் உள்ளே நுழைந்து வரக்கூடிய எல்லா சாத்தியக்கூறுகளும் நீக்கப்பட்டு விட்டன.

புதிய எருசலேமை விவரிக்கையில், தேவனுடைய மகிமையைத் தவிர அதைப்பற்றிக் கூறப்பட்டுள்ள முதல் காரியம் மதிலாகும். ஆகையால், பிரித்தெடுத்தல் கிறிஸ்தவ வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு கோட்பாடாகும். பிரித்தெடுத்தல் இல்லை யென்றால் கிறிஸ்தவனுக்கு எந்த மதிப்பும் கிடையாது. மாம்சப் பிரகாரமானதிலிருந்து ஆவிக்குரியதை வித்தியாசப்படுத்த ஒரு கோடு வரையப்படவேண்டும். புதிய எருசலேமில் ஒரு பிரித் தெடுத்தல், ஓர் எல்லைக்கோடு, இருக் கிறது. இதிலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். பாபிலோனுக்குரிய எல்லாம் தள்ளப்படவேண்டும். தேவனுக்குரிய எல்லாம்

பாதுகாக்கப்படவேண்டும். ஒரு நகரத்து மதிலைக்கட்டுவது சுலபமான காரியம் இல்லை. ஏனென்றால், சாத்தான் வேறெதையும் விட மதிலை அதிகமாக வெறுக்கிறான். மதிலைக் கட்ட நெகேமியா எருசலேமுக்குத் திரும்பிவந்தபோது, கட்டும்வேலையை நிறுத்த சன்பலாத்தும், தொபியாவும் வந்து, தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்தார்கள். நெகேமியா ஒரு கையில் ஈட்டியைப் பிடித்துக்கொண்டு, மறுகையால் மதிலைக்கட்டினான். ஆகையால், பிரித்தெடுத்தல் என்ற கோட்பாட்டைப் பராமரிக்கவும், உயர்ந்த இடங்களில் உள்ள பொல்லாத ஆவிகளின் சேனையோடு மல்யுத்தம்பண்ண ஆவிக்குரிய ஆயுதங்களைத் தாங்கவும் தேவன் நம்மைப் பலப்படுத்தும்படி நாம் ஜெபிக்கவேண்டும்.

நகரத்துக்குப் பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு அஸ்திபாரங்களும் இருக்கின்றன. அஸ்திபாரங்களின்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர் களின் பெயர்கள் இருக்கின்றன. நகரத்திலுள்ள எல்லா வற்றிற்கும் அப்போஸ்தலர்களால் பிரசங்கிக்கப்பட்ட தேவ னுடைய இராஜ்ஜியத்தின் கோட்பாடுகளே ஆதாரம் என்று இது நமக்குக் கூறுகிறது. "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களு மாயிருக்கிறீர்கள்," என்று எபேசியர் 2:20 கூறுகிறது. அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொண்ட வெளிப்பாடே புதிய எருசலேமின் அஸ்திபாரம் என்பதே இதன் பொருள்.

வாசல்கள் உள்ளே போவதற்கும், வெளியே வருவதற்கு மாகும். ஆனால், இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரங்களின் பெயர்கள் அவைகளின்மேல் ஏன் எழுதப் பட்டிருக்கின்றன? இரட்சிப்பு யூதர்கள் வழியாக வருகிறது என்று கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான் 4:22). தேவனோடு தொடர்புடைய எல்லாவற்றையும் நாம் இஸ்ரவேல ரிடமிருந்தே கற்றுக்கொண்டிருக்கிறோம். பிரமாணம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது, மீட்பு இஸ்ரவேலர்மூலம் வருகிறது, இரட்சிப்பு இஸ்ரவேலரிடமிருந்து வந்திருக்கிறது. ஆகையால், இஸ்ரவேல் சந்ததியாரின் பன்னிரண்டு கோத்திரங்களின் பெயர்கள் வாசல்களில் இருக்கின்றன.

நகரத்திற்கு கிழக்கே மூன்று வாசல்களும், வடக்கே மூன்று வாசல்களும், தெற்கே மூன்று வாசல்களும், மேற்கே மூன்று வாசல்களும் இருக்கின்றன. ஒவ்வொரு திசையிலும் மூன்று வாசல்கள் இருக்கின்றன. வாசல்கள் பொதுவாக உள்ளே போவதற்கும், வெளியே வருவதற்கும் வசதியான இடத்தில் வைக்கப்படுகின்றன. ஆகையால், நகரத்தின் வாசல்கள் நான்கு திசைகளிலும் இருக்கின்றன என்ற உண்மை, அவைகள் மிகவும்

மைய நிலையில் இருக்கின்றன என்றும், அவைகளே எல்லாவற்றின் மையம் என்றும் சுட்டிக்காட்டுகின்றன. புதிய எருசலேமே தேவனுடைய இருதயத்தின் மையத்திலிருக்கிற தலைசிறந்த படைப்பாகும்.

தேவனைத் துதியுங்கள். பிரவேசத்தைக் காக்க வாசல்க ளருகே பன்னிரண்டு தூதர்கள் இருந்தார்கள் (வெளி. 21:13). முன்பு ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியைக் கேருபீன் காத்தது. ஆனால், இப்போது நகரத்திலுள்ள ஜீவமரத்தை வாசல்களருகே இருக்கும் தூதர்கள் காக்கிறார்கள். தூதர்கள் பணிவிடைசெய்யும் ஆவிகள் (எபி. 1:14). தூதர்கள் சபைக்குக் கீழ்ப்பட்டிருக்கும் நாள் வந்துகொண்டிருக்கிறது.

"என்னுடனே பேசினவன், நகரத்தையும் அதின் வாசல் களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற் கோலைப் பிடித்திருந்தான்," என்று திருவெளிப்பாடு 21:15 கூறுகிறது. வேதாகமத்தில் பொன் தேவனுக்குரிய எல்லாவற்றின் பிரதிநிதியாக இருக்கிறது. நகரம் பொன்னால் அளக்கப்படுவது என்றால் நகரத்தைத் தேவனுடைய தரத்தால் அளக்கமுடியும் என்றும், நகரம் தேவனுடைய தரத்திற்கு ஒத்திருக்கிறது என்றும் பொருள். அந்த நாளில் நாம் அளக்கப்படும்போது நம்மால் தேவனுடைய தரத்தை எட்டமுடியும் என்ற நம்பிக்கையோடு நாம் தேவனுடைய மகிமையைத் தேடவேண்டும்.

"அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது," என்று 16-ஆம் வசனம் கூறுகிறது. வேதாகமத்தில் இன்னோர் இடம் இருக்கிறது; அங்கும் நீளம், அகலம், உயரம் ஆகிய எல்லா அளவுகளும் சமமாயிருக்கின்றன. "சந்நிதி ஸ்தானம் முன்புற மட்டும் இருபது முழ நீளமும், இருபது முழ அகலமும், இருபது முழ உயரமுமா யிருந்தது" (1 இரா. 6:20). நீளம், அகலம், உயரம் ஆகிய எல்லாம் ஒன்றுபோல் இருக்கின்றன. வேதாகமத்தில், தேவாலயத் தில் உள்ள மகாபரிசுத்த ஸ்தலத்துக்கும், புதிய எருசலேம் நகரத்துக்கும் நீளம், அகலம், உயரம் ஆகிய அளவுகளெல்லாம் சமமாக இருக்கின்றன. வேறுவார்த்தைகளில் சொல்வதானால், புதிய வானத்திலும் புதிய பூமியிலும், புதிய எருசலேம் தேவனுக்கு மகா பரிசுத்தஸ்தலமாக மாறுகிறது. தாவீது சாலொமோனுக்கு ஆலயத்தின் மாதிரியைக் கொடுத்தபோது, "இந்த மாதிரியின்படி சகல வேலைகளையும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது," என்று அவன் கூறினான் (1 நாளா. 28:19). ஆலயத்தில் எல்லாம்

தெய்வீக வெளிப்பாட்டின்படி கட்டப் பட்டன. புதிய வானத்திலும் புதிய பூமியிலும், புதிய எருசலேமே தேவனுடைய ஆலயமாக இருக்கும். நகரத்தைக் கட்டியமைக்கும் எல்லாம் தேவனில் இருக்கும் ஏதோவொன் றாகும். அவருக்கு வெளியே இருக்கும் ஒன்றும் அங்கு இல்லை.

"அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனித அளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது," என்று திருவெளிப்பாடு 21:17 கூறுகிறது. ஒரு மனிதனுடைய அளவு ஒரு தூதனுடைய அளவு என்று இன்று நாம் கூறமுடியுமா? முடியாது. ஒருபோதும் முடியாது. எப்போது ஒரு மனிதனுடைய அளவு ஒரு தூதனுடைய அளவுக்குச் சமமாயிருக்கும்? உயிர்த்தெழுதலின் மனிதன் தூதர்களுக்குச் சமமாயிருப்பான் என்று கர்த்தராகிய இயேசு கூறினார் (லூக்கா 20:36). மனிதனுடைய அளவு ஒரு தூதனுடைய அளவுக்குச் சமமாயிருக்கும்போது நூற்றுநாற்பத்து நான்கு முழம் வெளியாக்கப்படும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இந்த நகரத்துக்குள் இருக்கும் எல்லாம் உயிர்த்தெழுதலின் நிஜத்தில் இருக்கின்றன. இந்த நகரத்தில் இருக்கும் எல்லாக் காரியங்களிலும், உயிர்த்தெழுதலில் இல்லாத ஒன்றுகூட இல்லை என்பதற்காகத் தேவனுக்கு நன்றிகூறுங்கள். செத்துப்போன எல்லாம், மனிதனுக்குரிய எல்லாம், நகரத்துக்கு வெளியே இருக்கின்றன. ஆனால், உள்ளே எல்லாம் உயிர்த்தெழுந்திருக்கின்றன, எல்லாம் தேவனுக்குரியவை. மனிதனுக்குரிய எல்லாம் ஒருமுறை மரித்தவுடன், அதை ஒருபோதும் உயிரோடெழுப்பமுடியாது. ஆனால், தேவனுக்குரிய எல்லாம், அது மரணத்தினூடாய்க் கடந்து சென்றாலும் மீண்டும் உயிரோடெழும்பும். எதையெல்லாம் மரணத்தால் கட்டமுடியாதோ அல்லது பிடித்துவைத்துக் கொள்ள முடியாதோ, அதுவே உயிர்த்தெழுதல் என்றழைக்கப் படுகிறது. நம்மிடமிருந்து ஆரம்பிக்கிறது சிலுவையினூடாய்க் கடந்துபோகும்போது, அது ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் படுகிறது, ஆனால் தேவனுக்குரிய எதையும் மரணத்தால் தொட முடியாது.

யோவான் நகரத்தின் விவரங்களை எழுதியபோது, அவர் பயன்படுத்திய எல்லா எண்களும் பன்னிரண்டு அல்லது பன்னிரண்டின் பெருக்கமாக இருந்தன—பன்னிரண்டு வாசல்கள், பன்னிரண்டு அஸ்திபாரங்கள், பன்னிரண்டு அப்போஸ் தலர்கள், பன்னிரண்டு கோத்திரங்கள், இன்னும் பல. நகரத்து மதிலின் அளவு நூற்றுநாற்பத்துநான்கு முழம், இது பன்னிரண்டு பெருக்கல் பன்னிரண்டு. பன்னிரண்டு என்ற எண்தான் நித்தியத்தில் பயன்படுத்தப்படுகிற எண். இதுவே வேதாகமத்தில் மிகவும்

விலையேறப்பெற்ற எண். திருவெளிப் பாட்டின் முதல் பகுதியில், அநேக ஏழுகள் இருக்கின்றன—ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், ஏழு கலசங்கள், ஏழு தூதர்கள், இன்னும் பல. ஆனால், பிந்தைய பகுதியில், ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல அநேக பன்னிரண்டு என்றாலும் பரிபூரணம் என்று பொருள். ஆனால், அவையிரண்டிற்கும் முற்றிலும் ஒரே பொருள் இல்லை. ஏழு என்ற எண் மூன்று கூட்டல் நான்கு; பன்னிரண்டு என்ற எண் மூன்று பெருக்கல் நான்கு. தேவன் மூவொரு தேவனாக இருப்பதால், மூன்று என்ற எண் தேவனைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. நான்கு என்ற எண் நான்கு காற்றுகள், நான்கு காலங்கள், நான்கு ஜீவராசிகள் போன்ற படைப்பைப் பிரதிநிதித் துவப்படுத்துகிறது. மூன்று என்ற எண் நான்கு என்ற எண்ணுடன் கூட்டப்படும்போது, தேவன் மனிதனுடன் கூட்டப்படுகிறார் என்று பொருள். சிருஷ்டிகர் கூட்டல் சிருஷ்டியைக் கொண்டிருப்பது எவ்வளவு முழுமையானது, எவ்வளவு பரிபூரணமானது! ஆனால், கூட்டப்படுகிற எதையும் கழிக்கவும்முடியும், அதனால் அதை மீண்டும் இடிக்கவும் முடியும்; எனவே, இந்த முழுமை நிலையான முழுமை இல்லை. ஆனால், புதிய எருசலேமில் தேவன் மற்றும் மனிதனின் சேர்க்கை இனிமேல் ஏழு இல்லை, மாறாகப் பன்னிரண்டு. இது இனிமேல் மூன்று கூட்டல் நான்கு இல்லை; மாறாக மூன்று பெருக்கல் நான்கு. பெருக்கம் ஒரு பரிபூரண சேர்க்கை; இதை ஒருபோதும் பிரிக்கமுடியாது. சிருஷ்டிகர் சிருஷ்டியோடு கலந்திணையும்போது, அது பன்னிரண்டு. பன்னிரண்டுதான் பரிபூரணமான சேர்க்கையின் எண். புதிய வானத்திலும் புதிய பூமியிலும், தேவனும் மனிதனும் ஒன்றாகிவிடுவார்கள்; தேவனையும் மனிதனையும் இனிமேல் பிரிக்கமுடியாது.

## பொன்னும், விலையேறப்பெற்ற கற்களும், முத்தும்

இந்த நகரம் எந்தவிதமான கட்டுமானப்பொருளால் கட்டப்படுகிறது? "அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப் பட்டிருந்தது," என்று 18-ஆம் வசனம் கூறுகிறது. நாம் ஏற்கெனவே வச்சிரக்கல்லைப்பற்றிப் பார்த்தோம். நகரத்தின் பிரகாசம் வச்சிரக்கல்லைப்போல் இருக்கிறது என்று நாம் பார்த்தோம். நாம் நகரத்தின் மகிமையை உற்றுநோக்கும்போது நாம் தேவனுடைய உண்மையான சாயலைப் பார்க்கிறோம் என்பதே இதன் பொருள். தேவனுடைய உண்மையான சாயலை அறிவதின்மூலம் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற தேவனை மனிதனால் அறியமுடியும். தேவன் மனிதனுக்குத் தூரமானவர் அல்ல; அவர் அறியப்படக்கூடாத தேவனும் அல்ல.

நாம் பார்த்ததுபோல, நகரத்துக்கு உள்ளே இருப்பவைகளை நகரத்துக்கு வெளியே இருப்பவைகளிலிருந்து பிரித்தெடுப்பதே நகரத்து மதிலின் செயல்பாடாகும். தேவ னுடைய உண்மையான வெளிச்சத்தில் காணப்படுவதே பிரித் தெடுத்தலுக்கு ஆதாரம் என்பதே இந்த மதில் வச்சிரக்கல்லால் செய்யப்பட்டிருக்கிறது என்ற உண்மையின் பொருளாகும். தேவன் எதைக் கோருகிறார் என்பதைப் பார்ப்பதே, தேவன் எதைத் தேடிக்கொண்டிருக்கிறார் என்பதைப் பார்ப்பதே பிரித்தெடுத்தலின் ஆதாரம். தேவனுடைய கோரிக்கையைப்பற்றி மனிதன் தெளிவில்லாமல் இருந்தால், அவனிடம் எந்தப் பிரித்தலும் இருக்காது.

நாம் 18-ஆம் வசனத்தை மேலும் வாசிப்போம்: "நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது." வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நகரத்தில் இருப்பவை யெல்லாம் தேவனுக்குரியவை. பொன் தேவனுக்குரியதை, தேவனுடைய புதிய படைப்பில் வைக்கப்பட்டிருப்பதை, குறிக்கிறது. நாம் தெய்வீக சுபாவத்தின் பங்குதாரர்கள் என்று பேதுரு கூறினார். தேவனுக்குச் சொந்தமான எல்லாரிடமும், தேவனுக்குரிய ஒரு பங்கு இருக்கிறது. நாம் இரட்சிக்கப்படுவ தற்குமுன், நம்மில் இருந்த எல்லாம் மாம்சத்துக்குரியவை, எல்லாம் ஜென்மசு பாவமானவை; ஆவிக்குரிய சுபாவத்துக்குரிய எதுவும் அங்கு இருக்கவில்லை. ஆனால், நாம் கர்த்தரைப் பெற்றுக்கொண்டபோது, தேவன் தம் ஜீவனை நமக்குள் பகிர்ந்தளித்தார். இதுவே அவர் நமக்களித்துள்ள பொன். நமக்குள் பொன்னாலான ஒரு பங்கு இருக்கிறது. மெய்யாகவே தேவனுக்குரிய ஏதோவொன்று அங்கு இருக் கிறது. ஆயினும், நம்மில் இந்தப் பொன் இருந்தபோதும், அது வேறு அநேகக் காரியங்களுடன் கலப்படமாக இருக் கிறது என்பது வருந்தத்தக்கது. இது ஓர் உலோகக்கலப்பு. நம்மிடம் தேவனுடைய சுபாவம் இருக்கிறது; ஆனால், அதே நேரத்தில், தேவனிடமிருந்து வித்தியாசமான வேறு அநேகக் காரியங்களும் நம்மிடம் இருக்கின்றன. இந்தக் காரணத்தால், தேவன் தம் பிள்ளைகளுக்குள் கூட்டுவது இல்லை, மாறாகக் குறைப்பதே அவர் அவர்களில் செய்துகொண்டிருக்கும் வேலையின் பெரும்பான்மையான பங்காகும்.

அநேக நேரங்களில் மனிதன் தேவனுக்குரியதை இன்னும் அதிகமாக அடையவும், பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவும், கிறிஸ்துவை இன்னும் அதிகமாக அறியவும் விரும்புகிறான். இவையெல்லாவற்றிற்கும் அதினதின் இடம் உண்டு. நாம் நிச்சயமாகத் தேவனுக்குரியதை அதிகமாக அடையவேண்டும், ஆவியானவரால் நிரப்பப்படவேண்டும், கிறிஸ்துவை இன்னும் அதிகமாக அறியவேண்டும். ஆனால், இன்னொரு வேலை

இருக்கிறது—இது பெருகுதல் இல்லை, மாறாகக் குறைதல். நம்மைக் குறைக்கவேண்டும் என்பதே தேவனுடைய அடிப் படையான வேலையாகும். நாம் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து, தேவன் இந்த வேலையைச் செய்துகொண்டேயிருக்கிறார். சிலுவையே கழிக்கின்ற இந்த வேலையைச் செய்வதற்கான கருவியாகும். நம்மை இரத்துசெய்வதே சிலுவையின் வேலையாகும். இது காரியங்களை நமக்குள் கொண்டுவருவதற்காக இல்லை, மாறாகக் காரியங்களை நம்மிலிருந்து எடுத்துப்போடுவதற்காக. நமக்குள் அதிகமான குப்பைகள் இருக்கின்றன. தேவனுக்கு ஒவ்வாத அநேகக் காரியங்கள் நமக்குள் இருக்கின்றன; அவை தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவதில்லை. நாம் சுத்தப்பொன்னாக மாறும்படி சிலுவையின்மூலம் அவர் எல்லாவற்றையும் அகற்ற விரும்புகிறார். தேவன் நமக்குள் சுத்தப் பொன்னை வைத்திருக்கிறார்; ஆனால், நம்மில் அதிகமான களிம்பு இருப்பதால், தேவனுக்கு ஒவ்வாத அநேகக் காரியங்கள் இருப்பதால், நாம் ஓர் உலோகக்கலவையாகிவிட்டோம். ஆகையால், நம்மில் இருக்கும் சுயத்துக்குரிய காரியங்களையும், தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரமுடியாத காரியங்களையும் நாம் பார்ப்பதற்கு தேவன் அதிகமாகப் பிரயாசப்படவேண்டியிருக் கிறது. தேவன் நம்மிடம் பேசினார், நமக்குள் கூட்டிச் சேர்க்கப்பட வேண்டியதைவிட அகற்றப்பட வேண்டியது அதிகம் என்பதை நாம் கண்டுபிடிப்போம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். விசேஷமாக ஆத்துமாவில் பலமாக இருக்கும் கிறிஸ்தவர்களில் தேவன் செய்துகொண்டிருக்கும் வேலை அவர்களிலிருந்து காரியங்களை அகற்றுவதும், அவர்களைக் குறைப்பதுமேயாகும் என்பதை அவர்கள் நினைவில்கொள்ளவேண்டும்.

புதிய எருசலேம் பொன்னாலானது, சுத்தப் பொன்னா லானது என்பதே அதின் முதன்மையான தனிச்சிறப்பு. அதில் கலப்படமான ஒன்றும் இல்லை; எல்லாம் முற்றிலும் தேவனாலானது. நம்மிடமிருந்து வருகிற எல்லாம் களிம்பு என்பதைக் காண்பதே இன்று நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்று தேவன் விரும்புகிறார். நம்மிலிருக்கிற பொன்னைத்தவிர, நம்மிலிருந்து வருகிற எல்லாம் குப்பையே. பொன்னோடு கூட்டிச்சேர்க்கப்படும் போது, நம் நன்மைத்தனம் களிம்பு; பொன்னோடு கூட்டிச்சேர்க்கப் படும்போது, நம் வைராக்கியமும் களிம்புதான். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தேவனைச்சாராத எல்லாம் களிம்புதான். ஒருவனும் தேவனுக்குமுன்பாக நின்று, அவருக்கு வழங்கத் தன்னிடம் ஏதோவொன்று இருக்கிறது என்று கூறமுடியாது. தேவன் சுத்தப் பொன்னை எதிர்பார்க்கிறார். புதிய எருசலேமில் எல்லாம் களிம்பில்லாமல் சுத்தப்பொன்னா

யிருக்கிறது. ஒரு நாள் வரும்; அன்றைக்குத் தேவனைச் சாராத எல்லாம் சிலுவையில் இருக்கிறது என்பதைப் பார்ப்போம். புதிய எருசலேமில் இருக்கும் எல்லாம் தேவனுக்குரியவை. தேவன் தம் குறிக்கோளை அடையவேண்டும். அது சுத்தப் பொன் என்று தேவன் கூறும்போது, அது சுத்தப் பொன்னாயிருக்கும். தேவனுடைய வேலையோடு எதையும் கலப்படம்செய்ய முடியாது.

"நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன; முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திர நீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம், ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே," என்று 19-20ஆம் வசனங்கள் கூறுகின்றன. விலையேறப்பெற்ற கற்கள் எதைக் குறிக்கின்றன? விலை யேறப்பெற்ற கற்களுக்கும், பொன்னுக்கும் இடையே ஓர் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது. பொன் ஓர் இரசாயன மூலக்கூறு. விலையேறப்பெற்ற கல் ஓர் இரசாயன மூலக்கூறு இல்லை, மாறாக அது ஒரு கூட்டுப்பொருள். பொன் ஒரு மூலக்கூறு; ஏனென்றால், தேவன் அதைப் பொன்னாகப் படைத்தார்; அது நேரடியாகத் தேவனால் படைக்கப்பட்டது. ஆனால், விலையேறப்பெற்ற கல், பூமியில் எண்ணமுடியாத ஆண்டுகள் வெப்பம் மற்றும் அழுத்தத்தின்மூலம் சென்றதி னால் உருவான இரசாயனக் கூட்டின்மூலம் ஒன்றாகத் தொகுக்கப்பட்ட பல்வேறு வகையான மூலக்கூறுகளிலிருந்து உண்டாக்கப்படுகிறது; வேறு வார்த்தைகளில் சொல்வதானால், விலையேறப்பெற்ற கற்கள் தேவனால் நேரடியாகக் கொடுக்கப்பட்ட ஒன்றைக் குறிக்கவில்லை; ஆனால், அவை அநேக ஆண்டுகள் சுட்டெரித்ததின்மூலமாகவும், அதிகமான பிரயாசத்தினாலும் பரிசுத்த ஆவி மனிதனில் உருவாக்கின ஏதோவொன்றைக் குறிக்கிறது. நாம் எல்லா வகையான அனுபவங்களையும் பெற்று, தேவனுக்குமுன் விலையேறப் பெற்ற கற்களாக மாறும்படிக்கு நம்மைத் தொடர்ந்து பாடுகளுக்குள் வைப்பதே பூமியில் பரிசுத்தஆவியின் வேலையாகும். ஆகையால், விலையேறப்பெற்ற கற்கள் நாம் அவரால் சிட்சிக்கப்படுவதின்மூலம் விளையும் விளைவாகும்.

நாம் இதை எப்படி விளக்கிக்காட்டலாம். ஈசாக்கின் பிறப்பு பொன்னைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. யாக்கோபின் அனுபவம் விலையேறப்பெற்ற கல்லைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஈசாக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மூலம் பிறந்த குமாரன். அவன் ஒருபோதும் பாடநுபவிக்கவில்லை; அவன் ஒருபோதும் மிக மோசமான தவறும் செய்யவில்லை. ஆயினும், யாக்கோபின்

அனுபவம் முற்றிலும் வித்தியாச மானது. அவன் மிகவும் பாடநுபவித்தான், அவன் அநேகப் பாடுகளினூடாய்க் கடந்துசென்றான். தேவனுடைய கை அவன்மேல் எல்லா நேரமும் இருந்தது. தேவன் யாக்கோபுக்குள் ஏதோவொன்றை அடிப்பு வேலைப்பாடாய்க் கூட்டிச்சேர்த்தார்; அது அவனை ஒரு விலையேறப்பெற்ற கல்லாக மாற்றிற்று.

தேவன் நமக்குள் பகிர்ந்தளித்திருக்கும் அந்த ஜீவனே பொன். தேவன் நம்மில் கட்டியமைத்துக்கொண்டிருக்கும் ஜீவனே விலையேறப்பெற்ற கல். தினம் தினம், எல்லாச் சூழ்நிலையிலும், அவர் நம்மைக் கிறிஸ்துவின் சாயலில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இதுவே விலையேறப்பெற்ற கல். தேவன் நமக்கு வெறுமனே கிறிஸ்துவினுடைய ஜீவனின் ஒரு பங்கைத் தருவதோடு நிறுத்திக்கொள்வதில்லை; கிறிஸ்துவின் ஜீவன் நமக்குள் அடிப்புவேலைப்பாடாய்க் கூட்டிச்சேர்க்கப்படவேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஒரு பக்கம், நம்மில் கிறிஸ்துவின் ஜீவன் இல்லையென்றால், நாம் இரட்சிக்கப்படுவதற்குமுன் இருந்ததைவிட இப்போது ஒன்றும் வித்தியாசமானவர்கள் இல்லை என்பதை நாம் உணரவேண்டும். ஆனால், இன்னொரு பக்கம், கர்த்தரை ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் பின்பற்றியபிறகு, அவரால் சிட்சிக்கப்பட்டபிறகு, அவர் நம்மோடு இடைப்பட்ட பிறகு, கிறிஸ்துவினுடைய ஜீவனின் ஒரு பங்கு பரிசுத்த ஆவியால் நமக்குள் கட்டியமைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரால் உரு வாக்கப்பட்ட ஏதோவொன்று நமக்குள் இருக்கிறது. இதுவே விலையேறப்பெற்ற கல்.

உங்களைச் சுட்டெரிக்க தேவன் உங்களைத் தொடர்ந்து அக்கினிக்குள் வைக்கும்போது நீங்கள் ஆச்சரியப்படக்கூடாது. மற்ற மக்கள் எதிர்கொள்பவைகளெல்லாம் நல்லவைகளாக இருப்பதுபோலவும், நீங்கள் எதிர்கொள்பவைகளெல்லாம் வளமற்ற வைகளாகவும், கஷ்டமானவைகளாகவும் இருப்பது போல் தோன்று கின்றன. நீங்கள் மற்றவர்களால் தவறாகப் புரிந்துகொள்ளப் படுகிறீர்கள், தாக்கப்படுகிறீர்கள். மற்ற யாருக்கும் நடக்காத காரியங்கள் உங்களுக்கு நடந்திருக்கின்றன. ஆனால், இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை என்பதை நீங்கள் உணரவேண்டும். தேவன் தொடர்ந்து உங்களைச் சுட்டெரித்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் அவருடைய சாயலுக்கு ஒத்த சாயலாக்கப்படுமாறு கிறிஸ்துவின் ஜீவனை உங்களுக்குள் இன்னும் அதிகமாகக் கட்டியமைப் பதற்காகப் பரிசுத்தஆவி வேலைசெய்துகொண்டிருக் கிறார்.

திருவெளிப்பாட்டில், வெறுமனே ஒரேவொரு வகையான விலையேறப்பெற்ற கல்லை மட்டும் நாம் பார்க்கவில்லை. மாறாக,

எல்லா வகையான விலையேறப்பெற்ற கற்களையும் பார்க்கிறோம். சில வச்சிரக்கல், சில இந்திரநீலம், சில சந்திர காந்தம், சில மரகதம், சில கோமேதகம், சில பதுமராகம், இன்னும் பல. இந்த விலையேறப்பெற்ற கற்களெல்லாம் சுட்டெரித்தலின் விளைவாகும். அவைகள் ஒரு கணப்பொழுதில் தேவனால் உண்டாக்கப்படவில்லை. மாறாகத் தேவன் பல ஆண்டுகள் வேலைசெய்ததின்மூலம் நம்மேல் அடிப்புவேலைப்பாடாய்க் கூட்டிச்சேர்க்கப்பட்டபிறகு பெறப்பட்டன. விலையேறப்பெற்ற கல் படைப்பின்போது நமக்குக் கொடுக்கப்படவில்லை. இது நாம் புதிய படைப்பாக மாறியபோது அடைந்த ஏதோவொன்றுமல்ல. விலையேறப்பெற்ற கல் தினம்தினம் தேவனுடைய சுட்டெரிப்பின் மூலம் நம்மில் உருவாக்கப்படுகிறது. இது தொடர்ந்து அக்கினிக்குள் வைக்கப்படுகிற ஒரு பண்டம். அக்கினி ஒரு குறிப்பிட்ட வகையில் எரியும்போது, ஒரு குறிப்பிட்ட வகையான தாதுப் பொருள் அந்தப் பண்டமாக உருக்கப்படுகிறது. அது ஒரு குறிப்பிட்ட வகையான விலையேறப்பெற்ற கல்லாக மாறு கிறது. அக்கினி இன்னொரு வகையில் எரியும்போது, அது இன்னொரு வகையான தாதுப்பொருளைக் கரையச்செய்து அந்தப் பண்டமாக்கி, அதை இன்னொரு வகையான விலையேறப்பெற்ற கல்லாக மாற்றுகிறது. வித்தியாசமான முறையில் குறிப்பிட்ட சில தாதுப்பொருட்களைச் சேர்த்து உருக்கும்போது பல்வேறு வகையான விலையேறப்பெற்ற கற்கள் உருவாக்கப்படுகின்றன.

விலையேறப்பெற்ற கற்கள் பரிசுத்த ஆவியின் வேலையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. நாம் இரட்சிக்கப்பட்டபோது தேவனுடைய சுபாவத்தை அடைந்தோம்; ஆனால், நாம் ஆவியான வரின் கனி கொடுக்குமாறு, அந்த நேரத்திலிருந்து தினம்தினம் பரிசுத்த ஆவி நமக்குள் தேவனுடைய சுபாவத்தை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறார். வெறுமனே ஆவியானவரின் ஒரேவொரு கனி மட்டும் இல்லை. அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், உத்தமம், சாந்தம் ஆகியவைகளைப் போல் இன்னும் அநேகம் இருக்கின்றன. நாம் வித்தியாசமான இந்தக் கனிகளையெல்லாம் கொடுப்பதற்கு பரிசுத்த ஆவி நம்மில் தொடர்ந்து வேலைசெய்யவேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டபோது, தேவன் தம் ஜீவனை நமக்குள் பகிர்ந்தளித்தார்; ஆனால், ஆவியானவரின் கனி தேவனால் நமக்குள் பகிர்ந்தளிக்கப்படும் ஏதோவொன்றல்ல. பரிசுத்த ஆவி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வேலைசெய்யும்போது நாம் இந்தக் கனிகளைக் கொடுக்கிறோம். விலையேறப்பெற்ற கல் என்பது வித்தியாச மான அநேக சூழ்நிலைகளின்மூலம் பரிசுத்த ஆவியின்மூலம் நம்மில் உருவாக்கப்படுகிற ஏதோவொன்றாகும்.

தேவன் தம் சுபாவத்தை மட்டும் நம்மோடு பகிர்ந்து கொள்ளவில்லை; நம்மைத் தேவனுடைய நாமத்துக்கு மகிமையைக் கொண்டுவரும் ஒரு குறிப்பிட்ட வகையான மக்களாக்க அவர் தினம்தினம் வேலைசெய்துகொண்டிருக்கிறார். நீங்கள் இரட்சிக்கப் பட்டபோது, நீங்கள் தேவனுடைய சுபாவத்தை அடைந்தீர்கள்; நான் இரட்சிக்கப்பட்டபோது, நான் அவருடைய சுபாவத்தை அடைந்தேன். இந்த விஷயத்தில் எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒன்றுதான்; அவர்களெல்லாரும் தேவனுடைய சுபாவத்தை அடைந்திருக்கிறார்கள். ஆனால், பின்வரும் நாட்களில், உங்களுக்கு சில குறிப்பிட்ட வகையான அனுபவங்களைத் தருவதற்காக அவர் உங்களைச் சில குறிப்பிட்ட சூழ்நிலைக்குள் வைத்திருக்கக்கூடும். அவர் உங்களை சில குறிப்பிட்ட பாடுகள், குறிப்பிட்ட கஷ்டங்கள், குறிப்பிட்ட துன்பங்கள் ஆகியவை களினூடாய்க் கடந்துசெல்ல அனுமதித்திருக்கக்கூடும்; அதனால், நீங்கள் சுவர்ணரத்தினம், சந்திரகாந்தம், பதுமராகம் அல்லது வேறு சில விலையேறப்பெற்ற கல்லைப்போன்ற ஒரு கிறிஸ்த வனாக மாறுவீர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு குறிப்பிட்ட வகையான விலையேறப்பெற்ற கிறிஸ்தவனாக மாறும்படிக்கு தேவன் எல்லாக் கிறிஸ்தவர்களிலும் வேலைசெய்துகொண் டிருக்கிறார். தேவனுக்குமுன்பாக நம்மெல்லாரிடமும் பொதுவாகப் பொன் இருக்கிறது; ஆனால், நாம் அவருக்குமுன் விலையேறப் பெற்ற கற்களாக மாறியபிறகு, நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வடிவமாக இருப்போம்.

சுற்றுச்சூழ்நிலைகளின்மூலம் பரிசுத்த ஆவி நம்மில் உருவாக்குவது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். ஒரு கிறிஸ்தவன் ஒரு குறிப்பிட்டவகையில் அதிகமான இடைப் படுதல்களைப் பெற்றுக்கொள்ளும்போது, அவன் அந்த வகையில் அதிகமான பாடங்களைக் கற்றுக்கொள்வான். இது அவனில் முதன்மையான ஒரு குணத்தை, பல ஆண்டுகளுக்குப்பிறகும் முடிவுக்குவராத ஒரு குணத்தை, நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும் ஒரு குணத்தை உருவாக்கும். அவன் அடைந்திருப்பது புதிய எருசலேமில் என்றென்றைக்கும் ஒரு விலையேறப்பெற்ற கல்லாக இருக்கும்.

பத்து அல்லது இருபது ஆண்டுகள் தேவனோடு நடந் திருக்கும் தேவனுடைய பிள்ளைகள் அநேகரில், தேவன் பரிசுத்த ஆவியின்மூலம் அடிப்புவேலைப்பாடாய்க் கூட்டிச்சேர்த்த ஏதோவொன்று இருக்கிறது. இது வெறுமனே தேவன் அவர்களுக்குள் ஏதோவொன்றைப் பகிர்ந்தளித்திருக்கிறார் என்பதல்ல; மாறாக, அவர்களே அந்த ஏதோவொன்றாக மாறிவிட்டார்கள். அதுவே அவர்களை உண்மையாகக் கட்டியமைக்கும் மூலக்கூறு. அவர்கள்

பரிசுத்த ஆவியால் அநேக ஆண்டுகளாக சிட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அநேகப் பாடுகளினூடாகவும், அனுபவங்களினூடாகவும் கடந்துசென்றபிறகு பரிசுத்தஆவி அவர்களில் ஒரு குறிப்பிட்ட வகையான ஜீவனை உருவாக்கியிருக்கிறார். அவைகளில் பரிச்சயமானவர்கள் தங்களில் மெய்யாகவே ஏதோவொன்று நிகழ்ந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களிடம் தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஜீவன் மட்டும் இல்லை; பரிசுத்த ஆவி அவர்களுக்குள் அடிப்புவேலைப் பாடாய்க் கூட்டிச்சேர்த்த மறுசாயலாக்கப்பட்ட ஜீவனுங்கூட இருக்கிறது. அவர்கள் பரிமாற்றப்பட்ட வாழ்க்கை மட்டும் வாழவில்லை; மறுசாயலாக்கப்பட்ட வாழ்க்கையும் வாழ்கிறார்கள். இதுவே விலையேறப்பெற்ற கல். பரிசுத்த ஆவியின் சுட்டெரிக்கும் வேலையால் நம்மில் உருவாக்கப்பட்டதே விலையேறப்பெற்ற கல். புதிய எருசலேம் இந்த விலையேறப்பெற்ற கற்களால் நிரம்பியிருக்கும்.

வெறுமனே உபதேசத்தை மட்டும் வலியுறுத்துவது எவ்வளவு பயனற்றது என்று இந்தக் கட்டத்தில் நாம் உணரவேண்டும். கொஞ்சம் கூடுதலான இறையியலை அல்லது வேதாகமத்தின் போதனையை மட்டும் நாம் அறிந்தால், நாம் பயனடைவோம் என்று ஒருபோதும் நினைக்கக்கூடாது. அவைகளால் அதிகமான பயன் இல்லை. பரிசுத்த ஆவியால் நமக்குள் சுட்டெரிக்கப் பட்டதற்கு மட்டுமே மதிப்பு உண்டு. ஒரு காரியம் ஒரு பண்டத்துக்குள் சுட்டெரித்துசேர்க்கப்படாவிட்டால், கொஞ்சம் தேய்த்தாலே அதை அகற்றிவிடமுடியும். கொஞ்சம் தேய்த்தவுடனேயே ஒன்றை நம்மிலிருந்து துடைத்துவிடமுடியுமானால், அதற்கு என்ன ஆவிக்குரிய மதிப்பு உண்டு? நாம் வேதாகமத்தை வாசிக்கக்கூடாது என்பதல்ல இதன் பொருள்; நாம் வாசிப்பதைப் பரிசுத்த ஆவி சுட்டெரித்து நமக்குள் கூட்டிச்சேர்க்கும்போது மட்டுமே அதற்கு மதிப்பு உண்டு என்பதே இதன் பொருள். விலை யேறப்பெற்ற கற்களெல்லாம் அக்கினியிலிருந்தே வெளி வருகின்றன. நமக்கு விலையேறப்பெற்ற கற்கள் வேண்டுமானால், நமக்கு அக்கினி தேவை. அக்கினி இல்லாமல், விலையேறப்பெற்ற கல் எதுவும் இருக்கமுடியாது.

இந்தக் காரணத்திற்காக, சுற்றுச்சூழல்மூலம் நம்மேல் வருகிற பாடுகளை நாம் ஒருபோதும் மறுக்கக்கூடாது. பரிசுத்த ஆவியின் சிட்சையை நாம் ஒருபோதும் மறுக்கக்கூடாது; தேவனுடைய கை எல்லா வழிகளிலும் நம்மைச் சுற்றிவளைத்து, அடைத்துக் கொள்ளும்போது நாம் புகார்செய்யக்கூடாது. அநேக நேரங்களில் நாம் எவ்வளவு கட்டுண்டவர்களாகவும், அழுத்தப் பட்டவர்களாகவும் உணர்கிறோம்! எல்லா அடிமைத்தனத்தையும்,

மட்டுப்படுத்துதலையும் உடைத்தெறிந்து கொஞ்ச நேரமாவது விடுதலையோடு இருக்கவேண்டும் என்று நாம் எவ்வளவாய் விரும்புகிறோம். ஆனால், நாம் தேவனுடைய உருவாக்கும் கரத்தில் இருக்கிறோம் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். அவர் நம்மை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்; அதனால் நாம் ஒரு நாள் விலையேறப்பெற்ற கற்களாக வெளிவருவோம். தேவன் நமக்குத் தம் ஜீவனை மட்டும் தரவில்லை; நாம் ஒரு சிறப்பான தன்மையை உடையவர்களாக இருக்கும் அளவுக்கு அவர் நம்மில் வேலையும் செய்துகொண்டிருக்கிறார். இதையே தேவன் அனுமதிக்கிற எல்லாச் சுற்றுச்சூழ்நிலைகளின்மூலம் பரிசுத்த ஆவி நம்மில் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்; இதுவே விலையேறப் பெற்ற கல் என்றழைக்கப்படுகிறது. எனவே, வெறுமனே அறிவு அல்லது உபதேசம் இருப்பதால் என்ன பயன்? ஆவியானவர் நமக்குள் சுட்டெரித்துச் சேர்ப்பதற்கு மட்டுமே ஏதாவது மதிப்பு உண்டு. ஒரு கிறிஸ்தவன் சுட்டெரித்தல்மூலம் ஏதோவொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது மட்டுமே, அவன் வெறுமனே புத்தகங்களில் வாசித்ததைவிட மெய்யாகவே அறிந்ததிலிருந்து அவனால் செய்திகளைப் பிரசங்கிக்கமுடியும். பரிசுத்த ஆவியால் நமக்குள் சுட்டெரிக்கப்பட்டு சேர்க்கப்பட்டது மட்டுமே விலையேறப்பெற்ற கல். இல்லையென்றால், அது மரமும், புல்லும், வைக்கோலுமே.

சில நேரங்களில் நாம் ஒரு மூத்த நபரின் பிரசன்னத்தில் உட்காரும்போது, அவர் மெய்யாகவே கர்த்தரோடு நடந்து கொண்டிருக்கிறவர் என்று நாம் உணர்கிறோம். அவரில் ஒரு ஜீவன் இருக்கிறது; அது அவருடைய தனிக்குணத்தை அதிகமாக வெளியாக்குகிறது. அது அவருடைய விசேஷமான சுபாவமாகி விட்டது. நாம் அவருக்குமுன் தலைவணங்காமல் இருக்கமுடியாது. அவரைவிடப் பெரிய ஊழியம் செய்யக்கூடிய அநேகர் இருக்கக்கூடும்; அவரைவிடப் பெரிய வேலைசெய்யக்கூடிய அநேகர் இருக்கக்கூடும். ஆனால், அவரிடம் உதாரத்துவமான ஜீவன் இருக்கிறது; அவருக்குள் பரிசுத்த ஆவியால் ஏதோவொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அவரிடம் ஒரு விசேஷமான குணம், அக்கினியிலிருந்து வெளிவந்த ஏதோவொன்று, இருக்கிறது; அவன் ஒரு விலையேறப்பெற்ற கல். இப்பேர்ப்பட்டவரின் பிரசன்னத்தில், நாம் தலைவணங்கி, "இவ்வளவாய் உயிர்ப்பூட்டுகிற, இவ்வளவாய்த் தொடுகிற ஏதோவொன்று நம்மிடமும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்," என்று மட்டுமே நம்மால் கூறமுடியும். வெறும் வார்த்தைகள் மக்களுக்கு உயிர்ப்பூட்டாது, அவர்களைத் தொடாது; அக்கினியினூடாய்ச் சென்றது மட்டுமே அதைச் செய்யமுடியும்.

புதிய எருசலேமில் விலையேறப்பெற்ற கற்கள் இருக் கின்றன. விலையேறப்பெற்ற கற்கள் இல்லாமல், புதிய எருசலேம் ஒருபோதும் வராது. தேவனுக்கு விலையேறப்பெற்ற கற்கள் தேவை. விலையேறப்பெற்ற கற்களின் தன்மையை வெளியரங் கமாக்குகிற ஒரு கூட்டம் மக்கள் அவருக்குத் தேவை. ஆழமற்ற நிலையிலிருந்து தேவன்தாமே நம்மை விடுவிப்பாராக! பரிசுத்த ஆவி நம் ஜீவனுக்குள் அடிப்பு வேலைப்பாடாய்க் கூட்டிச் சேர்ப்பதற்கு மட்டுமே ஏதாவது மதிப்போ அல்லது பயனோ உண்டு.

"பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களா யிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது," என்று 21-ஆம் வசனம் கூறுகிறது. புதிய எருசலேமில் சுத்தப் பொன்னும், விலையேறப்பெற்ற கற்களும் மட்டும் இல்லை, முத்துக்களும் இருக்கின்றன. முத்துக்கள் சுட்டெரிக்கப்படு வதால் உருவாக்கப்படுவதில்லை; அவை ஒரு கடல்வாழ் சிருஷ்டி காயப்படுத்தப்பட்டபின் அதற்குள் படிப்படியாக உருவாக்கப் படுவதின் விளைவாகும். ஆகையால், முத்து என்றால் மரணத்தி லிருந்து வெளிவருகிற ஜீவன் என்று பொருள். முத்து கர்த்தராகிய இயேசுவின் மரணத்தின் மீட்பில்லா அம்சத்தில் அவரால் விடுவிக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கிறது.

மத்தேயு 13கூட முத்தைப்பற்றிப் பேசுகிறது. இந்த முத்து யாரைக் குறிக்கிறது? இது கர்த்தர் தம் மரணத்தினால் ஏற்படுத்திய சபையைக் குறிக்கிறது. இந்த முத்தை விலைக்கு வாங்குவதற்காக அவர் தம்மிடம் இருந்த எல்லாவற்றையும் விற்கச் சித்தமாயிருந்தார். முத்து மந்தமான அல்லது எதிர்மறையான ஒன்றைக் குறிக்காமல், நேர்மறையான ஒன்றைக் குறிக்கிறது. சபையே, புதிய மனிதனே, தேவன் படைக்க விரும்புகிறகாரியம். இப்பேர்ப்பட்டதிற்குள் பாவம் அல்லது மீட்பு என்ற பிரச்சினை இல்லை. இந்த முத்தை அடைவதற்காக அவர் எல்லாவற்றையும் விற்கச்சித்தமாயிருந்தார். முற்றிலும் கிறிஸ்துவிடமிருந்து வரும் ஜீவன் எவ்வளவு விலையேறப்பெற்றது என்று இது காண்பிக்கிறது. அது தேவனுக்கு எவ்வளவு விலையேறப்பெற்றது, அது கிறிஸ்துவுக்கு எவ்வளவு விலையேறப்பெற்றது!

புதிய எருசலேமில், முத்துக்கள் நகரத்தின் வாசல்களாகச் செயல்படுகின்றன. தேவனுக்குரிய எல்லாம் இங்கிருந்து ஆரம்பிக்கின்றன என்பதே இதன் பொருள். வேறுவார்த்தை களில் சொல்வதானால், மனிதன் தேவனுக்குமுன்பாக ஜீவனைப் பெறவேண்டுமானால், ஜீவன் மனிதனுக்குரிய ஏதோவொன்றாக இருக்கக்கூடாது, கிறிஸ்துவின் மரணத்துக் குரியதாக, கிறிஸ்துவினுடைய மரணத்தின் மீட்பல்லாத அம்சத்துக்குரியதாக

இருக்கவேண்டும்.

ஆவிக்குரிய கட்டிடத்தில் மரம், புல் அல்லது வைக்கோல் ஆகியவைகளாலான கட்டுமானப்பொருட்கள் இருக்கக்கூடாது, மாறாகப் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் ஆகிய வைகளாலான கட்டுமானப்பொருட்கள் இருக்கவேண்டும் என்று 1 கொரிந்தியர் 3:12 கூறுகிறது. 1 கொரிந்தியர் 3-ல் பொன்னும், வெள்ளியும், விலையேறப்பெற்ற கற்களும் இருக்கின்றன; ஆனால், ஆதியாகமம் 2-ல் ஏதேன் தோட்டத்தில் பொன்னும், விலையேறப் பெற்ற கற்களும், முத்துக்களும் இருந்தன—அங்கு வெள்ளி இருக்கவில்லை. திருவெளிப்பாடு 21-ல், புதிய எருசலேமில், மீண்டும் பொன்னும், விலையேறப்பெற்ற கற்களும், முத்தும் இருக்கின்றன; அங்கு வெள்ளி இல்லை. இதன் உட்கருத்து என்ன? பொன், விலை யேறப்பெற்ற கற்கள், முத்து ஆகிய மூன்று காரியங்களும் ஏதேன் தோட்டத்திலும், புதிய எருசலேமிலும் காணப்படுகின்றன. பொன், விலையேறப்பெற்ற கற்கள், முத்து ஆகியவை நித்தியத்திலிருந்து நித்தியம்வரை இருக்கின்றன என்பதே இதன் பொருள்.

வெள்ளி வேண்டும் என்று தேவன் நித்தியத்தில் திட்டம் தீட்டவில்லை. ஏனென்றால், வெள்ளி மீட்பைக்குறிக்கிறது. மனிதன் பாவம்செய்வான் என்றும், அவனுக்கு மீட்பு தேவைப்படும் என்றும் தேவனுக்குத் தெரியும். ஆனால், இது அவருடைய நித்திய திட்டத்திற்குரியதல்ல. தேவனுடைய வேலையில் மீட்பு இருக்கிறது. ஆனால், அவருடைய நித்திய குறிக்கோளில் மீட்பு இல்லை. ஆகையால், இந்த அம்சத்தில், புதிய எருசலேம் ஏதேன் தோட்டத்தைப்போலவே இருக்கிறது—அங்கு வெள்ளி இல்லை. எதிர்கால நித்தியத்தில், நாம் பாவத்தின் சுவடுகூட இல்லை என்னும் இடத்திற்குக் கொண்டுவரப்படுவோம் என்பதே இதன் பொருள். ஆயினும், இன்று, வெள்ளியை நாம் அசட்டை செய்யவோ அல்லது அற்பமாக எண்ணவோமுடியாது. இன்று தனக்கு வெள்ளி தேவையில்லை என்று யாராவது நினைத்தால், அவன் இரக்கத்திற்காகத் தேவனிடம் வேண்டுதல் செய்ய வேண்டும். வெள்ளி இல்லாமல் நாம் முன்னே செல்லமுடியாது. நம்மிடம் வெள்ளி இல்லையென்றால், நம்மிடம் மீட்பு இல்லை; நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. ஆனால், தேவனுடைய குறிக்கோளில் மீட்பிற்கு எந்தப் பங்கும் இல்லை. புதிய எருசலேமில் நம்மால் எந்த வெள்ளியையும் காணமுடியாது. பாவத்தின் வரலாற்றையெல்லாம் தேவன் துடைத்துவிடுவார் என்று இது நமக்குக் காண்பிக்கிறது; ஏனென்றால், அந்த நகரத்தில் மீட்பு அடங்கவில்லை. புதிய எருசலேமில், மனிதனுக்கு இனிமேல் மீட்பு தேவைப்படாது. ஏனென்றால், அவர்கள் இனிமேல்

பாவம்செய்யமாட்டார்கள். நாம் இனி மீண்டும் விழுவதற்கான சாத்தியமேயில்லை என்னும் உறுதியான தளத்திற்குத் தேவன் நம்மைக் கொண்டுவருவார். நமக்குள் ஒரு ஜீவன் இருக்கிறது; இந்த ஜீவனுக்குப் பாவத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லை; இதற்கு எந்த மீட்பும் தேவையில்லை. நம்மில் இருக்கும் அந்த ஜீவன் கிறிஸ்துவிலிருந்து வருகிறது; கிறிஸ்துவே அந்த ஜீவன். கிறிஸ்துவுக்கு எந்த மீட்பும் தேவைப்படாததுபோல, அவருடைய ஜீவனின் ஒரு பங்கைக் கொண்டிருக்கிற நமக்கும் இனிமேல் மீட்பு தேவைப் படாது. இவ்வாறு, நித்தியத்தில் வெள்ளி தேவைப்படாது.

இன்று நம்மிடம் தேவனுடைய மீட்பு இருப்பதற்காக அவருக்கு நன்றி கூறுவோம். நாம் பாவம்செய்திருந்தாலுங்கூட, தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம் எல்லாப் பாவங்களிலுமிருந்து நம்மைக் கழுவுவதற்காக அவருக்கு நன்றி கூறுவோம். ஆயினும், தேவன் தம் குமாரனின் ஜீவனை நம்முடன் பகிர்ந்திருக்கிறார். இந்த ஜீவனுக்கு என்றென்றைக்கும் எந்த மீட்பும் தேவைப்படாது. ஒரு நாள், நாம் முழுவதும் இந்த ஜீவனால் வாழ்வோம், பாவத்தின் வரலாறு ஒழிந்துபோகும். மீட்கும் இரத்தத்திற்கு இனிமேல் எந்தப்பயனும் இருக்காது.

வீழ்ச்சி தேவனுடைய குறிக்கோளில் இல்லை, மீட்பு தேவனுடைய குறிக்கோளில் இல்லை, இராஜ்ஜியமும் தேவனுடைய குறிக்கோளில் இல்லை என்பதை நாம் பார்க்கவேண்டும். வீழ்ச்சி தேவனுடைய குறிக்கோளில் இல்லை; அது வழியிலே நிகழ்ந்த ஒன்று. மீட்பு தேவனுடைய குறிக்கோளில் இல்லை; அது வீழ்ச்சிற்கான தீர்வு. இராஜ்ஜியமும் தேவனுடைய குறிக்கோளில் இல்லை; இதுவும் வீழ்ச்சிற்கான தீர்வு. வீழ்ச்சியினிமித்தம் மீட்பு இருக்கிறது, வீழ்ச்சியினிமித்தம் இராஜ்ஜியம் இருக்கிறது. இவைகளெல்லாம் பரிகாரங்கள். இவைகள் தேவனுடைய குறிக்கோளில் இல்லை. இருந்தபோதும், மீட்பையும் இராஜ்ஜியத்தையும் நாங்கள் ஒருபோதும் அசட்டைசெய்யமாட்டோம். மீட்பு இல்லையென்றால், வீழ்ச்சியின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த வழியும் இருக்காது. இராஜ்ஜியம் இல்லையென்றால், வீழ்ச்சியின் பிரச்சினையைத் தீர்த்திருக்கமுடியுமா? இருந்தபோதும், மனிதன் பாவம்செய்ய வேண்டும் என்பதற்காக தேவன் அவனைப் படைக்கவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தேவன் மனிதனைத் தம் மகிமைக்காகப் படைத்தார். இந்தக் கோடு நேரானது; இந்தப் பரலோகக் கோடு நேரானது.

“நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப் பொன்னாயிருந்தது,” என்று திருவெளிப்பாடு 21:21 கூறுகிறது. வீதி தொடர்புகொள்வதற்கான ஓர் இடம். இந்த நகரத்தின் வீதி சுத்தப் பொன்னாலானது; எனவே, இந்த வீதியில் நடக்கிற மக்கள்

ஒருபோதும் அழுக்கடையமாட்டார்கள். இன்று தேவனுடன் தங்கள் ஐக்கியத்தைப் பராமரிப்பதற்கு, முழுகினவர்கள் தங்களுடைய பாதங்களை இன்னும் கழுவவேண்டியிருக்கிறது (யோவான் 13:10). நாம் இந்த உலகத்தின் வீதியில் நடக்கும்போது, நம்மேல் தூசி படிவதை நம்மால் தவிர்க்கமுடியாது, இவ்வாறு தேவனுடனான நம் ஐக்கியத்தில் தடை ஏற்படுகிறது. ஆனால், அந்த நாளில் எதுவும் நம்மை அழுக்காக்கமுடியாது; தேவனுடனான நம் ஐக்கியத்தை எதுவும் தடுக்கமுடியாது. நித்தியத்தில் நம்மைக் கறைப்படுத்தும் எதுவும் இருக்காது; நம் ஜீவனும், வாழ்க்கையும் பரிசுத்தமாக இருக்கும்.

நகரம் "தெளிவுள்ள பளிங்குபோல" இருக்கிறது என்று 21-ஆம் வசனத்தின் கடைசிப்பகுதி கூறுகிறது. இன்று நம் சூழ்நிலையில் எவ்வளவு பகுதி தெளிவில்லாமல் இருக்கிறது! ஆனால், எதிர்காலத்தில், தேவனுடைய பிரசன்னத்தில், நாமெல்லாரும் தெள்ளத்தெளிவாக இருப்போம். எனவே, இன்றுகூட நம்மிடம் அநேக மறைவான பகுதிகளும், அநேகத் திரைகளும் இருக்கக்கூடாது. மனிதர்களுடைய புகழ்ச்சியைப் பெறுவதற்காக நாம் அவர்களுக்குமுன் பக்தியுள்ளவர்களாக இருப்பதுபோல் நடிக்கக்கூடாது. மாய்மாலம், பாசாங்கு, திரைகள்—இவைகளில் எதுவுமே தெளிவானது இல்லை. நம் உண்மையான நிலைமை அவ்வளவு நல்லதாக இல்லாதபோது, நாம் நல்லவர்களாக இருப்பதுபோல நடிக்கும்போது, நாம் தெளிவாக இல்லை. அநேக நேரங்களில், நம் வார்த்தைகளும் நம் செயல்களும் மிகவும் அசாதாரணமானவைகளாக இருக்கின்றன. பேசுவதிலும், நம் நடத்தையிலும், காரியங்களைச்செய்யும் முறையிலும் நாம் மற்றவர்களைப்போல் நடிக்கிறோம். நாம் நாமாக இருப்பதற்குப் பதிலாக, அநேக வழிகளில் நாம் மற்றவர்களைப்போல் நடிக்கிறோம். இது தெளிவாக இருப்பதல்ல. எல்லா செயற்கையான தன்மையும், போலிநடிப்பும் தெளிவானவையல்ல. நாமாக ஏற்படுத்திக்கொண்ட எந்தப் பரிசுத்தத்தாலும் நாம் நிச்சயமாக தேவனுக்குமுன் பரிசுத்தமாக வாழத்தேவையில்லை. சிலுவை சுமப்பதே உண்மையான ஆவிக்குரியதன்மை என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். அடிமைத்தனம் நிறைந்த பரிசுத்தம் பரிசுத்த ஆவியின் பரிசுத்தம் இல்லை. எல்லா நாடக நடிப்பையும், பாசாங்கையும் கைவிட்டாக வேண்டும்.

ஆகையால், நாம் அநேகக் காரியங்களை அறிக்கை செய்தாக வேண்டும். சகோதர சகோதரிகளுக்கிடையே, நம் பாவத்தை மூடி மறைப்பதற்கல்ல, மாறாக ஒருவருக்கொருவர் அறிக்கைசெய்ய நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களுக்கெதிராகப் பாவம்செய்யும்போதெல்லாம், அதற்கான காரண காரியங்களைக்

கூறி அவைகளை ஒதுக்கிவிடக்கூடாது; மாறாக அவைகளை அறிக்கைசெய்யவேண்டும். இன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் தெள்ளத்தெளிவாக இருக்க வேண்டும். ஏனென்றால், அந்த நாளில் தேவனுடைய பிரசன்னத்தில் நாமெல்லாரும் தெள்ளத்தெளிவாக இருப்போம். புதிய எருசலேமில் வீதி கண்ணாடிப்போல் தெள்ளத் தெளிவாக இருக்கிறது. அங்கு எல்லாவற்றையும் காணமுடிகிறது. அந்த நாளில் அது அப்படி இருக்கும் என்பதால் இன்று நாம் அப்பேர்ப்பட்ட மக்களாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்—நிஜமான மக்களாக, தெள்ளத்தெளிவான மக்களாக, தாங்கள் இல்லாத ஒன்றை இருப்பதுபோல் ஒருபோதும் நடிக்காத மக்களாக.

## தேவாலயமும், நகரத்தின் வெளிச்சமும்

"அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியான வருமே அதற்கு ஆலயம்," என்று 22-ஆம் வசனம் கூறுகிறது. இந்த வார்த்தைகள் விசேஷமாக விலையேறப்பெற்றவை. பழைய ஏற்பாட்டின் எருசலேமில் தேவாலயம் இருந்தது என்று நமக்குத் தெரியும். அந்த நேரத்தில் மனிதன் தேவனுடன் ஐக்கியம்கொள்ள விரும்பியபோதெல்லாம், அவன் தேவாலயத்திற்குப் போகவேண்டி யிருந்தது. ஆலயமே தேவனுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த இடம். தேவனுடன் ஐக்கியம்கொள்வதற்கு மனிதன் அந்த இடத்திற்குப் போகவேண்டியிருந்தது. ஆயினும், புதிய எருசலேமில், தேவாலயம் இருக்காது. ஏனென்றால், தேவனும் ஆட்டுக்குட்டியானவருமே நகரத்தின் ஆலயம். அந்த நாளில் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஐக்கியம் நெருக்கமாகவும், நேரடியாகவும் இருக்கும் என்பதே இதன் பொருள்; அது நேருக்கு நேர். தேவனுடன் ஐக்கியம்கொள்ள மனிதன் இனிமேல் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போகவேண்டியதில்லை.

பழைய ஏற்பாட்டில், ஆலயத்தில் ஒரு திரை இருந்தது. பிரதான ஆசாரியனைத்தவிர, அதுவும் வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே, வேறொருவனும் இந்தத் திரையினூடாய்ச்சென்று, தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழையமுடியாது. இன்று சபையில் திரை கிழிக்கப்பட்டுவிட்டது. இன்று ஆவியிலும், உத்தமத்திலும் தேவனை ஆராதிக்க நாமெல்லாரும் தேவனுடைய பிரசன்னத்துக் குள் நுழையமுடியும். ஆனால், அந்த நாளில் தேவனும், ஆட்டுக்குட்டியானவருமே நகரத்தில் ஆலயமாக இருப்பார்கள். நாம் தேவனிடம் போகவேண்டிய தேவையிருக்காது; நாம் எங்கிருக்கிறோமோ, அங்கேயே அவர் இருப்பார். இன்று நாம் தேவனிடம் போகிறோம். ஆனால், அந்த நாளில், நாம் அவருடைய பிரசன்னத்தில் வாழ்வோம். தேவனும்,

ஆட்டுக்குட்டியானவருமே நகரத்தின் ஆலயம். ஆகையால், இன்று நாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வாழக் கற்றுக்கொள்ளாவிட்டால், நாமே மிக மோசமான முட்டாள்க ளாக இருப்போம். இன்று திரை கிழிக்கப்பட்டாயிற்று. மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் நாம் தைரியமாக நுழையலாம். நாம் வெளியே இருக்கக்கூடாது.

"நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு," என்று 23-ஆம் வசனம் கூறுகிறது. இந்தப் பத்தி ஆலயத்தைப்பற்றிய முந்தைய வசனத்தோடு தொடர்புடையது. தேவனும் ஆட்டுக்குட்டியானவருமே நகரத்தில் ஆலயம். தேவனுடைய மகிமை நகரத்தைப் பிரகாசிக்கிறது. ஆகையால், நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனோ அல்லது சந்திர னோ வேண்டியதில்லை. பழைய ஏற்பாட்டின் ஆலயத்தில் இருந்த வெளிப்பிரகாரம் சூரியனாலும், சந்திரனாலும் பிரகாசிப்பிக்கப் பட்டது; பரிசுத்த ஸ்தலம் விளக்கு வெளிச்சத்தால் பிரகாசிப்பிக்கப்பட்டது; மகாபரிசுத்த ஸ்தலத்தில் எந்த ஜன்னலும் இருக்கவில்லை; சூரிய ஒளியோ அல்லது சந்திரனின் ஒளியோ உள்ளே பிரகாசிக்கமுடியவில்லை. பரிசுத்த ஸ்தலத்தில் இருந்ததுபோல அங்கு விளக்கு இருக்க வில்லை. தேவனுடைய மகிமையே வெளிச்சம்கொடுத்தது. அதுபோல, புதிய எருசலேம் சூரியனால் அல்லது சந்திரனால் பிரகாசிப்பிக்கப்படவில்லை; மாறாகத் தேவனுடைய மகிமையால் பிரகாசிப்பிக்கப்படுகிறது. முழு நகரமும் மகாபரிசுத்த ஸ்தலமாக இருக்கும் என்று இது வெளிப்படுத்துகிறது. சபை எதிர்காலத்தில் மகாபரிசுத்த ஸ்தலமாக மாறிவிடும்.

"ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு." தேவனுடைய மகிமையே வெளிச்சம்; ஆட்டுக்குட்டியானவரே விளக்கு. புதிய எருசலேமில் மறைமுகமாக ஏதோவொன்று இன்னும் இருக்கும் என்று இது காண்பிக்கிறது. தேவன் ஒளியாக விளக்காகிய ஆட்டுக்குட்டியானவர்மூலம் பிரகாசிப்பார். இது மீட்பைக் குறிக்கும் ஒரு குறிப்பல்ல, மாறாகத் தேவனை ஒருவரும் நேரடியாக அறியமுடியாது என்பதற்கான குறிப்பாகும். ஒருவன் தேவனை அறிய விரும்பினால், அவன் அவரை ஆட்டுக்குட்டியானவர்மூலம் அறியவேண்டும்—இது நித்தியத்திலுங்கூட உண்மையாகவே இருக்கிறது. கிறிஸ் துவின்மூலம் மட்டுமே ஒருவனால் தேவனை அறியமுடியும். விளக்கில்லாமல் நம்மால் ஒளியைப் பார்க்க முடியாது; அது போல, கிறிஸ்து இல்லாமல் நம்மால் தேவனைப் பார்க்கமுடியாது. சுற்றுச்சூழல் எப்படி இருந்தாலும் சரி, தேவன் இன்னும் ஒருவரும் சேரக்கூடாத ஒளியில்தான் வாசம்பண்ணு

கிறார். நாம் கிறிஸ்துவில் இருக்கும்போது மட்டுமே நம்மால் அவரைப் பார்க்கமுடியும்.

"இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்தில் நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்," என்று 24-ஆம் வசனம் கூறுகிறது. நாம் இங்கு ஒரு காரியத்தைக் கவனிக்கவேண்டும். பிதாக்களின் காலகட்டம், நியாயப்பிரமாணத்தின் காலகட்டம், கிருபையின் காலகட்டம் ஆகிய காலகட்டங்களிலிருந்து தேவன் அடைந்த எல்லா மக்களும் அந்த நாளில் கிறிஸ்துவுக்கு வழங்கப்பட மணவாட்டியாக மாறுவார்கள். இராஜ்ஜியத்தின் யுகத்தின் முடிவில் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிற எல்லா மக்களும், சாத்தானால் வஞ்சிக்கப்படாத எல்லா மக்களும் புதிய பூமியில் மக்களாக இருக்க இடமாற்றப்படுவார்கள். இந்த மக்களே 24-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசங்கள். நகரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற எல்லாருக்கும் உயிர்த்தெழுந்த சரீரங்கள் இருக்கும்; அவர்களே குமாரர்கள், இராஜாக்கள். ஆயினும், பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறவர்களுக்கு மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய ஒரு சரீரம் இன்னும் இருக்கும். அவர்களே பூமியின் மக்கள், தேசங்கள். பூமியின் இராஜாக்களே தேசங்களின் இராஜாக்கள்.

பழைய ஏற்பாட்டில், கூடாரம் இஸ்ரவேலர்களின் பாளயத்தின் மத்தியில் இருக்கத்தக்கதாக நிறுவப்பட்டது. மூன்று கோத்திரத்தார் கிழக்கில் வாசம்பண்ணினார்கள், வேறு மூன்று கோத்திரத்தார் மேற்கிலும், மேலும் மூன்று கோத் திரத்தார் தெற்கிலும், வேறு மூன்று கோத்திரத்தார் வடக்கிலும் வாசம்பண்ணினார்கள். இது எண்ணாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய எருசலேமின் நிலைமை தேவனுடைய கூடாரத்தின் நிலைமைக்கு ஒத்திருக்கிறது. இந்த நகரத்தின் மதிலில் ஒவ்வொரு திசையிலும் மூன்று வாசல்கள் இருக்கின்றன: கிழக்கில், மேற்கில், தெற்கில், வடக்கில்—மொத்தம் பன்னிரண்டு வாசல்கள். பன்னிரண்டு கோத்திரத்தார் கூடாரத்தைச் சுற்றி வாசம்பண்ணியதுபோல, தேசங்கள் புதிய எருசலேமைச் சுற்றி வாசம்பண்ணும். தேசங்கள் நகரத்தின் வெளிச்சத்தால் "நடக்கும்" என்ற உண்மைக்கு பூமியின் தேசங்கள் புதிய எருசலேமுக்கு வருவார்கள் என்றும், அவர்கள் புதிய எருசலேமுக்கு நடந்துவரும் நடை நகரத்தின் வெளிச்சத் தால் வழிநடத்தப்படும் என்று பொருள்.

இராஜாக்கள் கொண்டுவரும் "மகிமை" பூமியின் இராஜாக்களுக்குச் சொந்தமான மகிமையைக் குறிக்கிறது. அவர்கள் தங்கள் இராஜாங்கத்தின் மகிமையை நகரத்திற்குக் கொடுப்பார்கள். இங்கு கூறப்பட்டுள்ள "மகிமை"க்கு ஆதியாகமம் 31:1-ல் கூறப்பட்டுள்ள

"மகிமை"யின் அதே அர்த்தமே உண்டு. இது தேசத்தின் மிகச் சிறந்த விளைபொருளைக் குறிக்கிறது. வேறுவார்த்தைகளில் சொல்வதானால், புதிய பூமியில், பூமியின் இராஜாக்கள் தங்கள் தேசங்களின் மிகச்சிறந்த விளைபொருளைக் கொண்டுவந்து, அவைகளைப் பரிசுத்த நகரத்திற்குப் பரிசாக வழங்குவார்கள்.

"அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதேயில்லை," என்று திருவெளிப்பாடு 21:25 கூறுகிறது. புதிய வானத்திலும் புதிய பூமியிலும் பகலுக்கும் இரவுக்கும் இடையே இன்னும் வித்தியாசம் இருக்கும் என்பதையே அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதில்லை என்ற உண்மை வெளிப்படுத்துகிறது. பகல் நேரத்தில் தேசங்கள் நகரத்துக்குள் வரமுடியும். ஆனால், "அங்கே இராக்காலம் இருக்காது"—நகரத்தில் இரவு இருக்காது. நகரத்தில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் உயிர்த்தெழுந்த சரீரங்கள் இருப்பதால் அவர்கள் ஒருபோதும் களைப்படையார்கள்; அவர்களால் இரவும் பகலும் தொடர்ந்து தேவனைச் சேவிக்கமுடியும்.

"உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்," என்று 26-ஆம் வசனம் கூறுகிறது. இது 24-ஆம் வசனத்தின் இராஜாக்களைக் குறிக்கிறது. பூமியின் இராஜாக்கள் தங்கள் மகிமையை மட்டும் நகரத்துக்குள் கொண்டுவராமல், தேசங்களின் மகிமையையும் கனத்தையும்கூட அதற்குள் கொண்டுவருவார்கள்.

"தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக் கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக் குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்," என்று 27-ஆம் வசனம் கூறுகிறது. மனிதனுக்குரிய எல்லாமும், மாம்சத்தைச் சார்ந்த எல்லாமும் தீட்டுள்ளவை. ஆகையால், மனிதனையும், மாம்சத்தையும் சார்ந்த எதுவும் நகரத்துக்குள் நுழையமுடியாது. கிறிஸ்துவுக்கும், பரிசுத்த ஆவிக்கும் உரியது மட்டுமே நுழையமுடியும்; மற்ற எதுவும் நுழையமுடியாது. வேதவாக்கியங்களில் "அருவருப்பை நடப்பிக்கிறது" குறிப்பாக விக்கிரகத்தைக் குறிக்கிறது. "பொய்யை" நடப்பிக்கிறது சாத்தானுடனான உறவைக் குறிக்கிறது; ஏனென்றால், பொய்கள் சாத்தானிடமிருந்து வருகின்றன. விக்கிரகங்களோடு அல்லது பாவத்தோடு தொடர்புடையவர்களால் நகரத்துக்குள் நுழையமுடியாது. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மட்டுமே அதில் நுழைவார்கள்.

புதிய வானத்திலும் புதிய பூமியிலும் இரண்டு வகை யான குடிகள் மட்டுமே இருப்பார்கள்—முதலாவது, அங்கு இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள்—அவர்கள் நகரத்தில்

வாசம்பண்ணுவார்கள், அவர்களுடைய பெயர்கள் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும். பின்பு, அங்கு ஆயிரவருட அரசாட்சி யிலிருந்து இடமாற்றப்படுபவர்கள் இருக்கிறார்கள்—அவர்கள் தொடர்ந்து வாழந்து, புதிய பூமியின் குடிகளாக மாறுவார்கள். அவர்களுடைய பெயர்கள் ஜீவ புத்தகத்திலும் எழுதப்பட்டிருக் கின்றன. ஆனால், அவர்கள் நகரத்தில் வாழமாட்டார்கள். அவர்களால் நகரத்துக்குள் போகவும், வெளியே வரவும் மட்டுமே முடியும்.

## ஜீவத் தண்ணீருள்ள நதியும், ஜீவ விருட்சமும்

தேவன் முடிவில் நமக்கு என்ன காண்பிப்பார் என்பதை நாம் இன்னும் பார்க்கவேண்டியிருக்கிறது. "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானரும் இருக்கிற சிங்காசனத் திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கிய மடைவதற்கு ஏதுவானவைகள்," என்று 22:1-2 கூறுகின்றன. இது நமக்கு 2:7-யை நினைப்பூட்டுகிறது. "ஜெயங்கொள்ளு கிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியி லிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன்," என்று அந்த வசனம் கூறுகிறது. ஜீவவிருட்சம் தேவனுடைய பரதீசில் நடப்பட்டிருக்கிறது. ஜீவவிருட்சம் நகரத்தில் இருக்கிறது; புதிய எருசலேமே தேவனுடைய பரதீசு என்று இது நமக்குக் கூறுகிறது.

ஆதியாகமம் புத்தகத்தை நாம் திரும்பிப் பார்க்கையில், ஆதியாகமம் 2-ல் தேவன் மனிதனைக் கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளமாகவும், ஏவாளைத் தாம் அடைய விரும்பிய சபைக்கு முன்னடையாளமாகவும் படைத்தார். பின்பு, தேவன் கணவனும் மனைவியுமாகிய அவர்களை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். இவ்வாறு, நாம் மனிதனையும், பெண்ணையும், தோட்டத்தையும் பார்க்கிறோம். பின்பு, ஆதியாகமம் 3-ல் சர்ப்பம் வந்தது; மனிதன் வீழ்ந்தான்; அதன் விளைவாக தேவன் அவர்களைத் தோட்டத்தைவிட்டு வெளியே விரட்டினார். திருவெளிப்பாடு 21-ல், புதிய எருசலேமில் நாம் யாரைப் பார்க்கிறோம்? அங்கு நாம், ஆதியாகமம் 2-ல் ஆதாம் திருஷ்டாந்தப்படுத்திய ஆட்டுக்குட்டியானவரைப் பார்க்கிறோம்; அவர் முற்றிலும் தேவனுக்காகவே இருக்கிறார். அங்கு, ஆதியாகமம் 2-ல் ஏவாள் திருஷ்டாந்தப்படுத்திய

ஆட்டுக்குட்டியானவரின் மனைவியையும் பார்க்கிறோம்; அவள் முற்றிலும் கிறிஸ்துவுக்காகவே இருக்கிறாள். புதிய எருசலேமே ஆட்டுக்குட்டியானவரின் மனைவியும், தேவனுடைய பரதீசுமாகும். ஆதியாகமம் *2*-ல் மூன்று வஸ்துக்கள் இருந்தார்கள்—ஆதாம், ஏவாள், தோட்டம். ஆனால், திரு வெளிப்பாடு *21*, *22*-ல் இரண்டு வஸ்துக்கள் மட்டுமே இருக்கிறார்கள்—ஆட்டுக்குட்டியானவரும், நகரமும், நகரமே மணவாட்டியும், பரதீசுமாகும்; பெண்ணும், பரதீசும் ஒன்றாகிவிட்டார்கள். ஆதியாமத்தில் பெண்ணை வெளியே விரட்டமுடிந்தது; ஆனால், திருவெளிப்பாட்டின் முடிவில் இனிமேல் பெண்ணை வெளியே விரட்டமுடியாது.

சிலர் கவலையுடன், "நித்தியத்தில் என்ன நடக்கும்? பிசாசு மீண்டும் வந்துவிட்டால் நாம் என்ன செய்வோம்?" என்று கேட்கக்கூடும். இது மீண்டும் நடப்பது அசாத்தியம் என்று நம்மால் பதிலளிக்கமுடியும். ஏனென்றால், நித்தியத்தில் தேவன்தாமே பரிசுத்த நகரத்தில் வாசம்பண்ணுவார். தேவனுக்கு ஸ்தோத்திரம்! அவர் ஆதியாகமத்தில் ஒரு தோட்டத்தை, மதில்சுவர் இல்லாத தோட்டத்தை, நன்றாகப் பாதுகாக்கப்படாத தோட்டத்தை, நிறுவினார். ஆகையால், சர்ப்பமும் பாவமும் உள்ளே நுழைய முடிந்தன. ஆனால், தேவன் பாதுகாப்பிற்காக இறுதியாக ஒரு நகரத்தைப் பெறுகிறார். இந்த நகரம் எப்போதாவது வீழ்ச்சியில் பங்குபெறுவது என்பது அசாத்தியம். பெண்ணும், பரதீசும் எவ்வளவாய் இணைந்துவிட்டார்கள் என்றால் எதுவுமே இனி அவர்களை மீண்டும் பிரிக்கமுடியாது. இதுமுதற்கொண்டு, எந்த வழி யிலும் இந்தப் பெண்ணை இனி வெளியே விரட்டமுடியாது.

*22:1* நகரத்து வீதியின் மத்தியில் இருக்கிற ஜீவத் தண்ணீருள்ள நதியைப்பற்றிப் பேசுகிறது. ஆதியாகமத்தில் நான்கு நதிகள் இருந்தன; அதில் இரண்டு நதிகள் எப்போதும் தேவனுடைய பிள்ளைகளை ஒடுக்கியிருக்கின்றன. பாபிலோன் நகரம் பைசோன் நதியின்மேல் கட்டப்பட்டது; நினிவே நகரம் இதெக்கேல் நதியின்மேல் கட்டப்பட்டது. தேவனுடைய பிள்ளைகள் எப்போதும் இந்த இரண்டு நதிகளால் சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், புதிய எருசலேமில் ஜீவத் தண்ணீருள்ள நதி என்ற ஒரேவொரு நதி மட்டுமே இருக்கிறது. இந்த நதி மனிதனுக்கு ஜீவனையும், மகிழ்ச்சியையும் தருகிறது. "ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும் உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்," என்று சங்கீதம் *46:4* கூறுகிறது. இந்த நதி குறிப்பாகத் தேவனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இந்த நதியின் தண்ணீர் "தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறது." சிங்காசனம் ஒருமை; ஏனென்றால்,

தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் ஒரே சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஆளுகை தேவனுடைய ஆளுகை என்பதே இதன் பொருள்.

"நதியின் இரு கரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது, அது மாதந் தோறும் தன் கனியைக் கொடுக்கும்," என்று 2-ஆம் வசனம் கூறுகிறது. மீண்டும் ஒருமுறை பன்னிரண்டு என்ற எண் பயன்படுத்தப்பட்டுள்ளது. மரம் பன்னிரண்டு விதமான கனிகளைத்தருகிறது என்றால், அது ஒவ்வொரு மாதமும் தன் கனியைத்தருகிறது என்றால் என்ன பொருள்? இது எல்லாம் திருப்தியடைந்துவிட்டன என்றும், இந்தத் திருப்தி நித்தியமாக இருக்கும் என்றும் கூறும் ஒரு வகையாகும். ஒவ்வொரு மாதமும் அங்கு ஜீவன் இருக்கிறது. நித்தியத்தில் நாம் தொடர்ந்து கிறிஸ்துவை அறிந்துகொண்டிருப்போம், எந்தத் தடங்கலும் இல்லாமல் நாம் தொடர்ந்து கர்த்தருடைய ஜீவனைப் பெற்றுக்கொண்டிருப்போம்—கனி இல்லா ஒரு மாதம்கூட இருக்காது. அங்கு எந்தப் பின்னடையும் இருக்காது என்பதே இதன் பொருள். இன்று நாம் சோகமான ஒன்றைப் பார்க்கிறோம்—வேதவாக்கியங்கள் அதை மனிதனின் மதிப்பீடு என்று காண்பிக்கின்றன. இருபது வயதுமுதல் அறுபது வயதுவரையிலான மனிதர்களுக்கு குறிப்பிட்ட ஒரு மதிப்பீடு கொடுக்கப்பட்டது. ஆனால், அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மதிப்பு குறைக்கப்பட்டது (லேவி. 27:3, 7). இது பின்னோக்கிப் போவதாகும். ஆனால், நித்தியத்தில் பின்னோக்கிப் போகுதல் இருக்காது. அங்கு ஒவ்வொரு மாதமும் புதிய ஜீவனும், புதிய கனியும் இருக்கும்.

எனவே, புதிய எருசலேம் வருவதற்குமுன்பே நாம் ஒவ்வொரு மாதமும் ஜீவனின் புதிய அனுபவத்தைத் தேட வேண்டும். இருபது வருடங்களுக்குமுன் நாம் அனுபவித்த குறிப்பிட்ட அனுபவம் இப்போது பசுமையாக இல்லை. அதனால், இன்று நமக்கு எந்தப் பயனும் இருக்கமுடியாது. ஐந்து வருடங்களுக்கு முந்தைய அனுபவமும் பசுமையாக இருக்கமுடியாது, அதனால் நமக்கு எந்தப் பயனும் இருக்க முடியாது. முந்தைய மாதங்களில் ஜீவ விருட்சம் தந்த கனியால் நாம் வாழமுடியாது. ஒவ்வொரு மாதமும் நாம் பசுமையான கனியைப் பெறவேண்டும். தேவனுக்குமுன்பாக நாம் தொடர்ந்து ஜீவனைப் பெறவேண்டும்; நாம் கிறிஸ்துவைப் பெறவேண்டும். ஒவ்வொரு மாதமும் நமக்குக் கனி தேவை என்பது மட்டும் இல்லை, ஒவ்வொரு மாதமும் நமக்கு வித்தியாசமான கனிகள் தேவை. கொஞ்சப் பங்கை மட்டுமே, ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டுமே, வைத்துக்கொண்டு நாம் தேவனுக்குமுன் திருப்தியடையமுடியாது. அநேக அம்சங்களில்

நாம் கர்த்தரை அறிய கற்றுக்கொள்ளவேண்டும். நாம் எல்லா வகையான கனிகளையும் கொடுக்கவேண்டும்.

"அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கிய மடைவதற்கு ஏதுவானவைகள்," என்று அந்த வசனம் தொடர்ந்து கூறுகிறது. கனி ஜீவனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; மரத்தை மூடியிருக்கும் இலைகள் நம் புறம்பான நடத்தையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. கர்த்தராகிய இயேசு அத்திமரத்தைச் சபித்தார்; ஏனென்றால், அதில் இலைகள் மட்டுமே இருந்தன; அதில் கனிகள் இருக்கவில்லை. அதில் உள்ளான ஜீவன் இல்லாமல் புறம்பான நடத்தை மட்டுமே இருந்தது. புதிய வானத்திலும் புதிய பூமியிலும் தேசங்களின் மக்களிடம் பாவமோ, மரணமோ, வேதனையோ, சாபமோ, அசுத்த ஆவிகளோ இருக்காது. இந்த வகையான மக்களாகிய தேசங்கள் தொடர்ந்து பூமியில் வாழ்வார்கள்; பரிசுத்த நகரம் அதின் நடுவில் இருக்கும். கர்த்தராகிய இயேசுவின் இலைகளால் குணப்படுத்தப்படுவதென்றால் கர்த்த ராகிய இயேசுவின் செயல்கள் அவர்களுடைய எடுத்துக்காட் டாக இருக்கும் என்று பொருள். நாம் ஜீவ விருட்சத்தின் கனிகளைப் பெறுவோம்; அவர்கள் இலைகளைப் பெறுவார்கள். கர்த்தராகிய இயேசுவின் நடத்தையைப் பின்பற்றுவதின்மூலம் அவர்களால் தொடர்ந்து நன்றாக வாழமுடியும்; இந்த முறையில் தேசங்கள் சமாதானத்தோடும், ஆசீர்வாதத்தோடும் வாசம்பண்ணும்.

இந்த வசனங்களில் வீதியும், ஜீவத்தண்ணீருள்ள நதியும், ஜீவ விருட்சமும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. புதிய எருசலேமில் நீங்கள் எங்கெல்லாம் வீதியைக் காண்கிறீர்களோ, அங்கெல்லாம் நீங்கள் ஜீவத்தண்ணீருள்ள நதியையும் காண்பீர்கள்; நீங்கள் எங்கெல்லாம் ஜீவத்தண்ணீருள்ள நதியைக் காண்பீர்களோ, அங்கெல்லாம் நீங்கள் ஜீவவிருட்சத்தைக் காண்பீர்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், எங்கெல்லாம் நடவடிக்கை இருக்கிறதோ, அங்கெல்லாம் ஜீவ நதியும், ஜீவ விருட்சமும் இருக்கும். நாம் கர்த்தரைப் பின்பற்றக் கற்றுக்கொள்கையில், நம் நடத்தையில் ஜீவத்தண்ணீருள்ள நதியும், ஜீவ விருட்சமும் அடங்கி யிருக்கவேண்டும் என்பதே இதன் பொருள். அப்போது எல்லாம் நன்றாக இருக்கும். வீதி மக்கள் நடமாடுவதற்கான ஓர் இடம். நடமாடுவதற்கு, நம் நடவடிக்கைகளெல்லாம் நன்மை தீமையுடைய அறிவு விருட்சத்தை ஆதாரமாகக் கொள்ளாமல், ஜீவ விருட்சத்தை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். நமக்குள் இருக்கும் ஜீவன் நடவடிக்கையைப் பிறப்பிக்கும்போது, அதன் விளைவு ஆவியானவரில் ஜீவத் தண்ணீருள்ள நதியின் ஓட்டமாக இருக்கும். ஜீவனின் ஓட்டமே நம் வீதி, நம் வழி. கர்த்தராகிய இயேசுவின் ஜீவன் நம்மில் அசையாவிட்டால், நம்மால்

நடக்கமுடியாது. கர்த்தராகிய இயேசுவின் ஜீவன் அங்கு இல்லையென்றால், ஆவியானவரில் ஜீவத்தண்ணீருள்ள நதியின் ஓட்டம் அங்கு இல்லையென்றால், நம்மால் அசையமுடியாது. ஒரு குறிப்பிட்ட முறையில் செயல்படுவது நல்லதா கெட்டதா என்று நாம் நம் சொந்த ஞானத்தின்படி நியாயந்தீர்த்தால், நாம் ஜீவவிருட்சத்தை நடாமல், நன்மை தீமையுடைய அறிவு விருட்சத்தை நடுகிறோம். ஆனால், நாம் நமக்குள் இருக்கும் ஜீவனுடைய அசைதலின்படி செயல்பட்டால், அதன் விளைவாக ஜீவத்தண்ணீர் மற்றவர்களுக்குப் பாய்ந்தோடும். இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. தேவனுடைய வேலைக் கெல்லாம் ஜீவவிருட்சமே ஆதாரம், அதன் விளைவாக ஜீவத் தண்ணீருள்ள நதி பாய்ந்தோடுகிறது.

## சதாகாலங்களிலும்

"இனி ஒரு சாபமுமிராது," என்று 3-ஆம் வசனம் கூறு கிறது. ஆதியாகமம் 3-ஆம் அதிகாரம் முற்றிலும் ஒழிந்துபோகும் என்பதற்காகவும், இனிமேல் ஒரு சாபமும் இருக்காது என்பதற்காக வும் தேவனுக்கு நன்றி கூறுங்கள். ஆதியாகமம் 3-ல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள எல்லாவற்றையும் சாபம் என்ற ஒரே வார்த்தையில் சுருக்கமாகக் கூறிவிடலாம். மரணம்கூட ஒருவகையான சாபமே. ஆயினும், புதிய வானத் திலும் புதிய பூமியிலும் இனி சாபம் இருக்காது, மரணமும் இருக்காது. பாவத்தின் வரலாறெல்லாம் முடிந்துபோகும்; மனிதன் தேவனை நன்றாக மகிமைப்படுத்துவான்.

"தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதில் இருக்கும்," என்று 3-ஆம் வசனம் தொடர்ந்து கூறுகிறது. இங்கு சூழ்நிலை ஆதியாகமம் 3-ல் இருந்தது போல் இல்லை; அங்கு தேவன் பகலில் குளிர்ச்சியான வேளையில் தோட்டத்தில் உலாவிவந்தார். இங்கு தேவன் ஆளுகைசெய்துகொண்டிருக்கிறார்; இங்கு அவருடைய சிங்காசனம் நிறுவப்பட்டிருக்கிறது. இங்கு தோட்டம் நகரமாக, தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற இடமாக, மாறிவிட்டது. "அவருடைய ஊழியக்காரர்கள் அவரைச் சேவிப்பார்கள்." தேவனுடைய ஊழியக்காரர்கள் நித்தியத்தில் என்ன செய்வார்கள்? அவர்கள் அவரைச் சேவிப்பார்கள். நித்தியத்தில் செய்வதற்கு ஒன்றுமே இருக்காது என்று நாம் ஒருபோதும் நினைக்கக்கூடாது. இல்லை, நாம் என்றென்றைக்கும் அவருடைய ஊழியக்காரர்களாக இருந்து, அவரைச் சேவித்துக் கொண்டிருப்போம்.

"அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவரு டைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய

நெற்றிகளில் இருக்கும்," என்று 4-ஆம் வசனம் கூறுகிறது. கர்த்தருக்காக நாம் செய்யும் வேலையெல்லாம் ஐக்கியத்தின் மூலமாகவே செய்யப்படவேண்டும். கர்த்தருக்குச்செய்யும் மெய்யான சேவை ஐக்கியத்தில் இருக்கிறது. சேவித்தல் மட்டும் போதாது; அங்கு ஐக்கியம் இருக்கவேண்டும். அவர்கள் அவரை சேவிப்பார்கள், அவர்கள் அவருடைய முகத்தைத் தரிசிப்பார்கள். ஆ, தேவனைக் காண்பதற்குமுன்பே எத்தனை தடவை நாம் அவருடைய வேலையை ஏற்கெனவே செய்துமுடித்துவிட்டோம். ஆனால், தேவனைக் கண்டபிறகு மட்டுமே நம்மால் அவருடைய வேலையைச் செய்யமுடியும் என்று நான் சொல்லித்தான் ஆகவேண்டும். நாம் வேலைசெய்துகொண்டு, பின் அதற்காகத் தொடர்ந்து வருத்தப்பட்டுக்கொண்டிருக்கக்கூடாது—இது ஐக்கியம் இல்லை. ஐக்கியத்தில் இல்லாத எந்தவிதமான சேவையிலிருந்தும் தேவன் நம்மை விடுவிப்பாராக. ஒரு வேலையைச் செய்துமுடித்த பிறகு, அதைக்குறித்து ஐக்கியம் கொள்ளமுடியாவிட்டால், அந்த வேலையைச் செய்வதிலிருந்து தேவன் நம்மை இரட்சிப்பாராக. ஒரு வேலையைச்செய்து முடித்தபிறகு நாம் பெருமைப்படக்கூடாது, சுய-திருப்தியடையக்கூடாது அல்லது தன்னிறைவு அடையக்கூடாது. ஐக்கியத்தில் இருந்து வெளிவராத, ஐக்கியத்தில் இல்லாத எல்லா வகையான சேவையிலிருந்தும் தேவன் நம்மை இரட்சிப்பாராக, நம்மை விடுவிப்பாராக. வேலையைச்செய்து முடித்தபிறகும், அவர் நம்மை ஐக்கியத்தில் நிலைத்திருக்கச் செய்வாராக. தேவனுடைய ஊழியக்காரர்கள் அவருடன் ஐக்கியம் மட்டும் கொள்ளமாட்டார்கள்; "அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்." இதுவே அவர்களுடைய சாட்சி; இதைத்தான் அவர்களை நோக்கிப் பார்க்கிறவர்கள் காண்பார்கள். இந்த மக்கள் தேவனுடைய மக்கள் என்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.

"அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார்," என்று 5-ஆம் வசனம் கூறுகிறது. இந்த நகரத்தில் இரவு முடிந்துவிட்டது. விளக்கு மனிதன் கண்டுபிடித்த வெளிச்சம்; சூரியன் இயற்கையான வெளிச்சம். மனிதனுடைய எல்லா வேலைகளுக்கும், இயற்கையான எல்லா வழிமுறைகளுக்கும் இனிமேல் எந்தப் பயனும் இல்லை; ஏனென்றால், எல்லாம் காணத்தக்கதாக இருக்கும். இன்று நாம் குழப்பமடைந்திருக்கக்கூடும், எனவே தெளிவாகப் பார்க்கக்கூடாமல் இருக்கக்கூடும். நாம் சில சேவைகளைச் செய்துமுடித்தபிறகும்கூட, நாம் எங்கிருக்கிறோம் என்று நமக்குத் தெரியாமல் இருக்கக்கூடும்; ஆனால், அந்த நாளில் அது அப்படி

இருக்காது.

5-ஆம் வசனத்தின் கடைசிப் பகுதி மிக முக்கியமானது. "அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்." இதுவே படைப்பில் தேவனுடைய குறிக்கோள். மனிதன் ஆளுகை செய்யவேண்டும் என்பதே ஆதியாகமத்தில் தேவனுடைய குறிக்கோள்; இப்போது அவன் இந்தக் குறிக்கோளை அடைந்துவிட்டான்—மனிதன் ஆண்டுகொண்டிருக்கிறான். இது ஆயிர வருட அரசாட்சியில் நடக்கும் ஏதோவொன்றல்ல. வேதாகமத்தின் இந்தப் பத்தி, திருவெளிப்பாடு 21, 22, ஆயிரவருட அரசாட்சியைப்பற்றிய விவரம் இல்லை; அது நித்தியத்தைப்பற்றிய விவரம். அவர்கள் நித்தியத்திற்கும் ஆளுகைசெய்வார்கள், அவர்கள் சதாகாலங்களிலும் ஆளுகை செய்வார்கள். தேவனுடைய ஆதி நோக்கம் நிறைவேறிவிட்டது.

மனிதன் பூமியின்மேல் ஆளுகைசெய்து, சாத்தானை அழிக்கவேண்டும் என்று தேவன் விரும்பினார். இப்போது மனிதன் ஆளுகைசெய்துகொண்டிருக்கிறான். சாத்தான் அக்கினிக் கடலுக்குள் தள்ளப்பட்டாயிற்று. தேவன் மனிதனைப் படைத்த நோக்கம் நிறைவேறிவிட்டது. ஒரு பக்கம், மனிதன் தம்மைப்போல் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்பினார். மறு பக்கம், மனிதன் ஆளுகைசெய்யவேண்டும் என்பதே தேவன் அவனுக்கு நியமித்திருந்த வேலையாகும். இப்போது நாம் பொன்மயமான, மகிமையான, அழகான, எல்லா விதமான பொக்கிஷங்களையும் தன்னுள்கொண்ட ஒரு மணவாட்டியைப் பார்க்கிறோம். அவளில் குறை ஒன்றும் இல்லை; அவள் கறைதிரை அற்றவள்; அவளிடம் இப்பேர்ப்பட்ட பழுது ஒன்றும் இல்லை. மேலும் அவள் பரிசுத்த மாகவும், பிழையற்றவளாகவும் இருக்கிறாள். அவள் மெய்யாகவே மகிமையால் தரிப்பிக்கப்பட்டிருக்கிறாள். எபேசியர் 5-ல் பேசப்பட்டுள்ள சபை இந்த வகையில் நிறைவேறுகிறது. சபையில் இருப்பவர்கள் எந்த வகையான வேலைசெய்வார்கள்? அவர்கள் சதாகாலங்களிலும் ஆளுகைசெய்வார்கள்.

தேவனுடைய திட்டத்திற்குத் தடை ஏற்படக்கூடும் என்று நாம் கூறலாம்; ஆனால் அவருடைய திட்டத்தை ஒருபோதும் தடுக்கமுடியாது. படைப்பிலிருந்து தேவனுடைய வேலையில் அநேகத் தடைகள் வந்திருக்கின்றன. உண்மையில், அவ ருடைய வேலை அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதுபோலவும், அவருடைய திட்டம் ஒருபோதும் நிறைவேறாததுபோலவும் தோன்றியது. ஆனால், திருவெளிப்பாட்டில், தேவன் தம் இலக்கை அடைந்து விட்டார். சுத்தப் பொன்னால் நிறைந்த ஒரு கூட்டம் மக்கள் இருக்கிறார்கள்; பொன் தேவனுக்குரியது. அவர்கள் முத்தால் நிறைந்திருக்கிறார்கள்; முத்து கிறிஸ்துவின் வேலை. அவர்கள்

விலையேறப்பெற்ற கற்களால் நிறைந் திருக்கிறார்கள்; இது பரிசுத்த ஆவியின் வேலை. அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.

இப்போது நாம் தேவனுடைய குறிக்கோளையும், அவர் எப்படி வேலைசெய்துகொண்டிருக்கிறார் என்றும் பார்த்திருப்பதால், நாம் என்ன செய்யவேண்டும்? நாம் எழுப்புதல் கூட்டம் நடத்த வேண்டுமா? நாம் ஒரு குருமடத்தைத் திறக்கவேண்டுமா? அல்லது வழக்கம்போல நாம் நம் வீட்டுவேலைக்குத் திரும்பச் சென்றுவிடவேண்டுமா? நாம் இங்கு என்ன செய்துகொண்டிருக் கிறோம்? தேவன் ஒரு பெரிய காரியத்தைச் செய்துகொண்டிருக் கிறார். நாம் நம் வேலையை அவருடைய வேலையோடு ஒப்பிடும்போது, நாம் எவ்வளவு குறைவுள்ளவர்கள் என்று உணர்கிறோம்! நாம் இப்பேர்ப்பட்ட தரிசனத்தைப் பார்த்திருப் பதால், நாம் முழு விலைக்கிரயத்தையும் செலுத்துவதற்குத் தேவன்தாமே நமக்குக் கிருபை அருள்வாராக! ஒரு மனிதன் ஒருமுறை ஒரு தரிசனத்தைப் பார்த்துவிட்டால், அவன் மாறி விடுவான். தேவன் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதையும், அவர் எதைத் தேடிக்கொண்டிருக்கிறார் என்பதையும்பற்றிய தரிசனத்தை அவர் நமக்கு அருள்வாராக! அவர் எப்படிப்பட்ட மக்களை அடையவிரும்புகிறார் என்பதையும், அவருடைய இருதயம் எதன்மேல் இருக்கிறதோ அது எவ்வளவு விலையேறப் பெற்றது என்பதையும் அவர் நமக்குக் காண்பிப்பாராக! நாம் இந்தக் காரியங்களைப் பார்த்தால், உரத்த சத்தமிட்டு, "ஆ, நான் எவ்வளவு சிறியவன்! நான் எவ்வளவு அதிகக் கவனத்தை எனக்குச் செலுத்தியிருக்கிறேன்," என்று கூறுவோம். மேலும், "தேவன் என்னில் வேலைசெய்யாவிட்டால், என்னால் ஒருபோதும் அவருடைய வேலையைச் செய்யமுடியாது. தேவன் தம் பலத்த வல்லமையோடு என்னில் அசையும்போது மட்டுமே, நான் தொடர்ந்துசெல்லமுடியும்," என்றும் கூறுவேன். இந்த மாபெரும் தரிசனம் நம்மை வீழ்த்தவேண்டும். இன்றைய நம் நிலைமையால் தேவனுடைய இருதயத்தை ஒருபோதும் திருப்திப்படுத்தமுடியாது என்று அது நம்மைக் காணச்செய்யவேண்டும். தேவன் இந்தத் தரிசனத்தை நமக்குத் தருவார் என்பதே நம் நம்பிக்கை. ஒருமுறை நாம் இதைப் பார்த்துவிட்டால், நம் முழு ஆள்தத்துவத்தையும் நாம் இதற்குக் கொடுத்துவிடுவோம்; நம் ஒவ்வொரு பகுதியும் மாறிவிடும். இன்று நாம் இந்த இரண்டு காரியங்களுக்கிடையே நின்று கொண்டிருக்கிறோம்—ஒன்று ஜெயங்கொள்பவனாக இருப்பது அல்லது ஒரு தோல்வியாக இருப்பது. ஜெபத்தில் அஜாக்கிர தையாக இருப்பதை நம்மில் யார்தான் சகித்துக்கொள்ள முடியும்? நாம் ஜெபிப்பதை அசட்டைபண்ணினால், நாம்

ஒருபோதும் தேவனுடைய ஜெயங்கொள்பவனாக இருக்க மாட்டோம்.

இதுமுதற்கொண்டும், சதாகாலங்களிலும் நாம் அவருக்குச் சொந்தமாக இருக்குமாறும், சதாகாலங்களிலும் நம்மை அவருக்கு அர்ப்பணம் செய்யுமாறும், சதாகாலங்களிலும் அவரைச் சேவிக்குமாறும், சதாகாலங்களிலும் அவருடைய வழியில் நடக்குமாறும் மரித்தோரிலிருந்து எழுந்தவரும், ஆடுகளின் அந்தப் பெரிய மேய்ப்பருமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துதாமே தம் பலத்த வல்லமையால் நம்மைத் தாங்கி, வழிநடத்துவாராக. கர்த்தர்தாமே இப்போதும், நித்தியத்திற்கும் நமக்குக் கிருபை அருள்வாராக. ஆமென்.

## பிற்சேர்க்கை

# ஜெயங்கொள்பவர்களும், தேவனுடைய காலகட்ட அசைவுகளும்

வேத வாசிப்பு: வெளி. 12

வேதாகமத்தின்படி, பெண்ணின் வித்து எதிரியின் தலையை நசுக்கும். ஆதியாகமம் 3-ல் பெண்ணின் வித்து முதன்மையாகக் கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது. ஆனால், ஜெயங்கொள்பவர்களுக்கும் இந்த வித்தில் ஒரு பங்கு உண்டு. பெண்ணின் வித்தில் சபை அடங்கும், விசேஷமாக ஜெயங்கொள்பவர்கள் அடங்குவர். கர்த்தர் சாத்தானின் தலையை நசுக்கினாலுங்கூட, அவர் இன்னும் வேலைசெய்துகொண்டிருக்கிறார். பெண்ணின் வித்து சாத்தானை நசுக்குவது நிறைவேறுவதை திருவெளிப்பாடு 12-ல் ஆண்பிள்ளையில் பார்க்கமுடியும். ஒரே ஜெயங்கொள்பவரில் எல்லா ஜெயங்கொள்பவர்களும் அடங்குவர் (வசனம் 10-11).

## தேவனுடைய காலகட்ட அசைவு—"இப்போது" (வசனம் 10)

ஒரு குறிப்பிட்ட காரியத்தில் தேவன் தம் மனப்பாங்கை மாற்றும்போது, அவர் ஒரு காலகட்ட அசைவை ஏற்படுத்துகிறார். ஒவ்வொரு காலகட்ட அசைவும் தேவனுடைய புதிய வழியைக் கொண்டுவருகிறது. அவருடைய மிகமுக்கியமான காலகட்ட அசைவு திருவெளிப்பாடு 12-ல் இருக்கிறது. அவர் இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, இராஜ்ஜியத்தின் யுகத்தைக் கொண்டுவர விரும்புகிறார். அவருடைய குறிக்கோள் பொதுவானதும், சாதாரணமானதும் இல்லை. அவரால் எப்படி இந்த யுகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து, இன்னொரு யுகத்தைக் கொண்டுவரமுடியும்? அவரிடம் அவருடைய காலகட்ட கருவி இருக்கவேண்டும். இதைத்தான் இன்று தேவன் செய்ய விரும்புகிறார்.

## ஆண்பிள்ளையின் தேவை

ஆண்பிள்ளை எடுத்துக்கொள்ளப்படுதல் சபையின் யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, இராஜ்ஜியத்தின் யுகத்தை அறிமுகம்செய்கிறது. ஆண்பிள்ளை தேவன் அசைவதை சாத்தியமாக்குகிறது. ஓர் ஆண்பிள்ளையும், எடுத்துக்கொள்ளப் படுதலும் இல்லையென்றால், தேவனால் ஒரு காலகட்ட அசைவைச்

செய்யமுடியாது. தேவன் மட்டுப்படுத்தப்பட முடியும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அவர் தம் எல்லா அசைவுகளிலும் மனிதனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். தேவன் பரலோகத்தில் கட்டுதல் நாம் பூமியில் கட்டுவதைச் சார்ந்திருக்கிறது. தேவன் பரலோகத்தில் கட்டவிழ்ப்பது நாம் பூமியில் கட்டவிழ்ப்பதைச் சார்ந் திருக்கிறது. எல்லாம் சபையைச் சார்ந்திருக்கிறது.

படைக்கப்பட்டவைகள் வீழ்ந்துபோன படைக்கப்பட்டவைகளோடு இடைப்படவேண்டும் என்பதே தேவனுடைய ஆசை. அவருடைய குறிக்கோளின்படி, முழுச் சபையும் சாத்தானோடு இடைப்படவேண்டும்; ஆயினும், சபை தோற்றுப்போய்விட்டது. ஆகையால், ஜெயங்கொள்பவர்கள் எழ வேண்டிய தேவை இருக்கிறது. தேவனுடைய குறிக்கோள் ஜெயங்கொள்பவர்களில் நிறைவேறுகிறது; ஏனென்றால், அவர்கள் அவரோடு சேர்ந்து வேலைசெய்கிறார்கள். தேவனுடைய வார்த்தை முழுவதும் ஜெயங்கொள்பவர்களின் கோட்பாட்டை நம்மால் காணமுடியும். ஒரு காலகட்ட அசைவை ஏற்படுத்த தேவன் எப்போதும் ஒரு கூட்டம் ஜெயங்கொள்பவர்களைப் பற்றிப்பிடித்துக்கொள்கிறார்.

## தேவனுடைய வார்த்தையில் காலகட்ட அசைவுகள்

படைப்புக்குப்பின், வாழ்க்கை மிகவும் சாதாரணமான முறையில் சென்றது. பின்பு தேவன் ஆபிரகாமில் ஆரம்பித்தார். தேவன் ஆபிரகாமையும், சாராளையும் பிடித்துக்கொண்டார். அவர் ஒரு தேசத்தை விரும்பினார். ஆனால், அவர் வெறும் இரண்டு நபர்களோடு ஆரம்பித்தார். ஆசாரியர்களின் இராஜ்ஜியத்தை உருவாக்க அவர்களை மற்ற எல்லாத்தேசங்களிலிருந்து தெரிந்தெடுத்து, இந்த இரண்டுபேர்களின் மேல் அவர் வேலைசெய்தார். ஆபிரகாம் தன் இனத்தையும், தேசத்தையும் விட்டான். தேவன் தெரிந்தெடுத்ததால் ஆபிரகாம் ஆபேலையும், ஏனோக்கையும், நோவாவையும்விடப் பெரியவனாயிருந்தான். இந்த முற்பட்ட மனிதர்கள் மிகவும் சாதாரணமானவர்கள்போல் தோன்றினார்கள். அவர்களால் தேவனுக்கு எந்தக் காலகட்ட மதிப்பும் இல்லை; ஆனால், ஆபிரகாமுக்குக் காலகட்ட மதிப்பு இருந்தது. ஆபிரகாமுடைய சந்ததி எகிப்துக்குச் சென்று, அங்கு நானூறு வருடங்கள் தங்கியிருப்பார்கள் என்று பின்பு தேவன் கூறினார். இது தேவனுடைய அடுத்த அசைவு.

தேவன் யோசேப்பின் சகோதரர்களை அல்ல, மாறாக யோசேப்பைப் பிடித்துக்கொண்டு, அவனை எகிப்துக்குக் கொண்டுசென்றார். யோசேப்பு எகிப்தில் ஆளுகைசெய்தான். தேவனுடைய செயல்கள் நன்மைக்கேதுவாக இருந்தன. யோசேப்பு எகிப்தில் ஒரு ஜெயங்கொள்பவனாக இருந்தான். அவன்

இராஜ்ஜியத்தில் தன் வல்லமையைக் காண்பித்தான், தேவனைப்பற்றிய தன் அறிவைக் கனவுகளின்மூலம் காண்பித்தான். தேவன் ஒரு காலகட்ட அசைவை ஏற்படுத்தியிருந்தார். அவர் ஒரு ஜெயங்கொள்பவனை எகிப்தில் வைத்தார்; அவர் தோற்கடிக்கப்படக்கூடிய ஒருவனை அங்கு வைக்கவில்லை. இது தேவனுடைய வேலையின் ஒரு கோட்பாடு.

நானூறு வருடங்களுக்குப்பிறகு, அவர்கள் வெளியே வருவதற்கான நேரம் வந்தது. அந்த நேரத்தில் அவர் மோசேயைப் பிடித்துக்கொண்டார். யாத்திராகமத்தின் முதல் சில அதிகாரங்களில் உள்ள சம்பவங்கள் இல்லாமல், எகிப்திலிருந்து வெளியே புறப்பட்டுச்செல்லுதல் ஒருபோதும் இருந்திருக்கமுடியாது. மோசே தண்ணீரைவிட்டு வெளியே வந்தான். அவன் தண்ணீரிலிருந்து புறப்பட்டுவந்தான். பின்பு அவன் எகிப்தைவிட்டுப் புறப்பட்டு வந்தான். மோசே மரணத்தின்மேல் வெற்றிகொண்டான். இஸ்ரயேலரோடு இடைப்பட தேவன் அவனைத் தெரிந்துகொண்டார். மோசே எகிப்துக்கெல்லாம் எகிப்தாகிய அரண்மனையில் குடியிருந்தான். அவனுடைய ஆவி மட்டும் எகிப்தைவிட்டுச் செல்லவில்லை; அவனுடைய சரீரமும் எகிப்தைவிட்டுச்சென்றது; ஆகையால், தேவன் அவனைத் தெரிந்துகொண்டார். "போ" என்று மட்டும் சொல்லமுடிந்து, "வா" என்று சொல்லமுடியாவிட்டால், அவனால் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தமுடியாது. தேவனுடைய எல்லாக் காலகட்ட அசைவுகளுக்கும் ஒரு மனிதனே ஆதாரம். இது ஜெயங்கொள்பவர்களின் ஒரு கோட்பாடு.

இஸ்ரவேல் தேசம் ஓர் இராஜா வேண்டும் என்று சொன்னபோது, மக்கள் சவுலைத் தெரிந்தெடுத்தார்கள். அவன் மற்ற எல்லா மனிதர்களுக்கும் மேலே ஒரு தலை உயரமாக இருந்தான். ஆனால், அவனுடைய திறமைகளெல்லாம் அவனுடைய தலையில் இருந்தன. ஆயினும், தேவன் தன் சொந்த இராஜாவாகத் தாவீதைத் தெரிந்தெடுத்தார். அவன் தன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு வனாந்தரத்தில் இருந்தபோதுகூட இராஜாதான். அவன் சிங்கம் வந்தபோது ஓடிப்போய்விடாமல், கர்த்தருடைய நாமத்தில் அதற்கெதிராகச் சென்றான். பயம் ஓர் இராஜரீக மனப்பாங்கு இல்லை. ஆனால், கோலியாத் வந்தபோது சவுல் பயந்தான். இதற்கு மாறாக, தாவீது கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கோலியாத்துக்கு எதிராக யுத்தம்செய்யச் சென்றான். யாரெல்லாம் உண்மையாக இராஜாவாக இருக்கிறார்களோ, அவர்கள் எந்த இடத்திலும் இராஜாவாக இருக்கமுடியும். பின்பு, தாவீது சவுலின் ஒரு வேலைக்காரனாக மாறினான். சவுல் அவனுடைய எதிரியாக மாறியபோது, அவனைக் கொலைசெய்வதற்குங்கூட தாவீதுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால், அவன் கொல்லவில்லை, யாரால்

தன்னைக் கட்டுப்படுத்த முடியாதோ, அவன் இராஜாவாக இருக்கத் தகுதியானவன் இல்லை. இஸ்ரவேலில் எந்த இராஜாவும் தாவீதைவிடப் பெரியவன் இல்லை. அவன் மட்டுமே இராஜாவாகிய தாவீது என்றழைக்கப்பட்டான். ஏனென்றால், அவன் தேவனுக்குக் காலகட்ட மதிப்புடையவன்.

இஸ்ரவேலர்கள் எழுபது வருடங்கள் அடிமைத்தனத்துக்குள் கொண்டுசெல்லப்பட்டபோது, நெகேமியாவினிமித்தம் தேவன் இஸ்ரவேலர்களுக்காக இன்னும் ஒரு காலகட்ட அசைவை ஏற்படுத்தினார்; அவன் உண்மையான ஒரு ஜெயங்கொள் பவன். அவன் ஓர் அந்நிய இராஜாவை சேவித்துக்கொண்டிருக் கையிலுங்கூட, அவன் எருசலேமுக்குத் திரும்பிப்போக ஆயத்தம்பண்ணிக்கொண்டிருந்தான். சூசானாலும், அரண் மனையின் விவகாரங்களாலும் அவன் தொடப்படவில்லை. தேவன் நெகேமியாவை ஆதாயம்பண்ணியதால், அவரால் ஒரு காலகட்ட அசைவை ஏற்படுத்தமுடிந்தது.

புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்தில், ஒரு கூட்டம் விசேஷ மான மக்கள் கர்த்தராகிய இயேசுவுக்காக எருசலேமில் காத்துக் கொண்டிருந்தார்கள். அன்னாள், சிமியோன், இன்னும் அநேகர் (லூக். 2:38) இஸ்ரவேலில் மீட்புக்காகக் காத்துக் கொண்டிருந் தார்கள். அவர்களுடைய காத்திருத்தல் காலத்தின் நிறைவில் கர்த்தராகிய இயேசுவைக் கொண்டுவந்தது. தேவன் காரியங்களைத் தானாகவே செய்யமாட்டார்; தம் பிள்ளைகள் தம்மோடு சேர்ந்து உழைக்கவேண்டும் என்று அவர் காத்திருப்பார்.

கர்த்தருக்குப் பூமியில் இரண்டு வேலைகள் இருக்கின்றன: மீட்பும், சபையைக் கட்டியெழுப்புதலும். சபை "இந்தப் பாறையின்"மேல் கட்டப்படுகிறது (மத். 16:18). அப்போஸ் தலர்களே இந்தப் பாறையின்மேல் முதலாவது நின்றவர்கள். அவர்கள் மாம்சத்தில் பலவீனமாக இருந்தபோதுங்கூட, அவர்களுடைய ஆவிகள் பலவீனமாக இருக்கவில்லை. இதனால், பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கும் ஒரு விசேஷமான அந்தஸ்து இருக்கிறது—பவுல்கூட இவர்களோடு சேர்த்துக்கொள்ளப்பட வில்லை; அவர்கள் ஒரு காலகட்ட கருவி. மிகச்சிறிய அப்போஸ்தலனைப் பார்க்கிலும் தான் சிறியவன் என்று பவுல் கூறினார். அப்போஸ்தலர்களும், சீடர்களும் எருசலேமில் ஜெபித்துக் கொண்டு பத்து நாட்களாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். "இந்த நாட்களுக்குப்பின் நாம் மிகப்பெரிய வேலைசெய்ய வேண்டி யிருக்கிறது. இப்போது நாம் இளைப்பாறவேண்டும்," என்று அவர்கள் சொல்லியிருக்கக்கூடும். பதிலாக, அவர்கள் ஜெபித்தார்கள். அங்கு நூற்றிருபதுபேர் இருந்தார்கள்; ஆனால், கர்த்தரைப் பின்பற்றிய மற்றவர்கள் எங்கே? நிச்சயமாக, எல்லோரும்

தேவனோடு சேர்ந்து உழைக்கமாட்டார்கள். இந்த நூற்றிருபது பேர் ஜெயங்கொள்பவர்கள்.

## சபை வரலாற்றில் காலகட்ட அசைவுகள்

சபை வரலாற்றில் *சீர்திருத்தமே* விசேஷமான முதல் அசைவு. இந்தக் காலகட்ட அசைவில் தேவன் *லூத்தரைப்* பயன்படுத்தினார். *சகோதரர்களும்* பயன்படுத்தப்பட்டார்கள். டார்பி, குரோவ்ஸ், கிரேண்ட் ஆகியவர்கள் அவருடைய கருவிகள். வெல்ஸ் எழுப்புதலுக்குப்பின், தேவனுடைய ஒரு புதிய அசைவு ஆரம்பித்தது. ஈவான் ராபர்ட்டும், திருமதி பென்-லூயிசும் ஆவிக்குரிய யுத்தத்தைப்பற்றி அறிந்திருந் தார்கள்; சாத்தானோடு இடைப்படுவது எப்படி என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். இராஜ்ஜியத்தைப்பற்றிய சத்தியம் 1924-ல் தெரிய ஆரம்பித்தது. பத்து வருடங்கள் கழித்து ஈவான் ராபர்ட் காணப்பட்டபோது, "நான் இராஜ்ஜியத்தின் ஜெபங்களை ஜெபித்துக்கொண்டிருக் கிறேன்," என்று அவர் கூறினார். ஒவ்வொரு முறையும் தேவன் ஒரு காலகட்ட அசைவை ஏற்படுத்த விரும்பும்போது, அவர் தம் கருவியை ஆதாயம்பண்ணியாக வேண்டும்.

நாம் யுகத்தின் முடிவில் இருக்கிறோமா? அப்படியானால், இராஜ்ஜியம் சீக்கிரம் ஆரம்பிக்கும். ஒரு காலகட்ட அசைவு சமீபமாக இருந்தால், தேவனுக்கு ஒரு கருவி தேவை. பொதுவான வேலை இனிமேல் போதாது. தேவனுடைய பிள்ளைகளிடம் தரிசனம் இல்லை; அவர்கள் சூழ்நிலையின் முக்கியத்துவத்தையும், அதிதீவிரத்தையும் பார்க்கவில்லை. *இப்போது* காலகட்டத்தின் விஷயம். வெறுமனே கர்த்தருடைய ஒரு நல்ல வேலைக்காரனாக இருப்பது இனிமேல் போதாது; இதனால் தேவனுக்குப் பெரிய பயன் இல்லை. அதனால் எந்தப் பயனும் இல்லை என்று நாங்கள் கூறவில்லை என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். இந்த காலகட்டத்தை முடிவுக்குக்கொண்டுவர நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? அடுத்த யுகத்தைக் கொண்டுவர நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? இது ஒரு விசேஷமான நேரம்; எனவே, ஒரு விசேஷமான வேலைசெய்ய விசேஷமான கிறிஸ்தவர்கள் தேவைப்படுகிறார்கள்.

இன்று தேவன் ஆண்பிள்ளைக்காகக் காத்துக்கொண்டிருக் கிறார். எடுத்துக்கொள்ளப்படுதல் மட்டுமே திருவெளிப்பாடு 12:10-லுள்ள சம்பவங்களை அவசரப்படுத்தமுடியும். தேவ னிடம் ஓர் ஒழுங்கு இருக்கிறது. அவர் அந்த ஒழுங்கின்படி தான் வேலைசெய்கிறார். அவருடைய கண்கள் சபையை விட்டுச் சென்றுவிட்டன; அவை இப்போது இராஜ்ஜியத்தின்மேல் இருக்கின்றன. ஒரு ஜெயங்கொள்பவன் சரீரத்தின்

கோட்பாட்டின்படி வேலைசெய்கிறான். சரீரத்தின் கோட்பாடு மதஉட்கட்சிமனப்பான்மையையும், தனித்துவத்தையும் இல்லாமல் ஆக்கிவிடுகிறது.

எடுத்துக்கொள்ளப்பட்டபிறகு, பெண் மூன்றரை ஆண்டுகள் சித்திரவதைசெய்யப்படுவாள். அவளுடைய பிள்ளைகளில் வேறு அநேகர் சித்திரவதையினூடாய்க் கடந்துசெல்வார்கள்; ஆனால், தேவன் அவர்களைக் காத்துக் கொள்வார். ஜெயங்கொள்பவனாக இருப்பது பிரதானமான உபத்திரவத்திற்குத் தப்பித்துக்கொள்வ தற்காக இல்லை. எடுத்துக்கொள்ளப்படுதல் நமக்கல்ல, கர்த்தருக்கு எவ்வளவு மதிப்புடையது என்பதை நாம் பார்க்கவேண்டும்.

எல்லாக் காலகட்ட அசைவுகளிலும், ஆண்பிள்ளையே மிகப் பெரியது; ஏனென்றால், அது மனிதனுடைய வல்லமை யையும், பிசாசின் வல்லமையையும் அகற்றிவிட்டு, இராஜ்ஜி யத்தைக் கொண்டுவருகிறது. நாம் மிகவும் சிலாக்கியமான நேரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்; நம்மால் தேவனுக்கு மிக அதிகமாகச் செய்யமுடியும். *ஒளி நமக்கு வழியைக் காட்டும்; ஆனால் பலமும், வல்லமையும் சாலையில் நடக்க நம்மைப் பலப்படுத்தும். இப்போது பயன்படுத்தப்பட மிகப் பெரிய விலைக்கிரயம் செலுத்தப்பட வேண்டும்.*

## கர்த்தருடைய இரண்டு வேலையாட்களைப்பற்றி

வாச்மென் நீ அவர்களும், அவருடைய உடன் வேலையாளாகிய விட்னெஸ் லீ அவர்களும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு செய்த ஊழியம், எண்பது வருடங்களுக்கும்மேலாக பூமியில் எல்லா கண்டங்களிலும் உள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருந்திருக்கிறது என்பதற்காக நாங்கள் கர்த்தருக்கு நன்றிசெலுத்துகிறோம். அவர்கள் எழுதியவைகள் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எங்களுடைய வாசகர்கள் வாச்மென் நீயைப்பற்றியும், விட்னெஸ் லீயைப்பற்றியும் பல கேள்விகளை எங்களிடம் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கான பதிலாக இந்த இரண்டு சகோதரர்களின் வாழ்க்கையையும் வேலையையும் பற்றிய இந்தச் சுருக்கமான குறிப்பை நாங்கள் வழங்குகிறோம்.

### வாச்மென் நீ

வாச்மென் நீ பதினேழாவது வயதில் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்டார். உலகமெங்கும் உள்ள தேடும் இருதயமுள்ள விசுவாசிகளிடையே அவருடைய ஊழியம் நன்கு அறியப்பட்ட ஒன்று. ஆவிக்குரிய வாழ்க்கையைப்பற்றியும், கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் உள்ள உறவைப்பற்றியும் அவர் எழுதியவைகளிலிருந்து அநேகர் உதவிபெற்றிருக்கிறார்கள். இருந்தாலும், சபை வாழ்க்கையை நடைமுறைப்படுத்துதல், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவைகளை வலியுறுத்தின அவருடைய ஊழியத்தின் சம அளவுக்கு முக்கியமான இன்னோர் அம்சத்தைப் பற்றி அநேகருக்குத் தெரியாது. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றியும் சபை வாழ்க்கையைப்பற்றியும் சகோதரர் நீ பல புத்தகங்களை எழுதியுள்ளார். வாச்மென் நீ தனது வாழ்க்கையின் முடிவுவரை, தேவனுடைய வார்த்தையில் உள்ள வெளிப்பாட்டைத் திரைநீக்கிக் காண்பிப்பதற்காக கர்த்தரால் கொடுக்கப்பட்ட கொடையாக இருந்தார். சீனாவில் இருபது வருடங்கள் சிறையில் கர்த்தருக்காக பாடுபட்டபின்பு, இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள சாட்சியாக 1972-ல் அவர் இறந்தார்.

### விட்னெஸ் லீ

விட்னெஸ் லீ அவர்கள், வாச்மென் நீயின் மிக நெருக்கமான, மிக நம்பகமான உடன் வேலையாளாக இருந்தார். 1925-ல் பத்தொன்பது வயதில், அவர் சக்திவாய்ந்த ஆவிக்குரிய

மறுபிறப்பை அனுபவித்தார், மேலும் ஜீவனுள்ள தேவனை சேவிக்கும்படி தன்னை அவருக்கு அர்ப்பணித்தார். அந்த நேரத்திலிருந்து அவர் தீவிரமாய் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப ஏழு வருடங்களில் ப்ளைமவுத் பிரதரனால் பெருமளவு ஆட்கொள்ளப்பட்டார். அதன்பின் அவர் வாச்மென் நீயை சந்தித்தார், அடுத்த 17 வருடங்களுக்கு 1949வரை அவர் சீனாவில் சகோதரர் நீயின் உடன் வேலையாளாக இருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது, சீனா ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அவர் ஜப்பானியர்களால் சிறையில் அடைக்கப்பட்டு, கர்த்தருக்கு செய்த தன் உண்மையுள்ள சேவைக்காகப் பாடுபட்டார். தேவனுடைய இவ்விரண்டு வேலையாட்களின் ஊழியமும் வேலையும் சீனாவில் கிறிஸ் தவர்களிடையே மாபெரும் எழுப்புதலைக் கொண்டுவந்தது, அது நாடுமுழுவதும் சுவிசேஷம் பரவுவதையும் நூற்றுக்கணக்கான சபைகள் கட்டியெழுப்பப் படுவதையும் விளைவித்தது.

1949-ல் சீனாவில் கர்த்தரை சேவித்த தன் உடன் வேலையாட்கள் எல்லாரையும் வாச்மென் நீ ஒன்றாக அழைத்து, தாயகத்திற்கு வெளியே தைவான் என்ற தீவில் ஊழியத்தைத் தொடரும்படி விட்னெஸ் லீக்குப் பொறுப் பளித்தார். அடுத்த சில வருடங்களில், தைவானிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் காரண மாக, நூற்றுக்கும் அதிகமான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

1960-களின் ஆரம்பத்தில் விட்னெஸ் லீ அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துசெல்லும்படி கர்த்தரால் நடத்தப்பட்டார்; அங்கு கர்த்தருடைய பிள்ளைகளின் நலனுக்காக 35 வருடங் களுக்கும் மேலாக ஊழியம்செய்து, பணியாற்றினார். 1974முதல் ஜூன் 1997-ல் அவர் கர்த்தரிடம் செல்லும்வரை, கலி∴போர்னியாவில் அனஹெம் என்ற நகரத்தில் அவர் இருந்தார். அமெரிக்காவில் பல ஆண்டுகளாக செய்த அவருடைய வேலையில் 300-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அவர் வெளியிட்டார்.

விசேஷமாக, கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களைப்பற்றிய ஆழமான அறிவையும் அனுபவத்தையும் விரும்புகிற தேடும் இருதயமுள்ள கிறிஸ்தவர்களுக்கு விட்னெஸ் லீயின் ஊழியம் உதவியாக இருக்கிறது. எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய அவருடைய சரீரமான சபையைக் கட்டி யெழுப்புவதற்காக கிறிஸ்துவை அறிவது எப்படி என்பதை சகோதரர் லீயின் ஊழியம் முழு வேதத்திலுள்ள தெய்வீக வெளிப்பாட்டைத் திறந்துகாண்பித்து நமக்கு வெளிப் படுத்துகிறது. கிறிஸ்துவின் சரீரத்தைக்

கட்டியெழுப்புகிற இந்த ஊழியத்தில் எல்லா விசுவாசிகளும் பங்குபெறவேண்டும்; இதனால் சரீரம் அன்பில் தன்னைத்தானே கட்டியெழுப்ப முடியும். இந்தக் கட்டுதலை நிறைவேற்றுவது மட்டுமே கர்த்தருடைய நோக்கத்தை நிறைவாக்கி, அவருடைய இருதயத்தைத் திருப்தியாக்கமுடியும்.

இவ்விரண்டு சகோதரர்களுடைய ஊழியத்தின் பிரதான குணாதிசயம் என்னவென்றால், அவர்கள் வேதாகமத்தின் தூய்மையான வார்த்தையின்படி சத்தியத்தைப் போதித்தார்கள்.

வாச்மென் நீ மற்றும் விட்னெஸ் லீயின் பிரதானமான நம்பிக்கைகளின் சுருக்கமான விவரிப்பு பின்வருமாறு:

1. பரிசுத்த வேதாகமம் பிழையற்ற, தேவனால் சுவாசித்து ஊதப்பட்ட, பரிசுத்த ஆவியானவரால் வார்த்தை வார்த்தை யாக ஏவப்பட்ட, முழுமையான தெய்வீக வெளிப்பாடாக இருக்கிறது.

2. தேவன் ஒரேவொரு மூவொரு தேவன், அதாவது நித்தியத்திலிருந்து நித்தியம்வரை சம அளவில் உடன் இருக்கிற, பரஸ்பரமாக ஒருவருக்குள் ஒருவர் இருக்கிற பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்.

3. தேவனுடைய குமாரன், அதாவது தேவன்தாமே நம் மீட்பராகவும் இரட்சகராகவும் இருக்கும்படி கன்னியாகிய மரியாளிடமிருந்து பிறந்த, இயேசு என்ற பெயரையுடைய ஒரு மனிதனாக மனிதமாம்சமானார்.

4. உண்மையான மனிதராகிய இயேசு பிதாவாகிய தேவனை மனிதர்களுக்குத் தெரியப்படுத்தும்படி முப்பத்து மூன்றரை வருடங்கள் பூமியில் வாழ்ந்தார்.

5. தேவனுடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு தேவனால் அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்துவாகிய இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, நம் மீட்பை நிறைவேற்றுவ தற்காக தம் இரத்தத்தைச் சிந்தினார்.

6. இயேசுகிறிஸ்து மூன்று நாட்கள் அடக்கம்பண்ணப் பட்டபிறகு, மரித்தோரைவிட்டு எழுப்பப்பட்டார்; நாற்பது நாட்களுக்குப்பிறகு அவர் பரலோகத்திற்குள் ஏறிச்சென்றார், அங்கே தேவன் அவரை எல்லாருக்கும் கர்த்தராக்கினார்.

7. கிறிஸ்து பரமேறியபின்பு தம்மால் தெரிந்துகொள்ளப் பட்ட அவயவங்களை ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணும்படி தேவனுடைய ஆவியை ஊற்றினார். பாவிகளைக் கண்டித்து உணர்த்தவும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள் தெய்வீக ஜீவனை வழங்கி அவர்களை மறுபடிபிறப்பிக்கவும், கிறிஸ்துவின் விசுவாசிகள் ஜீவனில் வளர்வதற்காக அவர்களில் குடியிருக்கவும், கிறிஸ்துவின் முழு வெளிப்படுதலுக்காக அவருடைய சரீரத்தைக் கட்டியெழுப்பவும் இந்த ஆவியானவர்

இன்று பூமியில் அசைகிறார்.

8. இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்து தம் விசுவாசிகளை எடுத்துக்கொள்ளவும், உலகத்தை நியாயந்தீர்க்கவும், பூமியைச் சொந்தமாக்கிக்கொள்ளவும், தம் நித்திய இராஜ்ஜியத்தை ஏற்படுத்தவும் திரும்பிவருவார்.

9. ஜெயங்கொள்கிற பரிசுத்தவான்கள் ஆயிரவருட அரசாட்சியில் கிறிஸ்துவோடு அரசாளுவார்கள்; கிறிஸ்துவில் விசுவாசிக்கிற எல்லாரும் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் புதிய எருசலேமில் உள்ள தெய்வீக ஆசீர்வாதங்களில் நித்தியத்திற்கும் பங்குபெறுவார்கள்.

# விநியோக கொள்கை

இந்த ஏழு புத்தகங்களின் மின்னணு வடிவத்தை இலவசமாக வழங்குவதில் லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரி மகிழ்ச்சியடைகிறது. இந்தப் புத்தகங்களை அநேகர் முழுவதுமாக வாசிப்பார்கள் என்றும் அவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவார்கள் என்றும் நங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம். நல்ல ஒரு ஒழுங்கை பராமரிப்பதற்காக, இந்தக் கோப்புகளை உங்கள் சொந்த பயன்பாட்டிற்காக மட்டுமே அச்சிட்டுக்கொள்ளும்படி வேண்டிகொள்கிறோம். இந்தக் கோப்புகளை எந்த வடிவிலும், வேறெங்கும் மறுசமர்ப்பிப்பு செய்யாதீர்கள். கூடுதலாக பிரதிகளை நீங்கள் நகலெடுக்க விரும்பினால் copyrights@lsm.org ல், ஒரு எழுதப்பட்ட விண்ணப்பத்துடன் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நடைமுறை சட்டத்திற்கேற்ப காப்புரிமை சம்பந்தமான அறிவிப்புகள் யாவும் மதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் கேட்டுகொள்கிறோம். இந்த பிடிஎப் கோப்புகள் எந்த வகையிலும் வேறெந்த பயன்பாட்டிற்கும் திருத்தப்பட, மாற்றியமைக்கப்படக் கூடாது.